பிரம்மஸ்ரீ -
மாணிக்க யோ... ...கள்.

உ

சிவமயம்.

3971

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய

ஸ்ரீமதாதிசங்கராசார்யசுவாமிகளது

சரித்திரச்சுருக்கமும்,

ஸ்ரீமத் காபாத்ரயோகீஸ்வரரியற்றிய

சாம்பிரதாயசிந்தனவாக்யங்களும்,

ஸ்ரீமான் - தத்தாத்ரயஸ்வாமிகள்

உபதேசவாக்கியமும், ஆகிய

இவை

அமராபதி

மு. மாணிக்கஸ்வாமியால்

பார்வையிடப்பட்டு,

ஆநூர்-எதிராஜமுதலியாரது

சென்னை – சூளை:

"பிரின்ஸ் ஆவ் வேல்ஸ்" அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

R

சிவமயம்.

விளம்பரம்.

இதனு லறிவிப்பது யாதெனில், இப்புத்கம் வேண்டுபவர்கள் சென்னை நகரத்தைச்சார்ந்த சூளை ஆவடி சீனிவாசய்யர் தெருவில் (22) வது கதவிலக்கமுள்ள செம்படப் பிள்ளையார் கோவிலி லிருக்கும் மாணிக்கஸ்வாமி யிடத்திற் பெற்று கொள்ளலாம்.

குறுக்கேவரியிட்டுச் சின்னங்களிட்டுப் பதிப்பித்திருக்கும் விசேட உரைகள் சிலவிடத்தில் இரண்டு பக்கங்களில் வாக்கியம் முடிவுபெறுகிறபடியால் இந்நூலை வாசிப்பவர்கள் அதைக்கவனித்துப் பார்க்கவேண்டியது.

இதன் விலை ரூபா 1 0 0



ஸ்ரீ=சங்கராசாரியர்.

ஓம்

ஸ்ரீசத்குருஸ்வாமினேநம:

முகவுரை.

நான்முகன்படைத்த நானுவிதவுலகங்களிற் சிறந்த நாவலந்தீவின்கண் - மலரோன் முதலிய சகலதேவர் களும்வந் தவரித்தமையாற் புண்ணிய பூமியெனப் பெயர் பெற்ற பரதகண்டத்தில், அரிதாகிய மானுடப் பிறவியிற் புருஷனுகப் பிறப்பது மிகவுமரிது. அதி லுஞ் சதாசார சம்பன்னுளாகிய தந்தைதாயாரினது கெர்ப்பத்திற் ஜனிப்பதரிது. அதினும் வித்வானுகத் தோன்றுவதரிது. அதினும் விவேகியாகப் பிறப்ப தரிது, அதினும் முமுட்சுவாகப் பிறப்பது சாலவரிது. அவ்வித முமுட்சுக்கள் எமவாதனைக்கும் பிறவிவேத னைக்கும் பயமடைந்து பிறவியென்னும் பெரிய கடலைக் கடக்க விரும்புவர். ஆயின், இந்தப் பிறவியில் நாம் பிறவி யெடுத்திருக்கிறேமெனத் தோன்றுகிறதே யன்றி பூர்வ ஜன்மத்தில் நாமெடுத்திருந்த பிறவிகள் நமக்கு தோன்றவில்லை. தோன்றுவிடினும் கர்மி, பக் தன், முமுட்சு, அப்பியாசி, அநுபவி, ஆரூடன் என்னும் பக்குவிகளில், எவ்விதபக்குவியாக இப்பிறவியிலிருக் கின்றேமோ, அவ்வித பக்குவத்தளவால் யூகித்துப் பார்க்குமிடத்து முற்பிறவியிலிருந்தநிலைமை இப்பிறவி யில் கண்ணுடிபோல விளங்கும். இங்ஙனங் கூறிய யுக்தியை முமுட்சுக்கள் நன்றுயாலோசித்து இலக்க ணவிலக்கிய வாராய்ச்சியிற் காலம்போக்காமல் தனது

எதார்த்தவடிவத்தைக் காணவேண்டுமென மிகுந்தவி ருப்பத்துடன் அப்பியாசித்து அவ்வப்பியாசத்தைத் தினேதினே விர்த்திக்குக் கொண்டுவரவேண்டும், அவ் வாறு செய்துகொண்டுவருவோமாயின் பிறவிக்கடலைத் தாண்டத்தக்க அனுபவமென்னுங்கப்பல்வருமேயன்றி வாய்ஞானத்தால் வராதென்பதுசத்தியம்! சத்தியம்!! பின்னும், ஆரூடதிசைவருவது மிகவுமருமை, அங்ஙன மருமையுடைத்தான ஆரூட ஞானிகளும் இவ்வுலகத் திற் பிறப்பார்களாதலின், இதனைத் தத்துவராயசுவாமி கள் திருவாய்மலர்ந்தருளிய வேதாந்தசாரமாகிய "துரி யாதீதந்தன்னிற் புரிந்தானுந்தொல்பிறவித், துரிசான தொழியாகாண் சும்மேலோ சும்முலக்காய்" என்னும் மோகவதைப்பரணிக் கவியாலுணர்க. இதனல் ஆரூட திசையடைந்தவர்களும் பிறப்பார்களென்று வெளியா கியது. ஆகவே அநுபவஞானிகளும்பிறவியெடுப்பார்க ளெனவும், ஜாக்ரமுதலிய மூன்றவஸ்தைகளும் பிறவி யைக்கொடுப்பதற்கு ஏதுவெனவும்,துரியந்துரியாதீத மென்னுமிரண்டவஸ்தைகளும் மோக்ஷத்தைக்கொடுப் பதற்குக் காரணமெனவும்,முக்தியைக்கொடுக்கத்தக்க மோக்ஷாவஸ்தையை முமுட்சுக்கள் சம்பாதிக்கவேண் டுமெனவும், அதன்பின்னர் அவ்விரண்டவஸ்தைகளும் எதினதுவியாபகத்திலுண்டாயிற்றோ? அதினிடத்துல யிக்குமாறுசெய்வது விதேகமுக்திசாதனமெனவும்,மு முட்சுக்கள் ஜீவன்முக்தி சாதனத்திற்கு அதிகாரிகளா தல்போல ஆரூடர்களில்கௌணாரூடர்கள் விதேகமுக் திசாதனத்திற்கு அதிகாரிகளெனவும்,முக்யாரூடர்கள் மோக்ஷமுதலிய யாதொருப்ரஸ்தாபமுமில்லாம லிருப் பார்களெனவும், இவ்விதமாகிய அதீததிசை வருகிறப ரியந்தம் பிறவிகள் வந்துகொண்டிருக்குமெனவும்பெ

றப்பட்டன. பெறவே, வியாதிக்குரிய ஆவுஷதம்புசித்தா லவ்வியாதிகெடுமன்றி வாயினா லவுஷதமெனச் சொன்னால் வியாதிகெடாததுபோல, ப்ரம்ஹமென வாயாற்கூறினால் பிறவிப்பிணி கெடாது ஆதலின் முமுட்சுக்கள் வேதாந்தசாஸ்திரங்களை வாசிப்பதும், அவற்றினர்த்தத்தை மனனம்பண்ணுவதும் அவ்வாறு நிதித்தியாசனஞ் செய்வதும் சமாதிசாடசாத்கார மியற்றுவது மவஸ்ய மென்றாயிற்று. பின்னும் சாதனமுதலியவைகளில்லாத ஆரூடர்க ளுலகத்திற்சிலர் அநுபவிகள்பலர், அவ்வநுபவிகளே மாணாக்கர்களுக்குப் போதிக்குந் திறமையுடையவர்கள். ஆரூடர்கள் வாக்குமௌனம், மனமௌனம், கரணமௌனம், காஷ்டமௌனம், சுழுப்திமௌன மெனக்கூறப்படுகிற மௌனங்களையெல்லாங் கடந்தவர்களாதலி னவர்கள்உலகத்திற்குச் சாட்சியாக வந்தவர்களேயன்றி மாணாக்கர்களுக்குப்போதிக்கவந்தவர்களன்று, அவ்விதமான பெரியோர்களைத் தரிசிப்பதே மிகவும் விசேஷமெனச் சான்றோர்கூறுவர். அன்றியும் ஆரூடதிசையடைவதற் கதிகாரியாகிய கரபாத்திரயோகீஸ்வரர், தமதுஸ்வாநுபூதிப்பிரத்யட்சஞ் சகலமானவர்களுக்கும் எளிதில்விளங்குமாறு கருதி சகலவேதாகமமுதலியவைகளின் சாரமாயும் மனனம்பண்ணுபவர்களுக்குச் சுளுவாயும், வசனநடையாயுமுள்ள இந்நூலியற்றினர். இதனை முமுட்சுக்கள் முதலிய யாவரும் பக்திசிரத்தையுடன் படித்து தனதுயதார்த்தவடிவத்தை மனனஞ்செய்யுங்கால் அம்மனதிற்குப்பூர்வவாசனையிறந்து சுத்தவாசனைபிறந்து அன்னியமின்றித் தானேதானாயிராநின்ற ப்ரம்ஹானந்தத்தை இந்நூல் வெளிப்படுத்துமென்பதுநிச்சயம். இச்சிந்தனைவாக்யங்கள் கையெழுத்துப்பிரிதியிற் பிழையதிகமாயிருந்த

மையாற் சிலபதங்களைத்திருத்தியும் அர்த்தமாகாத சி லபதங்களுக்கு உரையெழுதியுமிருக்கின்றனன், ஆத லின் அன்னபட்சிகள் பாலின்கணுள்ள நீரைநீக்கி மா தூர்யமான பாலைப்புசித்து எப்படித்திருப்தியடைந்த ணவோ. அப்படிப்போலப் பண்டிதர்களென்னும் அம்ச ங்கள் இதிலுள்ள குற்றங்களையகற்றி மதுரமான ப்ர ம் ஹானந்தரசத்தைக் கிரகித்து நித்யதிருப்தி யடை வார்கள். இஃது விரிக்கிற்பெருகுமாதலிற் சுருக்கி யுரைத்தாம்.

திருச்சிற்றம்பலம்.

ஜகத்குரு பரம்பரை.

அஃதாவது, அநாதிமுக்த சித்துருவாயும், அநாதிகாரணராயும், காரணகாரிய மில்லாதவராயும், ஸ்ருஷ்டிமுதலிய கற்பனைகடந்தவராயும் சஜாதியாதி பேதரகிதராயும், நித்தியசுத்த புத்தமுக்த சத்ய பரமானந்தஸ்வரூபராயும் விளங்காநின்றஸ்ரீமத்சிவபெருமான்; மந்தம்மந்ததரம் தீவரம், தீவரதரம் அதிதீவரமென்னும் பக்குவமமைந்தஅன்பர்கள் நிமித்தம் நீர்மழைக்கட்டியாய்த் தடித்ததுபோல மானுடதேகமெடுத்துத் தேகேந்திரியமுதலானவைகளை யானெனதெனக்கொண்ட பேதபாவனையைத் தடுத்து, தொன்றுதொட்டுமயக்கஞ்செய்யுமூலாக்ஞானத்தைக் கெடுத்து, அபேதமாயும் மனோவாசாமகோசரமாயும் சர்வாதீதமுமாகிய தனதுப்ரம்ஹானந்தத்திற் சுகித்திருக்குந்தன்மையைச் சொல்லுதலாம்.

(ஸ்லோகம்.)

மஹாதேவோ மஹாவிஷ்ணுஃ த்ருதீயஸ் சதுராநநஃ
வஸிஷ்ட்டஸ் ஸக்தியோகீந்தர : பராசரமஹாமுனிஃ||க||
வ்யாஸஸ்சுகோ கௌடபாதோ கோவிந்த பகவான்முனிஃ; குருஸ்ரீ சங்கராசார்யஃ ஷண்மதஸ்தாபனப்ரபுஃ.

(இதன்பொருள்.)

ஸ்ரீகயிலாசத்தி லெழுந்தருளிய ஸ்ரீமகாதேவர் முதலாவதுஆசாரியர், அவரதுமாணாக்கர்-மகாவிஷ்ணு; அவருடையசிஷ்யர் - சதுர்முகப்பிர்ம்மா, அவர்மாணாக்கர் வசிஷ்ட்டர், அவரதுசிஷ்யர்-சக்தியோகீந்திரர், அவர்மா

ஞாக்கர் பராசரமகாமுனி,அவர்மாணாக்கர்-வியாசமுனிவர், அவரதுமாணாக்கர்-சுகர், அவருடையமாணாக்கர் கௌடபாதர்,அவர்மாணாக்கர் கோவிந்தபகவத்பாதர், அவருடையசிஷ்யர் சைவமுதலியஆறுமதங்களை ஸ்தாபனஞ்செய்தமையால் ஷண்மதஸ்தாபனாசாரியரெனவும்ஜகத்குரு எனவும் ப்ரசித்திநாமமமைந்த ஸ்ரீமத்சங்கராசாரியஸ்வாமிகள்.

இதுவுமன்றி, "நாராயணம்பத்ம பவம்வசிட்டம் சக்திஞ்சதத்புத்ர பராசரஞ்ச, வ்யாசம்சுகம்கௌடபதம்மஹாந்தம் கோவிந்தயோகீந்திர மதாஸ்யசிஷ்யம்,ஸ்ரீசங்கராசார்ய மதாஸ்ய பத்மபாதஞ்ச ஹஸ்தாமலகஞ்சசிஷ்யம் தந்தோடகம் வார்த்திககாரமன்யா னஸ்மத்குரூந் சந்ததமாநதோஸ்மி" எனப்பாடபேதமுண்டு.

இன்னுமொருவிதம், முதலாசாரியர் ஸ்ரீகையிலாயத்திலெழுந்தருளிய உமாமகேஸ்வரர், அவர்மாணாக்கர் திருநந்திதேவர், அவர்மாணாக்கர் சனற்குமாரர், அவர்மாணாக்கர் வியாசர், அவர்மாணாக்கர் சூதரிஷி,அவரதுமாணாக்கர் கடவுள்நாதர், அவர்வழிவந்த மாணாக்கர் கருவூர்ச்சித்தர், அவர்மாணாக்கர் அருள்முனிவர், அவரதுசிஷ்யர் கீழூர்முனிவர், அவர்மாணாக்கர் பரமுனிவர் அவர்மாணாக்கர்திருப்பனந்தாளார், அவர்மாணாக்கர்மதுரைப்புஞ்சைமுனிவர், அவர்மாணாக்கர் திருநடராஜர் அவர்மாணாக்கர் நாணற்சிவப்ரகாசர், அவர்மாணாக்கர் ஸ்வரூபானந்தர், அவர்மாணாக்கர் தத்துவராயர்.

இதுவுமன்றி சைவமுதலிய சகலமதங்களிலும் குருபரம்பரை அனேகவிதமாகச்சொல்வார்களாதலின், சமஸ்ததேவர்களுக்கும் சர்வமதங்களுக்கும் பரமசிவமே

நான்குயுகங்களிலும் குருமூர்த்தியாக எழுந்தருளிப் போதித்தாரென்பதற்கு ப்ரமாணம்.

"தைவைர்வந்தய:க்ருதேபூத் விதிஹரிகுருராட்தக்ஷி ணாமூர்த்திரூபோ துர்வாசாஸ் ஸத்யவாசஸ் ததயிஹகி ரிசோ ராமசந்திராதிசேவ்ய:, த்ரேதாயாம் வ்யாஸஸூநு ஸ்சுகமுனி ரபவத்வாபரே சந்திரசூடோ வ்யாகுர்வன் வேதமூர்த்தந: கலியுகசமயே சங்கரஸ்சங்கரோபூத்"

(இதன்பொருள்.)

அபாரகருணாசாகரராகிய சிவபெருமானார் அன்பர்க ளுய்யும்பொருட்டு முதல்யுகமாகிய கிருதயுகத்தில் ப்ர ம்மாமுதலாகிய தேவர்களால் வணங்கும்படியாகத்தெ க்ஷணாமூர்த்தியென்னுங் குருஸ்வரூபமாக அவதரித்து க்கல்லால் விருக்ஷத்தின்கீழிருந்து பிரம்ஹாவினதுமா னசபுத்திரர்களாகிய சனகாதிமுனிவர்களுக்குத்தத்வக் ஞானத்தைப் போதித்தாரெனவும், இரண்டாவதுதிரே தாயுகத்தில் தூர்வாசமகாமுனிவரா யவதரித்து ராம சந்திரர்முதலிய தேவதைகளால் வணங்கத்தக்கவராயு ம்சாபாநுக்ரக சாமார்த்தியமுடையோராயும் சாந்தமு தலிய சத்குணமுள்ளவராயும் சத்யலோகத்தில் வசித் தாரெனவும், மூன்றாவது துவாபரயுகத்தில் சாந்தமே வடிவமாகிய சுகமுனிவரா யவதரித்தாரெனவும் (௪) வது கலியுகத்தில் ஸ்ரீமத்சங்கராசாரிய ஸ்வாமிகளாக அவதரித்தாரெனவும்! இதுவுமல்லது. "ஆத்யேசத்வமு னிஸ்ஸதாம் விதரதி க்ஞானந்த்விதீயேயுகே, தத்ரே த்வாபரநாமகேது சுமதி: வ்யாசௌ கலௌ சங்கர:" என்பது, முதலாவதுயுகத்தில் சிவபெருமான் கபிலா சாரியராயும், (௨)வது யுகத்தில்தத்தாத்ரேய மகா

முனிவராயும், (௩)வது யுகத்தில்வேதவியாசராயும்,(௪) வதுயுகத்தில் ஸ்ரீமத் சங்கராசாரியராயு மவதரித்துச் சாதுஜனங்களுக்கு ஞானநிலைமையைத் தெரிவித்தா ரென்று சிவபுராணத்திற் சொல்லியிருக்கின்றது. இப் படிக் குருசாம்பிரதாய மிருப்பதுபற்றி ஸ்ரீமான்-மாணி க்கவாசக ஸ்வாமிகள் திருவாசகத்தில் "அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கனையு, மிருந்தவருக் கருளு மது வெனக்கறியவியம்பேடீ, அருந்தவருக் கறமுத லன் கன்றருளிச்செய்திலனேற், றிருந்தவருக் குலகி யற்கை தெரியாகாண் சாழலோ" எனக்கூறினர். பின் னும் "யதாயதாஹி தர்மஸ்ய க்லாநிர்ப் பவதிபாரத, அப்யுத்தான மதர்மஸ்ய ததாத்மானம்ஸ்ருஜாம்யஹம்" என்பது, ஏ-பாரத. ப்ராம்ஹணாதி நான்குவருணங் களுக்கும், ஜீவர்க ளநுஷ்டிக்கத்தக்க ப்ரம்மசர்யமுத லாகிய ஆஸ்ரமங்களுக்கும், அறமுதலிய நான்குபுரு ஷார்த்தங்களுக்கும் எந்தெந்தகாலங்களில்கெடுதியும் அதர்மத்திற்கு அபிவிர்த்தியும் உண்டாகின்றனவோ? அப்பொழுது என்னை நான் ஸ்ருஷ்டித்துக்கொள்கின் றேன்; என்பதாம். எனவே,இந்தகாலத்தி லவதரி க்கப்போகிறேனென்கிற நியமம் பகவானுடைய அவ தாரத்திற் கில்லையெனவும், வேதத்திற்சொல்லப்பட்ட மோக்ஷலக்ஷணத்தைக் காருண்யத்தால் மானுடதேக மெடுத்துத் தெரிவிப்பது கடவுளுக்கேஉரியதெனவும் பகவத்கீதையிற்சொல்லிய அபிப்ராயத்தின்வண்ணம், முன்பு ஓர்காலத்தில் பிரம்மாமுதலிய தேவர்களனை வரும் கைலாயத்தில் அன்பர்களை யாட்கொள்ளவிரும் பித் துரியமூர்த்தியாயும் பஞ்சமுக ஸ்வரூபியாயும் க்ருபாமூர்த்தியாயும் விளங்காநின்ற ஸ்ரீமத்மஹாதேவ னைச்சரணடைந்து,அரியவேதவசனங்களாற் றுதித்துச்

சிரசிற்கைகளைக்குவித்து நமஸ்கரித்து, ஏபகவானே! மகாவிஷ்ணுவானவர் பூர்வம் எங்களைரக்ஷிக்கும்பொருட்டுப் புத்ததேவனாகஅவதரித்து ராக்ஷசர்களைநாசஞ் செய்ததுபகவானறிந்திருக்கிறீர். அப்படியாயினும் இப்பொழுது அந்தபுத்ததேவனாற் செய்யப்பட்ட ஆகமாநுஷ்டானபராளாகிய பௌத்தர்கள் கர்மோபாசனஞானத்தையும், கர்மமுதலியவைகளைச்சொல்லாநின்ற வேதாகமமுதலியவைகளையும் நிந்தனைசெய்து பூமியில் மிகுந்த விருள்மூடினு லெப்படியோ, அப்படிப்போல மூடிக்கொண்டார்கள், ஆகையாலவ்விதமான துஷ்டர்களை நிவாரணஞ்செய்யும் பிரபுநீரேயெனவும், கலிமகிமையினு லனேகமதங்களாய்விரிந்தும், சகல சன்மதங்களுந் தவிர்ந்தும், நல்வேள்வியென்ப தொழிந்தும், நன்னெறியென்ப தழிந்தும், நரகமென்பது தழைந்தும் நரரதிற் பலர்நுழைந்து மிருப்பதா லவ்விதமான துஷ்டர்களைநாசஞ்செய்து ஸ்ரௌதமென்னும் வைதிகமார்க்கத்தை நிலைநிறுத்தவேண்டுமெனவும், பிரார்த்தனைசெய்த தேவர்களைப்பார்த்துப் பரமசிவன் சொல்லுகிறதாவது மிகுந்தவிருளை மத்தியானசூரியன் நாசஞ்செய்வது போல ப்ரகிருதியென்னு மஞ்ஞானத்தை நாசஞ்செய்யுஞ் சூக்ஷுமபுத்தியுடைத்தான நான்குசிஷ்யாளும் எனக்கு நான்குபுஜமாயிருப்பதால் மஹாவிஷ்ணுவைப் போல மானுடதேகமெடுத்துச் சங்கரரெனப்பெயர்வகித்து, மர்த்தியலோகத்தி லவதரித்துப் பிரமசூத்திரத்திற்குப் பாஷ்யம்விதித்துஉங்கள்மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்கின்றேன். நீங்கள்மானுடதேகமெடுத்து என்னை யாஸ்ரயிக்கப்போகிறீர்கள், அப்போது உங்கள் கோரிக்கைமுடிவாகின்றது எனவும், கர்மம் பக்திஞானமென்னு மூன்றுகாண்டங்களாலுலகபரிபாலன நடத்தி

வருவதாலும், அவற்றுள் மகாவிஷ்ணுவானவர் எனது உத்தரவின்படிசங்கர்ஷண பதஞ்சலியாகஅவதாரஞ்செய்து தேவதாகாண்டமுபாசனகாண்டமெனப்பெயருள்ளயோககாண்டத்தைச்செய்திருக்கின்றனராதலாலும், கர்மகாண்டத்திலுள்ள அருமறைப்பொருள்களை நிலைநிறுத்துத லுனக்குரியதெனவும், தாமரையைச் சூரியன் பார்த்ததுபோலப், பரமனுஞ்சுப்ரமண்யரைப்பார்த்து ப்பூலோகத் தின்கண் பட்டபாதரா யவதாரஞ் செய்து ஜைமினிசூத்திரத்திற்கு வியாக்யானஞ்செய்யெனவும், ஆக்ஞாபித்தனர். அவ்வுத்திரவின்படி யவதரித்து, அருணோதயமானவுட னிருள்நீங்கியதுபோலப் பட்டபாதரென்னும் ஸ்வாமிக ளவதாரமானவுடன் பூமியின் கண்விஸ்தாரமாக விரிந்திருந்தபுத்தர்மதமென்னு மிருள்நீங்கவும் காலில்மிதிபட்ட சர்ப்பங்க ளெப்படிக்கூக்குரலிட்டனவோ அப்படிப்போல,வேதவிரோதிகளான புத்தர்களென்னும் சர்ப்பங்கள் வேததாத்பர்யமான சித்தாந்தத்தைக்கேட்டு கூச்சலிடவும், புத்தர்கள்ஆகம சித்தாந்தமென்னும் விருக்ஷத்தைப் பட்டபாதருடைய யுக்தியென்னுங்கோடாலியினல் வெட்டிக் குரோதமென்னும் அக்னியைவிர்த்திசெய்து அந்தகோபாவேசத்தினல் ஸ்ரௌதமார்க்கமான வேதார்த்தத்தைப்பூமியெங்கும்பரவவுஞ்செய்தனர்.அதன்பின்பு பிறவியென்கிற சமுத்திரத்தில் முழுகியிருப்பவர்களைக் கரையேற்றுநிமித்தம் அபாரகருணாசாகரனகிய சந்திரசேகரனிச்சித்துக் கேரளதேசத்திற் சசலமல்லது காலடியென்னு மக்ரஹாரத்திற் புத்திரனில்லாது வருந்தி யருந்தவம்புரிந்துநின்ற சிவகுருவென்னும் ப்ராம்மணருடைய ஸ்வப்பனத்தில்கிருபாமூர்த்தியாகியமஹாதேவன் எழுந்தருளி-ஏ-சிவகுரு!எல்லாமறிந்தவனயும் சர்வகுணசம்ப

ன்னுயுமிருக்கிற ஒருபுத்திரன்வேண்டுமாகு்லுங்கொடுக்கிறேன், அல்லதுவிபரீதனுயும், அல்பகுணவானுயும் அதிக வாயுளுடையவனுயுமிருக்கிற அனேகம்புத்திரர்கள் வேண்டுமானுலுங் கொடுக்கிறேன், இவ்விரண்டிலெதையிச்சிக்கின்றுயெனக் கேட்க, சர்வக்ஞனுயும் சகலசத்குணங்களோடு கூடினவனுயுமிருக்கிற ஒருபுத்திரன் வேண்டுமெனப்பிரார்த்திக்க, அப்படியேஉண்டாவான் நீங்களிருவரும் கிருகத்துக்குப் போங்களென்று உத்திரவுசெய்து பரமசிவன்மறைந்தனர். அங்ஙனம் பரமசிவத்தினுடைய வாக்கியப்ரகாரம் பார்யாளுந்தானு மில்லறத்திற்குவந்து வேதவேதாந்தபராயணுளான ப்ராம்ஹணுளைத்தக்ஷிணையினுலும் அன்னத்தினுலுங் திருப்திசெய்து மிச்சமானஅன்னத்தைச் சிவகுருபுசித்தார்; அவர்பத்தினியாகிய ஆர்யாம்பாளும்புசித்தனள். அப்படிபுசித்த ஆர்யாம்பாளது ஆகாரத்துள் பரமசிவசம்பந்தமான தேஜசுபிரவேசித்தது. அதன்பிறகு, அவ்வார்யாம்பாள் பரமசிவஸ்வரூபமான கெர்ப்பத்தைத்தரித்து மெள்ளவிர்த்தியடைந்த தெப்படியிருக்கிறதென்றுல், மத்தியானசூரியனைப் பார்ப்பவர்களுடையகண்க ளெப்படிக்கூசுமோ, அப்படிப்போல ஆர்யாம்பாளைப் பார்ப்பவர்களுடைய கண்கள்கூச்சமாயின. இதுஆச்சர்யமல்லவா, ஏனெனில், ஸ்வர்க்கமுதலிய(யிச) லோகங்களையும் அஷ்டமூர்த்தங்களையுங்கெர்ப்பத்துளிருக்கிற பரமசிவதேஜசானது சுமந்துகொண்டிருக்கின்றது. அவ்விதமானதேஜஸை ஆர்யாம்பாள்சுமந்து மெள்ளநடக்கின்றுளென்றுல் இது பெரியஆச்சர்யமன்றே? அதன்பின்னர், பார்வதி சுப்ரமண்யனைப்பெற்றதுபோல ஸ்ரீசங்கராசாரியரெனப் பெயருள்ள மகாதேவனைப் புத்திரனுகப்பெற்றுள். இப்படிச்சொ

ன்னதினு லென்னதாத்பர்ய மாயிற்றெனில், சதாசிவ னேதனதுமாயையினுல் கெற்பத்திற் பிரவேசித்தது போலும் பிறந்ததுபோலும் பார்ப்பவர்களுக்குத்தோ ற்றியதேயன்றி அவர் மாயாதீதராதலின் பிரவேசிக்க வில்லையென்க. அப்படியானுல் கெற்பத்திற் பிறவே சித்துப்பிறந்ததாகச் சொல்லியிருக் கிறதேயெனின்? "அந்தமில்பெருமை யழலுருக்கரந்து சுந்தரவேடத் தொருமுதலுருவுகொண், டிந்திரஞாலம் போலவந்த ருளி,யெவ்வெவர்தம்மையுந் தன்வயிற்படுத்துந் தானே யாகிய தயாபரனெம்மிறை" இதன்பொருள். ஆதிமத் யாந்தரகிதராயும், திவ்யக்ஞானிகளாகிய பெரியோர்க ள்ஞானநேத்திரத்தால் தரிசிக்கத்தக்கபெருமையுடை த்தானவராயும் விளங்காநின்றசிவபெருமான் ஒப்பற்ற தனதுஅகண்ட ஸ்வயம்பிரகாசமான ஞானவடிவத்தை மறைத்து ஊனநேத்ரமுடையவர்களது கண்களுக்கு அழகையுடைத்தான மனிதனுக வடிவெடுத்து இந்திர ஜாலவித்தை காட்டுகிறபுருஷன் பார்ப்பவர்களனைவரு க்கும் இல்லாதவத்புதத்தை யுள்ளதாகக்காட்டி மகிழ் ச்சியடையச் செய்வது போலக் காட்டிலிருந்த நரிகளை க்குதிரைகளாகச் சிருஷ்டித்துப் பாண்டியன்முதலான வர்களுக்கு மெய்போலக்காட்டிக் களிக்கும்படிசெய் தது பொய்யாயினும், பிட்டுவாணிச்சியம்மையார்நிமித் தம் கூலியாளாகவந்து வைகையையடைத்தகாலத்துச் சிவபெருமானது தேகத்திலடித்த பிரம்படியானதுசக லவுயிர்களினுடைய சரீரங்களிற் ப்ட்டபடியால் யாவ ருமாச்சரியமடைந்து சர்வாந்தர்யாமியாக நிறைந்திரு ப்பவர் சிவபெருமானேயெனவும், அவரைச்சமஸ்தமா னவர்களுந்துதித்து நற்கெதி யடையவேண்டுமெனவு ம் தனதெதார்த்தமகிமையை யாவருக்கு முண்மையா

கக்காட்டிப் பக்குவாபக்குவிகளாகிய சகலமானவர்களையுந் தன்வசமாகச்செய்துகொள்ளத்தக்க சர்வசக்தியும் அபாரகருணையுமமைந்துள்ள சர்வஜீவதயாபரனே எமதுகடவுளென்று ஸ்ரீமாந்மாணிக்கவாசகஸ்வாமிகள் திருவாசகத்தில் திருவாய்மலர்ந்தருளிய அபிப்ராயத்தையாலோசிக்குமிடத்து, தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகளுக்குக்காரணமாகிய மாயாசக்தியினு லுயிர்களுக்குப்பந்தவிளைவும் சிற்சக்தியினுல் மோக்ஷமுமெனப் பெரியோர்கள் சொல்லுகிறபடியினுலும் பந்தமோக்ஷமிரண்டும்மாயாவசப்பட்டிருப்பவர்களாகிய உயிர்களுக்கேயன்றி மாயாதீதனுகிய பரமசிவத்துக்கு இல்லையாதலாலும், இவ்வுயிர்களின்மேற் கருணைவைத்து மாயாசக்தியினுல் குதிரைக்குளஜமானன்போல இந்திரஜாலமாகிய ஸ்தூலதேகமெடுத்துக் குதிரைகொண்டு வந்ததும், சிற்சக்தியினுல் தன்வயத்தன்முதலிய எண்குணங்களில் முற்றுமுணர்தலென்னும் சர்வக்ஞத்தன்மையை யாவருக்குந் தெரியும்படி சூட்சுமமான இந்திரஜாலங்காட்டியதும், பின்னர் இவ்விரண்டையு மறைத்து யாதொருபற்றின்றித் தானே தானுக இருந்ததும் எப்படியோ அப்படிப்போலச், சிவபெருமானுர் தனதுமாயாசக்தியினுல் சங்கரரென்னுந் தேகமெடுத்து ஜகத்குருவெனப்பெயர்தரித்து திக்குவிஜயஞ்செய்து அனேகமகிமைகளைப் பலருக்குக்காட்டியும், தனதுசிற்சக்தியினுல் சைவமுதலிய ஆறுமதங்களுக்குங் கடவுளொருவனேயெனச் சர்வக்ஞத்துவத்தைத் தெரிவித்து இஃதுயாவருக்கும்பொதுவாயும் மதங்களுக்கெல்லாமதீதமாயுமுள்ளதென அத்வைதபாஷ்யம் விதித்து அதிலுள்ள பூர்வார்த்தம் உத்தரார்த்தங்களைச் சிஷ்யாளுக்குப்போதித்தும், பின்னர் யாதொருபற்றின்றித் தனதுஎதார்த்

தவடிவமான பரமசிவத்தில்லயித்தும், அதுவே தானாக விளங்கினரென்க. இப்படியாதுகாரணத்தாற் சொன்ன தெனில்? திருவாசக மிரண்டாவதகவலில்"அந்தமிலாரி யனு யமர்ந்தருளியும் வேறுவே றுருவும் வேறுவேறி யற்கையும், நூறுநூறுயிர மியல்பினதாகி, யேறுடை யீசனிப்புவனியையுய்ய" எனவும் (ங)வது "அகவலில் "அறுவகைச் சமையத் தறுவகையோர்க்கும், வீடுபே றாய்நின்ற விண்ணோர்பகுதி" எனவும், தாயுமானவர்-ஆனந்தமானபரம் (ங)வது பாடலில் "ஆறுசமையங்க டொறும்வேறுவேறாகி விளையாடுமுனையாவரறிவார்" எனவும்,திருமூலநாயனர் திருமந்திரத்தில்"ஒன்றதேபே ரூர்வழியாறதற் குளதென்றிதுபோலு மிருமுச்சமை யங்கள்" எனவும், "குருவேசிவமெனக்கூறினனந்தி" எனவும், இப்படியே அநேகம் பெரியோர்கள் எல்லாம தங்களுக்கும் பொதுவாயிருப்பவர் ஒருகடவுளேயென வும் அக்கடவுளேப்ரம்மாமுதலிய அனேகமூர்த்திகளா கவும் அறிவுக்கறிவாகவும் ஞானசாரியராகவுந்தோன் றி யுலக பரிபாலனம் செய்கின்றாரெனவுஞ் சொல்லியி யிருப்பதால் கூறியதென்க. இப்படியிருக்க, இவ்வுலகத் திலுள்ள விருளையகற்றி உயிர்களை மகிழ்ச்சியடையச் சூரியனுதயமானதுபோலச்,சகலவுயிர்களிடத்திலுள்ள அக்ஞா னந்தகாரத்தைக் கெடுத்துச் சுக்ஞானமென் னுங் களிப்பையடையச் செய்விக்கும்பொருட்டு உதய மான ஞானசூரியனாகியசங்கராம்சமான குழந்தையைப் பார்க்கவந்த பந்துக்கள் சினேகிதர்கள்யாவரும் மிகுந் தசந்தோஷ மடைந்ததுமன்றி, பகற்காலத்திலும் இர விற் சூரியப்பிரகாசமில்லாத காலத்திலும் குழந்தை யிருக்கின்ற வீட்டிலதிகமான தேஜசு கண்ணுக்குத் தோன்ற அதனைப்பார்த்துப் பிரசித்தமான சாக்ஷாத்

சங்கராவதாரமே இக்குழந்தையென்றெண்ணிச் சங்கரனென்று பெயர்வைத்தனர். அதன்பின்பு, ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் பத்மபாதராகவும், வாயுபகவான் ஹஸ்தாமலகராகவும், பிரம்மா சுரேஸ்வராசாரியராகவும், ப்ருஹஸ்பதி ஆனந்தகிரியாகவும், சூரியன் சநந்தனராகவும், வருணன் சிற்சுகாசாரியராகவும், இந்திரன் இராஜாவாகவும், மற்றதேவர்களெல்லாஞ் ஸ்ரீசங்கருடைய சரணாரவிந்தத்தைச் சேவிப்பதற்கு ப்ராம்ஹணருடைய புத்ரர்களாகவு மவதரித்தார்களெனச் சங்கரவிஜயத்திற் சொல்லியிருக்கின்றது.

அங்ஙனஞ் சொல்லுவதை அங்கீகரிக்கப்படாது ஏனெனின், ஸ்ரீசங்கராச்சாரியருக்கு ஜகத்குருவென்று பெயரிருப்பதனு லவரைச் சகலமான ஜாதிகளும் வணங்குவார்களேயன்றி ப்ராம்ஹணுள்மாத்திரம் நமஸ்காரஞ் செய்யக்கூடுமென்றும், மற்றவருணத்தவர்கள் வணங்கக்கூடாதென்றும் நிபந்தனையில்லையாதலானும், ப்ராம்ஹணுள்முதலிய ஜாதிபேதங்கள் இவ்வுயிர்களின் கற்பனையேயன்றி, தேவர்களுக்குச் சகலமான வருணமுஞ் சமமாதலானும், எந்தக்குலத்திலும் தேவர்கள் அவதரிப்பார்களென்க. இங்ஙனந்தேவர்களுக்கெல்லாந் தேவனுன மகாதேவன் தனது மாயையினுல் மானுடரூபமாகச் சிவகுருவினது புத்திரனுயவதரித்து அவரால் ஜாதகர்மம் நாமகரணம் சௌலோபநயன முதலிய சடங்குகளை நிரைவேற்றப்பெற்று ஒருவருஷத்தில் சகல அக்ஷரங்களையுங் குலத்திற்குரிய பாஷையையுங் கிரகித்தனர். அதுவுமன்றி, ஒருவர் சொல்லக்கேட்காமலும் குருவில்லாமலும் சகல வேதாகம முதலிய கிரந்தங்களைப்படித்துத் தனது சர்வக்ஞத்வத்தை

யாவருக்குந் தெரியும்படி காட்டிக்கொண்டிருந்தனர். இவ்விதமான ஆச்சரியங்களைச் சகலமானவரும்பார்த்து மகாசந்தோஷ மடைந்திருக்குங்காலத்தில் சிவகுரு காலஞ்சென்றனர். அதன்பின் சங்கரபகவான் வேத மரியாதையை யாவருக்குந் தெரிவிக்கவந்தவராதலின் "மாத்ருதேவோபவ" என்னும் வேதவாக்யப்படி தனது தாயைச்சேவித்தும் சூரியனைப்பூஜித்தும் சூரியனைப்போல மிகுந்த தேஜஸையுடையவராக விளங்கினர். அஃதன்றியும், சூரிய னுதயமானால் தாமரை முதலிய புஷ்பங்களும் எப்படி மலர்ந்தனவோ அப்படிப்போலும், சகல உயிர்களும் எப்படி மகிழ்ச்சியடைவார்களோ, அப்படிப்போலும், ஞானசூரியனாகிய சிவபெருமான் அவதாரமான காலத்திற் சகல பெரியோர்களும் சகல மனிதர்களுஞ் சந்தோஷ மடைந்தனர். இப்படிப்பட்ட அற்புதத்தைப் பொதிகையங்கிரியில் வாசஞ்செய்கிற அகஸ்தியமகாமுனிவ ருணர்ந்து ஸ்ரீசங்கரரைப் பார்க்க விருப்பமுற்றுச் சங்கரர்வசிக்குங் கிருகத்திற்கு எழுந்தருளினர்.

அங்ஙன மெழுந்தருளிய அகஸ்திய முனிவரைச் சங்கராசாரியர் பயபக்தி விஸ்வாசத்துடன் வந்தனை வழிபாடுசெய்தனர். அப்படியே சங்கரரது தாயாகிய ஆர்யாம்பாளுந் தெண்டஞ் சமர்ப்பித்து ஏ முனிஸ்ரேஷ்டரே! எனதுபுத்திரனுக்கு ஆயுட்பிரமாணமிவ்வளவெனச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தனை செய்து கேட்டனள். அதனை அகஸ்தியருணர்ந்து உன் புத்திரனுக்கு இப்போது எட்டுவயதாயிற்று, இன்னம் எட்டுவருட மிருக்கின்றது. ஆதலின் பதினாறுவயது பரியந்த மிருப்பானேயன்றி அதற்குமேலிவிடமிருப்பதில்லையெனச்சொல்லிப் பொதிகைக்குப் போயினர்.

அந்த வார்த்தையைக்கேட்டு மிகவுந் துக்கமடைந்த தைச் சங்கரர்பார்த்து ஏ அம்பா! நீ துக்கப்படவேண்டாம், நான் சன்யாசாஸ்ரமத்தைவகித்து மோக்ஷமடையும்பொருட்டுப் பிரயத்தனஞ் செய்கின்றேன் எனக்கூறினர். அங்ஙனஞ் சொன்னவார்த்தையைக் கேட்டவுடனே கண்களில் நீராருய்ப்பெருகி அதிக வருத்தமடைந்து ஏ புத்திரா! நீ விவாகஞ்செய்துகொண்டு புத்திரப்பேறுண்டாகிய பின்னர் சந்யாசத்தை அங்கீகரிக்கவேண்டும். இப்படியே முன்னோர்களிருக்கிற கிரமமென்று தாயார் சொன்னதைக் கிஞ்சிற்றும் அங்கிகரிக்காமல் மாதாவுக்குத் தத்துவோபதேசஞ் செய்தனர். இப்படி யிருக்கிறகாலத்தில் ஒருநாள் ஸ்நானத்திற்குச்சென்று ஒரு தடாகத்தில் நீராடுகையில் தனது காலை ஓர் முதலை பிடித்திழுப்பதை யுணர்ந்து சகலேந்திரியப் பற்றுக்கள் தவிர்ந்து மனதிறைற் சன்யாசஞ் செய்தனர். இவ்வாருன சந்யாசஞ் செய்தவுடனே முதலையானது சங்கரர் காலை விட்டுவிட்டது. அதன்பின்பு தாயினுடைய உத்தரவு பெற்றுக்கொண்டு ஆதிசேஷாவதார ஸ்வரூபராயும் பதரிகாஸ்ரமத்தில் வாசஞ்செய்பவராயு மிராநின்ற கோவிந்த பகவத்பாதரென்னும் ஸ்வாமிகளிடஞ்சென்று அவரால் வேதவிதிப்ரகாரம் சந்யாசாஸ்ரமம்பூண்டு ப்ரம்மசூத்ர முதலிய சாஸ்திரங்களி னர்த்தத்தை யுணர்ந்து அவருத்திரவு பெற்றுக்கொண்டு காசிக்ஷேத்திரத்தை யடைந்து நிலைபெற்றிருக்குநாளில், மாத்தியான்ஹிக நிமித்தங் கங்கையை நோக்கிப் போகுங்காலத்து ஸ்ரீ விஸ்வேஸ்வரன் சண்டாளவேஷந்தரித்து சங்கரர்முன்பு தோன்றினர். அவரைச் சங்கரர்பார்த்து தூரமாகப் போவென்று சொன்னர்.

அங்ஙனஞ் சொன்னவார்த்தையைப் பரமசிவன் கேட்டு அன்னமயகோச முதலிய பஞ்சகோசங்களில் எதைப்போகச்சொன்னாய், அன்னமயகோசஞ் செடமாதலின் போகாது, மற்றகோசங்களு மிப்படியே, அல்லது பஞ்சகோச விலக்ஷணனாகிய ஆத்மாவோவெனின், சித்து, அந்த சித்து உன்னுடைய அந்தக்கரணத்திலும் எனது அந்தக் கரணத்திலும் பரிபூர்ணமாக நிறைந்திருக்கின்றது.

அவ்விதமான ஆத்மாவுக்குப் போதல்வருதல் முதலிய தொழில்க ளில்லையெனத் தெளிந்த வேதாந்தியான உனக்கு யாதொரு கற்பனையு மில்லாதிருக்கச் சண்டாளனென்றும் பிராம்மணனென்றும் பேதபுத்தி ஏன் வந்தது என, ஆத்மலக்ஷணத்தைச் சொன்னவுடன், அந்த வார்த்தையைச் சங்கரர்கேட்டுத் தேகத்தை மறந்து மிகுந்த ஆநந்தத்துடன் சண்டாளனாகட்டும் பிராம்மணனாகட்டும் எந்த ஜாதியானாலும் ப்ரம்மக்ஞான மறிந்தவனே குருவென்று மனீஷாபஞ்சகமெனப் பெயருள்ள ஐந்து ஸ்லோகங்களில் தகுந்தவிடை கூறினர். அங்ஙனஞ் சொல்லிய சமபாவத்தைச் சாக்ஷாத் விஸ்வேஸ்வரன்கேட்டு மகா ஆனந்தமடைந்து தனது நிஜரூபத்தையெடுத்துச் சங்கரரது சிரசில் கையைவைத்து அநுக்ரஹஞ்செய்து ப்ரம்ம சூத்திரத்திற்குப் பலரும் பலவிதமான அர்த்தம்பண்ணுகின்றனராதலாலதனது வாஸ்தவமான அர்த்தத்தை நீ செய்யென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினர். அவ்வுத்திரவின்படி பன்னிரண்டாவது வயதில் ப்ரம்ம சூத்திரத்திற்கு உரையெழுதி முடித்து விஷ்ணுவினவதாரமாகிய பத்மபாதர் முதலிய மாணாக்கர்களுக்குப்

பிரம்ம சூத்திரார்த்தத்தைப் போதித்திருக்கிற சமை யத்தில் வேதவியாசர் வயதுமுதிர்ந்த ப்ராம்மண வடிவ மாகச் சங்கரரிடஞ்சென்று தனது நூலிற் சில சூத்தி ரங்களுக்குப் பொருள் வினவினர். அவற்றிற்குக் குற் றமில்லாத விடைகூறியதை வியாசர்கேட்டு அத்யந்த சந்தோஷமடைந்து ஐயா! ஈஸ்வரன்கொடுத்த பதினா றுவயது உமக்கு முடிந்தமையால் யான் (கசு) வயது கொடுத்தேன். இப்பாஷியத்தை இவ்வுலகெங்கும் பிர சுரஞ்செய்து இச்சூத்திரங்களென்னும் அம்பெய்து துர் மதங்களைக்கொய்து அத்வைத மழைபெய்து பின்னர், இந்நரவுடலோடுங் கைலையை யடைகவெனப் போயி னர். இதுநிற்க, சிவபெருமானது கட்டளையினால் இப்பூ மியின்கண் சுப்ரமண்யர் பட்டபாதரெனப் பெயர்கொ ண் டவதரித்து, அளவில்லாத துர்மதங்களைக் கெடு த்து, புத்தர்களைக் கற்செக்கிலிட்டு வேதத்திற் சொல் லிய கர்மங்களை யுலகத்திலேற்றி பிராயச்சித்த காண் டத்தில் தனக்குள்ள நம்பிக்கையை வெளியிடக்கருதி, தனது குருமதத்திற்கு வேற்றுமை செய்ததிற்கா யுமி நெருப்பிற் பிரவேசித்திருந்தனர். இதனைச் சங்கராசா ரியர் கேள்வியுற்று அவரிடஞ்சென்று துறவறத்தை நிலைநிறுத்தக்கருதி யான் பிரசங்கிக்க வந்தேனென்று சொல்ல, பட்டபாதரும் ஏ சங்கரா! குருத்ரோகம் ஈஸ் வரநிராசன மிவைகள் நிவர்த்தியின்பொருட்டு பிராயச் சித்தகாண்டத்தில் துஷானலப்ரவேசஞ் சொல்லியிருப் பதனால், இப்போது உம்மைத் தெரிசனம்பண்ணிய வுடனே அத்தோஷங்கள் நிவர்த்தியாயின. ஏ பக வான்! உமது ப்ரபாவத்தை யானறிவேன்; சகல சராசரங்களையும்மிடத்தி லடங்கவும், மறுபடியும்பூர்வ மிருந்ததுபோல ஸ்ருஷ்டிக்கவும் சாமார்த்தியமுடைய

வுமக்கு என்னைக் கிருதார்த்தனாகச் செய்வது ஆச்சரியமல்ல; ஏ யதிஸ்ரேஷ்டா! காசியில் தாரகமந்திரத்தையுபதேசித்ததுபோல எனக்கு ப்ரம்மோபதேசஞ் செய்யவேண்டுமெனவும், எனது சீடனாகிய விஸ்வரூபன் கர்ம்யோகமான ப்ரவர்த்தி மார்க்கத்தில் மிகவுஞ் சமர்த்தன், நிவர்த்திமார்க்கத்தில் கிஞ்சிற்றும் விருப்பமில்லாதவனெனவும், அவனை ஜயித்தால் யாவரையும் ஜயித்ததுபோலெனவும், பிரார்த்திக்க, ஸ்ரீ சங்கராசாரியர் அவர்க்கு வேதாந்தோபதேசஞ் செய்து மெய்ஞ்ஞான விளக்கேற்றிச், சிருங்கேரியில் ப்ரம்மாவதாரமாகிய விஸ்வரூபன் தன்னை யொருவரும் வந்து காணாதிருக்குப்படி சூரியமண்டலமளாவிய மாளிகையமைத்து அதில் வாசமாயிருப்பதைச் சங்கருணர்ந்து தனது யோகசித்தியா லவனது க்ருகத்திற் புகுந்து சந்நியாசத்தை யிகழ்ந்துகொண்டிருந்த விஸ்வரூபனென்னு மண்டனாசாரியனது க்ருகமடைந்திருந்த வியாசரது வசனத்தால் அம்மண்டனன் பார்யாளாகிய சரசவாணியை மத்யஸ்தமாய்ச் செய்துகொண்டு மண்டனன் தோல்வியடைவானேல் துறவறம் பெறவேண்டுமெனவும், யான் ஜயமடைந்தால் தனது அரிய சந்நியாசாஸ்ரம மிழந்து இல்லறத்தோனாவனெனவும், பிரதிக்ஞை செய்துகொண்டு நெடுநாள் வாதுசெய்து அவனை வென்றனர். பின்பு விஸ்வரூபன் துறவற மங்கீகரிக்க விருப்புற்றுநின்றமை யறிந்து சத்தியலோகத்திற் கெழுந்தருள எத்தனித்த சரஸ்வதியை நீயேனுமுனது கணவற்காய் வாதுசெய்து வெற்றிபெறுவாயேல், யான் செய்துகொண்ட சபதத்தை நிறைவேற்றுவே னென்றனர். அதனைக்கேட்ட சரசவாணியும் வாதுசெய்யத் தொடங்கிப் பல சாஸ்திரார்த்தங்களைப்

பிரசங்கஞ்செய்ததில் அவரை வெல்லுவ தரிதாமென வுணர்ந்து, கொக்கோக சாஸ்திரங்களிலுள்ள ரகஸ்ய விஷயங்களை வினவத்தொடங்க, ஸ்ரீ சங்கரயோகீந்திரர் சிலகாலஞ் சென்றபின்னர் இந்த நூற்களிலும் வெற்றிபெறுவேன்; சிலகாலந் தரல்வேண்டுமென விடை பெற்றுக்கொண்டு, அளவில்லாத பத்மினிப் பெண்களினுடைய அருங்கணவனுகிய அமருகனெனப் பெயருள்ள அரசனிறந்ததைக்கண்டு, தனது உடலை ஓர் மலைக்குகையில்வைத்து இதற்கேதேனும் கெடுதி நேரிடுமாயின் எனக்கறிவிப்பீர்களெனத் தனது சீடருட் சிலரை யவ்விடத்தில் வைத்துத் தான் பரகாயப்ரவேசவித்தையால் அவ்வமருக ராஜனுடைய தேகத்திற் புகுந்தனர். அங்ஙனம் பிரவேசித்தவுடனே அமருகன் பிழைத்தெழுந்தானென்று மந்திரி முதலானவர்க ளனைவரு முளங்களிக்கவும், பத்மினிப் பெண்களினது முகநெகிழவும் அரசனது மாளிகையுட் புகுந்து அம்மாதரிடஞ் சகல சுகங்களையு மனுபவித்துநிற்க, அரசாங்கத்திலும் விடயசுகங்களிலும் அமருகனிலும் பதின்மடங்கு சிறந்திருப்பதை யுணர்ந்து அங்கிருப்பவ ரனைவரும் அமருகன் பிழைக்கவில்லை; இவர் தேவனே? அல்லது அரியதவத்தினையுடைய யோகியோ? எனக்கலக்கமடைந்து அப்பட்டணத்திலுள்ளபிணங்களனைத்தையுஞ் சுட்டெரிக்கும்படியோர்கட்டளையிட்டனர். குடித்தனக்காரர்கள் அம்மந்திரியினுடைய ஆக்ஞையைச் சிரசான்வகித்துப் பல விடங்களிலுந் தேடியோடிப் பரிசோதித்து ஒன்றன்பின்னென்றாய்ப் பலசவங்களை நெருப்பில் வைத்துக் கொளுத்தி நீறாக்கிக்கொண்டே வருகையில்; ஆசாரியனது உடலெனப் பேரன்பினேடுங் கண்மூடாமற் காத்திருக்கிற பத்ம

பாதர் முதலிய சீடர்களிருந்த மலைக்குகையை யடைந்தார்கள். அந்தகுகையினுட் புகுந்து ஒரு சவத்தையும் அதற்குக் காவலாயிருந்த சிலரையுங்கண்டு, நீரென்ன குலம்? உமது ஊரியாது? உமது பெயரியாது? இந்த குகையிற் பிணங்காப்பது என்னகாரணம்பற்றி! எனச் சொல்லிக்கொண்டே யத்திருமேனியை யெடுத்துக்கொண்டு வெளியே வரத்தொடங்கினர். அப்பொழுது தமதுயிரினுஞ் சிறந்ததாகிய குருவினது தேகத்தைக் காத்திருந்த சீடர்களுடைய கோபத்தை விளைக்கிச் சங்கரரது தேகத்தைப் பிடுங்கி நெருப்பில் வைத்தெரிக்கையில், அச்சீடர்க ளிவ்வரலாற்றைச் சங்கராசாரியருக்குச் சுலோகமூலமாய்த் தெரிவித்தனர். அதனைக்கேட்ட சங்கராசாரியர் அந்த ராஜனுடைய தேகத்தை விட்டுவிட்டு எரிக்கப்படுகின்ற தன்னுடலையடைந்து லட்சுமிநரசிம்ம னருளான் முன்போலச் செய்துகொண்டு, அதன்பின்பு சரஸ்வதியினிடம் வந்து சகலநூற்களிலும் அத்தேவியை வென்றனர். அங்ஙனம் ஜயமடைந்ததைச் சரசவாணிகண்டு மிகவுங் களிப்படைந்தனள். அவ்வாறு மகிழ்ச்சியடைந்த சரஸ்வதியைத் தனதாஸ்ரமத்தி னிலையா யிருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, அத்தேவியு மிசைந்து அவ்வாறாகவென்றனள். பின்னர், மண்டனனுக்குத் துறவறமும் விஸ்வரூபனென்னு நாமமுங்கொடுத்து அவர்களோடுங் கலைக்கோட்டுமாமுனிவ ராஸ்ரமமடைந்து, அங்குள்ள ஸ்ருங்கேரியில் அத்தேவியைப்பிரதிஷ்டை செய்து, அநேக வுற்சவங்களை யேற்படுத்தி, அதற்கிணங்க வித்யாபீடமொன்று கற்பித்து அங்கிருந்த சிஷர்களுக்குப் பாடம் நடப்பித்துக்கொண்டு சிலகால மிருந்தனர். பிற்காலத்தில் வியாக்கியான சிம்ஹாசனமெ

னப் பெயர்பெற்ற அந்த வித்யாபீடத்திற் சுரேஸ்வராசார்யனை நிலைநிறுத்தித் தான் திக்குவிஜயத்திற்காகப் பிரவேசித்துத் திருவேங்கடம், திருக்காளத்தி, அகோபிலமுதலிய திவ்யக்ஷேத்ரங்களை யடைந்து அவ்விடங்கடோறும் யந்திரப்பிரதிஷ்டை முதலியன செய்து கொண்டே காஞ்சிநகரஞ்சேர்ந்து, அப்பொழுது அங்கு செங்கோல் நடத்திய இராஜசேன அரசனுல் அந்த நகரத்தைக் கட்டுவித்து, வரதராஜப் பெருமாளுக்கும், ஏகாம்பர நாதருக்கும் கோபுர முதலியவைகளை யுண்டாக்கி, உக்கிரகலையளும், உன்னத சித்ஸ்வரூபியும், உயர்நிலை யுடையவளுமாய் விளங்கிய ஸ்ரீ காமாக்ஷியை ஒருருவமுடையவளாகச் செய்து, அவ்வம்மனது உக்கிரமடங்கும்பொருட்டுத் திருச்சக்கிர மொன்று பிரதிஷ்டைசெய்து, சகலமானவர்களும் அவரவர்களது வர்ணாஸ்ரமதர்மத்தின்படி நடக்கவேண்டுமென விதித்துப் பாவத்தொழில்களை யொழித்து, சைவமுதலிய ஆறுமதங்களையும் ஸ்தாபித்து,மேற்கில்த்வாரகையில் ஹஸ்தாமலகனையும், கிழக்கில் ஜகந்நாதத்திற் பத்மபாதனையும், வடக்கிற் பதரிகாஸ்ரமத்தில் தோடகாசாரியனையு மிருக்கச்செய்து இமயமலைமுதல் ராமேஸ்வரம்வரையிலுள்ள ஜனங்களுடைய வர்ணாஸ்ரமதர்மங்களை வழாதுகாக்க சுரேஸ்வரனென்னு மாணுக்கனுக்கு முக்கியாதிகாரங் கொடுத்துச் சிருங்கேரியிலிருக்க ஆக்ஞாபித்து, மற்றுமுள்ள சீடர்களுடன் காஸ்மீரதேசஞ்சென்று சர்வக்ஞ பீடமேறித் தத்தாத்ரய குகையினின்றும் (௩௨) வது வயதில் ஸ்தூலதேகத்துடன் கைலையை யடையக்கருதி, ப்ரம்ஹாமுதலிய தேவதைகளாலும், நந்திமுதலாகிய கணங்களாலும் எதிர்கொண்டழைக்கப் பெற்றுத் திருக்கைலையை யடைந்

தனர். எனமாதவீயசங்கர விஜயத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறே சங்கரவிஜய விலாசம், சிவரகஸ்யம், ப்ரஹத் சங்கரவிஜயம், மடாம்நாயமுதலிய பலவித ப்ரமாண நூற்களிலுங் கூறப்பட்டிருக்கின்றது, அவைகளில் விரிவாகச்சொல்லி யிருப்பதால் யாவருக்குந் தெரியும்படி சுருக்கமாகத் தெரிவித்தனம். இங்ஙனமிருக்க, ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் தாமெடுத்த மானுடவுடலோடு கைலயங்கிரி யடைந்தாரெனக் கூறியதனைச் சில ராக்ஷேபணைசெய்வ ராகையா லதனை யங்கிகரிக்கப்படாது, ஏனெனின், சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் முதலிய (சுஙு) நாயன்மார் முதலியவர்களும், நம்மாழ்வார் முதலாகிய (யஉ) ஆழ்வார்களும் ஈஸ்வராதிகளுத்திரவினு லிவ்வுலகின்கண் அவதரித்துச் சகலமானவர்களுக்குங் கர்மம் பக்தி யோகம் ஞானமென்னும், நன்னெறியைச் செய்துகாட்டிப் பின்னுள்ளவர்களுமுய்யும்பொருட்டுத் தெரிவித்தவாறுபோல, ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகளும் ஈஸ்வராம்சமாக அவதரித்து கர்மம், பக்தி, யோகம், ஞானம் எனப்படுகிற நான்கினையு முலகத்தா ரனுஷ்டிக்கும்படி செய்வித்தும், சைவமுதலிய ஷண்மதங்களை ஸ்தாபித்தும், அந்த வாறு மதஸ்தர்களுக்கும் ஏனைய சகல சமயத்தவர்களுக்கும் பொதுவாக அத்வைத வித்தையை வெளிப்படுத்தியு மிருப்பதனல் ஜகத்குருவென்று யாவருங் கூறுவர். மேற்கூறிய (சுஙு) நாயன்மார்களில் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் சேரமான்பெருமா ளுயனாரும் தாமெடுத்த மானுடதனுவோடு திருக்கைலையை அடைந்தாரென்று சொல்வதனை யாவரு மங்கீகரிப்பதுபோல ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுங் கைலயங்கிரியை அடைந்தாரென் றங்கீகரிக்கவேண்டும்; அங்கீகரிக்க

க்கூடாதென்னும்பக்ஷத்தில், சுந்தரமூர்த்திஸ்வாமி முத லியவர்கள் கைலாயத்திற்குப் போனார்களென்பதை அங்கீகரிக்கப்படாது, அங்ஙனம் அங்கீகாரம் பண்ணு விடத்துப் பின்னுள்ளோர்களும் பலசங்கைசெய்வார் கள், செய்தாலென்னவெனின்? வேதமுதலிய சகல சாஸ்திரங்களனைத்தும் பொய்யெனப்படும், அவைகள் பொய்யானல் வேதாகமங்களைக்கூறிய கடவுளும் அற முதலிய நான்குபுருஷார்த்தங்களு மில்லையெனப்புகல வேண்டும், அவ்வாறுசொன்னால் நாமும் நமக்குக்காண ப்படுவதாகிய வுலகமு மில்லையெனச்சொல்லவேண்டும், தினந்தோறும் நாம் உலகசுகத்தை அநுபவித்துக்கொ ண்டிருத்தலின் நமக்குக் காரணமாகிய பகவானையும் கடவுளையறிந்த பெரியோர்கள் திருவாய்மலர்ந்தருளிய சத்தியவாக்யங்களையுஞ் சிரசால்வகித்து அங்கீகரிக்க வேண்டும். இவ்விதமானயுக்தியை ஒத்துக்கொள்ளா விட்டால் அநேக ஜன்மங்கடோறும் கடவுளைப்பிரார்த் தனைசெய்துகிடைத்த அரிதாகிய மானுடப்பிறவி இனி வாராதாகலின் அவஸ்யம் ஏற்றுக்கொள்ளவேண்டுமெ ன்க. பின்னும், ஆகாசமெங்கும்வியாபித்திருந்து மதி னுண்மை கண்ணுக்குக் காணப்படாததுபோலக் கடவு ளெங்கும் பரிபூரணமாக நிறைந்திருந்தும் அவரது பெருமை ஜீவர்களுடைய மனமுதலிய கரணங்களுக் குத் தோன்றவில்லை, கடவுளுக்குச் சரீரமிருந்தாலன் றோ மனமுதலிய கரணங்களுடையவரெனவும், அவை களாலறியப்படுகிற விஷயங்களுள்ளவரெனவும் அவ ரதுபெருமையை அவரறிவா ரெனவுங் கூறலாம். அவைகளில்லாமையின் அசரீரியாயும், மனமுதலிய கரணங்களுக்கு எட்டாதவராயும், நிரிந்திரியராயும் விளங்குகிறாரென்று வேதாகமமுதலியவைகள் முறை

யிடுகின்றன ஆதலின் "தன்பெருமை தனையறியாத் தன்மையன்" எனவும் "கரணங்களெல்லாங் கடந்து நின்ற கறைமிடற்றன்,, எனவும், ஸ்ரீமான் மாணிக்க வாசகஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளினர்.

அத்தன்மை யுடைத்தான சத்தியக் ஞானனந் தப்பொருளைப் பரிசுத்தாந்தக் கரணத்தினல் உள்ளும் புறம்பு மொருபடித்தாகத் தரிசித்துப் பகவான துபெருமையை நமக்குத்தெரிவிப்பவர்களும் சர்வதந்திர ஸ்வதந்திரர்களுமாகிய பெரியோர்கள் நமரங்களுய்யும்பொருட்டு இம்மர்த்தியலோகத்தி லவதரித்து மாதாபிதாக்கள் தமது புத்திரர்களுடைய வயதுக்குத் தகுந்த புசிப்பைக்கொடுத்துத் தேகத்தை எப்படி வளர்ப்பார்களோ? அப்படிப்போல, மந்தன்முதலிய நமது பக்குவஙகளுக்குத்தகுந்த விவேகத்தைப்போதித்து உயிரென்னுமறிவை வளர்ப்பார்கள், அல்லது ஞானனுபவ ப்ரத்யக்ஷத்தை உள்ளங்கைநெல்லிக்கனி போலத்தெரிவிப்பார்கள். எப்படியெனின் ? தேகதாரிகளாயிருக்கின்ற நாம் வாசம்பண்ணுவதற்கு வீடுகளிருப்பனபோல, பிரம்ஹா முதலியவர்கள் வாசம்பண்ணுவதற்குக் கைலாயமுதலாகிய அண்டங்களிருக்கின்றனவெனவும், நமக்குப் பெண்டுபிள்ளைக ளிருக்குமாறுபோலப் பகவானுக்குத் தாரபுத்திராதிகளுண்டென்வும், நமது குடும்ப சம்ரக்ஷணைநிமித்தம் பூமியில் நாம் சஞ்சரிப்பதுபோலச் சிவபெருமா னுயிர்களைக்காப்பாற்றும்பொருட்டு சஞ்சரித்தாரெனவும்: தனதன்பர்க ணிமித்தந் தனதுலீலாவிபூதியினு லனேக அவதாரங்களெடுத்தாரெனவும், நித்தியவிபூதியினுல் ஆசாரியமூர்த்தியாகவெழுந்தருளிச் சனகர்முதலிய அனேகம்பெரி

யோர்களுக்கு ஞானோபதேசஞ்செய்தாரெனவும் (யஅ) புராணமுதலியவைகளிற் கூறப்பட்டுள்ளனவாகிய கதைகளைப் பொதுவாக முதலிற்சொல்லி யவைகளை அங்கீகரித்தபின்னர் பூர்வார்த்தம், உத்தரார்த்தத்தின் விபரத்தையும்பாகியபக்தி, அனன்யபக்தி, ஏகாந்தபக்தியென்னு மூன்றுகளினிலைமைகளையும் போதிப்பார்கள்.

பூர்வார்த்தமாவது, கல்யாணப்பிள்ளை காசியாத்திரைபோன கதைசொல்லுவதுபோல, ஒருநாம மோருருவ மொன்றுமில்லாதவனாக விளங்காநின்றகடவுள் இருவினையொப்புமலபரிபாகமமைந்த அன்பர்கணிமித்தம் ஒருருவமெடுத்துப் பலவிதங்களான திருவிளையாடல்களைச் செய்தாரெனக் கூறுதல். உத்தரார்த்தமாவது அக்கதைகளினுடைய சாராம்ஸத்தையெடுத்துக்காட்டுதல்; அஃதாவது, திரிபுராதிகளைப் பரமசிவன் சிரித்தெரித்தனரெனக் கூறுதல். சிரிப்பாவது ஞானப்ரகாசம், சூரியப்ரகாசத்தி லிருள்நாசமானதுபோல, ஞானசூரியப்பிரகாசத்தில் அல்லது துரியவெளிச்சத்தில் ஸ்தூலசூட்சும காரணமென்னும் பெரிய மாயாவிருளானது நாசமாயிற்று. இவ்விதமாகியவிருளைத் தேகேந்திரியப்ரபஞ்ச முதலியவைகளாகவும் புத்திரமித்திர களத்திர முதலானவைகளாகவும், இவைகள் நெடுங்காலஞ் சத்தியம்போ லிருப்பதாகவும் மாயையினுடைய புத்திரர்களாகிய காமன்முதலிய (யங) பெயர்களும் சகலமானவுயிர்களையு மனேககாலமாகப் பெரிய மயக்கஞ் செய்விக்கின்றார்கள். அன்றியும், பரமசிவத்தினோடு யுத்தஞ்செய்த திரிபுராதிகள் ஓர்காலத்து நாசமடைந்தார்களென்று கூறப்பட்டிருக்கின்றது. மேற்கூறிய (யங) பெயர்களன்றி இன்னு மனேகம்பெயர்கள்

உயிரோடிருந்து ஜீவர்களோடு நெடுங்காலமாகப் பல பிறவிகளிலும் ஜாக்ரமுதலிய அவஸ்தைகளிலும் விடாது யுத்தஞ்செய்கின்றார்கள். இவர்களை யார் ஜயிப்பார்களெனின், ஸ்தூலமுதலிய மூன்றுதேகங்களுக்குரிய காரணகாரியங்களை ஒன்றிலொன்று உண்டானபடியே யடக்கி யவைகளுக்குக் காரணமாகிய துரியமென்னுங் கைலாயத்தை அல்லது பரமசிவனுருவத்தை எவர்கள் தரிசித்தார்களோ, அவர்களே விரோதிகளைக் கொன்றவர்களென்க. ஆயின், அப்பர்சுவாமிகள் கைலையைப் பார்க்கவேண்டுமெனத் தேடிச்சென்றாரெனக் கூறியிருக்கிறதேயெனின்? ஆகாசத்தின்கணுள்ள அண்டகோடிகளில் கைலாயமென்னு மண்டந் தேஜோமயமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அதனை மானுடர்கள் பார்க்க முடியாது, தனது தேகத்தின்கண் சிரசென்னுங் கைலையில் ஞானவடிவமாக ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்ற கடவுளைப் பார்க்கக் கூடுமாதலின், இதனை அப்பர்சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருநெறித் தமிழ்வேதமாகிய "விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போல், மறையநின்றுளன் மாமணிச்சோதியான், உறவுகோனட் டுணர்வுக்கயிற்றினால், முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே" என்னுங் கவியானுணர்க. அன்றியும், சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் கைலாயத்திலிருந்து இப்பரதகண்டத்தி லவதரித்தமையால் மீண்டும் சேரமான்பெருமா ளையனாரை அழைத்துக்கொண்டு கைலாயத்திற்குப் போனதுபோல, "சங்கரஸ்சங்கரஸ்சாக்ஷாத்" என்னும் வாக்கியப்படி சாக்ஷாத் பரமேஸ்வரனுடைய அம்ஸமாக அவதாரஞ்செய்த ஸ்ரீமத்சங்கராசாரியஸ்வாமிகள் மீண்டு மச்சங்கரனுடைய நிவாசஸ்தானமாகிய திருக்கைலைக்குப் போனா

ரென்பது பூர்வார்த்தம், "கல்லாலின் புடையமர்ந்து நான்மறையாறங்கமுதற் கற்றகேள்வி, வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய், எல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டிச், சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கைவெல்வாம்" எனவும் "எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னாணை" எனவும் "பார்த்தவிடமெல்லாம் பரமன்கா ணம்மானை பாராம லென்னாளும் பாழ்பட்டே னம்மானை" எனவும் கூறிய பாசுரங்களினர்த்தத்தை நன்றாயாராய்ந்துணர்த லெதுவோ அது உத்தரார்த்தமாம், இவ்விதமான உத்தரார்த்தத்தைப் பரிசோதித்துத் தன்னையறிந்தவர்கள் கைலையங்கிரிவேறென்றும், கடவுள்வேறென்றும் மயங்கார் மயங்காரென்பது சத்தியம்.

பாகியபக்திமுதலிய மூன்றின் விபரங்களாவன, அவற்றுள், எங்கும்பரிபூரணமாக நிறைந்துள்ள கடவுளினுடைய அனந்தாவதாரங்களில் சிவாவதாரம், விஷ்ணு அவதாரமுதலிய வடிவங்களைச் சிற்பசாஸ்திரங்களிற்கூறிய லக்ஷணத்தின்படி கல்லினாலாகிலும், செம்பினாலாகிலும், வெள்ளியினாலாகிலும், மரத்தினாலாகிலும், சித்திரவேலையாகிய படத்திலாகிலும் செய்வித்து ஆலயத்திலாவது, மடத்திலாவது, தன் வீட்டிலாவதுவைத்து அதனைச் சாக்ஷாத்சிவஸ்வரூபமாகப்பாவித்து அர்க்கியபாத்தியமுதலிய சோடசோபசாரங்களாற் பூஜித்துத் தனக்குவேண்டிய கோரிக்கைகளை அநுக்ரகஞ்செய்ய வேண்டுமெனத் திரிகரணசுத்தியாகவும் ஶ்ரவணமுதலிய வொன்பதுவிதங்களால் பகவானைத் தனக்குவேறாகவுங்கருதி ஆராதிப்பதுயாதோ அது பாகியபக்தி

யாம், இப்பக்தியின் பிரிவுகளாவன, கடவுளுடைய அனந்தாவதாரகதைகளைக் காதினாற்கேட்டல் ஸ்ரவணமும், சரிகம பதனிசமுதலிய ஸ்வரங்களைக்கூறுகின்ற விசைத்தமிழென்னும் பரதசாஸ்திரலக்ஷணந்தெரிந்து வாக்கினால் கீர்த்தனைகளைப் பாடித்துதித்தல் கீர்த்தனமும், அந்தபகவானைப் பரிசுத்தமானமனதினால் நினைத்தல் ஸ்மரணமும், பெண்டுபிள்ளைகளைக் காப்பாற்றுவதற்குவிரும்பி ஒருவனிடத்திற்போய்ச் சேவகத்தொழில் செய்வதுபோலத், தன்னைக் காப்பாற்றுதற்கு மிகவும்விருப்பமுற்றுச் சிவபெருமானது திருவடிக்கமலங்களிற் சேவிப்பதியாதோ, அது பாதசேவனமும், ஸஹஸ்ரநாமம் அஷ்டோத்தர சதநாமங்களென்பவைகளால் கடவுளுடைய திருவடிகளை யர்ச்சித்தல் அர்ச்சனமும், இரண்டுகால், இருகை, இரண்டுதோள், நெற்றி, மார்பு, என்னுமெண்வகையுறுப்புகளும் பூமியிற்பட நமஸ்காரஞ்செய்தல் வந்தனமும், தன்னையாண்டுகொள்ளத்தக்க பகவானுக்குத் தானடிமைத்தனமாயிருத்தல் தாஸ்யமும், தன்னாற்கூடிய சக்தியானுசாரங் கடவுளினிடத்து மிகுந்த அன்புவைத்தல் சக்கியமும், தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகளை அபிமானித்திருக்கின்ற ஜீவனுடைய மனமுதலிய பலகற்பனைகளையகற்றி அவ்விதஜீவனைக் கடவுளுக்கு அற்பணமாக அல்லது காணிக்கையாகச்செய்தல் ஆத்மநிவேதனமுமாம். இத்தன்மைத்தாகிய பாகியபக்தியைப் பூர்வஜன்னங்களிலும் இப்பிறவியிலும் விடாது செய்த சத்கர்ம புண்ணியபரிபாக விசேஷமுள்ளவர்களுக்குச் சுலபமாக மனமுதலிய வகக்கரணங்களும், சப்தமுதலிய புறக்கரணங்களுமடங்கிப் பகவானது யதார்த்தநிலைமை ப்ரத்யக்ஷமாகத் தரிசனங்கிடைக்கு.

மாதலின், "பக்திவலேயிற் படுவோன்காண்க" என்று ஸ்ரீமான் மாணிக்கவாசகஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளினர்.

அனன்யபக்தியாவது, சத்தியலோகமுதற் பூலோகங்கீழாயும் பூலோகமுதற் பாதாளமீறாயுமுள்ள (யச) உலகங்களல்லது அனேகவண்டங்களெல்லாம் ஒருருவமாகவும் காற்றுமூச்சாகவும் (ய) திசைகள் காதுகளாகவும், சூரியசந்திராதிகள் நேத்திரங்களாகவும் அமைந்துள்ள விராட்புருஷனையன்றி யன்னியமில்லாமையால் சராசரமுதலாகிய சகலவஸ்துக்களு மவர்துஸ்ரூபமேயென்று அகண்டமாகப்பாவித்து மனதினால் ஷோடசோபசாரங்களைச்செய்து தியானித்தல்.

ஏகாந்தபக்தியாவது, ப்ரம்ஹாமுதலெறும்புமுடிவாயுள்ளனவாகிய சகலவஸ்துக்களுங் கடவுளைத்தவிர இல்லையெனவும், இவ்விகாரவடிவங்க ளவருடையரூபமல்லவெனவும், சர்வேஸ்வரனையன்றித் தானில்லையெனவும், தானே பகவத்ஸ்வரூபமெனவும், பகவானுடைய திவ்யஞானப்ரகாசத்தில் தன்னையும், தனது ப்ரத்யகாத்மப்ரகாசத்தில் பகவானையுந் தியானித்துணர்ந்து பேதாபேதங்களனைத்துமிறந்து அன்னியமின்றித் தானேதானாக விளங்குந் தன்மையையுடையது எதுவோ, அது ஏகாந்தபக்தி. இவ்விதமாகிய ஏகாந்தபக்தியி னிலைமையே வேதாந்தமுடிபென்று பெரியோர்கள் சொல்வார்கள். இதனைச் சிலவேதாந்திக ளாக்ஷேபனை செய்வார்களாயின் விடைகூறுவதிற் பயனில்லையென் றஞ்சிவிடுத்தனம்.

இங்ஙனமிருக்க ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் சைவமுதலாகிய சகலசமயத்தவர்களுக்கும் பொது

வாக ஸ்தாபித்துள்ள அத்வைத சித்தாந்தத்தை மிக வுஞ் சூக்குமபுத்தி யுடைத்தான இங்கிலீஷ்க்காரரும் ஜர்மன் தேசத்தார் முதலானவர்களும் பரிசோதித்து இந்துமத சித்தாந்தமே சிறந்ததென் றங்கீகாரஞ்செய் தனர். அவ்வாறு புறமதத்தவரனைவரும் அங்கீகரித்த அத்வைதத்தில் பரம்பொருளொன்றே எல்லாமா யல் லவுமா யிருக்கின்றதெனக் கூறியிருப்பதனுல் அந்த அத்வைதத்திற்கு ப்ரம்ஹவாதமெனப் பெயரென்று அநாதியான வேதங்களும் உபநிடதங்களு முறையிடு கின்றன. அவ்விதமான அத்வைதத்தை மாயாவாத மெனத்வைதிகளும்விசிஷ்டாத்வைதிகளும் கூறுகின்று ர்கள். அதற்குச் சமாதானமெழுதப்புகின் அபாரமாக விரியுமாதலின் சிறியபூதகண்ணுடியிற் பெரியபட்டண த்தைக் காட்டுவதுபோலச் சிறியயுக்தியினுல் பெரிய அர்த்தத்தைத் தெரிவிக்கின்றனம். அஃதாவது, கண் ணுக்குக் காணப்படுகிற புறவிருளும் சூரியனது பிர காசமாகிய புறவெளிச்சமு மிருப்பனபோல, கருத்துக் குத்தோன்றுகிற அகவிருளும் ஞானசூரிய ப்ரகாச மாகிய அகவொளியுமிருக்கின்றன, அவற்றுள், அகவி ருளை மாயாசக்தி என்றும், அகவொளியைச் சிற்சக்தி யென்றும், மாயாசக்தியினு லுயிர்களுக்குப் பிறவியும், சிற்சக்தியினுல் மோக்ஷமுங் கிடைக்குமெனவும் பந்த மோக்ஷமிரண்டும் உயிர்களுக்கேயன்றி கரணங்களுக் கு எட்டாதுவிளங்குங் கடவுளுக்கு இல்லை எனவும், உயிர்கள் வழிபடும்பொருட்டுக் கடவுள் ஒருவனுண் டெனவும், அக்கடவுளை யடைவதற்குக் காரணமா யுள்ள சரிதைமுதலாகிய சாதனங்களைச் செய்தவர்கள் சாலோக்கியமுதலிய பிரயோஜனங்களை யடைவார்க ளெனவும் ஸ்ரீ அநாதியான வேதாகம முதலியவைக

விற் கூறப்பட்டுள்ள சாலோக்யமுதலாகிய நான்கு பிரயோஜனங்களில் ஸ்ரீ சங்கராசாரியர் முதலாகிய பூர்வாசாரியர்கள் அவரவர்களுக்கு வேண்டிய மதத்தைவாதித்துச் சித்தாந்தஞ் செய்தார்களெனவுந் தாத்பரியமாகின்றது. ஆகவே பசுக்கள் பலவிதவர்ணங்களாயிருந்தாலும் அவைகளின் சாரமாயும் மதுரமாயுமிருக்கின்ற பாலொன்றுதல்போல, மதசித்தாந்தங்கள் பலவிதமாயிருந்தாலும் அச்சித்தாந்தங்களின் சாரமாயுள்ள கடவுளொருவனேயென்பது சத்தியமெனப்பெற்றும், அன்றியும் சுழுப்தியில் தானேகஇருந்தமையா லுயிர்களுக்குத் துக்கமில்லை, தனக்கு அந்நியமாகிய உலகந் தோற்றியவுடனே பலவித துன்பங்களுக் கிடமாகிப் பலபிறவிகள் விளைகின்றன. ஆதலின் பலகற்பனைகளையகற்றி ஒருபொருளாக இருக்கவேண்டுமெனவும் "சத்தியம்க்ஞான மநந்தம் ப்ரம்மா" எனவுங்கூறிய வுபநிஷ்தவாக்யத்தின்படி சங்கரர் சித்தாந்தஞ்செய்தனர். இந்தப்ரகாரம் ஏனைய மதாசாரியர்கள் அவரவர்களுடைய கல்விசாதுர்யத்தினால், ஒன்றெனக் கூறப்படாது இரண்டுபொருளே சத்தியமெனவும்,மூன்றுபதார்த்தங்களே சத்தியமெனவும்,அத்வைதம்விசிஷ்டாத்வைதம் - த்வைதம், என்று சொல்லப்படுகிற திரிமத சித்தாந்தங்க ளுலகத்தில் விரிந்தன. இவைகளன்றியும் அவரவர்களுக் கியைந்தவாறு தங்கள் மதமே சிறந்ததெனச் சிந்தாந்தஞ் செய்கின்றார்க ளாதலின் சமயகோடிகளெனத் தாயுமானசுவாமிகள் கூறினர். இன்னு மனந்தங்கோடி சித்தாந்தங்கள் கூறினும் அவைகளையெல்லாம் நன்றாயாலோசிக்குமிடத்து ஒன்றைப் பெருக்கினால் அந்த ஒன்றிலிருந்து அனேகங்கள் விரிகின்றன,அவ்வாறு விரிந்தவைகளைச் சுருக்

கியவிடத்து, ஒன்றே மிச்சமாயிருத்தலின் ஒன்றை யன்றிப் பல இல்லையென்பனபோல, ஒருபொருளாக விளங்கும் பகவத்ஸ்வரூபமாகிய அறிவே பலவிதஜீவர் களாகவும், மனமுதலிய கரணங்களாகவும் புறம்பில் காணப்படுகின்றன. அவ்வாறு தோன்றுபவைகளைத் தனது விகாரமென்றுணராமல் பலவிதங்களாகப்பே தப்படுத்தினு லவைகளுக்குக் காரணமாயும் எதார்த் தமாயும் விளங்காநின்ற ஓரறிவிலிருந்து அனேகமதங் கள்விரிகின்றன. அப்படிவிரிந்தமதங்களினுடைய ஆதி யந்தத்தைக் குருமுன்னிலையாகவாவது, சாஸ்திரமூல மாகவாவது தனது சூக்குமபுத்தியினுல் விசாரணை செய்தவிடத்து ஒருபொருளென்னுந் தனது எதார்த் தவடிவமே சேடித்திருப்பதனு லவ்வொருபொருளை யன்றிப் பலமதங்களு மில்லையென்பது நிச்சயம். அன் றியும், அகம்புறமின்றி எங்கும் வியாபகமாய் நிறைந் துள்ள பூதாகாசத்தினின்றும் பலவாகவிரிந்த சரா சரப்பொருள்க ளனைத்தும் அவ்வாகாச வியாபகத்தி லடங்குவனவேயன்றி வேறிடமில்லை, இதுபோலச் சிதாகாச சிற்பரஞ்சுடரினின்றும் கற்பனையாகவிரிந்த ஞானுக்ஞான வேறுபாடுகளனைத்தும் அச்சிதாகாசத் தின்க ணடங்கி அச்சிதாகாச வடிவமாகவே பிரகாசித் துக்கொண் டிருக்கின்றது, என ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் ஞானதிருஷ்டியினு லறிந்து கூறினர். பின்னும், பஞ்சபூதபவுதிகமாகிய சகல சராசரவு யிர்களெல்லாம் ஆகாசவியாபகத்தில் வசித்திருக்கின் றூர்க ளாதலி னவ்வாகாசத்தை இல்லையெனவாதித்துப் பூர்வபக்ஷம் பண்ணக்கூடாததுபோல, ஓரறிவுமுதல் ஆறறிவுமுடிவாயுள்ள ஜீவர்களனைவரும் ஞானவடிவத் தில் அல்லது வியாபகத்தில் வாசம்பண்ணிக்கொண்

டிருக்கின்றூர்களாதலால் அந்தஞானத்தை இல்லையெ
ன்று தர்க்கித்துப் பூர்வபக்ஷம் பண்ணமுடியாது. அங்
ஙனமாயின்,ஆகாசங்கண்ணிற்குத்தோன்றுகிறதுபோ
லஞானந்தோன்றவில்லை,அன்றியும் ஆகாசஞ்சூனியமா
கவிருப்பதனுல் அதனைப் பூர்வபக்ஷம் பண்ணக்கூடுமெ
னின், ஆகாசம் பிருதிவிமுதலிய நான்குபூதங்களுந்
தோன்றி விளங்கிமறைவதற்குக் காரணமாயும் சர்வத்
துக்கும் வியாபகமாயுமிருத்தலி னதனைத்தள்ளி ஓர்
பொருளைத் தெரிவிக்கவேண்டும், அப்படிக் கூடாதெ
னச்சொல்லுமிடத்து, ஆகாசமுண்டென் றங்கீகரிக்க
வேண்டுவதுபோல ஞானமும் உண்டென் றங்கீகரிக்க
வேண்டுமென்க. ஆகாசஞ் சூனியமாயினும் பார்ப்ப
வர்களுடைய கண்களுக்குக் கூடாரம்போட்டதுபோ
லக் காணப்படுகிறதன்றே, அதுபோல, ஞானம் கண்
ணுக்குத் தோன்றவில்லையெனின், ஆகாசமுதலிய பஞ்
சபூதங்களில் ப்ருதிவி அப்புவிரண்டும் கண்ணுக்குக்
காணப்படுவதால் ரூபம், நெருப்பு நேத்திரத்திற்குத்
தோன்றிமறைதலும், வாயு ஸ்பரிசவுணர்ச்சியா லறி
யப்பட்டு மறைதலுமாயிருத்தலி னவ்விரண்டும் ரூபா
ரூபம், ஆகாசந் தன்னையும் அன்னியத்தையு மறியா
மையால் ஜடம். அங்ஙனம் ஜடவடிவமான ஆகாசத்
தைச்-சித்துவடிவானஜீவன் தனதுமனதினுல் அல்லது
அறிவினுற்பிரித்து அறிகின்றுன், அஃதெப்படியெ
னின், தேகேந்திரியப் பிரபஞ்சமுதலியவைகள் சப்த
முதலிய ஞானேந்திரியங்களுக்கும், வாக்குமுதலிய
கர்மேந்திரியங்களுக்கும், மனமுதலிய வந்தக்கரணங்
களுக்குங்காணப்படுவனவாயினும்,ஓரிந்திரியத்தினது
தொழிலை வேருேரிந்திரியம்செய்யாமையால் சகலேந்
திரிய ப்ராணுந்தக்கரணங்க ளெல்லாவற்றையுஞ் சா

க்ஷியாகநின்று தனதுப்ரத்யகான்மாவென்னும் ஞானத்தினல் நேத்ரம், கண்டம், ஹ்ருதயம், நாபி, மூலாதாரமெனப்படுகிற வைந்திடங்களில் ஜாக்ரம், ஸ்வப்னம், சுழுப்தி, துரியம், துரியாதீதமென்னுங் கீழாலவஸ்தைகளைத் தினந்தோறும் ஜீவன் சகலமானுடர்களிடத்திலும் பொதுவாகநின் றறிந்துகொண்டிருக்கின்றான். அவ்விதஜீவன் ஒருவனாயிருந்தும் தேகபோக கர்மாபிமானங்கள் பலவிதங்களாயிருப்பனபற்றி, வெவ்வேறாகக்காணப்படுகின்றான். அவ்வாறு பகிர்முகத்தில் காணப்பட்டாலும் அந்தர்முகமாக விசாரித்துணர்ந்தவர்கள் அபேதமானஞானம் ஒன்றேயெனத் துணிவராதலானும், அங்ஙனம் விசாரித்தவர்களும் விசாரணையில்லாதவர்களுமாகிய யாவரும், மேற்கூறிய ஜாக்ரமுதலாகிய வைந்தவஸ்தைகளை ப்ரதிதினமுமனுபவித்துக் கொண்டிருக்கின்றார்க ளாகையாலும், அத்வைத சித்தாந்தத்தைப் பூர்வபக்ஷம் பண்ணக் கூடாமையாலும் இதற்கு மாயாவாதமெனப் பண்டிதர்கள் கூறுகின்றார்கள். இதனல் சகலசமயத்தவர்க ளங்கீகரிக்கத் தக்கதும் மூன்றுகாலத்து மொருதன்மைத்தாக விளங்குவது மெதுவோ, அது அத்வைதமென வெளிப்படையாகத் தோன்றுகிறது; இதனை விரிக்கிற் பெருகுமாதலின் சுருக்கமாகத் தெரிவித்தனம்.

இதுநிற்க, இந்திரபீடங் கரபாத்திர ஸ்வாமிகளெனச் சொல்லுகின்றனராகையா லந்தவிபரமாவது, இந்திரம்-ஸ்ரேஷ்டம்-பீடம்-ஆசனம், எனவே, மேலாயசிம்மாசன மென்றாயிற்று, எதற்கு மேலாயதெனின், கர்மம், பக்தி, யோகமென்னு மூன்றிற்கு மேலாகியது ஞானமாதலானும், அந்தஞானத்தில் அக்ஞானமாயும்

அனேக சித்திரவிசித்திரங்களாயுமுள்ள தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகள் தோன்றி விளங்கி மறைகின்றன வாதலானும், அக்ஞானமாகிய தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகள் ஜடமாகவும் பிரத்யகான்மாவுக்கு வேறாகவுந் தோற்றிக்கொண்டு ஜீவனேச்சதாகாலமுந் துன்பப்படுத்திக்கொண்டிருப்பதனாலும், உதயாஸ்தமனமின்றியெப்பொழுதும் ஞானஸ்வரூபமாக ப்ரகாசித்துக்கொண்டுள்ள தனதுயதார்த்தவடிவத்தில் தேகாதிப்ரபஞ்ச முதலானவைகளை யடக்கி அன்னியமின்றித் தானேதானாயமைதிபெற்றிருப்ப தெதுவோ அது இந்திரபீடம், அல்லது ஞானபீடம் அத்வைதபீடம் எனப் பொருள்கொள்ளவேண்டும், வேறுவிதமாகக் கூறின்முரணும். ஏனெனின், அத்வைதபீடத்தை நிர்த்தாரணஞ்செய்த ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் 'ப்ரக்ஞானம்ப்ரம்ஹ, அஹம்ப்ரம்ஹாஸ்மி, தத்வமசி, அயமாத்மாப்ரம்ஹ" என்னும் நான்கு மகாவாக்கியங்களைத் தோடகாசாரியர் முதலாகியநான்குமாணக்கர்களுக்கும் போதித்துக்கிழக்குமுதலிய நாலுதிசைகளிலிருந்து நான்கு வருணங்களினது குலதர்மங்களை வழாது காக்கும்வண்ண முத்திரவு செய்தனர். அவ்வுத்திரவுப்ரகாரம் நான்கு திக்குகளிலிருந்து அவரவர்களுடைய க்ருத்தியத்தைச் செய்கின்றார்கள், அவர்களில் தென்திசைக் கதிபராகிய ஸ்ருங்கேரிபீடத்தவர்க்குச் சரஸ்வதிபீடமெனவும் அல்லது வித்யாபீடமெனவும் பெயர் சொல்லுவர். ஏனைய மூன்றுபீடங்களுக்கும் சங்கரர்பீடம் அல்லது அத்வைதபீடமென்று பெயர் சொல்லவேண்டுமேயன்றி இந்திரபீடம் நான்கென்

பதற்கு வேறுவிதமாகப் பொருள்கூறப் படாதெ ன்க. இங்ஙனமிருக்க, ஸ்ருங்கேரி சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கும், கும்பகோணம் சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கும் சில கக்ஷிபேதங்க ளுண்டாகி விவாதமிருப்பதா லதனை யெழுதப்புகின் விரியு மெனக்கருதி விடுத்தனம். அன்றியும், சிஷ்யர்களு க்குத் தோன்றுகிற பலவிதசங்கைகளைக் கெடுப்பவ ராயும், ப்ரம்ஹானந்தசுகத்தைக் கொடுப்பவராயும் விளங்காநின்ற ஆதிசங்கராசாரியருக்கு ஜகத்குரு சங்கராசாரியரெனப் பெயர்வந்தது. அத்தன்மைச் சிறப்புற்ற ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளுடையஅத் வைத பீடத்திற்கு அதிகாரியாகிய ஸ்வாமிகள் ஸ்வ யம்பிரகாசப் பொருளாகிய ஸ்வரூப சாக்ஷாத்கார த்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெரிசித்த வரும், ப்ராம்ஹணுள்முதலிய நான்கு வருணத்த வர்களுக்கும் தமது ஸ்வானுபவ வுண்மையைத்தெ ரிவித்தவரும், கரமே பாத்திரமாகப் பிக்ஷையேற் றுப் புசித்து வர்ணாஸ்ரம பேதமின்றிச் சஞ்சரித்த வருமாகிய மகானுபாவருக்குக் கரபாத்திர யோகீ ஸ்வரரெனப் பிரசித்திநாமம்வந்தது; இவரது சரி த்திரவரலாறு தெரியாமையா லெழுதவில்லை. இந் தகரபாத்திர யோகீஸ்வரருடைய மாணுக்கர் தெத் தாத்திரய ஸ்வாமிகளாதலின் "நிலவுகொப்பளி க்கு மிந்திரபீட நிலமரபாய்வருமுரியன், நேயனுங் கரபாத்திரனெழிற் றெத்தாத்திரயன்" எனக் குரு பூசைஸ்தோத்ரத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இங் ஙனங்கூறிய தெத்தாத்திரய ஸ்வாமிகளியற்றிய உப தேசவாக்கியம் முமூக்ஷுக்களுக்கு மிகவு முபயோ கமா யிருக்குமெனக்கருதி, ஸ்ரீமத்கரபாத்திர யோ

கீஸ்வராரியற்றியநூலிற்சேர்த்திருக்கின்றனம். இது நிற்க, சர்வஜீவ தயாபரராயும், சர்வவியாபகராயும், அகண்ட தேஜோமயவடிவராயும் விளங்காநின்ற ஸ்ரீமத் சிவபெருமானுர் தேவர்களுக்குத் தேவனுகவும், மானுடர்களுக்கு மானுடனுகவும் ரூபமெடுத்துத் தத்துவஞானத்தைப்போதித்து நிரதிசயானந்தசுகத்தைக் கொடுப்பவராதலின் சங்கராசாரியரெனவும் ஜகத்குருவெனவும் சகலமானவர்களுங்கூறுகின்முூர்கள். இத்தகைச் சிறப்புவாய்ந்த லோகோபகார தயாபர மூர்த்தியாகிய ஸ்ரீமத் சத்குருநாதனைப் பண்டிதபாமரராள் முதலிய யாவருந் திரிகரணசுத்தியாகப் பூஜிப்பார்களென்பது நிச்சயம். ஏனெனில், மனோவாக்குகளுக்கெட்டாத மகாதேவர் சராசரமுதலிய வனைத்துந் தனது வடிவமாயினும் சகலவுயிர்களெல்லாந் தன்னை யன்னியமாகநினைத்து மயங்குகின்முூர்க ளாதலானும், அவ்வுயிர்களனைவருந் தன்னையுபாசிக்குமாறுகருதித், தானே விராட்புருஷனுகவும் அனந்தமூர்த்திகளாகவும், அறிவுக்கறிவாகவும், அருட்குருவாகவுமிருந்து சகலவுயிர்களையெல்லாம் பரிபாலனம் பண்ணுகின்முூராதலானும் "அருவாகியகண்டமுமாகிஆனந்தமுமாகிய பிரமங், குருவாயருள் செய்தமைபாரீர் கோதின்றி நிறைந்தமைபாரீர்" எனவும், "செறிவாகியிருந்தவர்தாமே சீவன்சிவ னென்னவிரண்டாய்ப் பிறியாவகைநின்றமைபாரீர்" எனவும், "தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு, மந்தமிலா வின்பமக் காவானு மெந்தனுயிர் தானுகு வானுஞ் சரணுகு வானுமருட், கோனுகுவானுங் குரு" எனவும் பெரியோர்கள் திருவாய்மலர்ந்தரு

ளின ராதலானும், யாவுங் குருவடிவமென்பது சத்தியம்! சத்தியம்!! இவ்வாறு அநாதியான வேதாகம முதலிய அனேகம்பிரமாணவாக்கியங்களிருக்க இவற்றிற்கு விரோதமாக அறிவறியாமையாதாரவிளக்கமெனப் பெயருள்ள அத்வைத கிரந்தத்தில் "உன்னுற் குழித்திருந்த" என்னும் வெண்பாவில், "பின்னொருவர் சங்கரரைத் தூஷித்துச் சார்ந்தா ரயல் மரபில்" எனக்கூறப்பட்டிருக்கின்றது. அதற்குச் சமாதான மெழுதப்புகின் விரியுமெனக்கருதி ஸ்ரீமத்சங்கராசாரிய ஸ்வாமிகளியற்றிய சதாசாரப் பிரகரணவுரையிற் கூறினும். ஏனெனின், இஃது ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளது சரித்திரச் சுருக்கமாதலின் இதில் அசங்கதப்ரசங்கங் கூறக்கூடா தாதலினென்க.

ஜகத்குருபரம்பரை

முற்றுப்பெற்றது.



கரபாத்ரசுவாமிகள்.

ஸ்ரீமத்சத்குருவேநம:

சத்தியசாஸ்வத நிராலம்ப அகண்டானந்தா
த்வய சர்வோன்னத மோட்சசிம்ஹாசன
பதியா யெழுந்தருளிய ஸ்ரீமத்

இந்திர்பீடங் கரபாத்திர யோகீஸ்வரருடைய

சாம்பிரதாய சிந்தனைகள்.

வினா.—மோட்சமடையச் சொரூபவியாபக முழுது மறியவேண்டாமோ வென்னில்?

விடை.—அப்படித் தேவையில்லை. சமுத்திர ஸ்நானம்பண்ணவிரும்பினவன், அதனுடைய ஆழமும் நீளமு மறியவேண்டிய தில்லையே; வொருபக்கத்தில் முழுகினாற் போதும்போல, வொருவிஷயத்திற் றன்னைக்கண்டாற் சொரூபவியாபகமுழுது மறிந்ததாமெனவறிக. (க)

வினா.—சத்குருவை விட்டுநீங்காம லிருந்தால் பிறவியறும்வகை யெப்படியென்னில்?

விடை.—புலியின்வாயிலே போனவனை யொருவன் பிடிங்கிக்கொண்டுவந்தவன்பிறகே யொடுங்கித் திரிகின்றவன்போல் * வஞ்ஞானத்தைநீக்கின சத்விருத்தியான

---

* அஞ்ஞானத்தை நீக்கின சத்விருத்தியாவது, குருவாக்யப்படி நிஷ்டைகூடி ஞானப்பியாசஞ் செய்தால்-அஞ்ஞானங்கெட்டு ஞானோதயமாகும். அப்படி வுதயமாகும் விருத்திக்குச் சத்விருத்தி யென்றுபெயர்.

விளக்கத்துடனே கூடியிருந்தால், பிறவிநீங்கும். சத்வி ருத்தியைவிட்டால், வாதனைபிடிக்கும். அதெப்படிப் போலவென்னில், மறுபுலி பாய்ந்ததுபோலவெனவறிக

வினா.—நஷ்டலாப மெதிலேயென்னில்?

விடை.—* பதார்த்தத்தில் நஷ்டமில்லை நினைப்பிலே தான் நஷ்டலாப சுகதுக்க மெனவறிக. (௩)

வினா.—பக்குவ மில்லாதபேருக்கு அனுபவஞ் சொல்லலாகாதென்ப தெப்படியென்னில்?

விடை.—கன்னிப் பெண்ணுக்குக் கொக் கோகஞ் சொல்லுகின்றதுபோல முடியுமெனவறிக. (௪)

வினா.—ஆத்மானுபவ மெங்கு மிருக்கின்றது. யாரா லே அனுபவிக்கலாமென்னில்?

விடை.—இராஜா வுடைமையைப்போல வெங்குமி ருக்கின்றது. யாராலு மனுபவிக்கப்படாது, சிம்ஹா

மனமென்னும் புலியானது - விஷயாரண்ய மென்னும் பூமியில் - பஞ்சேந்திரியமுதலிய விஷயங்களை யாகார ஞ்செய்து கொண்டு சஞ்சரிக்கின்றபடியாலும், அஞ் ஞானத்தோடு கூடியிருப்பதாலும், இவைகளுக்கு அச த்விருத்தியென்று பெயர். ஆகலின், சத்விருத்தியெ ன்னும் புலியானது, மனமுதலிய அசத்விருத்திகளைப் புசிக்கின்ற படியாலும், தனது ஞானதிருஷ்டியை வி டாதிருந்தால் - அசத்விருத்திகளால் தனக்குத் துன்பம் நேரிடாது. ஞானவிளக்கத்தைவிட்டால் மனமென்னும் புலி, தன்னைவிழுங்கிவிடுமென்று அபிப்பிராயம்.

* பதார்த்தத்தி லாவது - தானுகிய வஸ்துவி லென்றர்த்தம்.

சனபதியாய்க் கிரீடந் தரித்தா லனுபவிக்கலாம்போலப் * பக்குவப்பட்ட ஆத்மாக்கள் எங்குமிருப்பதை யனுபவிப்பார்களென வறிக. (ரு)

வினா.—விசாரிக்கப் போகின்றவனுக்கு யெல்லாக்கற்பனையுமுண்டாய் நசித்துத் தான் விளங்குமென்பதெப்படியென்னில்,

விடை.—தன்னை யறியப்போகின்ற சமயத்தில் பாவபுண்ணிய முண்டு - ஜனனமரணமுண்டு - நரகசொர்க்கமுண்டு-தத்துவமுண்டு - மாயை யஞ்ஞானமுண்டு-ஜீவனீஸ்வரனுண்டு-சாட்சியுண்டு - சமஸ்தமுமுண்டு; எத்தனையுண்டானாலுந் தன்னைக்காட்டிவிட்டு - இத்தனையும் நழுவிப்போய்த் தான்மாத்திரம் விளங்குமெனவறிக.()

வினா.—ஒளிதானேயிருளென்பதெப்படியென்னில்?

விடை.—சூரியன் விளங்குகின்றபோது பதார்த்தம் விளங்குதென்கிறதுபோல,அனுபூதி விளங்கும்போது ஆகாரம் விளங்குதென்கின்றது பிரத்தியட்ச விருட்டென வறிக. (எ)

வினா.—விஷயஞ்சுகமல்லவென்பதெப்படியென்னில்?

விடை.—புசிப்புப் - போக மதிகமானல் துக்கமாகித் தன்னுடைய நிசசுகத்தில் திருப்பிவிடுமெனவறிக.(அ)

வினா.—பிரபஞ்சசொரூபம் பிரம்ஹமென்பதெப்படி யென்னில்?

விடை.—சொல்லிற்பேதமும் பொருளி லபேதமுமா யிருக்குமென வறிக. (௯)

---

* பக்குவப்பட்ட ஆத்மாக்களாவது, தீவரம்-தீவரதரம் - அதிதீவர மென்னும் பக்குவ மமைந்தவர்களென்றர்த்தம்.

வினா.—கடத்தைநினைந்துக் கடாகாரமாகி யறிகின்றது சிந்தையென்றறிந்தால், அப்போ கட மெப்படியிருக்கு மென்னில்?

விடை.—கடம்சத்தாமாத்திரமாயிருக்குமெனவறிக.

வினா.—மறைப்பதும்பிடிப்பது மெப்படியென்னில்,

விடை.—சூரியனிடத்தி லுண்டானமேகம் சூரியனை மறைக்கும், கிரணத்தைப்பிடிக்கும், அதுபோலச்,சொரூபத்திலுண்டான விருத்தி சொரூபத்தை மறைக்கும், அநுபூதியைப் பிடிக்குமெனவறிக. (கக)

வினா.—தானடுவே யிருந்து யிருபக்கமும் புரளுவ தெப்படியென்னில்,

விடை.—சகலபிராணிகளுக்கும் பசியான துக்கமில்லாவிட்டால், போசனஞ் சுகமாகாது. துக்கமா யிருக்கிறதென்றுசொன்னால், சுகமாயிருக்கின்றதென்று சொல்லலாம், சுகமாயிருக்கிறதென்று சொன்னால், துக்கஸ்வரூபியாயிருக்கிறதென்று சொல்லலாம். ஞானியென்றுசொன்னாலஞ்ஞானியென்று சொல்லலா மெனவறிக.

வினா.—சுருதியுங் குருவுஞ் சுவானுபவமு மெப்படியென்னில்,

விடை.—சாஸ்திரமானது - ஸ்தூலம்- சூட்சுமம்- காரணம்- துரியம்-இவைகளை யின்னதின்னதென்று சொல்லும். குருவானவர்-ஸ்தூலமுதலந்திற்கும் ஸ்தூலம்-வியாபகம். நினைப்பு-வியாப்பியம். சூட்சும அறிவு வியாகம், மின்பவியாப்பியம், காரண ஆனந்தம், வியாபகம், அறிவு வியாப்பியம். துரிய விளக்கமும் வியாபகமுஞ்

சமமென்று யுக்திகாட்டுவது. * குருசிஷ னிரண்டுபேருமொத்துச் சாதனம்பண்ணி, அனுபூதியாய் விளங்குவது, இன்னம் - நூலால்விளங்குவது, மாணாக்கனாகிய அறிவு. அறிவால் விளங்குவது, அனுபூதி. குருவால் விளங்குவது, சாட்சாத் காரமென வறிக. (௧௫)

---

* குருசீஷ னிரண்டுபேருமொத்துச் சாதனம்பண்ணி என்று சொல்லுமிடத்துக் - குருவென்பவர் சாதனமெல்லாமுடிந்தவராதலால் குருசிஷனிரண்டுபேருமொத்துச் சாதனம்பண்ணுகிறதென்றால்; சங்கைக்கிடமாகின்றது. அதற்குச் சமாதானமெப்படியென்றால், சீஷர்கள் மந்தன் - மந்ததரன் - தீவரன் - தீவரதரன் - அதிதீவரனென்று ஐந்து வகைப்படும். அவர்களில்; மந்தன் - மந்ததரனென்னு மிருவரும் அபக்குவிகளென்றும், தீவரன் - தீவரதரன் - அதிதீவரனென்னு மூவரும் - பக்குவிகளென்றுஞ் சொல்லப்படுமாதலானும், தீவரன் - ஆசாரியர் உபதேசித்தவுடனே தனதுஸ்வரூபத்தைக் காண்பான். தீவரதரன் - குருவாக்கினின்று வரும் வார்த்தையினாலே தெரிந்துகொள்வான். அதிதீவரன் - ஆசாரியரது கண்பார்வை பார்த்தவுடனே தனதுஸ்வரூபத்தைத் தர்சிப்பான். ஆதலாலும், தீவரன்முதலிய மூவர்களுக்கும் ஆசார்யர் சாதனம்பண்ணிக் காட்டவேண்டியதில்லை. மந்தன் முதலியவிருவருக்கும் அனேககாலமாகச் சாஸ்திரார்த்தங்களைப் போதித்தும், அஷ்டாங்கமுதலிய யோகாப்பியாசக் கிரமத்தைத் தெரிவித்தும் பக்குவிகளாகச் செய்தால் மோட்சமடைவார்களாதலாலும், இங்ஙனஞ்சொல்லிய விரண்டுபேருக்கும் - குருவானவர் சாதனம் பண்ணிக் காட்டவேண்டுமென்றபிப்ராயம்.

வினா.—சித்தசுத்தி வரும்வழி யெப்படியென்னில்,

விடை.—நித்தியநைமித்திய கருமங்களில் பலத்தை விரும்பாமற் செய்தால் வருமெனவறிக. (கச)

வினா.—*ஏகாக்கிர மெப்படிவருமென்னில்,

விடை.—† உபாசனையினால் வருமென வறிக. (கரு)

வினா.—வைராக்கியம்-பக்தி-ஞானமாவதெப்படியென்னில்,

விடை.—பஞ்சேந்திரிய விஷய நினைவெல்லாந் தானல்லவென்று விட்டுநீங்கின நினைவே வைராக்கியம். அந்த நினைவு தானாகின்றவறிவிலே யாசைவைத்ததே பரமபக்தி. அந்தவறிவு - தானே சச்சிதானந்த சொரூபமென்று நினைத்துச் சிந்தனைபண்ணுகின்றதே ஞானமெனவறிக. (கசு)

வினா.—அஞ்ஞானத்திற் பிறந்தவறிவு நித்தியமல்லவென்பதெப்படியென்னில்,

---

* ஏகாக்கிர மாவது - தனித்திருப்ப தென்றர்த்தம்.

† உபாசனை, பாஹ்யபக்தி-அநன்யபக்தி-ஏகாந்த பக்தியென மூன்றுவகைப்படும். பாஹ்ய பக்தியாவது, புறம்பில் அன்னியமாக யீஸ்வரனை உபாசனைசெய்வதாம். அநன்யபக்தியாவது, அன்னியமில்லாமலெங்குமிருக்கின்றதாக உபாசனைசெய்வதாம். ஏகாந்த பக்தியாவது, எல்லாவற்றிலுந் தன்னையும்-தன்னிலெல்லாவற்றையும் பார்ப்பதாம். உபாசனையினாலெனவே; இங்ஙனஞ்சொல்லிய ஏகாந்தபக்தியினாலே ஆத்மஸ்வரூபத்தை யுபாசனை செய்யவேண்டுமென் றர்த்தம்.

விடை.—இந்த தேகம்-முன்னேயிருந்ததா? யில்லை. இப்பயிருக்கின்றதென்றால், இந்ததேகம் வெளியிலே தோன்றும்போது- உள்ளே ஞானமிருந்ததா? யில்லை, இந்த அறிவு முன்னே யிருந்ததா? யில்லை, யென்னமாயிருந்தது - அஞ்ஞானமா யிருந்தது, ஆனாலிப்போ அஞ்ஞானத்திற்பிறந்த அறிவு நித்தியமல்லவே; ஆகையாலிது சொரூப மல்லவென வறிக. (கஎ)

வினா.—விஷயம் வந்தடுத்தா லெப்படி போமென்னில்,

விடை.—தன்னினைப்பென்றுபார்த்தால்போம், போகாவிடில், தன்னிச்சையென்று பார்க்கப்போம், அதற்கும்போகாவிடில், சானனுபூதியானாற் போம், அதற்கும் போகாவிடில், புசித்தாற் போமெனவறிக. (கஅ)

வினா.—இன்ன மெப்படிப் போமென்னில்,

விடை.—கெட்டவனென்று தோன்றுவதும்-நல்லவனென்றுதோன்றுவதும்-பாம்புபுலியென்று தோன்றுவதும், இன்ன மனேகந்தோன்றுவது மிந்த நாலுவிதத்திற் போமெனவறிக. (கக)

வினா.—இன்னம் - விவேகமெங்கே, அனுபூதியெங்கே யென்னில்?

விடை.—உள்ளே விவேகபோதம், வெளியி லனுபூதியென வறிக. (உ0)

வினா.—அவித்தையை வித்தைகெடுக்குமானால் வித்தை யெதினாலே கெடுமென்னில்?

விடை.—அந்தகாரத்தைக்கெடுத்த தீபப்பிரகாசமாதித்தன் சன்னிதானத்திற் கெட்டாற்போல, ஸ்வபாவக்ஞான வாகலாதசோதியிற் கெடுமெனவறிக. (உக)

வினா.—இன்னந் தானாயிருக்கத் தன்னைமறந்த தெப்படி யென்னில்?

விடை.—சமபாவனைபண்ணாது - பிறித்துப் பாவிப் போர்க்கு-அவை மயமாதலேயன்றி, வேறுபிரிக்கக் கூடாதாகையால், சம்புவை * மறந்தாயென்றுங் கூறப்பட்டதென வறிக. (உஉ)

வினா.—உள்ளது மில்லதும்போய் விலட்சணஞ் சிந்திப்ப தெப்படியென்னில்,

விடை.—அறிவைநாட்டினா லாகாரம்போம். ஆகாரம்போகவே; யறிவுங்கூடப்போம் - அப்போ உள்ளது மில்லதும் போகவே; தானாயிருக்கின்ற விலட்சணஞ் சிந்திக்கு மென வறிக. (உ௩)

வினா.—இன்னம் - நீ - யென்னமா யிருக்கிறா யென்னில்,

விடை.—ஆகார தேகமாயிருந்த நான், அறிவைத்தவிசயில்லை யென்கையால், அறிவா யிருக்கின்றேனென்ன, அந்த அறிவு யெப்படியிருக்கிற தென்னில், அவையவ ரகிதமான படியினாலே அகண்டமான யீஸ்வரனாக யிருக்கிறேனென்ன, அப்படியே யிருக்கின்றாயா வென்னில், ஆகாரம் போகும்போது அறிவுங் கூடப்போகிறதென்ன, அப்பா லெப்படி யிருக்கின்றாயென்னில், சுகமா யிருக்கின்றே னென்ன, சுகமா யிருக்கிறேனென்று சொல்லுகின்ற வகங்காரவறி விருக்கின்றபடியினாலே கூடா

---

* சம்பு வென்னும் பரமசிவுமே - குருவாதலானும், குருவடிவமாக வெழுந்தருளித் தனது ஸ்வரூபத்தைத் தெரிவிக்கவேண்டு மாதலானும், நிரதிசயானந்த சுகத்தைக் கொடுப்பவராகிய குருவுக்கு சம்புவென்று பெயர் வந்தது.

தென்னில், அதுவென்னிடத்தி லுண்டான அறிவு - நான்தானே யெனவறிக. (௨௪)

வினா.—இன்னஞ் சொரூபமாவ தேதென்னில்,

விடை.—எந்தநினைவு தன்னை மறந்துபோ: அந்தநினைவு தன்னைநினைக்கின்றதே சொரூபமென வறிக. ()

(தன்மை முன்னிலை படர்க்கை)

வினா.—இன்னந் தன்மை முன்னிலை -படர்க்கை-யெப்படியென்னில்,

விடை.—தன்மை தானயிராநின்றவனுபூதி. முன்னிலை, அறிவிலனுபூதி. படர்க்கை ஆகாரத்திலனுபூதியென வறிக. (௨௬)

வினா.—இன்னம் - அஸ்தியென்று அறிந்தவறிவு-தானென்பதெப்படி யென்னில்,

விடை.—அஸ்தியாவது-ஆகாரம். அறிந்தது போதம், அறிவென்பது-ஸ்புரணம். தானென்பது-சொரூபம். ஆகாரமு மறிவுங்கூடிக் கெடுகின்றது. ஸ்புரணமுந் தானுங்கூடி விளங்கிப் போகின்றதெனவறிக. (௨௭)

வினா.—என்ன தோன்றுகின்றதென்னில்,

விடை.—அனுபூதி - தோன்றுகின்றது. நாமரூபந் தோற்றவில்லையா வென்னில், என்னிடத்தில் விருத்தி தோன்றி அந்த விருத்தி - நாமரூபமாய்த் தோற்றுது. அதுவும் போகவேண்டுமே, யெப்படியென்னில், ஆகாரமெப்பவு மில்லை, விருத்தியாகிற தோற்றமே யொவ்வொரு ஆகாரமாய்த் தோன்றியழியும். கடைசியில் ஒன்றுதோன்றுகின்றதே யதுவும் போகவேண்டுமே? அஃதெப்படி யென்னில், முன்தோன்றிய வெல்லா மெப்படிபோயியோ? அப்படியே யிதுவும்போய். எப்படியென்

னில், அவளுக்கு அவள் - லட்சணம், அவளுக்கு அவ ள் லட்சணம், இப்படிப் பத்துப் பேரைச்சொல்லும் போது கடைசியிலிருந்தவள் லட்சணம், அவள் திரும்பி ஞல்முடியலட்சணம். ஒன்பதுபேரில்லே. யிருக்கின்றது வியாபகமே; யது தன்விளக்கமென வறிக. (உஅ)

வினு.—இன்னம் - ஆயறியாவிடில் ஆயறியாதென்ப தெப்படி யென்னில்,

விடை.—எதுவுந் தானுகியறிந்தது விருத்தம்நீங்கி யவிர்த்தம் விளங்காவிடில் * இகலற விசாரித்தறிந்த தல் லவெனவறிக. (உகூ)

வினு.—இன்னம் - அனுபூதிதோன்றுவதும் ஆகாரந் தோற்றுவது மெப்படியென்னில்,

விடை.—அறிவி லனுபூதி யடங்கியிருந்தால் ஆகா ரந்தோற்றும். ஆகாரம் அறிவிற்கரைந்தா லனுபூதிதோ ன்றுமென வறிக. (௩0)

வினு.—யாதொன்றினு மாரம்பிக்கு முறைமை யெ ப்படியென்னில்,

விடை.—ஒன்றைவிட்டொன்றை யாரம்பிக்கப்போ கிறபோதே சைதன்னிய துரியம் விளங்கப் பார்த்துக் கொண்டு ஆரம்பிக்க வேண்டுமென வறிக. (௩க)

(மாயை.)

வினு.—அநாதியில் - மாயையுண்டான தெப்படி யெ ன்னில்,

---

* இகலறவென்றது - மயக்கத்தை விளைவிக்கி ன்ற தேஹேந்திரியாதிகளாயுள்ள பகை நீங்கவென்று அர்த்தம்.

விடை.—நித்தியமாய்த் தானேதானாய் விளங்கி நித்தியானந்த சொரூபமாகின்ற அறிவு தானே பிரபஞ்சமாகவேண்டுமென்று நினைத்தது. அந்த அறிவுதானே சுத்தமாயையென்றுபெயர். அந்த அறிவு சொரூபமாகின்ற மாயையானது-தன்னுடைய நிசானந்தத்தை மறந்ததே அவ்வியக்தமாகிற ஈஸ்வரனுடைய காரணதேகமெனவறிக. (௩௨)

வினா.—இன்னம் - மாயையுண்டானதெப்படி யென்னில்,

விடை.—சொரூபத்தைவிட்டு நீங்கின அறிவுக்கு யெதிரிட்ட விஷயசுகம் தனக்குச் சுகமாய்த் தன்ஸ்வபாவ சுகத்தை மறந்து அநமொருமுதலானது மாயையெனவறிக. (௩௩)

வினா.—இன்னம் - மாயையை யறியப்படாதென்பதெப்படி யென்னில்,

விடை.—காரியமான பிரபஞ்சத்துக்கும் - காரணமானசொரூபத்துக்கும் - விலட்சணமாய்ச் சிந்திக்கில், நிர்ணயமாகாதது மாயையெனவறிக. (௩௪)

வினா.—இன்னம் மாயையென்பதெப்படியென்னில்,

விடை.—தேகமாயும் விளங்குகின்றதில்லை, அறிவாயும் விளங்குகிறதில்லை, யொன்றுகண்டா லொன்றுகாணாதது. ஆகையா லிது மாயையெனவறிக. (௩௫)

வினா.—மாயை யுண்டென்கின்றதும் - இல்லை யென்கிறதுமெப்படி யென்னில்?

விடை.—ஸ்புரித்தவறிவிற் றான்விளங்கினால் மாயையில்லை. தானும் வியாபகமும் அறிவிலடங்கினா லதுமாயை. அந்த அறிவிற் றான்விளங்காவிடிற் பிரகிருதியாமெனவறிக. (௩௬)

வினா.—மாயை யேகமென்பதெதுவென்னில்,

விடை.—சகலமா யிருப்பதென வறிக (௩எ)

வினா.—அவித்தை யனேகமென்ப தெதுவென்னில்,

விடை.—ஆகார*மென வறிக. (௩அ)

வினா.—இன்னம்- மாயையிற் றன்வசமானதும், மாயை தன்வசமானது மெப்படியென்னில்,

விடை.—விஷயத்திற் றன்மறைவுபட்டதுந் தன்னில் விஷயமறைவுபட்டது மென வறிக. (௩௯)

வினா.—இன்னம்-மாயை யில்லையென்ப தெப்படி யென்னில்,

விடை.—சுகந் தனக்கு வெஞ்சகமாய்த் தானறிவாய் நின்றால், சொரூபமாயிற்று. மாயையில்லையெனவறிக.

வினா.—இன்னம் மாயைமாளுவதெப்படியென்னில்,

விடை.—விருத்தியிற் றன்னைக் கண்டால், மாயை மாளுமென வறிக. (௪௧)

(பிரகிருதி தேவப்பிரபஞ்சம் வகைக்கும்.)

வினா.—பிரகிருதி† மகதத்துவம்- அகங்காரத்துவம்- பிரபஞ்ச மெதுவென்னில்,

விடை.—மாயாதீதம்-பிரகிருதி. மாயாகாரணம்- மகதத்துவம். மாயை அகங்காரம். மாயாகாரியம் அகமிநப்

---

* ஆகாரமென்றது, தேஹேந்திரியப் பிரபஞ்சமுதலியவைகளென்றர்த்தம்.

† பிரகிருதி யென்பது - குணசாமான்யம்-அஃதாவது - சத்துவமுதலிய மூன்றுகுணமுந் தோன்றுமனின்ற அவசரம் பிரகிருதியென்றர்த்தம்.

பிரபஞ்சம். துரியன் வெளிப்பட்டா விவைகள் கனைந்து மூன்று மொன்றுமென வறிக. (௪௨)

(சைதன்னியத்திற் சாட்டியத்திலொத்து நடு

நின்றது.

வினு.—"சைதன்னியத்திற் சாட்டியத்திலொத்து நடு நின்றலைவதுவே யுள்ள" மென்ப தெப்படியென்னில்?

விடை.—அகத்தைக்கொண்டு யிதத்திலும்-இதத்தைக்கொண்டு அகத்திலுந்திரிவது வொன்றுயிருக்க, அகம் - அறிவென்றும், இதஞ்சடமென்றும் - மத்தியம் விளங்காது நடுநின்றலைவதுவே யுள்ளமெனவறிக. (௪௩)

வினு.—விளக்கமு மாயையு மெப்படியென்னில்?

விடை.—மாயை - சர்வத்ரா சூன்யமல்ல. சொற்பன தேகம்போற் றேன்றியதை விசாரியாவிடில், அதுமாயை. விசாரிக்கில், தான் விளக்கமானபடியினுலே அப்படியென் றென்றில்லையென வறிக. (௪௪)

வினு.—இன்னம் - ஸ்புரிப்பில் விளக்கமு மாயையு மெப்படி யென்னில்?

விடை.—தானே அறியவந்தால் விளக்கம். அறிகின்றேமென்று போதமில்லை, அறியவில்லை யென்றொரு மயமுமில்லை. நானறிந்தேனென்று லது மாயை யாமிற்றெனவறிக. (௪௫)

வினு.—சுகதுக்கமெதுவனாக்கு மிருக்குமென்னில்?

விடை.—தேகந் தானல்லவென்று போமளவு மிருக்குமென வறிக. (௪௬)

(சுகதுக்கம்)

வினு. சுகமெப்போ துக்க மெப்போ வென்னில்?

விடை.—அபாவத்தி * லெப்போதுஞ் சுகம். பாவப் பட்டாற் றுக்கமென வறிக. (௬௭)

வினு.—சுக மெங்கே யிருக்கின்ற தென்னில்?

விடை.—நினைவிற் சுகமிருக்கிறது விஷயத்திலில்லை யென வறிக. (௬௮)

வினு—இன்னஞ் சுகதுக்க மெப்படி வருமென்னில்?

விடை.—மொத்தமா யொரு சுகம், பிறக்கின்றது. அந்தச் சுகத்தை யறியவரவே, ஆகாரமாய்ச் சுகதுக்க மாகுமென வறிக. (௬௯)

வினு.—இன்னம் பாமரகாலத்திலும் - பாமரநீங்கின காலத்திலும் சுக மெப்படியென்னில்?

விடை.—பெண்சாதிபேரில் முழுப்பிரிய மிருந்தது அப்போ சுகம். சோரம்போனால் துக்கம். அப்போ செத்தால் சுகம். இப்படிப் போலப், பிரபஞ்ச முன்னே சுகமாயிருந்தது, தாபத்திரயத்தினாலே பிரபஞ்சந் துக்கமாய்த்தோன்றி விசாரிக்க இச்சைபோயிற்று, சுகமிச்சமாயிற் றென வறிக. (௭0)

வினு.—பொன்னும் - ஓடும் - சரியாவ தெப்படியென்னில்?

விடை.—தன் வியாபகலகிரி யேறியிருந்தால் † உளத்திற்குச் சமத்துவம்வரும். துக்கத்திலுமனுபூதி, சுகத்

* அபாவ மாவது, மனோவாசா மகோசரமாய்த் தனித்து விளங்காநின்ற தனது ஸ்வரூபமென் றர்த்தம். பாவமாவது, தேஹேந்திரியப் பிரபஞ்சமென்றர்த்தம்.

† உளத்திற்கென்றது சுத்தமனதிற்கென் றர்த்தம்.

னிலு மனுபூதியா யிருக்கும் * த்ரணீகரம் வருமென வறிக. (௫௧)

வின.—சுகதுக்க வேதனைபிடியாமல் சுகவறிவு தானா ய் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை.—பொய்யைப்பொய்யென்று மெய்யாய்-மெ ய்நினைவுபிடித்தால், சுகதுக்கவேதனை பிடிக்காது. மெய் யைமெய்யென்று மெய்யாய், மெய்நினைவுபிடித்தால், சு கவறிவு தானாய் விளங்குமென வறிக. (௫௨)

(சஞ்சித வாகாமிய பிராரத்வம்.)

வின.—சஞ்சித வாகாமிய பிராரத்வ முண்டாவதும் நீங்குவது மெப்படியென்னில்?

விடை.—சஞ்சிதத்திலிருந்து பொசிக்கவந்தது பிரா ரத்வம். இந்தப்பிராரத்வம் பொசிக்கும்போது வினையே றுவது, ஆகாமியம் வெகுசஞ்சிதத்திற்சேரும்; சஞ்சித மாவது, கட்டுப்பட்டிருப்பது. முன்னிச்சைப்பட்ட வ கைப்படியே வருமல்லாமல் வேறாகவராது. இவைகள் த ன்னிச்சையென்று கண்டால் மேற்சொன்ன மூன்றும் நீங்குமெனவறிக. (௫௩)

வின.—வாசனைதொக்கினல் பிறவியுண்டென்ப தெ ப்படியென்னில்?

விடை.—எந்தவித்தையும் - எந்தப்பழக்கமும் - எந்த வாசனையும் - சத்தியமாயிருந்தால், விருத்தியிலடங்கித் தேகம்விட்டபோது - ஈஸ்வர அறிவிலிருந்து தேகம் வரும்போதே வெளியில் வருமென வறிக. (௫௪)

வின.—அனாதி வினையாவ தேதென்னில்?

---

* த்ரணீகாமாவது, துரும்பைப்போலப், பிரப ஞ்சத்தை அற்பமாகப்பார்ப்பதென்று அர்த்தம்.

விடை.—ஒருவன், வினையை முன்னே நிற்கச்சொன்னால் நிற்கும். அதற்குப் பூர்வபட்சியப்படிப்பட்ட கருமமவன்பண்ணுன். ஆனல் வினையை விசாரிப்போம்; * பச்சோந்தியாகிற விஷயத்துக்குத் துரியமாகிற மயில் - தான் சமத்தாயிருந்தும், தன்னைப்பாராமல் தன் கண்ணைக் கொடுத்துவிட்டுது. தன்னைப்பார்த்தால் கொடாது. தன்வியாபகத்தைப் பார்த்தபோது, தன்னிச்சையென்று தெரிந்தது, இது தன் னிச்சையென்று பார்க்கின்றதற்கு வினை தேவையில்லை யெனவறிக. ()

---

* பச்சோந்தியாவது, காட்டில் சஞ்சரிக்கின்றவோர் சிறிய பச்சை ஓணானென் றர்த்தம்.

மயிலானது - பெரிய ஜந்துவாகியும் விஷப்பாம்பைப்பிடித்து விழுங்குஞ், சக்தியுள்ளதாகியு மிருந்தும்; சிறிய ஜந்துவாகிய பச்சோந்தியைக்கண்டவுடனே தன்னைப்பார்த்தால், கண்ணைக்கொடுக்காது. தன்னைப்பார்க்காமல், அதற்குப் பயமடைந்து கண்ணைக் காட்டியவுடனே, கொத்துகின்றது. எப்போது கண்ணைக்கொடுத்ததோ? அப்போதே, தன் பெலங்குறைந்தது. அதுபோலத், துரியமென்னு மயிலானது, சத்தாமாத்திரமாகியும் - அவஸ்தாத்திரய முதலியவைகளைச் சாட்சியாகவிருந்து அறியுஞ் சக்தியுள்ளதாகியு மிருந்தும், அசத்தாகியும் அல்பமாயு மிராகின்ற விஷயத்தைப்பார்த்தவுடன், தன்னைப்பார்த்தால் தனது ஞானங்கெடாது. அங்ஙனந் தன்னைப்பார்க்காமல் தன்கண்ணுகிய ஞானத்தைப் பச்சோந்தியாகிற விஷயத்திற்குக் கொடுத்துத் தனது வியாபகவிளக்கங் குறைந்தது. ஆகலால், விஷயவாசனையி லறிவைச் செலுத்தாமல், ஞானவிளக்கத்தைவிடா திருக்க வேண்டுமென்று அபிப்ராயம்.

வினு.—வீடு பற்றுவ தேதென்னில்?

விடை.—உடலைவிட் டுயிர்போம்போது - மலர்போனவிடத்து வாசனையுங் கூடப்போவதுபோலக், கருத்தேதுவாயிருக்கிறதோ; அந்தவாசனையாகிற தேகத்தையே தரிக்குமெனவறிக. (ருசு)

வினு.—அசைவி லசைவில்லாத தெப்படியென்னில்?

விடை.—அறிவில் நிறைவானு லசைவில்லை, போதமிராதெனவறிக. (ருஎ)

(செகத்தெப்படித் தொழிற்பட்டது.)

வினு.—சூரியனுடைய சன்னிதானத்தில் செகத்தெப்படித் தொழிற்படுகிறதோ? அப்படிப் போல், அறிவு சொரூபத்தினுடைய சன்னிதானத்தில், செகத்தெப்படித் தொழிற்படுகிற தென்ருல்?

விடை.—அநித்தியமான ஜடம், நித்தியமா யிருக்கிறதுபோலத் தோன்றுகிறது, அறிவில்லாதசெடம் - அறிகிறதுபோலே விளங்குகின்றது, துக்கரூபமாகிய செடம் - சுகமயமபோலே யிருக்கின்றது. ஆகையால், அறிவு சொரூப சன்னிதானத்திற் செடந் தொழிற்பட்டாலும், செடம், பொய். செடத்திலெல்லாஞ், சச்சிதானந்த சொரூபமே விளங்குகிறதெனவறிக. (ருஅ)

(அத்தியாரோபம்.)

வினு.—அத்தியாரோப அபவாதமாவ தெது வென்னில்?

விடை.—தானே நவநவமாய் விளங்கவேண்டுமென்று ஸ்புரித்த அறிவை மறந்து - ஆகாரமானதே அத்தியாரோபம். அதிற் ருனிறைந்ததே, அபவாதமெனவறிக. (ருகூ)

(ஷட்விதலிங்கம்.)

வினு.—ஷட்விதலிங்கத்தில் - உபக்கிரம மாவதேதெ ன்னில்?

விடை.—சிருஷ்டிக்குமுன்னே சத்தாமாத்திரமா யிருந்தது, தன்னையறிய வியாபகஸ்புரண முதித்தது, சிருஷ்டி. ஸ்திதிகாலத்திலுந் தானே விளக்கவியாபகமா யிருக்கின்றது ஸ்திதி. உபசங்காரமாவது, ஸ்புரணத்தில் தான் விளங்கிப்போனது சங்காரம். அப்பியாசமாவது, சச்சிதானந்தத்தை யென்பதுபிரகாரமா யனுசந்திப்பது அப்பியாசம். அபூர்வதையாவது, கட மில்லையென்பதுபோலப் பாவமானஅறிவில்லை. யிருக்கிறது பிரத்தியட்சவியாபகவிளக்கமான அளவை. பலமாவது, சர்வமுந்தானென் றறியப்பட்டதே பலம். அர்த்தவாதமாவது, தோன்றினபோதந் தன்னை விளக்கிப்போட்டுக் கெட்டுப்போனது. உற்பத்தியாவது, காரணமான வியாபக விளக்கமாகிற தன்னைத் தவிரக் காரிய மில்லையென்பதெனவறிக. (சுo)

(சிருஷ்டிலயம்.)

வினு.—உற்பத்தி - ஸ்திதி - லயமுண்டாயிருக்கயில்லையென்பதெப்படி யென்னில்?

விடை.—ஸ்புரணம் - வந்ததே யுற்பத்தி, யிந்தவுற்பத்தியான ஸ்புரணந் தானுயிருக்குதென்பதைக் காட்டவந்தபடியா லுற்பத்தியில்லை. ஸ்திதி-யேனில்லையென்னில்? மோனுதீதமான சொரூபம் - மோனத்திற்றுனுய் விளங்குகின்றது, துரியத்தில் விளக்கந் தானுயிருக்கின்றது, ஆனந்தத்திற் பிரியந் தானுய்விளங்குகின்றது, ஞானத்திற் றுன் தெரிவாய் விளங்குகின்றது, பாவனுவிஷயத்திற் றுனேதானுய் விளங்குகின்றது. ஆகையால்,

எங்குந் தானே தானாய் விளங்குகின்றபடியால் - ஸ்திதி-யில்லை. எல்லாமொடுங்க லய மேனில்லை யென்னில்; எல்லாந் தானான வியாபகமானபடியா லயமில்லை. இப்படி யுற்பத்தி - ஸ்திதி - லய மிருக்கையிற்றானே, தான் பிரம்மானந்தரசமாய் விளங்குகின்றபடியால், உற்பத்தி-ஸ்திதி - லயமில்லை. இதற்குச் சாஸ்திரம் - "புத்தோக முத்தோகம் பூரணா னந்தோக" மென்றிருக்கின்றதே அதின் அர்த்தம்" புத்தோகமென்பது, புதிது - புதியதா யிருக்கின்றபடியாலும், எப்போதும் புதுமையென்றபடியாலும், சிருஷ்டியில்லை. முத்தோக மென்பது, முன்னிருந்ததே - இப்போதும் - இனி மேலும் - மூன்றுகாலத்திலும் - விளங்குகின்ற படியாலும், எப்போதும் பழமையென்றபடியாலும், வேறே ஸ்திதி - யில்லை. "பூரணா னந்தோக" மென்பது - தான்தானே எங்கும் வியாபகமாய் * நிபிடீகரித் திருக்கின்ற படியாலும், இந்தப்படி யனுபவிக்கின்றபடியாலும், ஒரு காலத்திலும் லய மில்லையென வறிக. (௬௧)

வினா.—இன்னஞ் சிருஷ்டி லயமெப்படி யென்னில்?

விடை.—தான் விளங்கினாற் செகமில்லை, லயம். விருத்தியானால் சிருஷ்டியான செக முண்டென வறிக. ()

வினா.—சிருஷ்டியும் - லயமுமெப்படி யென்னில்?

விடை.—சைதன்னியத்தி லொருசுகம் - மத்தியிற் பிறந்து, அகண்டவறிவி லடங்கி அது யேகதேசவறிவாய், அகமிதமானது சிருஷ்டி. மத்திய அகண்டவறி

---

* நிபிடீகரித்தாவது, அணுவிற் கணுவாயும்-மஹத்துக்கு மஹத்தாயும் பரிபூர்ணமாகப் பிரகாசித்துக்கொண் டிருப்பதென் றர்த்தம்.

வில், துரியமாய் - வியாபகம் விளங்கிப்போனது லய மெனவறிக. (௬௩)

வினு.—உபக்கிரம வுபசங்கார மெப்படி யென்னில்?

விடை.—முதல் முதல் - சித்துவிகற்பித்து, அதில் தானடங்கினது - பிரகிருதி. அது - மயத்தை யடைந்தது - சங்கற்பம். இதில் - சிருஷ்டி, அதில் தான் விளங்கிப் போனது - சைதன்னியம். இது லயமென வறிக. (௬௪)

வினு.—உபக்கிரமமு முபசங்காரமுந் தான்விளங்கலு மெப்படி யென்னில்?

விடை.—உபக்கிரம முன்தானுயிருந்த சத்தை விளக்கியது. உபசங்காரம் பின் - வெஞ்சகம் நசித்துது, அதில் - தானுனசித்து விளங்கினுல்தான் சரி. பசுவில்-பதி விளங்காவிடில் - மலம். தான் விளங்குமிடத்தில்- அறிவு விட்டுது, அறியாமைவிட்டுது, அனுபூதி தானுகிறசித்துக்கு. அவைக ளெல்லாம் நானென்று சொல்லப்பார்த்தால், பார்க்கப்படுகின்ற தில்லை. நானில்-தானிருந்துபார்த்தால், பார்க்கப்படுமென வறிக. (௬௫)

வினு.—சொரூப மிப்படி யெல்லாஞ் செகத் தாவானே னென்னில்?

விடை.—* சாதிலிங்கஞ் சித்திரங்க ளாயிற்று - சித்

---

* சாதிலிங்கமாவது, சிவப்பு முதலிய பல்வித வர்ணங் கலந்து சித்திரமெழுதக் காரணமா யிருக்கின்றதற்குச் சாதிலிங்கமென் றர்த்தம். ஓர்படத்தில், சாதிலிங்கத்தைப் பார்க்காமல் சித்திரமாகப் பார்த்தால், சாதிலிங்கந் தோன்ருது, சித்திரமேதோற்றும். சாதிலிங்கத்தைச் சாதிலிங்கமாகப் பார்த்தால், சித்திரமிரு

திரத்தைச் சாதிலிங்கமாய்க் கண்டால், இப்படி யெல்லா மானதில்லை, சாதிலிங்கத்தை விட்டுச் சித்திரமாய்க் கண்டா லிப்படி யெல்லா மாயிற்றெனவறிக. (சுசு)

வினா.—விளக்க வியாபகமே பிரபஞ்சம், பிரபஞ்ச மென்ப தொன்றில்லை யென்ப தெப்படி யென்னில்?

விடை.—பாம்பு - பொய்யென்று பார்த்தால், பாம்பு போனதல்ல. பழுதையைக் கண்டாற் பாம்பு - பொய்யென்று சொல்லவேண்டிய தில்லை. பழுதையே பாம்பாயிருக்கின்றது; அப்படிப் போலச், செகம் - பொய் யென்று பார்த்தாற் செகம் போனதல்ல. வியாபகத்தைக் கண்டால், செகம் - பொய்யென்று சொல்லவேண்டியதில்லை. தானாயிருக்கின்ற வியாபக விளக்கமே செகமா யிருக்கின்றதெனவறிக. (சுஎ)

வினா.—சிருஷ்டியநுக்ரகமு மெப்படி யென்னில்?

விடை.—தானாயிருந்த மோனாதீதந், தன் சுகத்தை நினைத்து ஸ்புரித்தது மோனம். அதி லறிவு உதித்தது துரியம். அது மயப்பட்டது சுழுப்தி. அதுசலனப்பட்டது - சொற்பனம். எதிரே தோற்றினது - ஆகா

ந்தும் - வினைதந் தோற்றுது, அதுபோலத், தானாகிய அறிவினிடத்தில் - பஞ்சேந்திரிய மென்னும் வர்ணத்தால் - நால்வகையோனி - எழுவகைத் தோற்றம் - (அசு) லட்சஞ் சீவசெந்துக்களென்னுஞ் சித்திரமெழுதி யிருக்கின்றனவாதலால், தன்னைப்பார்க்காமல் பிரபஞ்சமாகப்பார்த்தால் - தான் - தோன்றுது, பிரபஞ்சமேதோற்றும். தன்னைத் தானாகப்பார்த்தால் - தேகேந்திரியப் பிரபஞ்சமிருந்தும் தோற்றுது. ஆதலால், பிரபஞ்சம் அவாந்திரமென் றபிப்பிராயம்.

ரம். பக்குவப்பட்ட சீஷனுக்குத் துரியத்தி லறிவை விளக்கிச் சுழுப்தியா னந்தத்தையுந் - துரியாதீதத்தையுந் துரியத்தில் தரிசிப்பது, நிசமென வறிக. (சூஅ)

(எழுதுவோனு மெழுதிடமு மெதிர் காண்பன.)

வினு.—எழுதுவோன் முதலிய மூன்று மெப்படி யென்றால்?

விடை.—"எழுதுவோனு மெழுதிடமு மெதிர்காண்பொருளு மிலதாகி" யென்கிற பாடலுக்கு, எழுதுவோன் - அறிவு, எழுதிடம் - தான், எதிர்காண்பொருள் - தன்னிலெழுந்த வானந்தமே தடித்தது, அனுபூதி யானபடியினாலே * சித்திரமில்லை; அனுபூதி விளக்கமாயிருக்கின்ற படியினாலே அறிவில்லை; அறிவானந்தந் தானாயிருக்கின்ற படியால் இடமில்லை. மூன்றுமிருக்க யில்லையென்ப தெப்படி யென்னில்; தானனது விளங்காத படியினாலே பழுதுமேவியது. தன்னைப்பார்த்தால் கனவுதோன்றும்போது - கனவில்லை, நனவில்- விஷயமில்லை, இந்தவிரண்டு மில்லாதது. சுழுப்தி யென வறிக. (சூகூ)

(பஞ்சகிருத்தியம்.)

வினு.—சதா பஞ்சகிருத்திய மெப்படி யென்னில்?

விடை.—அதுவது தானனது - சிருஷ்டி. அதுவது-தானென்றறிந்து தோன்றினது - ஸ்திதி. ஆனதையு மறிந்ததையும் - அழுந்திக்கொண் டெழுந்த வியாபகபலமே சங்காரம். இந்த மூன்றுதிரிபுடி யில்லாதது திரோ

---

* சித்திரமாவது - பிர்ம்மா முதல் எறும்பு யீறாகச் சொல்லப்பட்ட தேகேந்திரியப்பிரபஞ்ச முதலானவைகளுக்குச் சித்திரமென்று அர்த்தம்.

பாவம். விளங்கித் தானாயிருப்பது - அனுக்கிரகமென வறிக. (எ0)

வினா.—பூதார்த்தவாத மெப்படி யென்னில்?

விடை.—இறந்தகால வனுபூதிக்கி - அர்த்தந் தெரியவே? உபாதி வாதிக்கப்பட்டுப் போகின்றது. சர்வத்துக்கு மிறந்தகாலஞ் சத்தையொட்டி வரவேண்டு மென வறிக. (எக)

வினா.—இன்னம் அர்த்தவாதமாவ தெது வென்னில்?

விடை.—உதித்ததி லுதியாது விளங்குவதும் - அறிந்ததி லறியாது விளங்குவதும் - பார்த்தத்திற் பாராது விளங்குவதும் - கேட்டதிற் கேளாதுவிளங்குவது, மிப்படி விளங்கினு லிவைகள் வாதிக்கப் படுவதென வறிக. (எஉ)

(சத்காரிய வாதம்.)

வினா.—கேழ்கக் கேழ்கக் கேழ்கக் கிரிகிக்கப் படவில்லை, பார்க்கப் பார்க்கப் பார்க்கப் படவில்லை, யென்பதெப்படி யென்னில்?

விடை.—கேழ்க்கின்றதும் பார்க்கிறது மிருந்தா லல்லவா, கிரிகிக்கப் பார்க்கச் சிந்திக்கவும் படும். கேழ்க்கின்றதும் - பார்க்கின்றதுஞ் சிந்திக்கின்றது, மதுவாயிருக்கின்றது. ஆகையால், தானையறியப்பட்டதே பிரம்ஹமானுல் அறியப் பட்டதுக்கு மறியப் படாததுக்குமப்பாற்பட்டது பிரம்ஹமென் றொருவேதஞ் சொல்லுகின்றது; அறியப்பட்டது - தானென்றது. அறியப்படாதது - தானனதென வறிக. (எங)

வினா.—இன்னம் - காரியங் காலத்ரயத்திலு மில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—காரியத்திற் காரணம் வராது, காரணத்தி ற்காரியமில்லை, காரியமெல்லாங் காரணமாகவே விளங் குகின்றதெனவறிக. = இதற்குத் திஷ்டம் = அறிகிற அறிவிலுந் தானறிகின்றேனென்கிற போதமில்லை; அறி யவில்லை யென்கிற மயமுமில்லை, அறிந்தபோதும் போ தமில்லை, அறியாதபோது மயமுமில்லை, இரண்டு கால த்திலுந் தானாகவே யிருக்கின்றதெனவறிக. (எச)

வினா.—காரிய மெல்லாங் காரணமென்ப தெப்படி யென்னில்?

விடை.—சைதன்னியத்தில் ஸ்புரிப்பாகின்ற காரிய மில்லை, ஸ்புரிப்பிற் காரணம் வராது. ஸ்புரிப்பாகின்ற காரியமெல்லாம், நிறைவாய் விளங்கினால் காரியமெல் லாங் காரணமெனவறிக. (எரு)

வினா.—சற்காரிய வாதமாவ தேதென்னில்?

விடை.—உதித்த அறிவில் விளங்கிப்போனால் அந் த அறிவைத்தான்; சகல சாஸ்திரங்களிலும் சகலத்தி லும் வாதிக்கின்றதெனவறிக. (எசா)

(முடிய அகமிதம்.)

வினா.—* முடிய அகமித மேதென்னில்?

விடை.—தேகந் தானாயிருந்தது - அகம், அப்போ விஷய மிதமாயிருந்தது - * நினைப்பாக்களுந் தேகமென்

---

* அகமிதமாவது, அகமாவது - அந்தர்ப்ரபஞ் சம். இதமாவது - பாகியப்பிரபஞ்சம் என்று அர்த்தம்.

* நினைப்பெனல், ஞப்திக்கும் - ஸ்மாணைக்கு ம்பெயர். நினைப்பாக்களுந் தேகமென்றது - ப்ராம்மண வாக்யமாதலால், நினைப்பே தேகமுதலியவைக ளாகத் தோற்றுகின்றனவென் றர்த்தம்.

றறிவிக்க - நினைப்பை யறியப்போகின்ற படியினு லே, நினைப்பு யிதமாயிற்று; நினைப்புத் தானென்று சிந்திக்கச் சிந்திக்க - நினைப்பிறந்து அகமாயிற்று. அப் போ தேகமிதமாயிற்று. * அறிவாக்களும் - நினைப்பெ ன் றறிவிக்க, அறிவை யறியப்போகின்ற படியினுலே அறிவுயிதமாயிற்று. அறிவு தானென்று சிந்திக்கச் சிந் திக்க - அறிவிறந்து அகமாயிற்று. அப்போ - நினை ப்பு யிதமாயிற்று. † ஆனந்தமாக்களும் - அறிவென்று அறிவிக்க, ஆனந்தத்தை யறியப்போகின்ற படியா லா னந்த மிதமாயிற்று. ஆனந்தந் தானென்று சிந்திக்கச் சிந்திக்க, ஆனந்தமிறந்து அகமாயிற்று. அப்போ அறிவு யிதமாயிற்று. துரியங் காஞனந்தமென் றறிவி க்கத் துரியத்தை யறியப்போகின்ற படியினுலே, து யங் தானிதமாயிற்று. துரியந் தானென்று சிந்திக்க சிந்திக்கத் துரியமிறந்து, அகமாயிற்று. அப்போ, ஆ னந்தமிதமாயிற்று. மோனந்தான் - துரியமென் றறி விக்க மோனத்தை யறியப்போகின்றபடியினுலே? மோ னமிதமாயிற்று. மோனந்தானென்று சிந்திக்கச் சிந்தி க்க - மோனமிறந்து அகமாயிற்று; அப்போ துரிய மிதமாயிற்று. இப்படி அகமாயு மிதமாயும் பிரளுகி ன்றது விளக்கமும் - வியாபகமும்; இஃது ஒன்றி லே யொன்று யில்லாதபடியினுலே, அகமாயு மிதமாயு மிருந்தது - மோனுதீதம் தானென வறிக. (எஎ)

---

* அறிவாக்களும் - நினைப்பென்றது - அறிவைத் தவிர நினைப்பு வேறில்லையாதலின், அறிவே நினைப்பெ ன்றர்த்தம்.

† ஆனந்தமாக்களு மறிவென்றது - ஆனந்தத்தை யன்றி அறிவுவேறில்லை யாதலால் ஆனந்தமே அறிவு என்றர்த்தம்.

(தான் விளங்குவதுஞ் செகமாவதும்.)

வினா.—தானாய் விளங்குவ தெப்படி, யின்னமறிவு மாகாரமாய்ப் - போவதெப்படி யென்னில்?

விடை.—தானாயிருந்த வொன்றே? யொருவிஷய மானபோதும் - அதை யறிகின்ற வறிவான போதும்- தன்னைக் கண்டால் தானே; தன்னைக் காணாவிடில் விருத்தியும் விஷயமுமாய்ப் போமெனவறிக. (எஅ)

வினா.—இன்னந் தானாய் விளங்குவதுஞ் செகமாய்ப் போவது மெப்படி யென்னில்?

விடை.—சுவானுபவந் தானா யிருந்தது, ஸ்புரண மாகும்போது - தானாய் வந்தால், தான் விளங்கும். தானாய் வாராவிடில், செகமாம். ஸ்புரணம் - வராததற்கு முன்னே, அனுபவம் மயத்துவமா யிருக்கும். ஸ்புரணம் விளக்கமாய் வந்தால், மயத்துவம் நீங்கித் தான்விளங்குமென வறிக. (எகூ)

வினா.—இன்னந் தான்விளங்குவது வுண்மை, அன்னியம் விளங்குவது பொய்யென்ப தெப்படி யென்னில்?

விடை.—தேகமென் றறிந்தபோது, மனேகத்தை யறிந்தபோதுந் தேகமுத லனேகம் வனைக்கு மில்லை. சகலமு மிப்படியே * ஸ்புரணமாகவிளங்கித் தன்னைக் காட்டினால் உண்மை. யிவைகளைக் காட்டப்போகா தென வறிக. (அ0)

(பிம்பப் பிரதி பிம்பம்.)

வினா.—பிம்பப் பிரதிபிம்ப மெப்படி யென்னில்?

விடை.இப்படி யானந்தவிளக்கமா யிருந்த தான்-

* ஸ்புரணமாகவாவது, சச்சிதானந்த ஸ்வரூபமாக என்றர்த்தம்.

தன்னானந்தத்தை நினைத்து அறியவந்த விடம் - ஸ்வயஞ்சித்து, அஃது - வியாபக பிம்ப மதிலெதிரிட்டுத் தோற்றுகின்ற வனேக வாகாரங்கள் பிரதிபிம்பம். அவைகளி லின்பமிருக்கின்றதாய்த் தேடப் போயிற் றெனவறிக. (அக)

வினா.—இன்னம் - பிம்பப் பிரதிபிம்ப மெப்படி யென்னில்?

விடை.—தானாயிருந்த வானந்த மறிவிற் பிம்பித்தது யீஸ்வரனாயிற்று. ஆகாரத்தி லானந்தம் பிரதிபிம்பித்தது, சீவனாயிற்றென வறிக. (அஉ)

வினா.—இன்னம் பிம்பப் பிரதிபிம்ப மெப்படி யென்னில்?

விடை.—அறிவு திசையி லறியும்போ தெழாநின்ற வின்பமெல்லாம் பிம்பானந்தம், விஷயவின்பங்களெல்லாம் - பிரதிபிம் பானந்தமென வறிக. (அங)

வினா.—இன்னம் - பிம்பப் பிரதிபிம்பமாவ தெது வென்னில்?

விடை.—ஒரு ஸ்திரீவிஷயத்தை ஆகாரமும் அறிவுமில்லாமல் தானாயிருந் தனுபவித்ததைப் பிற்பாடு - அந்த வானந்தத்தை நினைத்து அறியப்போகிற அறிவே பிம்பம், எதிரிட்டுக்காணுகின்ற ஸ்திரீரூபம் இஃது பிரதி பிம்பமென வறிக. (அச)

(அஞ்ஞான ஆவரண விட்சேபம்.)

வினா.—அஞ்ஞான ஆவரண விட்சேப மெதுவென்னில்?

விடை.—தன்னை மறந்தது - அக்ஞானம். தன்னை வேறுபடப் பரிச்சின்னமாய்த் தோற்றினது, அன்னிதா க்ஞானம், இஃது - ஆவரணம். தன்னைச் சரீரமாகத்

தோற்றினது - விபரீத க்ஞானம், யிது விட்சேப மென வறிக. (அரு)

வினு.—இன்னம் - அஞ்ஞான ஆவாண விட்சேப மெது வென்னில்?

விடை.—ஆபாசனையு மவன் சமுசாரத்தையுந் தன்னுடையதாகப் பார்க்கிறது அஞ்ஞானம். அறிவாகயிருந்தும் கூடஸ்தர் தோன்றவில்லை யென்கின்ற மயக்கமே ஆவரணம். கிளிஞ்சிலை - வெள்ளியென்று பார்க்கிறது போல், ஸ்வபாவசைதன்னியமா யிருக்கின்ற தன்னை யகங்காரியாகக் காணுகிறதே விட்சேப மென வறிக. (அசு)

வினு.—இன்னம் - அக்ஞானவரண விட்சேப மெது வென்னில்?

விடை.—அறிவுருவா யிருக்கின்ற தன்னைத் தெரியாததே - அக்ஞானம். நிரதிசயானந்தந் தெரியாமற்றேட லாவரணம். ஆனந்தஸ்வரூபமாகிற விஷயநினைப்பே விட்சேபமென வறிக. (அஎ)

வினு.—இன்னம் - மும்மலமுண்டான தெப்படி யென்னில்?

விடை.—தானுயிருந்து ஸ்புரித்த விடத்தி லது பரமாய்ப்போனது - மாயை; முன்தானுயிருந்தது ஆணவமாயிற்று. மாயை யொன்றைப் பலவாக்கியவைகளில், தன்னனுபூதி பிரதி பிம்பித்து; அவை யவை பரமாய்ப் போனது கருமமென வறிக. (அஅ)

வினு.—இன்னம் - மும்மலமும் போக்குவ தெப்படி யென்னில்?

விடை.—கேவலமான ஆணவமறைப்பைச் சாக்கிர

மான தானாயிருக்நலிற் போக்கிச், சகலமான மாயை யைத் துரியமான யேகவறிவிற் போக்கி, இச்சையான கருமத்தைச் சுத்தமான சுழுப்தியானந்தத்திற் போக்கி யென வறிக. (அகூ)

வினா.—அஞ்ஞான ஆவரண விட்சேபங் கெடுவ தெப்படி யென்னில்?

விடை.—ஆகாரத்தை விளக்கமாக்கிக் கெடுக்கவும் வேண்டும், ஆவாணத்தைக் காரியப்படுத்திக் கெடுக்கவும் வேண்டும், ஆவாணமே அக்ஞான மாகையால், மத்தியிற் சொரூபம் விளங்கினால் மூன்றுங் கெடுமென வறிக. (கூ0)

(கேவல சகலசுந்தம்.)

வினா.—கேவல சகல சுந்த மெது வென்னில்?

விடை.—மனோலயமான அந்தகாரமே கேவலம். மனோசஞ்சலமே - சகலம். இவ்விரண்டையு மறிந்த அறிவே சுந்தமென வறிக. (கூக)

வினா.—இன்னம் - கேவல சகல சுத்தமாவ தெது வென்னில்?

விடை.—அறியாப்பொருள் மூலஆணவம், பிரபஞ்சமுந் தன்னடையுந் தெரியாதிருந்தல் நீண்ட நித்திரையான கேவலம். நாமார்; பிரபஞ்ச மென்னவிதமாக வந்தது? சகலமானமாயை, இந்த அறிவுமல்ல - அந்த அறியாமையுமல்ல. வஸ்துவில் அவஸ்து விருந்தால்தான், அவ்வஸ்து விளங்கும், அப்போதான் வஸ்து வில்லை யென வறிக. (கூஉ)

வினா.—இன்னம் - கேவல சகலசுத்த மெது வென்னில்?

விடை.—சாக்கிரத்திற் றூனா யிருந்தல் கேவலம்.

வினுவி யறிகின்றவிடஞ் சகலமானசொற்பனம். தானு பிருத்தலும் - வினுவியறிதலு மிவ்விரண்டும் விளங்கிப் போனது - சுத்தமானசுழுப்தி யென வறிக. (௬௩)

வினு.—இன்னங் கேவல மென்ப தியாதெனின்?

விடை.—கேவலமென்பது, சுழுப்தியல்ல. சொரூபத்தை மறந்தகாலமுத லிதுவரைக்கும் நித்திரை தெளியாதிருப்பதா லிதுவே; கேவலம். ஸ்ரீசத்குருவாக்கியத்தைச் சிந்தித்து - அறிவில் நிச்சயம்பிடித்ததே, சகலம். அஃது - சுத்தசொற்பனம். அந்த அறிவி லனுபூதிபிறந்ததே சுத்தசுழுப்தி. சுத்த துரியமாவது, கேவலத்திலிருந்த வறியாமையுஞ் - சுழுப்தியிலிருந்த மயத்துவமுஞ் சொற்பனத்திலிருந்த அறிவும் - மத்தியகதவிளக்கத்தில், முன் சொன்னமூன்றும் ஒன்றாய்ச் சேரவிடபட்டு மூன்றிடத்திலும் பேதமற்று - வொருபடித்தாயனுபூதிவிளக்கமா யிருப்பது, துரியம். சுத்தாதீதமாவது; அனுபூதியும் - விளக்கமும் - பரோட்சா பரோட்சமாய்த் தள்ளி ஸ்வயஞ் சைதன்னியவிளக்கமா யனுபவித்து வரத்தக்கது. இவ்விதமா யுபாதிகளைத் தரிசித்துத் தரிசித்தவுபாதிகளை நீக்கி, நீக்கின வுபாதிகளைச் செம்பிற்குளிகைபோ லனுபவிப்பதியல்பு.

இதற் குதாரணம் - கவி.

"தோன்றியவை விளக்கத்தா லுண்மையா யைம்பொறிக்குந் தொடர்பாய் நிற்கு, மான்ற பதார்த் தங்களெல்லா மறிவினு லொழிந்துண்மை யாக மாட்டா, வேன்றறிவா னறிபொருளா மிரண்டினிடை யறிவானுக் கியைந்த ரூப, மூன்றியறி பொருளறிவா னறிவிலிவை யுற்றிடுவ துயர்ந்தவீடு."

Q92: D1

இன்னம் - கவி.

"ஓரிடம்விட் டோரிடத்தே யுள்ளமுறி லவற்றி ணடுவுண்மையாகிப், பேரிலதா யுணர்விலதாய்ச் சடமி லதா யதுநீயாய்ப் பிரியே லென்றுங், கூரியபுந்தியினு லே யூகித்துக் குடும்பியெனுங் குறிப்பை மாற்றித், தூ ரியதாம் படிமனத்தின் றுவக்கறுத்து யிருந்தபடி துணி ந்து நிற்பாய்." (௯௪)

இவ்விரண்டு கவிகளின் பொழிப்புரை.

தோற்றப்பட்ட மாயாவஸ்துக்களானவை, ஞா னப்பிரகாசத்தினுல் உள்ளனவாகும். பஞ்சேந்திரிய ங்களுக்கும் சம்பந்தமா யிருக்கின்ற மிகுந்த வஸ்துக்க ளியாவும் - ஞானத்தினு லல்லாமல் உள்ளவைக ளாகமா ட்டாவாம். உண்டாகிவரு ஞாதாவும் ஞேயமுமாகிய இரண்டினுடைய மத்தியில் - ஞானுத்மாவுக்கு இசைந் தவடிவம். சார்ந்தறியப்பட்ட விடயவஸ்துக்களும் - இ வைகளை யறியப்பட்ட ஞாதாவும் - ஞானமும் - இல் லாததாகியும் - இவைகளைப்பொருந்துவதாகியு மிருக்கி ன்றதே மேலானமோட்சமாம்; ஒருவிஷயத்தி னின்று மற்றென்றில் மனம்பொருந்தினுல் அவ்விரண்டின் ம த்தியில் சத்தாமாத்திரமாகியும் - நாமமில்லாததாகியும் - அறிவில்லாததாகியும் - விஷயமில்லாததாகியும் - இருக் கின்ற அதுவென்னும் பிரமமும் - நீயென்னுங்கூடஸ்த ரும் - ஐக்கியமான சிதானந்த ஸ்வரூபமுமாய் எக்கால மும் பிரிவற்றிருப்பாய். மிகுந்த நுட்பமாகிய அறிவி னுல் யுக்தியாய் விசாரித்து நான் சம்சாரியென்கின்ற கருத்தைக்கெடுத்து வேரோடே கெடும்படி மனதின் றொந்தங்களைக் கெடுத்து ஸ்வபாவமா யிருந்தபடியே தெளிந்திருப்பாய். எனவே - திரிபுடிக்கு விலட்சண

மாகியும், சலட்சணமாகியு, மிருக்கின்ற வஸ்து மத்திய கத ஸ்வரூபமாய் விளங்குகின்றபடியால், அவ்விதமா யுள்ள ஆத்மாவில் மனதைக் கரைக்கவேண்டுமென்பதாம்.

(மலம்.)

வினு.—உயிருக்கு அறியாமையாகின்ற மலமெப்படி வந்ததென்னில்?

விடை.—சிவம் - நிர்மலம், மாயை - சடம், உயிர் - சுதந்தராயீனன், சிவத்தினுடைய பிரேரகத்தினாலே விளங்குகின்றவுயிர் - அந்தச் சிவானந்தத்தைப் புசிக்கும். அப்போது வுயிரும் விஷயமு மிறந்து சிவானந்தமாய் விளங்க, அப்படி விளங்காமல் - விஷயம் இன்பமென்று கருதுகின்ற குணமே மலமெனவறிக. (௬௫)

வினு.—இன்னம் - மலமாவ தெதுவென்னில்?

விடை.—சிவம் - எங்கும் வியாபகபூரணமா யுயிருக்குயிரா யதுவதுவா யிருந்து பிரேரகம்பண்ணுவிடில், உயிருக்கொரு செயலில்லை; அந்த வுயிர் சொரூபத்தைத் தனக்குள் பூரணமாய்க் காணமல் - தன்னை யொரு முதலாய்க் கருதுகின்ற குணமே மலமெனவறிக. (௬௬)

வினு.—இன்னம் - மலமாவ தெதுவென்னில்?

விடை.—ஸ்புரிக்கும்போது - போதமும் விஷயமு மிறந்த வின்பத்தையே நாடி ஸ்புரிக்கின்றது, பார்க்கும்போது - மலவின்பத்தையே நாடிப் பார்க்கின்றது. புசித்தவிடத்திலு மந்தவாகாரம் புரிந்த வின்பம் வெளிப்படுகின்றது. இப்படி முக்காலத்திலு மிருக்க அறிவானது - ஆகாரத்தைச் சுகமாக நினைக்கின்ற குணமே மலமென வறிக. (௬௭)

(திரிபுடி.)

வினா.— * திரிபுடியாவதெதுவென்னில்?

விடை.—அறிகின்றவன் - ஜீவன், அறிவு - ஈஸ்வரன், அறியப்பட்டது செகமெனவறிக. (௯௮)

வினா.—இன்னந் திரிபுடியாவதெது வென்னில்?

விடை.—தான் - ஞாதுரு, விளக்கம் - ஞானம், ஆகலாதமே ஞேயமெனவறிக. (௯௯)

வினா.—இன்னந் திரிபுடி யெப்படியில்லை யென்னில்?

விடை.—ஆகலாதத்தைத் தவிர அறிவில்லை. அறிவைத்தவிர அறிகின்றவனில்லை - அறிகிறவனைத்தவிர ஆகாரமில்லை; ஆகையால், ஆகலாதத்தைக்கண்டால் - அறிவு-அறிகின்றவன் - அறியப்பட்டது மூன்று மில்லையெனவறிக. (௧௦௦)

(பந்தமுக்தி.)

வினா.—பந்தமுக்தி யெப்படி யென்னில்?

விடை.—மனதுக்கு விஷயந்தோன்றுமானால் - பந்தம், மனதில் நினைவிறந்தால் முக்தியெனவறிக. (௧௦௧)

வினா.—இன்னம் - பந்த முக்தியாவதெதுவென்னில்?

---

* திரிபுடியாவது, காண்பான் - காட்சி - காணும்பொருள் - இஃது - சுத்ததிரிபுடி யென்றும் - அசுத்ததிரிபுடியென்று மிருவகைப்படும். சுத்ததிரிபுடி யாவது, காண்பான் - தான். காட்சி - ஞானம் - காணும்பொருள் - ஆனந்தம். அசுத்ததிரிபுடியாவது - ஞாதுரு - காண்பான். ஞானம் - காட்சி. ஞேயம் - காணப்பட்ட பிரபஞ்சம்.

விடை.—பாவனையில் நிறைந்து விளங்காவிடில் - அனேகமாம், இது பந்தம். பாவனையில் நிறைந்துவிளங்கினு லது யேகம் முக்தியென வறிக. (௧0௨)

(பொய் மெய்.)

வினு.—பொய்யாவது யெது வென்னில்?

விடை.—தேகம் - மெய்யோ? பொய்யோ? பொய். இப்பத் தோற்ற வில்லையா; தோற்றுது, விடாதே தோற்றுகிறதா - யில்லே, தோற்ருமற்போகுதா; போகவில்லே, தோற்றுது - இந்தத்தோற்றலாகின்ற வுள்ளதுதான் பொய்யென வறிக. (௧0௩)

வினு.—இன்னம் பொய் - யெதுவென்னில்?

வினு.—நேற்று நடந்தகாரியம் - நேற்றுப் பேசினது - நேற்றுச் சாப்பிட்டது - பொய்யோ? மெய்யோ வென்னில், பொய். அப்படிப்போல, இப்போது பேசுகின்றதும் - இப்போது நடக்கிற விவகாரமும் பொய்யாமே; ஆகையால், வர்த்தமானம் பொய்யானுல் - பூர்வமும் வருங்காலமும் பொய்; எது சத்தாய்த்தோற்றுகின்றதோ, அதுதான் பொய் - எது அறிதலாய்த் தோற்றுகிறதோ, அதுதான் பொய் - எதுபிரியமாய்த்தோற்றுகிறதோ, அதுதான் பொய்யெனவறிக. (௧0௪)

வினு.—இன்னம் - பொய் யெதுவென்னில்?

விடை.—பொய்யை மெய்பண்ணிக் கொண்டிருந்த போதமே, பொய்யென வறிக. (௧0௫)

(உள்ளது மில்லது.)

வினு.—உள்ளது மில்லது மிருக்க வில்லாமற் ருனே யுள்ளது மில்லதுமாய் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை.—உள்ளது தானே யில்லாததா யிருக்கின்றது. இல்லதென்று வொன்றுண்டா? இல்லை, உள்ளதென்றுசொன்னா லப்படியே தோற்றுமா; தோற்ருது. அந்த உள்ளதே யில்லாதது. உள்ளது - யில்லாததிற் கெடுகின்றது. இல்லாதது உள்ளதிற் கெடுகின்றது. இல்ல தானது முள்ளதானதுந் தான் தானே, அப்போ- உள்ளது மில்லது மில்லை. அப்போ - யில்லாததிலிருந்த அனுபூதியு முள்ளதிலிருந்த விளக்கமுந் தானாய் விளங்க, உள்ளதான அறிவு யில்லாததான ஆகாரமாய்க் கெட்டுப் போகின்றதென வறிக. (கo௬)

(வியாபகம்.)

வினா.—* வியாபகத்தை யெட்டவும்படாது - குறிக்கவும்படாதென்ப தெப்படி யென்னில்?

விடை.—முக்தியி லணுவா யிருக்கிற படியினாலே யெட்டப்படாது. † வெக்தியி லகண்டமா யிருக்கின்ற படியினாலே - குறிக்கப்படாது. விளங்கு கிறதில் - நிறைவாய்ப் பார்க்கவேண்டுமென வறிக. (கoஎ)

(அறிவு தனியேயிராதென்பது.)

வினா.—அறிவு தனித்திருக்குமா வென்னில்?

---

* வியாபக மாவது - சகலமான அண்டபிண்ட சராசர வஸ்துக்களுக்கெல்லாம் இடங்கொடுத்து மனோவாசா மகோசரமாயிருப்பது என்றர்த்தம்.

† வெக்தியென்னு மொழி கிரந்தத்தில் - வ்யக்தி: என்றுவரும் - தமிழில் - வெக்தி என்று வந்தபடியால் வெக்தி யாவது, அவஸ்தாத்ரய முதலிய வைகளை விலட்சணமா யிருந்தறிகின்ற பிரத்யகான்மாவென் றர்த்தம்.

விடை.—அஞ்ஞான திசையி லனுபூதிக்கி விளக்க மாயிருக்கின்றது. அதைப்பகுத்துக் கண்டதில்லை - ஈஸ்வரதிசையில் சுத்த அறிவைப் பகுத்துக் கண்டவிடத்தி லாகாரமு மதைக்கண்ட வறிவுங் கூடப்போய்த் துரியன் வியாபகத்துக்கு விள்க்கமாய்த் தன்மயமா யுள்ளும் வெளியு நடுவுந் தானயிருக்கும். அறிவு நடுவே தனித்திருக்கிறதில்லை. ஆகாரத்திலாகிலுஞ் சொரூபத்தி லாகிலுங் கூடிப்போமென வறிக. (கoஅ)

வினு.—இன்னந் தன்மயமாவ தெப்படி யென்னில்?

விடை.—சாக்கிர விஷயானந்தந் தன்மயம். அறிவு மாகாரமு மில்லை, சுழுப்தியானந்தந் தன்மயம். அறிவில்லை, இந்த விரண்டிடமும் விருத்தியில்லாத படியினலே, அறியாமை யென்று சொல்லுவது அனுபவந் தெரியாத படியினல், நடுவே அறிவு தனித்துராது. கீழேயாகார வானந்தத்தை நாடி விளக்கமாயிருக்கும், மேலே; சுழுப்தி யானந்தத்துக்கு விளக்கமா யிருக்கு மென வறிக. (கoகூ)

வினு.—மத்தியி லறிவு தனித்து விளங்கா தென்ப தெப்படி யென்னில்?

விடை.—அறிவு பிறக்கும்போது - அறியாமை கட்டிக்கொண்டு யெதிர்ப்பட்ட ஆகாரமாகி - நடுவே அறிவு காணமற் போகுமென வறிக. (ககo)

(பதிபசு பாசம்.)

வினு.—பதி - பசு பாசமாவதும் - பாசம் - பசுபதி யானது மெப்படி யென்னில்?

விடை.—பதியி லுண்டான பசு - விஷயத்தைப் பற்றவே பாசமாயிற்று. பலந் தானுனல், பதியிற் சேர்ந்தானென் வறிக. (கககக)

வின.—இன்னம், பதியெப்படி பசுவெப்படி யென்னில்?

விடை.—தான் பதியாயிருந்தால், தன்விளக்க மானந்தமாயிருக்கும், தான் பசுவாயிருந்தால் - தன் பாசம் * விவித வானந்தமா யிருக்குமென வறிக. (ககஉ)

(அத்துவிதந் துவிதம்.)

வின.—ஒன்றுக் கொன்று அத்துவித மெப்படி யென்னில்?

விடை.—ஆகார லயத்துக்கு அறிவு - அத்துவிதம், அறிவுலயத்துக்கு - ஆனந்த மத்துவிதம், ஆனந்தலயத்துக்குத் தான் - அத்துவிதம், என வறிக. (ககங)

வின.—இன்னம் - அத்துவிதமாவ தெப்படி யென்னில்?

விடை.—தானுயிருப்பதே அத்வைதம் என வறிக. தானுயிருப்பது - அதை யறிவானேனென்னில்? * மயத்தடையினு லென வறிக. (ககச)

---

* விவித வானந்தமாவது, அனந்தம் பேதமாய்த் தோற்றுகிற விஷயானந்தமென் றர்த்தம்.

* மயத்தடையாவது, யானெனதென்னு மபிமானத்தால் - தேகேந்திரியப் பிரபஞ்ச வசத்தாகி யிருக்கின்றபடியால், தனது ஸ்வரூபத்தைக் காணத் தடையா யிருக்கிறதென்று அர்த்தம்.

(விசிஷ்டாத் துவிதம்.)

வி௲.—துவித மெப்படி அத்துவிதமெப்படி யென்னில்?

விடை.—தன்னை யறிவுகொண் டறிந்தாற் றுவிதமாம், அறிவில் நிறைவானால், தானாயிருக்கின்றது அத்துவிதமென வறிக. (௧௧௫)

வி௲.—இன்னம் - துவிதாத் துவிதமாவ தெது வென்னில்?

விடை.—தோற்றல் - தானென்று சொல்லு கின்றாயே யிதுசரி. ஆகாரந்தோற்ற அறிகின்றாயோ? வில்லையோ? இதுதான் துவிதமென வறிக. (௧௧௬)

வி௲.—அத்துவித மாவ தெதுவென்னில்?

விடை.—அறிவாயிருந்தது - அத்துவிதம். எப்படி யென்னில், போதமில்லை - அதிலிருந்து ஸ்புரித்த அறிவு அறிவல்ல. அங்ஙனமாயின், அத்துவித மெப்படி யென்னில்? அறி வென்று * அறிவுண்டா? யில்லை. ஆகையா லத்துவிதமென வறிக. (௧௧௭)

(விசிஷ்டாத் துவிதம்.)

வி௲.—த்வைதம் அத்துவிதம் விசிஷ்டாத் துவிதமெப்படி யென்னில்?

விடை.—இருளு மொளியுந் துவிதம். சொல்லும்

---

* அறிவுண்டா யில்லை யென்பது, அறிவறியாமை பேதங்கள் அனேகமாயிருந்தாலும், அறிவைத்தவிர அறிவறியாமை பேதங்களில்லாமையாலும், அறிவு ஒன்றே அனேகமா யிருக்கிறபடியாலும், வேறொரு அறிவில்லை யிருக்கிறது தானாகிய ஓர் அறிவேயென் றபிப்ராயம்.

பொருளும் விசிஷ்டாத்துவிதம். பொன்னும் பணியும்-அத்துவித மென வறிக. (௧௧அ)

வினா.—இன்னம் - அத்துவிதந் துவிதம் - விசிஷ்டாத்துவித மெப்படி யென்னில்?

விடை.—* ஆகாரந் துவிதம். அறிவு - விசிஷ்டாத்துவிதம். ஆனந்தம் அத்துவிதம். சைதன்னியஞ் சுத்தாத்துவித மென வறிக. (௧௧௯)

(சங்கற்பவிகற்ப நிர்விகற்பம்.)

வினா.—சங்கற்ப விகற்ப நிர்விகற்ப மாவ தெதுவென்னில்?

விடை.—சங்கற்ப மறைப்பு, யேகதேசமறிதல். மறைப்பு - யேகாகாரம், இன்னம் சங்கற்ப மாவது, மயம். விகற்பமாவது, யேகதேசவறிவு மகண்டாகாரவறிவும். நிர்விகற்பமாவது, யேக வறிவென வறிக. (௧௨0)

வினா.—பிரகிருதியுஞ் சங்கற்பமு மெது வென்னில்?

விடை.—சித்து விகற்பித்து அந்தவிகற்பத்திற் ருனடங்கினது - பிரகிருதி. எதிர்ப்பட்டதில் மயத்தை யடைந்தது சங்கற்ப மென வறிக. (௧௨௧)

வினா.—இன்னம் - சங்கற்ப விகற்பமயம் விடுவதெப்படி யென்னில்?

விடை.—சொற்பனத்தில் விகற்பிக்கச் சுழுப்தியில்-மயங்கட்டி யந்த விகற்பத்தினுல், சுழுப்திமயஞ் சாக்ரத்தில் சங்கற்பித்துது. ஞானத்தில் நிறைவு தோன்றினுல் மூன்றும் விடுமென வறிக. (௧௨௨)

வினா.—இன்னஞ் சங்கற்ப விகற்பமாவ தெதுவென்னில்?

---

* ஆகாரமாவது, தேஹேந்திரியப் பிரபஞ்சமென்று அர்த்தம்.

விடை.—விகற்பமாவது, விஷயங்களை அறியவெழுவது. அப்படியே யெழுந்தது விஷயத்தில் மயித்துவ படுவது சங்கற்பம். இது சிருஷ்டி. ஸ்தூலமாயிருந்த சங்கற்பம் விட்டுச், சூக்குமத்தில் விகற்பித்துச் சங்கற்பப் படவே ஸ்தூலம் விட்டுது, இது லயம். இந்தப்படி யதீதம்வரைக்கும், ஒன்றுக்கொன்று வியாபகமதிகமாமென வறிக. (கஉ௩)

வினு.—சாமான்யமும் விசேஷமுமெப்படி யென்னில்?

விடை.—நாமரூப குண தர்ம கர்மங்களாய்ப் பார்க்கின்றது - விசேஷம். இது அறிதல், அனுபவமாய்ப் பார்க்கின்ற பார்வை சாமான்யம். இது தானு யிருத்தலென வறிக. (கஉ௪)

(சாமான்ய விசேடம்.)

வினு.—ஆகாரமு மறிதலுஞ் சாமான்யம், அனுபவம் விசேடமென்ப தெப்படி யென்னில்?

விடை.—காய்கறி வாங்கிவா? என்று சொல்லும்போது - காயில்லை, சுகமாத்திரம், பார்த்து அறியுமிடத்துக் காயில்லை. சுகமாத்திரம், புசிக்கின்றபோது காயில்லை, சுகமாத்திரம் - விவகாரமும், ஆகாரமும் - புசிப்பும் * விவிதம். அனுபவம் யேகரீதி. அப்போ அவைகளில்லை. கடிதம் பார்த்தபோதே, பேசும்போதே, யனுபவ மாத்திரம். ஆகாரமு மறிதலுஞ் சாமான்யம், அனுபவம் விசேடமென வறிக. (கஉ௫)

வினு.—இன்னஞ் சாமான்யமும் விசேடமும் போதமு மில்லாமல் தானுயிருப்ப தெப்படி யென்னில்?

விடை.—விசேடத்தில் சாமான்யம் விளங்கினுல், விசேடமில்லை. விசேடத்தில் சாமான்யந் தானு யிருக்கிற

---

* விவிதமாவது, அனேகமென்று அர்த்தம்,

தென்று போதம் வரலாகாது. போதம் வந்தால், தான் விளங்கும். போதத்தில் தான் விளங்குகின்ற படியினாலே யது போதமல்ல வென வறிக.   (கஉ௬)

வினா.—இன்னம் - மயமும் விருத்தியு மில்லாமல் தானே - சாமான்யமும் விசேடமுமா யிருப்ப தெப்படி யென்னில்?

விடை.—மயம் நீங்கி யானந்தத்தி லறிவு தானாயிருக்கின்றபடியால், மயமில்லை. அறிவி லானந்தந் தானா யிருக்கின்றபடியினால், விருத்தியல்ல. தானே சாமான்யமும் - தானே விசேடமு மென வறிக.   (கஉ௭)

(சவிகற்பம் நிர்விகற்பம்.)

வினா—ஒன்று தோன்றும்போது அண்ட அடுக்குகளெப்படி யிருக்கும்? சவிகற்பம் நிர்விகற்ப மெப்படி யிருக்கு மென்னில்?

விடை.—ஒன்று தோன்றும்போது - அண்ட அடுக்குக ளொருமிக்க யெல்லாங்கூடி யங்கங்கே யொன்றாயிருக்கும், மற்றொன்று தோன்றியபோது - யிது தானாயிருக்கின்ற நிர்விகற்பமாம். ஏகவறிவி லானந்தம் பிம்பித்து யேகவறிவு சுகமாயிருந்தது. இஃது அகண்டாகாரவிருத்தி. யேகவறிவி லேகதேசவறிவு உதித்துக் கண்டங் கண்டமான ஆகாரவறிவுதானே சுகமாயிற்று. யிது மனோவிருத்தி, இஃது சவிகற்ப ஞான மென வறிக.   (கஉ௮)

வினா.—இன்ன மனேகபாவனை பற்றுதல் புன்பிறப்பு அவையெப்படி யென்றால்?

விடை.—போதங்கொண்டு சொரூபத்தை யெட்டுகிறதல்ல, போதமான தோற்றத்தில் தான் விளங்கவே

ண்டும். தான் விளங்கா விடில், மத்தியி லொன்றை யொன்று அடக்கிக்கொடுக்கின்ற மாயாசக்தியாம். மத்தியம் விளங்கினால் உண்மை. அனந்தங் காரணத்திலனந்த விஷயத்தில், அனந்தத்திலு மங்கங்கே யொன்றான து தானே; யங்கங்கே யெல்லாங்கூடி யொன் றென வறிக. (சஉகூ)

வினா.—இன்னம் தான் பூரணமா யிருப்பதும் - ஸ்புரணமான தாலொரு அணுவிலடங்கியிருப்பதும், எப்படி யென்னில்?

விடை.—ஒரு அணுவி லெல்லாங்கூடி யொன்றாயிருக்கு மணுவைவிட்டாற் றானாயிருக்கு மென வறிக. ()

வினா.—இன்ன மெவ்விதத்திலும் ஒன்றென்ப தெப்படி யென்னில்?

விடை.—ஏகதேசமா யறிந்தாலும் - எல்லாங் கூடி யொன்று, யேகமாயறிந்தாலு மொன்றென வறிக. ()

வினா.—இன்ன மெவ்விதத்திலு மனுபூதி யொன்றென்ப தெப்படி யென்னில்?

விடை.—* அனந்தானந்தங்களையு மறிகின்ற அறிவு - ஒன்று. அனந்தமா யிருக்கிற அறிவு ஒன்றிலும் வியாபகம் ஒன்று, ஆகவிரண்டு மொன்றான, அறிவுருவே, பத்துப்பேரி லொருவ னென்பது பேரையும் பார்க்குமிடத்து, யெல்லாங்கூடி யங்கங்கே யொன்றுதான் பத்துப்பேருக்கும்; அப்படியே, அறிகின்ற ஆத்மாக்கள் - ஒரு வியாபகத்தையே பலவாய்ப் பார்க்கின்றதும். ஒன்றில் விசேஷமாய்ப் பார்க்கின்றதுந் தன்னையே; தா

* அனந்தமாவது, அளவில்லாதது என்று அர்த்தம்.

னுயிருக்கிற சமையத்தில் தன் வியாபகந் தானுகவே யி ருக்கும். பலவாய் வியாபகத்தைப் பார்க்கின்ற போது ஆகலாதம் விசேஷத்தில் விள்ங்கும், பாராவிடிற் றூனு யிருக்கும் ஆத்மாவென வறிக. (கருஉ)

(சகள நிஷ்களம்.)

வினு.—சகள நிஷ்கள்மாவ தெதுவென்னில்?

விடை.—தானுகிற வறிவே விருத்த சச்சிதானந் தா காரமான அநுக்ர கார்த்தமாய் விளங்குகின்ற மஹா குருஸ்வாமிகள் இது - சகளம். தானே அவிருத்த சச் சிதானந்தானுபூதி மயமா யிருக்கின்றது நிஷ்களமென வறிக. (கருரு)

வினு.—இன்னம் - ஸ்ரீசத்குரு * சொரூப மெப்படி யென்னில்?

---

* குருவென்னும் பதப்பொருளாவது, கு - அ ஞ்ஞானமாகிய அந்தகாரம், ரு - அவ்வஞ்ஞானுந்த கார த்தை நாசஞ்செய்யாநின்ற ஞானப்ரகாசம் என்றும், மு தலாவது, கு - மாயாநாமங்களை யனுசரித்திருக்கிற தெ ன்றும், இரண்டாவது - ரு - மாயாப்பிராந்தியை நாச ஞ்செய்கிற தெனவும் சொல்லப்படும். இப்படிச்சொல் லும் பொருளமைந்த குருவினுடைய நாமங்கள், (அ) விதமாக வேதாந்தசூடாமணியில் சொல்லியிருப்பதால், அவற்றைச் சுருக்கிச் சகளநிஷ்களமென்று இரண்டு பி ரிவாகச் சொன்னூர். சகளமாவது, ஸ்வயம் பிரகாசமா கப் பிரகாசிக்கின்ற சாக்ஷாத்பரமசிவமே, காருண்யத் தால் அன்பர்களை யாட்கொள்ளவிரும்பி, மானுடச்சட் டைசாத்தி, சத்துவ முதலிய குணவசத்தாக விருப்பது போலக் காட்டி, மாணுக்கருக்கு அநுக்ரகஞ் செய்யவந்த தேகத்திற்குச் சகள மென்றும் - சகுண மெனவும்-

விருத்த சச்சிதானந்தமென்றும், காரிய குருவென்றும் அர்த்தம். நிஷ்களமாவது; த்ரிகுணமில்லாததாகியும், சகலவேதாகம புராணமுதலியவைகளின் சாராம்சமாகியும், பிரம்மாமுதல் எறும்பிலுஞ் சிறிதாகிய ஜீவர்களுடைய ஹிருதயத்தில் உதயாஸ்தமனமின்றிச் சதோதயமாக ப்ரகாசித்துக்கொண் டிருப்பதுமாகிய பரமசிவானுபூதிக்கே, காரணகுருவென்றும், நிஷ்கள மெனவும்-நிர்க்குணமெனவும், அவிருத்த சச்சிதானந்த ஸ்வரூபமென்றும், அர்த்தம். இங்ஙனமிருக்கப், பிராம்மணர்கள், தங்கள் வமிசத்திற்கே சன்யாசமுங் குருத்துவமுமன்றி, மற்றயெந்த வருணத்தவர்க்கும் இல்லையென்று சொல்லுகின்றனர். அவர்கள் சொல்வதை அங்கீகாரஞ் செய்யக்கூடாது. ஏனெனில்; "சமோதமதபஸ்செளசம்" என்னும் ஸ்லோக தாத்பர்யமாவது, மனோநிக்ரகமும், விஷயேந்திரிய வசத்தாகச் செல்லாமையும், தபஸ்சும், ஆசாரமும், பொறுமையும், சத்தியமும், ஞானமும், அனுபவஞ்ஞானமும், ஓர் வஸ்துவிருக்கிறதென்று நம்பிக்கையும், ப்ராம்மண சம்பந்தமான இயல்பினால் உண்டான க்ருத்யமென்று பகவான்-கீதையில், சொல்லியிருப்பதாலும், அவ்விதமான குணங்களில்-முதலாவது, விஷயவாசனையிற் போகிற மனதைத் தடைசெய்ய வேண்டுமெனச் சொல்லி யிருப்பதாலும், மனதினால், ஜாதிவர்ணாஸ்ரம முதலியவைகளைக் கற்பனைசெய்கிறார்களன்றி, அறிவினிடத்தில் மனதைச்செலுத்தினால் கற்பனையில்லை. ஆதலாலும், கற்பனையில்லாதவர்களே ப்ராம்மணாளன்றிக் கற்பனையோடு கூடியிருப்பவர்கள் பிராம்மணாளல்லவென்றும், எந்த ஜாதியானாலும்-ப்ரம்மஞ்ஞான முள்ளவர்களே ப்ராம்மணாளெனவும் அபிப்ராயம்.

விடை.—குருஸ்வரூபமே யவிர்த்தாம்சமாய்த் தேகஞ் சின்மாத்திரமா யிருக்கின்றபடியாற் றேகமில்லை, விஷயமெல்லாம் அவிர்த்தாம்சமாய்ச் சின்மாத்திர மான படியினுல் - விஷயமில்லை, குருசொரூபமே * ஆப்தமானபடியால் வேறே தனக்கு ஆப்தமில்லை, குருஸ்வரூபமுந் தானு மத்துவித மானபடியினுலே யிந்திரியகாரணபோத மறிதலாகின்ற போதமில்லை, குருஸ்வரூபந் தானுயிருத்தலே மோட்சமாதலா லன்னிதாய் மோட்சமில்லை, குருஸ்வரூபமே பிரத்தியட்ச கைவல்ய முக்தியாதலால் விடுதலுக்கு மலமில்லை, குருசொரூபந் தானுயிருத்தலே கேவலானந்தமாதலா லானந்தானுபூதி யில்லை குருசொரூபந் தானுய் விளங்குகின்றதே ஸ்வயஞ்சித்தாகையால் விருத்தியுமில்லை, குருசொரூபமே தானே தானு யிருத்தலால், மயத்துவமாகின்ற செடபாவமில்லை. இந்தப் பிரகாரம் - சர்வத்திலும் ஒருமொழி யருத்தமாக வனுபவித்த வியல்பென வறிக. (கஙச)

(உபாசனு மூர்த்தி.)

வினு.—உபாசனுமூர்த்தி யெப்படி யென்னில்?

விடை.—தானுகிற அறிவானந்த சொரூப சுபாவமான நினைவுக்கு வேருய்த் தோற்றுகிற தேகாதி யிந்திரியவிடயங்க ளெல்லாஞ் செடமானபடியினுலே உபாசனுமூர்த்தி யிதைப்போலநாமரூபமல்ல. ஏனெனில் உபாசனு மூர்த்தியாகிய கண்ண னிந்தசெடம் நானல்ல

---

* ஆப்தம் - என்றுல் - அடையத்தக்கது. ஆப்தனென்றுல் - உறுதிமொழி சொல்லுகிறவர் - குருவாதலால், குருஸ்வரூபத்தி லயிக்கியமாகத் தகுந்தது என்றர்த்தம்.

வென்று விட்டுநீங்கின நினைவு நினைக்கின்ற நினைவே தோன்றுகிற வுபாசனாமூர்த்தி ஆதலால், தன்னைச் சித்தென்றறிந்து சித்தாய்ப் பாவித்தல் சின்மாத்திர சொரூப மாமென வறிக (௧௩௫)

(விகார நிர்விகாரம்.)

வினா.—விகார நிர்விகாரமாவ தெதுவென்னில்?

விடை.—காரண விரைகெட்டுக் காரியமான மரங்காணுகின்றது, விகாரம். காரணவிரை கெடாமல் - காரியந் தோற்றுகின்றது நிர்விகாரம். எப்படி யென்னில்? காரணமான ஸ்வர்னம் தானேநசியாமற் காரியமான வனேக வாபரணமாய்த் தோற்றுகின்றது - நிர்விகாரம். காரியமான வில்வவிருட்சந் தானே காரணமான வில்வ விரையைத் தோற்றுவித்தாப்போலக், காரியமான நாமரூபப் பிரபஞ்சமானது, தன்னுடைய காரணமான சிவனைத் தோற்றுவிக்கின்றதென வறிக. (௧௩௬)

(வெஞ்சக வெங்கியம்.)

வினா.—வெஞ்சக வெங்கியமாவ தெதுவென்னில்?

விடை.—முடிந்த * வெஞ்சகம் - * ஆகலாதம். வெங்கியந் தானென்கிற ஆத்மா வெனவறிக. (௧௩௭)

வினா.—இன்னம் - வெஞ்சகத்தை யல்லாமல் வெங்கியத்தைக் காணப்போகாது. அஃதெப்படி யென்னில்?

விடை.—ஆகாரத்தை யல்லாமல் அறிவையும் ஆகலா

---

* வெஞ்சகமாவது, ஆனந்தமென்று அர்த்தம்.

* ஆகலாதமாவது, ஆனந்தமென்று அர்த்தம்.

தத்தையும் - அறியப்போகாது. ஆகலாதத்தை யல்லாமல் சித்தான சத்தை யறியப் போகாதெனவறிக. ()

வினா—இன்னம் - ஆத்மாவுஞ் சிவமும் விளங்குவதெப்படி யென்னில்?

விடை.—வெளியிற் சந்திரசூரியர் முதலான சகலவிஷயங்களுஞ் சிவம். உள்ளே கண்முதலாகிய கரணங்கள் ஆத்மா. நீயான ஆத்மாவையல்லாமல், அவைகளான சிவம் விளங்காது. அவைகளான சிவமல்லாமல், நீயாகின்ற ஆத்மா விளங்காது. அதற்கு மிதற்கு மத்தியில் - அறிவானந்தம் விளங்கவேண்டும். என்விளங்கவில்லை யென்னில்? வெஞ்சகமில்லை விளங்கவில்லை, தானாயிருக்கின்றதெனவறிக. (௧௩௯)

வினா.—இன்னம் - தானாயிருப்பதுந் தான் விளங்க வெஞ்சகமு மெது வென்னில்?

விடை.—மோனாதீதந் தானானால், உலகம் ஆனந்த விளக்கம். அஃதே வெஞ்சகமெனவறிக. (௧௪0)

(ஜாதி வெக்தி.)

வினா.—ஜாதிவெக்தி யெப்படி யென்னில்?

விடை.—தானாகிற சாதிக்கி ஆனந்தம் - வெக்தி. ஆனந்த சாதிக்கி அறிவு வெக்தி. அறிவு சாதிக்கி ஆகாரம் வெக்தியெனவறிக. (௧௪௧)

வினா.—இன்னம் - விருத்த அவிருத்தத்திலே, சாதி வெக்தியாவதெதுவென்னில்?

விடை.—ஜாதியாவது, அனந்த ஜாதியுங் கூடினதுயேகமான வொரோ ஜாதி. வெக்தியாவது, அனந்த

வெக்தியுங் கூடினது - வொரோ வெக்தி சாதி. * தான் வெக்தி கேவலானந்த மென வறிக. (கசூஉ)

வினு.—சாதிவெக்தியில் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை.—ஸ்வயஞ் சைதன்னிய மாகின்றது மத்தியில் ஸ்புரித்து அது அகமிதமிரண்டாய் - மகாராஜனு னவன், தனக்கு யிவ்வளவு திரவிய மிருக்கிறதென்று தன் னிசசுகமான சாதிவெக்தியில் விளங்கிற்று. விளங்கவே அகமிதமாகி † மத்தியஜாதியை விளக்கும், இதிலே அஃதில்லை, அதிலே யிஃதில்லை, யிப்படியு மப்படியு மானது தன்னை விளக்கவென வறிக. (கசூங)

(அறிவுதிசை அனுபூதிதிசை.)

வினு.—அறிவுதிசை அனுபூதிதிசையெப்படி யென்னில்?

விடை.—அறிவாகிற ஸ்படிகந் தன்னையிழந்து யெல்லாவடிவமுந் தானும், இஃதே அறிவு திசை. மாணிக்கம் அனுபூதி திசை, தானெல்லாமாயிருக்கும், அப்போ யெல்லாமில்லை, அனுபூதி திசையில் போதமில்லை, பகுக்கும் - அறியும் - பகுத்தலில்லை, அறிந்த தில்லை, போதத்தோடுங் கூடிப் பகுக்கின்றது சீவதிசை,

---

* தான் வெக்தியாவது தான் - அறிவென் றர்த்தம்.

† மத்தியஜாதியாவது, திருக்கு - த்ருஸ்யமிரண்டின் வசத்தாகியு மாகாது நடுநிலையாயும் சாட்சி பூதமாயும் விளங்குகின்ற தனது யதார்த்த வடிவமென் றர்த்தம்.

போதத்தோடுங் கூடியறிகின்றது யீஸ்வர திசையென வறிக. (௧௪௪)

வினு.—அறிவுவிளங்கவு மனுபூதிவிளங்கவும் ஏது வெப்படி யென்னில்?

விடை.—அறிவுவிளங்கப் பகுப்புவேண்டும், அனுபூதிவிளங்க அறிவுமாத்திரம் வேண்டுமென வறிக. ()

(மயம் வருவது.)

வினு.—ஆனந்தமயம் - விஞ்ஞானமயம் - மனோமயமான தெப்படி யென்னில்?

விடை.—ஆனந்தமென்று தெரியாதபடியா லானந்தமயமாயிற்று, தான் அறிவென்று தெரியாதபடியினுல் விஞ்ஞான மயமாயிற்று, தான் அறிவுவிருத்தியென்று தெரியாத படியினுல், மனோமய மாயிற்றென வறிக. (௧௪௬)

வினு.—இன்னம் - மனோமயம் - விஞ்ஞானமயம் - ஆனந்தமய மெப்படி யென்னில்?

விடை.—ஆனந்த மயமாவது - சுழுப்தியில் விளக்கமா யிருந்து மவடத்தில் விருத்தி யில்லாத படியினுலே யஞ்ஞானத்தி லகமாகின்ற மயத்துவத்தை யடைந்து, * பிரம்ஹத்தைப்புசிப்பது. விஞ்ஞானமயமாவது, சொற்பனத்தில் விருத்திரூபமான வகங்காரமா யகங்கர்த்தாவாயிருந்து - நிரதி சயத்தைத் தேடுகின்றது, மனோமயமாவது, சாக்கிரத்திற் சீவரூபமா யேகதேசமா யாகாரமே யின்பமா யிருக்கின்றதென வறிக. ()

---

* பிரமத்தையாவது, பிரம்மானந்தத்தை யென்ப அர்த்தம்.

விஞ.—இன்னம் - மயத்துவமாவ தெது வென்னில்?

விடை.—அதுவதுவா யிருந்துந் தான் தோன்றுமெ
ன வறிக. (கசஅ)

(மயம் நீங்குவது.)

விஞ.—ஆகாரமயமும் - அறிவு மயமும் - ஆனந்தம
யமு மெப்படி நீங்கு மென்னில்?

விடை.—ஆகாரமயமானது யேகதேச விருத்தி யெ
ன்றும், அறிமயமானது - அகண்ட வுபாதியினு லென்
றும, ஆனந்தமயம் - பூரணமென்றும் தெரிந்தால் நீங்கு
மென வறிக. (கசகூ)

விஞ.—இன்னம் - மயத்துவம் நீங்குவ தெப்படியெ
ன்னில்?

விடை.—சுழுப்தி ஆனந்தமயம், சொற்பனம் - அ
றிவுமயம், சாக்கிரம் - ஆகாரமயம், ஸ்புரணத்திற் று
ரியன் விளங்கினுல், * மயம் நீங்குமென வறிக. (கரு0)

விஞ.—இன்னம் - மயமில்லை யென்ப தெப்படி யெ
ன்னில்?

விடை.—அறிவே விளக்க மான படியினுல், மயமில்
லை யென வறிக. (கருக)

விஞ.—இன்னம் - விருத்தியு மயமுமில்லாம லொ
துங்குதலையு மில்லாமல் நடுவாய் நிறைந்திருப்ப தெப்
படி யென்னில்?

விடை.—எதை யறிந்தாலும் - நடுவேயிருந் தறிகின்
றது. அந்தண்டையு மிருக்கிறதில்லை, யிந்தண்டையு

---

* மயமாவது, ஓர்பொருளைப் பார்த்து அதின்
வசத்தாய் விடுவதென்று அர்த்தம்.

மிருக்கிறதில்லை, நடுவில் வெட்டவெளி யாகையால் மயமல்ல, நிராமயம். நீங்கியறியும்போதும் நீங்கினவறிவில் நிறைந்திருக்கின்ற படியினாலே விருத்தியுமல்ல வென வறிக. (கரு௨)

(காட்சிப்பொருள் கருத்துப்பொருள்.)

வினா.— * காட்சிப்பொருள் கருத்துப்பொருளெதுவென்னில்?

விடை.—காட்டப்பட்டவன் கண்ணு - காட்சிப்பொருள். மூடதிசை, நோட்டக்காரன் கண்ணு கருத்துப்பொருள், அனுபவ திசையென வறிக. (கருங)

வினா—இன்னங் - காட்சியில்லாமல் கருத்தாய்விளங்குவதெப்படியென்னில்?

விடை.—பொன் லட்சணமே பார்க்கின்றவன் பித்தளையைப் பார்த்தபோது - பொன்லட்சண மில்லையென்று பார்ப்பன், அப்போது - பித்தளைலட்சணந் தெரியாததுபோல; அனுபூதியாகின்ற விளக்கமே சர்வத்திலுந் தோன்றும், சர்வமென்கிறது தோற்றாதென வறிக.()

வினா.—இன்னங் - கருத்தெதுவோ அதுவாயிருப்பதெப்படி யென்னில்?

விடை.—கருத்து அஞ்ஞானமானால், எதிர்ப்பட்டது ஆகாரமாம். நடுவேயு மாகாரந்தானாயிருக்கும், கருத்து

---

* காட்சிப் பொருள் கருத்துப்பொருளாவது: கண்ணாலறியப்படும் பிரபஞ்சங் - காட்சிப் பொருள். கண்களைமூடிக் கொண்டு பார்த்தால் - பிரபஞ்சந்தோற்றும். அது தோற்றுதற்குக் காரணம் - மனம் ஆதலின், மனதா லறியப்படும்பொருள், கருத்துப்பொருளென்றர்த்தம்.

அறிவானல் எதிர்ப்பட்டது மறிவு, நடுவேயு மறிவு தா ணுயிருக்கும். கருத்து ஆகலாதமானல், எதிர்ப்பட்டதும் ஆகலாதம். நடுவேயு மாகலாதந் தாணுயிருக்கும், கருத்துத் தானுனல் எதிர்ப்பட்டதுந் தான். நடுவேயுந் தாணு யிருக்குமென வறிக. (கருரு)

(பாவமெது ஸ்வபாவமெது.)

வினு.—பாவமெது ஸ்வபாவமெது வென்னில்?

விடை.—அறிவு கெட்டு * ஆகாரமாய்த் தோற்றுகிறது சீவபாவம். எல்லா மறிவாகாரமாய்த் தோன்றுகின்றது - யீஸ்வர ஸ்வபாவம். இந்தக் காரியகாரண மிரண்டுங்கெட்டு ஸ்வயஞ்சித்தாய் விளங்குகின்றது அறிவு ஸ்வபாவம், இது வாசனை. அதுவது தாணு யிருக்கின்றது சொரூப ஸ்வபாவமென வறிக. (கருசு)

வினு.—இன்னம் - பாவனையெது பாவனுதீத மெப்படியென்னில்?

விடை.—பாவனுதீதந் - தாணுயிருத்தல். பாவிக்கின்றது விளக்கம் என வறிக. (கருஎ)

வினு.—இன்னம் - பாவாபாவ மெப்படி யென்னில்?

விடை.—முன்னே தேகந் தெரியாம விருந்தது யேனென்ருல்? தாணுயிருந்துது. யிது அபாவம். பாவப்பட்டவிடத்தி லிப்போது தெரிகிறதேயென்னில்? முன்னே தெரியாமற் ருணுயிருந்ததானே தேகமாகின்ற அறிவானந்த விளக்கமாகித் தேகமில்லாமல் தன்னைத் தெரிகின்றதென வறிக. (கருஅ)

---

* ஆகாரமாய் என்பது, தேகேந்திரிய ப்ரபஞ்சமாக என்று அர்த்தம்.

வினு.—தன்னை விசாரிக்கவந்த தெது வென்னில்?

விடை.—பாவம் - வந்தது, தன்னை விசாரிக்க வந்துதேயல்லாமல், பிரபஞ்சமாய்ப்போக வந்ததல்லவென வறிக. (௧௫௬)

வினு.—இன்னம் - பாவாபாவ மெப்படியென்னில்?

விடை.—எப்போதும் அபாவந் தானுயிருக்கும். இதுபாவனுதீதம். அறிவிறந்த சுகத்தை யறியவந்தது பாவம். ஆகையால், அறிவுஞ்சுகமே - யெப்போதும் அபாவஞ் சுகமாயிருக்கப் பாவப்பட்டு அத்தியாரோப அபவாதம்பண்ணித் தன்னை விளக்கிப்போட்டு வுபக்ரமம் - உபசங்காரங் கெட்டுதென வறிக. (௧௯0)

(பரோட்சா பரோட்சம்.)

வினு.—* பரோட்ச வுபாதி யில்லாதது யெப்படிப் போம், அபரோட்சவுபாதி யுள்ளது யெப்படிப் போமென்னில்?

விடை.—பரோட்ச வுபாதிமயந் தன்னைக் கண்டாற் போம். அபரோட்சவுபாதி யறிதல் - தானுகிற விளக்கத்தைக்கண்டாற் போமென வறிக. (௧௯௧)

வினு.—இன்ன முள்ளிலும் - வெளியிலும் பரோட்சாபரோட்சம் எது; மத்தியில் தான் விளங்குவ தெப்படி யென்னில்?

---

* பரோட்சா பரோட்சமாவது, ஓர் பொருளை - உத்தேசமாக நிச்சயித்து யிருக்கிறதென்பது, பரோட்சம். லட்சணம் பரிட்சையினுல் அஞ்ஞானம் - சந்தேகமின்றி ப்ரத்யட்சமாய்க் காண்பது அபரோட்சமென்றர்த்தம்.

விடை.—வெளியி லறிகின்றது தானாயிருக்கும்போது இதுபரோட்சம். விஷயவிளக்கமிது அபரோட்சம்; உள்ளே யாகலாதந் தானாயிருக்கும்போது யிது பரோட்சம், அறிகின்றது விளக்கம். இது அபரோட்சம், இந்த விரண்டிற்குமத்தியில் தானாயிருந்து தன்பிரகாசமே விளங்குகின்றதென வறிக. (௧௬௨)

வினா.—இன்னம் - பரோட்ச அபரோட்ச மெப்படியென்னில்?

விடை.—இருக்கின்றதே அறிகிறதென்றறிகிறது பரோட்சம்; தானே அறிகின்றதென்பது, அபரோட்சமென வறிக. (௧௬௩)

வினா.—இன்னம் - பரோட்ச அபரோட்ச மெப்படியென்னில்?

விடை.—அறிகின்ற வறிவில் நிறைந்திருப்பது தெரியாதது பரோட்சம், அறிகின்ற அறிவில் நிறைந்திருப்பது விளங்கிப்போனது, அபரோட்சமென வறிக. ()

வினா.—இன்னம் - பரோட்ச அபரோட்ச மெப்படியென்னில்?

விடை.—தானாயிருப்பது - பரோட்சம். போதமில்லை, அறியவந்தவிடம் விளக்கம். இது அபரோட்சமென வறிக. (௧௬௫)

(ஞானக் ஞானதிருஷ்டி)

வினா.—திருஷ்டியாவ தெதுவென்னில்?

விடை.—இந்திரியம் - சாமான்ய திருஷ்டி, கரணம்-விசேஷதிருஷ்டி, சீவன் - அன்னியபலதிருஷ்டி, சாட்சி-ஸ்வயபல திருஷ்டியென வறிக. (௧௬௬)

வினா.—இன்னம் - ஞானதிருஷ்டி யக்ஞான திருஷ்டி யெதுவென்னில்?

விடை.—சூரியனுடைய கிரணமே கானற் செலம் போலச் செலதிருஷ்டியாய்ப் பார்த்தால் தோற்றுது, சூரியனுடைய கிரணதிருஷ்டியாய்ப் பார்த்தால், சூரியகிரணமே விளங்குகின்றது. ஆகையால், கானற் செலம் பொய். அப்படிப்போலத், தானுகிற சச்சிதானந்தசொரூபத்தை மறந்த வாசனைநினைவே நாமரூபாகாரம் போலத் தோற்றுது. அதுவே யஞ்ஞான திருஷ்டி, தானுகிற சச்சிதானந்த சொரூப அறிவை நினைத்துச் சிந்தனைபண்ணின அறிவே யறிவுமாத்திரமா யிருக்கின்றது. இதுவே ஞானதிருஷ்டி. ஆகையால், நாம ரூபாகாரம் பொய்யென வறிக. (கசுஎ)

(அகங்கார க்ரந்தி.)

வினா—* அகங்கார க்ரந்தியாவதெது வென்னில்?

---

* அகங்கார க்ரந்தியாவது - மூலக்ரந்தி, அல்லது - மூலாஞ்ஞானமென்று அர்த்தம். க்ரந்தியென்று யேன் சொல்லவேண்டு மெனின்? எப்போதும் நாசமாகாத தாதலின், அநாதி - என்றுசொல்லப்படும். அஃதெப்படி யென்றால், மிகுந்த வியாதியுள்ளவர்கள் நல்ல நித்திரைவந்தபோது வியாதியினது துன்பந் தோற்றுமல் மறந்து விழித்தவுடனே எப்படித் துன்பந் தோற்றுகிறதோ; அப்படிப்போல, முன்சொன்ன க்ரந்தி - நித்யப்பிரளயமாகிய சுழுப்தியிலும் - சர்வ சங்காரமாகிய மஹாப்பிரளயத்திலும் - சிலகால மடங்கியிருந்து விழித்தவுடனே பூர்வத்தில் எந்தவாசனையோடு அடங்கியிருந்தார்களோ; அந்த வாசனைரூபமாகத் திரும்பியும்,

விடை.—சித்துஞ் செடமும் பிரிவுபடாத தென வறிக. (௧௬௮)

வினா.—இன்ன முள்ளேயிருக்கின்றதெது, வெளியி லேயிருக்கின்ற தெதுவென்னில்?

விடை.—அறிவானது வெளியிலே தேகாதிப் பிரப ஞ்சமாயிருக்கும், அறியும்பொருளான தேகாதி ப்ரபஞ் ச முள்ளே யிருக்குமென வறிக. (௧௬௯)

(அ க மி த ம்.)

வினா.—இன்னம் - அகமிதமாய் வியஷ்டியில் விசேட மா யிருப்பதும் - சமஷ்டியில் சாமான்யமா யிருப்பது மொருவனேயென்ப தெப்படி யென்னில்?

விடை.—ஒருவனை யொருவன் பார்க்கும்போது -பா ர்ப்பவன் அகமும் எதிரில் தோற்றுகிறவன், இதமுமா யிருக்கின்றது. அவனிவனைப் பார்க்கும்போதும், அ வனகமு மிவனிதமுமா யிருக்கின்றது. ஆகையால், அ கமு மிதமுமாயிருப்பவ னொருவனே; ஆயிரம்பேரை யொருவன் பார்க்கும்போது ஆயிரம்பேருமொன்றாய்ச் சாமான்யமாய்த் தோற்றும். மற்றொருவ னிவனைக்

வரும்படியாகச் செய்கின்றது. ஆதலானும், அநாதி- அநிர்வாச்சியம் - மாயை - அவித்யை - ப்ரகிருதி - முத லிய நாமங்கள் சொல்லப்பட்டன. ஆதலானும், ஆதிய ல்லாதது அநாதி என்று அர்த்தம். இப்படிச் சொல்லி ய அநாதிமுதலிய மாயாநாமங்கள் எப்போது நாச மா குமென்றால், ஆதிமத்தியாந்த ரகிதமாகியும் - சதோதய மாகியும் - விளங்குகின்ற தனது ஆத்ம ஸ்வரூபத்தைக் கண்டால் நாச மாகுமல்லாமல், வேறொன்றாலும் கெடா து என்று அபிப்ராயம்.

கூட்டி யாயிரம்பேரையும் பார்க்கிறபோது சாமான்யத் திலொன்றாய்த் தோன்றுது. சமஷ்டியாய்ப் பார்த்தால் சாமான்யம். வியஷ்டியாய்ப் பார்த்தால் விசேடமென வறிக. (கஎ0)

வினு.—அகமிதத்தில் சுகதுக்கம் வருவ தெப்படி யென்னில்?

விடை.—எங்குமாயிருக்கின்ற வியாபக மத்தியில் ஸ் புரித்து மத்தியிலறியாம லகத்திலொதுங்கி யிதத்தைப் பார்க்கத் தானிதமா யிப்படி யொன்றுதானே, அகமித மாய்த் திரும்புகின்ற * சடுதியினுலே யனந்தமா யா னெனதென்று விகற்பித்துச் சுகதுக்கவேதனை யுண்டா கின்றதென வறிக. (கஎக)

வினு.—இன்னம் - அகமிதமாகி மத்தியம் விளங்கு வ தெப்படி யென்னில்?

விடை.—இதத்திற் ருனுகிறது - சத்து, அகத்திற் ருனுயறிகின்றது - சித்து, இரண்டாம்வஸ்து வில்லா தபடியால் - மத்தியி லானந்தமாயிற்று. மத்தியிலிருக்கி ன்ற சத்தே; † அந்தண்டையு மிந்தண்டையு மானது, மத்தியிலிருக்கின்ற சித்தே யந்தண்டையு மிந்தண்டை யு மறிகின்றது. மத்தியிலிருக்கின்ற வானந்தமே யந் தண்டையு மிந்தண்டையும் விளங்குகிறதென வறிக. ()

---

* சடுதியாவது - சீக்கிரம் - என்றர்த்தம்.

† அந்தண்டை யிந்தண்டையென்பது! திசைச் சொல் - அந்தண்டையு மென்றுல் - அகத்திலும் இந்த ண்டையுமென்றுல் புறத்திலும், காணப்படுகின்ற த்ரு ஸ்யங்களைச் சாட்சியாகவிருந்தறிகிறதென்று அர்த்தம்.

வினு.—இன்ன மகமித வாசனுச்சித்து யில்லை யென் ப தெப்படி யென்னில்?

விடை.—அகண்டவறிவு அகண்டானந்த மானபடி யால், மயமில்லை; பரோட்சவுபாதி யில்லை. அகண்டா னந்த மகண்டவறி வானபடியினால் - போதமில்லை. அப ரோட்சவுபாதியில்லை. சைதன்னிய மனுமயம், அப்படி யகண்டமானபடியா லப்படியென் றென்றில்லை, அஃ தே காரணமானபடியின லிப்படி யென்றென்றில்லை, சமத்துவமு மதுவே; மத்தியமு மதுவே, யகமிதமத்தி ய வாசனுச் சித்து மில்லையென வறிக. (கஎங)

(காரணகாரியம்.)

வினு.—காரிய காரண விலட்சண மெப்படி யென் னில்?

விடை.—மாமுந்தியோ? கொட்டை முந்தியோ வெ ன்னில்? இந்தவிரண்டுங் காரியம். பூமி - காரணம். இ திலே - காரணம் - விரை. காரியம் - மரம், விரை - மர த்தை யடக்கும், மரம் - விரையையடக்கும், ஒன்றிலே யொன்று கெட்டுப்போம், ஒன்றிலே ஒன்றை அடக் குகின்றது - * சக்தி. இந்தச் சக்தி யனுபூதியானல் - கா ரணகாரியம் விடுமென வறிக. (கஎச)

---

* சக்தியாவது, மாயாசக்தி - சிற்சக்தி யென விரண்டுவகைப்படும். அவற்றுள் அநாதி தொட்டு- மயக்கத்தை விளைவிப்பதாயும் - இல்லாத வுலகத்தை யு ள்ளதாயும் - உள்ள ஞானத்தையில்லாததாயும் - செய் யத்தக்கவல்லமை யுடையவளாகியும்; அகடித கடனுச மர்த்தியாகியும், சமஸ்த தத்துவங்களுக்குங், காரணமா னதே மாயாசக்தியென்று சொல்லப்படும். இப்படி அ நாதியாகச் சொல்லிய மாயரசக்தியினு லுண்டான, கல் பனைகளையெல்லாம் நாசஞ்செய்யுஞ் சமர்த்தி யாகியும்-

(விவர்த்தவிளக்கம்.)

வினு.—விவர்த்த மெப்படி விளக்கமெப்படி யென்னில்?

விடை.—எதிரோ தோற்றுகிற விஷயத்தி லாசக்தி யானு லிச்சை யதுவிவர்த்தம், வியாபகமானுல் விளக்க மென வறிக. (களரு)

வினு.—மனோவிருத்திக்கு லட்சண மெப்படி யென்னில்?

விடை.—சத்துப்போன தாய்தகப்பனை நினைத்துப் பார்த்தால், இப்போது தெரிகின்றதல்லவா? தெரிகின்றது. அப்போ அவர்கள் கிட்டேயிருக்கும்போது - நீ வேறே நினைப்பாயிருந்தால் - தெரியுமா? தெரியாது, யிப்பவும் - நீ - நினைத்தால் - தெரிகின்றதே யன்றி நினையாவிட்டால் தெரியவில்லையே; அப்படிப் போல, இப்பவும் - நீ - எதைநினைத்தாலும் தெரிகின்றது. நீ - நினையாவிட்டால், தெரியவில்லை. ஆகையா லுன்னினைப்பே யாகாரம், ஆகாரமென்று ஒன்றில்லை. தோற்றுகிற நாமரூபம், எப்படிப்போல வென்னில்? சத்துப்போன தாய்தகப்பன் - வந்தார்களென்று சொன்னு லெப்படிச் சத்தியமல்லவோ? அப்படியே பிரபஞ்சமெல்லாஞ் சத்தியமல்ல, அசத்தியம். சகலமும் தன்னினைப்பென்று பார்த்தால், நாமரூபப் பிரபஞ்ச மில்லையென வறிக.()

காரண காரியமில்லாமல், சதோதயமாக ப்ரகாசிக்கும் தன்மையுடையதாகியு மிருப்பதே சிற்சக்தியென்று சொல்லப்படும். ஆதலால், சிற்சக்தி யனுபவங் குருமுன்னிலையிற் கேட்டுத்தெளிந்தால், காரண காரிய முதலாகிய கற்பனைகள் நீங்கும். அப்படித் தெளியா விட்டால், மாயாசக்தி வசத்தாகிக் காரணகாரியங் தன்னைவிட்டு நீங்காதென்று தாத்பர்யம்.

(அகண்டாகார விருத்தி.)

வினு.—அகண்டாகார விருத்தி லட்சண மெப்படி யென்னில்?

விடை.—தனித்தனியே யெதைப் பார்த்தாலும் தான் தான், ஏகமாய்ப்பார்த்தாலுந் தான் தான்; யிருக்கின்ற அறிவு ஒன்றுதானே - தனித்தனியே யிருக்கின்றதும், ஏகமா யிருக்கின்றதும், என்றுகண்டால், எல்லாமென்கின்றது பொய். அது * போகிறதில்லை யஃது மித்தை யென வறிக. (களஎ)

---

* போகிறதில்லையாவது, பொய்யே வடிவாயுள்ள மாயை, தன்னையும் - பிரபஞ்சத்தையும் - விசாரிக்காதவர்களை விட்டுப்போகிறதில்லை என்று அர்த்தம். தன்னை விசாரித்தவர்களை விட்டுநீங்குமோ வென்றால், அப்பவும் போகமாட்டாது. சாஸ்திரவிசாரணை செய்ததற்குப் பலன் - கிரமமுக்தி கிடைக்குமன்றி, ஜீவன்முக்தி சம்பவிக்கமாட்டாது. கிரமமுக்தியில் ஜீவத்வ மிருக்கிறபடியால், ஜீவத்வமிருக்கிற பரியந்தம் - மாயைபோகிறதில்லை. குருமுன்னிலையில், தான் அகண்டவஸ்துவென்று கேட்டால், நீங்குமோவென்னில்; அப்போதும் போகமாட்டாது. பின்னெப்படிப் போகுமென்றால், குருசொன்னபிரகாரம் தீரபுருஷனாய் ஞானுநுசந்தானஞ் செய்து, அதனாலுண்டாகின்ற ஞானமென்னும் அஞ்சனத்தினால் தன்னைப் பார்த்தால், பொய் இப்படி யென்றும் - மெய் - இவ்வாறென்றும் தெரியும். பொய் மெய் யென்னு மிரண்டினிலைமை எப்போது தெரிந்ததோ? அப்போதே பொய் நீங்கும். ஆதலால், இவ்விரண்டின் ஆதியந்தம் தெரியாதவரையில் மாயை தன்னைவிட்டுப் போகிறதில்லை என்று அபிப்பிராயம்.

வினா.—இன்னம் - மனோவிருத்தி நாசமெப்படி வருமென்னில்?

விடை.—ஸ்தூல சூட்சும காரணம் போனால், வரும். அப்போ நனவிற்சுழுப்தி ரூபம், அது அனுபூதியாகையால், துரியதரிசனமாயிற்று. இஃது, ஜீவசூன்யம் எனவறிக. (௧௭௮)

வினா.—இன்னம் - ஏகாகார விருத்திநாசமெப்படி வருமென்னில்?

விடை.—விராட்டு - இரண்யகற்பம் - மாயை போனால் வரும். அப்போ நனவிற் சுழுப்தி யநுபூதிக்கியண்டங்கள் - புவனங்களெல்லாம் ஸ்வானுபூதி வியாபகமாகையா லிது - துரியதரிசனமாயிற்று. இஃது யீஸ்வர சூன்யமென வறிக. (௧௭௯)

வினா.—இன்னம் - வாசனா வுபாதி விருத்தியாவதெதுவென்னில்?

விடை.—விராட்டைக் குறித்துச் சத்தென்றும், இரண்ய கற்பத்தைக் குறித்துச் சித்தென்றும், மாயையைக்குறித்து ஆனந்தமென்றும், வருகையால், வாசனாவுபாதி விருத்தியாயிற்றென வறிக. (௧௮௦)

வினா.—இன்னம் - வாசனா வுபாதி லயமெப்படி வருமென்னில்?

விடை.—இந்த மூன்றும் - ஆனந்தானுபூதி யாகையால், வாசனா வுபாதி லயம். இது வெறுஞ் சூன்யமென வறிக. (௧௮௧)

வினா.—இன்னம் - விருத்தி த்ரயம் எப்படியென்னில்?

விடை.—சத்துக்கு விருத்தி - நினைவு, சித்துக்கு-விருத்தி - யறிகுதல், ஆனந்தத்துக்கு விருத்தி - மயத்துவமென வறிக. (கஅஉ)

வி்ஞ.—விருத்தி த்ரய மெதை விளக்கு மென்னில்?

விடை.—மனோவிருத்தி - யேகதேச வறிவு, ஆகாரத்தைக் காட்டும். அகண்டாகார விருத்தி யறிவைக் காட்டும், விவேகவிருத்தி - யானந்தத்தைக்காட்டும், அறிவு அந்தர்முக மானபோது - ஆனந்தம் ப்ரதி பிம்பிக்கும். வெளிமுகமானபோது - ஆகாரத்தைக் காட்டும் என வறிக. (கஅகூ)

வி்ஞ.—இன்னம் - விருத்திகளுடைய கருமமெப்படியென்னில்?

விடை.—ஏகதேசவறிவு - சுட்டல். ஏகாகாரவறிவு-எட்டிவியாபித்தல், பூரணவிருத்தி விளக்கமா யிருத்தலென வறிக. (கஅச)

வி்ஞ.—இன்னஞ் சூன்ய விருத்தியாவ தெதுவென்னில்?

விடை.—ஜெகத்து நாமரூபமாய்த் தோற்றுவது-சூன்யவிருத்தி. சீவபாவம் - துக்க அனுபவ மென வறிக. (கஅரு)

வி்ஞ.—இன்னம் - பாவவிருத்தியாவ தெது வென்னில்?

விடை.—ஜெகத்து அறிவாகாரமாய்த் தோன்றுவது - யீஸ்வரபாவம். இந்தவேளைக்குத் துக்கநிவர்த்தியு மற்ற வேளைக்குத் - துக்க அனுபவமுமென வறிக. ()

வினா.—இன்னம் - பூரணவிருத்தியாவதெது வென்னில்?

விடை.—ஜெகத்து ஆகலாதஸ்வரூபமுந் தான் - ஆகலாத விளக்கமுமாகச் * சார்வதா விளங்கிக்கொண் டிருக்கின்றபடியால், இந்த அனுபவத்தில் த்ரிகாலத்திலுந் துக்கமில்லாத படியாலும், இந்தவனுபூதி யேகதேசப்படாம லிருக்கிறபடியாலும், அறிகின்றவன் - அறிகிறது அறியப்பட்ட விஷயமு முக்காலங்களு மில்லாதபடியாலும், பூரணவிருத்திக்குச் சமுசய மில்லையென வறிக. ()

(அனு வஸ்தை.)

விடை.—† அனுவஸ்தை யில்லாமற் றானேயறிவதெப்படி யென்னில்?

விடை.—அசுத்தத்தையுஞ் சுத்தத்தையு மறிந்ததார்? தான் தான். தான்தானென் றறிந்ததார்? தான் தான். இதற்குமேல் வந்தால், அனுவஸ்தையாமெனவறிக. ()

(முழுங்குகின்றது.)

வினா.—முழுங்குகின்றது யெது வென்னில்?

விடை.—அறிவு - சுகத்தைப் பொசிக்கப் போகின்றது. அந்தச் சுகம், அறிவை முழுங்கிக் கொள்ளுகின்றதென வறிக. (௧அ௬)

வினா.—இன்னம் - முழுங்குவ தெதுவென்னில்?

---

* சார்வதாவாவது, எப்பொழுதும் என்று அர்த்தம்.

† அனவஸ்தையாவது - சொல்லச் சொல்ல முடிவு பெறுமையென்றர்த்தம்.

விடை.—சச்சிதானந்த * ஸ்புரணமென்னும் ஆனையைத் தானயிருக்கின்ற திருக்கான சிங்கம் முழுங்குகிறதென வறிக. (௧௯௰)

வின.—இன்னம் - எல்லாவற்றையு முழுங்கித் தானயிருக்கின்ற தெதுவென்னில்?

விடை.—வியாபக விளக்கமே யறிவையு மாகாசத்தையு முழுங்கிக்கொண்டு தானயிருக்கும், அறிவு மாகாரமுந் தானயிராது, நினைக்கின்றது - அறிகிறது - நில்லாது கெட்டுப்போகும். சொரூபஞ்சடமல்ல. வியாபகமே முந்தித் தான யிருக்குமென வறிக. (௧௯௧)

---

* சச்சிதானந்த ஸ்புரணமென்னும் யானையாவது, தாஷ்டாந்தரம். இதற்குத் திருஷ்டாந்த மெப்படியென்றால், யானைக்குக் கன்னமதங் - கபோலமதம்- கோசமதமென்னு மும்மதமிருந்தவிடத்தில், உருவங்களை நாசம்பண்ணி மதத்தின் வசத்தாகித் தன்னையறியாமல் தன்தேகத்தை மறந்திருக்கிறபோது, சிம்மம், யானையை முழுங்கியது போல, ஸ்புரணமென்னும், யானைக்குச் சத்து சித்து - ஆநந்தமென்னு மூன்றுமதமிருந்தவிடத்தில்; அசத்து முதலாகிய த்ருஸ்யங்களைநாசஞ்செய்து, சச்சிதானந் தானுபவத்தின் வசத்தாகித் தன்னையறியாமல் மறந்திருப்பதாலும், சச்சிதானந்த மென்னும், லட்சணத்தால், தன்னைக்காணக் காரணமாக விருப்பதாலும், தன்னைக் கண்டபின்பு, தன்னிலெழுந்த விருத்திகள், தன்னிலே அடங்கவேண்டுமாதலாலும், அடங்காவிடின்; ப்ரதிபந்தமாயிருப்பதாலும், சர்வவியாபகமாயுள்ள த்ருக்கென்னுஞ் சிம்மமானது, ஸ்புரணமென்னும் யானையை முழுங்குகிறதென் றபிப்ராயம்.

வினு.—இன்னம் - ஜெகம் போம்வழி எப்படி யென்னில்?

விடை.—அறிவாய்ப் பார்த்தால் கரையும். ஆகலாதமாய்ப் பார்த்தால் - அண்ட அடுக்குகளான விஷயமெல்லாவற்றையும், ஒரோகபளமாய்க் கபுக்கென் றமுத்திக் கொள்ளுமென வறிக. (கசுஉ)

வினு.—இன்னஞ் சர்வத்தையுஞ் சொரூபஞ் சதாவிழுங்குவ தெப்படியென்னில்?

விடை.—அறிவாகிற * அவாந்திரமஸ்தாயிருக்கிறது, அஸ்தாயிருக்கின்ற தென்கிற - போதமுண்டா? யில்லை - அதில் - நிறைவாயிருக்கின்றது. அதில் நிறைவாயிருக்கிறதென்கிற போதமுண்டா? யில்லை. தானு யிருக்கின்றது. தானு யிருக்கின்றதென்கிறபோதமுண்டா யில்லை.

---

* அறிவாகிற அவாந்திர மஸ்தாயிருக்கிற தாவது, அறியப் படுவதா லறிவென்றுபெயர். அறிவை யவாந்தரமென்றுஏன் சொல்லவேண்டு மென்னில்? அவாந்தரமாவது, மத்தியி லுண்டாகி - விளங்கி - அழிந்துபோவதற்கு அவாந்தரமென் றர்த்தம். எப்படி யென்றால், ஆகாசத்தினின்று மேகமுண்டாகி மழைகளை வருஷித்துப் பின்பு, ஆகாசத்தி லெப்படி மறைந்ததோ? அப்படிப்போலச், சிதாகாசத்தில் மாயையென்னு மேகமுண்டாகி ப்ரபஞ்சமென்னு மழைகளை வருஷித்துப் பின் சிதாகாசத்தி லடங்குகின்றது. ஆகாசத்தைப் பார்த்தால் மழை வந்ததும் போனதும் தெரியவில்லை. இதுபோலச், சிதாகாசத்தைப் பார்த்தால் ப்ரபஞ்சம் வந்ததும் போனதுந் தெரியவில்லை. ஆதலால், முன்னும் பின்னு மில்லாத ப்ரபஞ்சமத்தியிற் றோற்றிமறைகின்

இப்படி யெத்தனை கேட்டாலும், அவைகளை * அவிருத்தம் விழுங்கிக் கொள்ளுமென வறிக. (ககூ௬)

(அபாவ சதுஷ்டயம்.)

வினா.—அபாவ சதுஷ்டைய மெப்படியென்னில்?

விடை.—முதல் பிராக பாவமாவது, விருத்தி முன்னே தோற்றியதா? யில்லை. பிரத்வம்சா பாவமாவது-இந்த விருத்தி யிப்படியே தோற்றிக்கொண் டிருக்குமா? யிராது. ஆகையால், முன்னும் பின்னு மில்லாமற் போனதைக் கண்டதில்லை. வர்த்தமானகாலத்தில் - இருக்கிறபடியினாலே, வஸ்து நிர்த்தாரணமாகவேண்டி அன்னியோன்னியா பாவத்தைச் சோதிக்கவேண்டி வந்

றது அவாந்தரம். அப்படி யவாந்தரமாகத் தோற்றுகின்ற தேகாதி ப்ரபஞ்சங்களை அவாந்தரமென் றறியாமல் வாஸ்தவமென்று அறிகின்ற படியாலும், மெய்யை மெய்யாக அறிவது மெய்யறிவென்றும், பொய்யை மெய்யாக அறிவது அவாந்தர அறிவென்றும், அல்லது பொய்யறி வென்றும், பொய்யை மெய்யாக அறிந்தஅறிவு மெய்யாகத் தன்னைப் பார்க்கு மிடத்து, முன்னறிந்த அறிவு அவாந்தர மாயிற்று. அவாந்தரமான தேகாதி ப்ரபஞ்ச மென்னவிதமாயிருக்கிறதென்று பார்க்குமிடத்து, அறிவு வடிவமாக விருக்கின்ற படியால், அறிவாகிற அவாந்தா மஃதாயிருக்கிற தென்றால், ப்ரபஞ்சம் அறிவாகவே விளங்கின்றது அன்னிய மில்லை யென்று அபிப்ராயம்.

* அவிருத்தமாவது, விரோதமில்லாத தாயும் - சஜாதிய - விஜாதிய ஸ்வகதபேத மில்லாததாயும், விளங்கு கின்ற தானாகிய ஆத்மாசர்வத்தையும் விழுங்குமென் றபிப்ராயம்

துது; அஃதெப்படி யென்னில்? கடத்தைப் பார்க்கும் போது - படமில்லை, படத்தைப் பார்க்கும்போது கடமில்லை; தானெல்லாவற்றிலு முண்டு; இன்ன - முள்ளேகடத்தைப் பார்த்தால் - வெளியிலே யில்லை; வெளியிலே கடத்தைப்பார்த்தா லுள்ளேயில்லை; இன்னமிதிலே யஃதில்லை; யதிலே யிஃதில்லை, யிருக்கின்றது அறிவு. உள்ளேயும் - வெளியிலேயும் - தான்றானே? பிரபஞ்ச மாகிற படியினால் வர்த்தமானத்தில் பிரபஞ்சமில்லை; ஆகையால், மூன்றுகாலத்திலு மறிவைத்தவிர யில்லாதபடியினாலே அத்யந்தா பாவம் - சித்தித்தது. யிருக்கிறது தானேயென வறிக. (கசுச)

வினா.—இன்னம் - அபாவ சதுஷ்டய மெப்படி யென்னில்?

விடை.—கடாபாவம் - கடாபாவக்ஞானம் - கடா * சாதுர்ஸ்யக்ஞானம் - கடாக்ஞான பாவம் - ஆக (ச) கடத்தைக் குறித்தபோது சாதுர்ஸ்யத்தைத் தவிர பாவமில்லை; யந்த ஞானங் - தான். கடமாயிருக்கிறது சூன்யாபாவம். தானாயிருக்கிறது பூரண பாவமென வறிக.()

வினா.—இன்ன மூன்று காலமும் பாவ மில்லையென்பதெப்படி யென்னில்?

விடை.—தோற்றரவு விளங்கு கின்றதோ வில்லையோ வென்னில்? தோற்றரவென்று நிகழ் காலத்தில் விளங்காமுன் - பிராக்குண்டோ வென்னில்? இல்லையென்றால், அபாவமான கடத்தில் தோற்றரவு பிறந்ததென்று வரும். அறிவு வந்தபோது - முன்னிருந்ததே

---

* சாதுர்ஸ்யமாவது, சமானமான வஸ்துவென்று அர்த்தம்.

தோற்றுகின்றதென்றால்? பிராக பாவ மில்லை; மேலை க்கு மிருக்கிறதே தோற்று மென்றால், பிரத்துவம்சா பாவமு மில்லை; மத்தியிலு மிருக்கின்றதே தோற்றுகி ற படியா லன்னியோன்னியா பாவமு மில்லை யென வறிக. (கசூசு)

(முப்பாழ்.)

வினு.—முப்பா ழெது வென்னில்?

விடை.—தத்துவம் நீங்கி அறியாமை கண்டது - ஜீவப்பாழ். அறியாமையும் நீங்கிக் கண்ட அறிவும் நீங் கினது பரப்பாழ், அருளிற் போதமடங்கினது சிவப் பாழென வறிக. (கசூஎ)

வினு.—இன்ன முப்பா ழெப்படி யென்னில்?

விடை.—ஒருபழத்தை - * வெஞ்சகமாய்க் கண்ட போது ஆகாரத்தி லாகலாத முண்டாம். ஆகாரமில்லை. இஃது முதற்பாழ்; அந்தச்சுகம் வேண்டுமென் றறிந்த போதும் அறிவி லாகலாதமுண்டாம்; மறிவில்லை. இது விரண்டாம்பாழ்; புசித்தபோது மாகாரமு மறிவுமில்லை. யாகலாத மாத்திர மயத்துவமானபடியினு லிதுமூன்று ம்பாழென வறிக. (கசூஅ)

(முச்சூன்யம்.)

வினு.—முச்சூன்யமாவ தெதுவென்னில்?

விடை.—மனோவிருத்தி லயம் சீவ சூன்யம்; ஏகாகா ரவிருத்தி லயம் ஈஸ்வர சூன்யம்; வாசனு விருத்திலயம் வெறுஞ்சூன்ய மென வறிக. (கசூகூ)

---

* வெஞ்சகமாய் - என்பது - பிரியமாக வென்று அர்த்தம்.

வினா.—இன்னம் - முச்சூன்யமாவ தெதுவென்னில்?

விடை.—ஜீவ அறிவை யந்தகாரத்தினுள் முழுங்கி நின்றவிடம் அவித்தை யென்றும் - ஜீவசூன்யமென்றும்பெயர். ஈஸ்வர அறிவாகாரத்தை முழுங்கிநின்ற அறிவுக்கு மாயை யென்றும் - ஈஸ்வர சூன்யமென்றும் பெயர். அனந்தாகாரமு மனந்தாகார வறிவும் நசித்தது வெளிப்பட்ட வியாபக மயத்துக்குப் பிரம்ஹசூன்யமென்று பெயரென வறிக. (உ00)

வினா.—இன்ன முச்சூன்யமாவ தெது வென்னில்?

விடை.—அனந்தமாகிற அவித்தை யானந்தத்தி லறிவு லயித்தது சீவசூன்யம். அறிவி லனந்தா னந்தமும் லயித்தது, ஈஸ்வர சூன்யம். அனந்தானந்தமு மனந்த வறிவும் லயித்து - வியாபகமாய் நின்றது, பிரம்ஹசூன்ய மெனவறிக. (உ0க)

வினா.—இன்ன * முக்கிரந்தியு மில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—ஆகார ப்ரபஞ்ச மில்லை. யானந்தமே; யறிவு ப்பிரபஞ்சமில்லை. யானந்தமே; வாசனையில்லை; யானந்தமே யிருக்கிறதென வறிக. (உ0உ)

வினா.—இன்ன முப்பாழ் - முச்சூனியம் - முக்கிரந்தி - † மூன்றுகணவாய் - மூன்றுதடை - என்பதெது வென்னில்?

---

* முக்கிரந்தியாவது, ப்ரம்மக்ரந்தி - விஷ்ணுக்ரந்தி - ருத்ரக்ரந்தி யென்று அர்த்தம்.

† மூன்றுகணவாய், மலையின்பக்கத்தி லிருக்கும், பெரிய பள்ளத்திற்குக் கணவாயென்று அர்த்தம்.

விடை.—மூன்று விருத்தியான மும்மலமு மென வறிக. (உ௦௩)

(சீவேஸ்வர பாவம்.)

வினு.—சீவபாவம் - ஈஸ்வரபாவ மெது வென்னில்?

விடை.—தன் சொரூபத்தை மறந்து தேகம் நானென்று விஷயானந்தத்தைச் சிந்தித்துப் புசிக்கின்றதே, சீவபாவம். தேகேந்திரிய விஷயங்களெல்லாம் தானல்ல. பொய்யென்றுவிட்டு நீங்கித் தான் அறிவானந்தமென்று தானே தானு யறிகிறவிடம், ஈஸ்வர பாவமென வறிக. (உ௦௪)

வினு.—இன்னஞ் ஜீவ அறிவாவ தெதுவென்னில்?

விடை.—ஒவ்வொரு விஷயத்தை யறிந்தவறிவு சீவ வறிவென வறிக. (உ௦௫)

வினு.—இன்னம் - ஈஸ்வர அறிவாவ தெது வென்னில்?

இஃது - திசைச்சொல். மூன்று கணவாயாவது, பள்ளத்தில் விழுந்தவர்கள், மேலே யேறிவராமல், அந்தப் பள்ளத்தில் மரண மடைவது போல, விருப்பு - வெறுப்பு - அஞ்ஞானமெனப்படுகிற, பள்ளத்தில் விழுந்தவர்கள் - திரும்பிவருகிறது கஷ்டமாதலால், மூன்றையுங் கணவாயென்றும், மூன்றுவிருத்தியென்றும், மும்மலமென்றும், இவைகளிருக்கிற வரையில், தன்னைக்காணக்கூடாமையா யிருப்பதால், மூன்றுதடையென்றுஞ் சொன்னரென்று அபிப்ராயம். முப்பாழ் முச்சூனியமென்று சொன்னவிபரம் (கசுகூ - வது) முதலிய லக்கங்களில், பார்த்தால் தெரியும்.

விடை.—விஷயத்தை விட்ட அறிவு யீஸ்வர அறிவென வறிக. (உ0சு)

வின.—இன்னஞ் - சீவதிசை யெப்படி யென்னில்?

விடை.—ஆகாரத்திற் சுகங்கண்டபோது சாக்ரம். வேண்டுமென் றறிந்தது சொற்பனம்; புசித்தது சுழுப்தி யென வறிக. (உ0எ)

வின.—இன்ன மீஸ்வர திசை யெப்படி யென்னில்?

விடை.—ஆகாரத்திற் சுக மில்லையென்றும், உள்ளே அறிவு சுகமென்றும், அநுபவமுண்டாகி அறிவிற் சுகந்தானு யிருக்கிறது - இது சாக்ரம். வெளியில் விஷயமில்லாமல் - சுகமாத்திர மறிந்தது - சொற்பனம். இவ்விரண்டிடமும் விளங்கிப் போனது சுழுப்தி யென வறிக. (உ0அ)

வின.—இன்னம் - சீவதிசை யெப்படி யென்னில்?

விடை.—மோதிரவாகாரஞ் சுகமென்று நினைக்கின்றது சாக்ரம். இது சம்பாதிக்கச் சிந்திக்கின்றது. சொற்பனம். மோதிரம்பண்ணிக் கையிற் போட்டது சுழுப்தி. மோதிரமிருக்கிறதென்று தெரியாது தானுயிருக்கும், இது சீவதிசை யென வறிக. (உ0கூ)

வின.—இன்னஞ் சீவபாவ மீஸ்வரபாவ மித்தை. தானுயிருத்தல் சத்தியமென்பதெப்படியென்னில்?

விடை.—சர்வவுயிர்களும் - ஒவ்வொருவிஷயந் தானுயிருக்கையால், சீவபாவ மித்தை. அனந்த விஷயத்திலும் - ஏகந்தானுயிருத்த லநுபவமாகையா லனந்தவிஷயமும் பொய். தானுதல், சத்தியமென வறிக. (உக0)

வினா.—இன்னஞ் சீவசிருஷ்டி யீஸ்வரசிருஷ்டி யெப்படி யென்னில்?

விடை.—தேகத்தையும் வெளி விஷயத்தையும் அண்டத்தோடே சேர்த்தது யீஸ்வரசிருஷ்டி; உள்ளே முதலாவது சீவசிருஷ்டி; யிரண்டாவது - வெளியிற்பார்ப்பது தானே - யீசசிருஷ்டி. உள்ளே சீவசிருஷ்டியி லாகலாத முண்டானாற் றான்வெளியிற் பக்கென்று விளங்கும். இன்ன முள்ளே தோன்றாமல் - வெளியில் வாராது யின்னம் - ஸ்திரீயைப் பார்த்ததினாலே யொன்றுமில்லே. யுள்ளே நல்லதென்று பட்டால் பக்கென்று வெளியில் வருமென வறிக. (உகக)

வினா.—இன்னம் - ஏகனனேக னென்பதெப்படி யென்னில்?

விடை.—அனேகத்தி லேகமாயிருக்கின்றவர் பரமேஸ்வரர். ஏகத்தி லனேகமா யிருக்கின்றவன் ஜீவன், என வறிக. (உகஉ)

வினா.—இன்ன மூன்றுதிசைக்கு முள்ளும் புறம்பும் விளங்குவ தெதுவென்னில்?

விடை.—சீவதிசையி லுள்ளேயு மாகார மெதிர்ப்படுவதும் - ஆகாரம். ஈஸ்வர திசையில் - உள்ளேயுமறிவு யெதிர்ப்படுவதும் அறிவு. பிரம்ஹதிசையில் உள்ளேயுஞ் சச்சிதானந்தம். எதிர்ப்படுவதுஞ் சச்சிதானந்தம், எனவறிக. (உகங)

(* மஹாவாக்கியம்.)

---

* மஹாவாக்யமாவது, வேதவாக்யமென்று வுலகத்தில் வழங்குவதாதலால், மஹாவாக்ய மென்று ஏன் சொல்லவேண்டுமென்றால், மஹத் - என்பது, பெரியது,

வினா.—இன்னனுஞ் ஜீவதெரிசன மீஸ்வரதெரிசனம் பிர்ம்மதரிசன மெப்படி யென்னில்?

விடை.—அறிவு முதன்மையா யநுபூதி யுள்ளாய். மூன்றவஸ்தையிலும், விளங்குவது சீவதரிசனம். அநுபூதி முதன்மையா யறிவுள்ளாக வெளியி லெங்கும் விளங்குவது, யீஸ்வரதரிசனம். மத்தியிற் றானறிவானந்தமாய் விளங்குவது, பிர்ம்ஹதரிசன மென வறிக.()

சிறந்தது, தேஜோரூபமாயுள்ளது யாதொரு வாக்ய முண்டோ? அதுவே மஹாவாக்யமென்று சொல்லப்படும். இதற்குத் திருஷ்டாந்தம். ஓர் தேசத்தைக் காணும்பொருட்டுக் கடற்கரையில் விளக்குக்கூண்டு கட்டி யதில் - தீபம்வைத்தா லந்த தீபத்தைப் பார்த்துத் தேசத்தை யெப்படிக் கப்பற்காரன் காண்பானோ? அப்படிப்போலத், தானாகிய மோக்ஷவுலகத்தைக் காணும் பொருட்டு வேதவாக்யங்களிற் சிறந்ததாயுள்ள மஹாவாக்யமென்னும் ஞானதீபத்தை வேதத்தினுச்சியில் வைத்திருப்பதால், அந்தப்ரகாசத்தைப் பார்த்துத் தன்னிலைமையும், தன்னைமறைத்த மாயை யவித்தை முதலியவைகளி னிலைமையும், ஜீவனென்னுங் கப்பற்காரன் காணவேண்டு மாதலால், மகாவாக்யமென்று சொன்னதெனத் தாத்பர்யம். ஒருவாக்யம் போறாதோ? நான்கு வாக்ய மேன்சொல்லவேண்டு மெனின், (முதலாவது) ப்ரக்ஞானம் ப்ரம்மமென்று குருவானவ ருபதேசித்ததை மாணாக்கன், ப்ரக்ஞையாவ தெதுவென்று சங்கை செய்தபடியால், அவன் சங்கை நிவர்த்திக்கும்பொருட்டு "அகம்ப்ரம்மாஸ்மி" முதலிய மூன்றுவாக்யங்கள் விரிந்தன. அவன் சங்கை செய்யாவிடின், ஒருவாக்யமே போதுமென் றபிப்ராயம்.

வினு.—தா னறிவானந்த மென்கிறதற்கு அருத்தமெ ப்படி யென்னில்?

விடை.—விராட்டு - இரண்ய கற்பம் - மாயை - யீ ஸ்வான் - ஆக நாலுங்கடந்தது அதுவென்றுந் தானெ ன்றும் - பெயர். ஸ்தூல சூட்சும காரணம் - ஜீவன்- ஆக நாலுங்கடந்தது - அறிவென்றும், நீயென்றும்பெ யர். சத்து - சித்து - ஆனந்தம் - பரப்பிர்மம் - ஆக நா லுங்கடந்தது - ஆனந்தமென்றும் - ஆனுயென்றும் பெ யரெனவறிக. (உகரு)

வினு.—இன்னந் தானறிவானந்த மென்கிறதற் கரு த்த மெப்படி யென்னில்?

விடை.—உள்ளே தானுயிருந்த ஆனந்த மயத்தைத் தான்ருனே யறியவந்த அறிவே ஞானம். ஆகையால் தான் அறிவானந்தமென வறிக. (உகசு)

வினு.—இன்னந் தா னறிவானந்தத்திற்கு விவா மெ ப்படி யென்னில்?

விடை.—ஸ்தூலமான ஆகாரமும் - சூக்குமமான ஆ காரமும் - வியஷ்டி சமஷ்டியுங் கூட்டி ஈஸ்வரவடிவு. ஆ கலாதம் - மஹாகாரண சரீரம். நீயென்கிற துரியவடி வானசித்து போதமில்லே, விளக்கம். மூலப்பிரகிருதி ஹிதமான சொரூபந் தானுயிற்றென வறிக. (உகஎ)

வினு.—இன்னம் - அது - நீ - யானுயென்ப தெப்படி யென்னில்?

விடை.—அதுவென்பது ஆகலாதம் - நீயென்பது- அறிவு. ஆனுயென்பது - இரண்டுந் தானுத லென வறிக. (உகஅ)

வினு.—இன்னம் - மஹாவாக்கியமாவ தெப்படி யெ ன்னில்?

விடை.—தற்பத லட்சியார்த்தமாவது, சர்வமு மது வென்பது. அனுபவந் தானுயிருத்தல். த்வம்பத லட் சியார்த்தமாவது, ஆனந்தம் - நீ யென்பது. அனுபவம்- ஸ்புரணம். அசிபத லட்சியார்த்தமாவது, இந்த விர ண்டுக்கும் * நடுவணையாய்ச் சொரூபமாய் - நிறைந்து தானு யிருப்பதென வறிக. (உகக)

வினு.—இன்னம் - நாலுவாக்ய மெப்படி யென்னில்?

விடை.—முந்திய வாக்கியத்தில் தானே ஸ்புரண மென்று சொன்னுர். குரு - தோற்றுகிற நாமரூபம்- ஸ்புரணமாகுமா? வென்று கேட்டான். சீஷன்! இரண் டாம்வாக்கியத்தில், தானு யிருக்கிறபடியினுலே தோ ற்றுதலில்லை யென்று சொன்னுர். குரு! தோற்றுத வி ல்லையென்று அறிவானே னென்று கேட்டான். சீஷன்! அந்த அறிவுந் தானு யிருக்கிறதென்றூர். குரு! மூன் றும்வாக்யத்தில், அறிதலைத் தள்ளினபடியினுலே யிர ண்டு பட்டுதேயென்று கேட்டான். சீஷன்! அறிவான விருத்தாமிச மீஸ்வரபதத்திலு மாகாரமான விருத்தாமி

---

* நடுவணையாவது, இரண்டுகரையின் மத்தியி லிருப்பதாலும், போக்குவரத்தா யுள்ளவர்களுக்கு ஆ தாரமா யிருப்பதாலும், நடுவணையென்றும் - பாலமெ ன்றும் - வாராவதியென்றும் பெயர். இதுபோலத், தா னென்னும் நடுவணை; திருக்கு - திரிஸ்யமென்ன - ஜீ வேஸ் வராளென்ன - ஜீவசாட்சி யீஸ்வரசாட்சி யென் ன, இவைகளுக்கெல்லா மாதாரமாயிருப்பதால், நடுவ ணை யென்றும் - நடுநிலையென்றும் - அசிபத லட்சியார்த் த மென்றும் தாத்பர்யம்.

சஞ் சிவபதத்திலும் ஸ்புரணமே தானென் றயிக்கியஞ் சொல்லுகையால், அவிர்த்தாமிச மென்றே சொல்ல ப்படும். நாலாம் வாக்கியத்தில் மூன்றிலுள்ள விருத் தந்தள்ளி அவிர்த்தமே சர்வமென்று சொன்னது. அய மென்கிற பதந் தான்ருனே - ஸ்புரணமாகையால், சர்வ மூந் தானுகிற ஸ்புரணமே இதுவே யனுபூதி யென வறிக. (உஉ0)

வினு.—இன்னம் - வாக்யார்த்த மெப்படி யென்ருல்?

விடை.—மஹாவாக்கிய மறியு முபதேசத்தில் அது நீ யானுயென்ற பதத்தை, யதுவென்ற பதத்தையும், நீ யென்ற பதத்தையும் * செம்பிவிட்ட குளிகை போல வானுயென்ற பதமாக்கி மத்தியத்திலொருமொழியாவது, நீ-யானு-யதுவென்ற பதத்தை, நீயென்றதையு மானுயென்றதையும் - பரோட்சத்வ அபரோட்சத்துவ வுபாதியையுந் தள்ளி யதுவென்றதை ஸ்வயஞ் சைதன்னியமாய்க் கிரிகிப்பது ஒருமொழியென்றும், அறுதியுபதேசமென்றும், வேதநிச்சயார்த்தமென வறிக. (உஉக)

வினு.—இன்னம் - வாக்கியம்பிறந்த தெப்படி யென்னில்?

---

* செம்பிவிட்ட குளிகையாவது, குளிகையென்பது - மாத்திரைக்குப் பெயர். செம்பையுருக்கிக் குளிகையைப்போட்டால் - செம்பிலுள்ள களிம்பைக் குளிகையானது நீக்கித் தங்கமாக்குவதுபோல, அது - நீ யென்னுந் தத்பதம் - தவம்பதத்திலுள்ள சுத்தவாசனையை - அசிபதமென்னுங் குளிகையானது நீக்கி அன்னியமின்றித் தானே தானுகப் பிரகாசிக்கும்படி செய்யுமென்று தாத்பரியம்.

விடை.—சொரூபத்தில் முதல் ஸ்புரித்தது சித்து- இது சிவனுயிற்று. பிற்பாடு. ஆகலாத வீசனுண்டா னது. ஆகையால், கிரமப்படிக்கு அது, நீ - யானுயென் றதற்கு - அதுவென்பது ஆகலாதம், நீயென்பது - சித்து. ஆனுயென்பது - தானு யிருக்கின்ற சத்தென வறிக. (உஉஉ)

வினு —இன்னம் - பதமிரண்டாவ தெப்படி யென்னில்?

விடை.—அகமே யிதமான படியினுலே யகமில்லை; யிதமே யகமான படியினுலே யிதமில்லை; தானே யகமு மிதமு மானபடியினுலே யப்படியென்று வொன்றல்ல. ஆகையால், பதம் இரண்டுந் தானுயிருக்கிற சித்துக்கு நிரதிசயம் விளக்கமானபடியினுலே யிப்படியும் பத மிரண்டென வறிக. (உஉ௩)

வினு.—இன்னம்-பத மிரண்டென்ப தெப்படி யென்னில்?

விடை.—காட்டு - காணல், இவ்விரண்டு மொன்று. இது மத்தியம். வெளியிலெங்கு * மாகலாதவெஞ்சகம். அகமு மிதமு மில்லை; மத்தியிற் கருத்துநிற்கவேண்டும். * விருத்தத்தில் கருத்துக் கூடினுல் விஷங் கலந்ததா மென வறிக. (உஉச)

---

* ஆகலாத வெஞ்சக மாவது - ஆகலாதம் - அறிவு, வெஞ்சகம் - ஆநந்தம், எவ்விடத்தும் அறிவே வடிவாயுள்ள ஆனந்தமே ப்ரத்யட்சமாக விருக்கிறதென்று அர்த்தம்.

* விருத்தத்தில் கருத்துக்கூடினுல் விஷங்கலந்ததென்பது, தனக்கு உறவினர்போலக்காட்டிச் சத்துருவாயும் - விரோதத்தை விளைவிக்கின்றவைகளாயு மிரு

வி௵.—இன்னம் - மஹாவாக்கியத்திற் கருத்த மெப்படி யென்னில்?

விடை.—அகமிதமத்தியிற் ருணுகிய வனுபூதி விளக்கமாகப் பிரகாசிப்பது மஹாவாக்கியத்திற் குண்மை யென வறிக. (உஉ௫)

வி௵.—இன்னம் - வாக்கியம் வாக்கியாதீத மெப்படி யென்னில்?

விடை.—தான்மாத்திரமா யிருந்தமோனுதீதம் - தன்

க்கின்ற தேகேந்திரியப் பிரபஞ்ச முதலியவைகளின் வசத்தாக மனது சேருமானுல்; சப்தமுதலாகிய விஷயங்களைப் புசித்துச் சுகிக்கிற படியாலும், விஷத்தை யொருவன் புசித்தால் (௩௲) நாழிகையில் மரண மடைகின்ருன். அதுபோலப், பஞ்ச விஷயங்கள் விஷத்தை விளைவிப்ப தாதலால் விஷயமெனப் பெயர் வந்தன. அங்ஙனம் விஷமிருக்கிறதென்று ஜீவர்கள் தெரியாமல், மிகுந்த பிரியத்தோடும் புசித்தால், அவற்றிலிருக்கும் மாயாவிஷ மென்ன செய்கிறதென்ருல், அனேகயுகங்களிலும், புண்ணிய கர்மம் - பாபகர்மம் - மிஸ்ரகர்மமென்னும் மூன்று கர்மவசத்தாக்கிச் சகலமான அண்டங்களிலும் சராசர மென்னுஞ் சீவசமூகங்களில், பிறந்து இறந்து, காற்ருடி மேல்கீழ் - கீழ்மேலாக வெப்படிச் சுழலுகிறதோ? அப்படிப்போல, மனதைச் சுழலும்படியாகச் செய்கின்றமையால்; மனதைப் பிரபஞ்சவசத்திற் செலுத்தினுல் துன்பம் நேரிடுமென்றும், நிர்விஷயமான தனது யதார்த்த ஸ்வரூபத்தில் செலுத்தினுல் மேற்சொன்ன மாயாவிஷம் நாசமாகுமென்றுந் தாத்பர்யம்.

சுகத்தைக்குறித்து ஸ்புரித்த சித்து - சத்தையுமுள்ளா க்கிக்கொண்டு யெதிர்ப்பட்ட ஆகலாதத்திலடங்கி யுதித்துச் சீவேஸ்வர செகத்தாகி யெல்லாவற்றுக்கு முட்புறம்பா யுட்கருவியா யெல்லா வற்றையுந் தனுவாகக் கொண்ட அருவுருவான விருத்தியே யகமிதமாயிருந்த வுயிருக்குப் பக்குவம் வந்தவிடத்தில் ஸ்ரீமத் - சத்குருவானவர் - அறியு முபதேசமாகிற மஹாவாக்கியத்தினாலே அது - நீ - யானுயென்று, அநுக்ரகம் பண்ணினதற்கு அருத்தம். சீவேஸ்வர வுபாதிகளைச் சோதித்துக் கழிக்கலாவது, அருவே யுருவானபடியினாலே யுருவமாம், உருவமே யருவமானபடியினாலே யருவமுமாம்; அருவென்று முருவென்றுந் தனித்தனியே யில்லாதபடியினாலே யரூபா ரூபமுமாம். அருவே யுருவானபடியினா லுருவமுமல்ல; வுருவே யருவான படியினா லருவமுமல்ல, அருவமென்று முருவமென்றுந் தனித்தனியே யிருக்கிறபடியினாலே யரூபா ரூபமு மல்ல, அருவத்தி லுருவமு முருவத்தி லருவமு மில்லாதபடியினாலே யருவமானது முருவமானது மரூபா ரூபமானதும், சிவபத அருவத்தில் விருத்தி நீங்கின விளக்கம் ஈஸ்வரபத வுருவந்தி லாகாரம் நீங்கின வியாபகமே யானதென்றறிந்து செம்பிலிட்ட குளிகைபோல, வுபாதிகளை நீக்கி வியாபகமும் விளக்கமும் சமனாக வானுயென்கிற பதத்தினா லயிக்கியமாய் விளங்குவதென வறிக. இதற்குமேல் மத்தியில் ஒருமொழியாவது, நீ - யது வானுயென்கிறதைத் - நீயென்கிற விளக்கத்தையு மதுவென்கிற வியாபகத்தையும் பரோட்சா பரோட்சமாய்ப் பண்ணி, யுபாதிகளைக்கழித்து ஆனுயென்கிறதை * நீலோத்பல வாக்கியத்திற்கு யேதுவாய்த் திருக்கு சொரூபமாய் வேடதாரி வேடங் கழித்த விடத்திற் பழயவ

ளொருவ னுளப்போல, * மோன துரியனும் - நாடா ந்ததுரியனும் ஸ்வயஞ் சைதன்னியமாய்த் தாளுய்ப் போனவிடத்தில் ஸ்ரீ குருநாதனே? யித்தனையு மானது யித்தனையுந் தானல்லாதபடியினுல் "அருவுருவானந்தங் கதியெங்கே - யறிவுமுதல் வீடெங்கே" என்பது, அருவமாகியும் - உருவமாகியும் - அரூபா ரூபமுதலிய கற்பனை கடந்ததாகியும் - சர்வவியாபி யாகியும், விளங்குகின்றவர். ஸ்ரீ மத் சத்குருமூர்த்தியாதலின், அவ்விதமாயுள்ள ஸ்வரூபத்தில், அண்டாண்ட - பிண்டாண்ட - ப்ரம்மாண்ட முதலிய வனைத்துந் தேதீப்யமான வகண்டமகா தேஜோரூபமாக ப்ரகாசித்துக்கொண் டிருப்பதால், ஸ்வர்க்கலோகமுதலிய பதவியென்ன, சாலோக்யமுதலிய பதவிமுக்தியென்ன, அறிவு முதன்மையாகச் சொல்லுகிற விதேக கைவல்ய முக்தியென்ன, இவைகளெல்லாம் கர்ம - பக்தி யோகம் - ஞானமென்னும் சௌபானக்ரமத்தினுல் பரஸ்பரந் தாரதம்யமாகத் தோற்றுகின்றன வாதலானும், ஜாக்ரத் - ஸ்வப்னம்- சுழுப்தி - துரியம் - துரீயாதீதமென்னும் பஞ்சாவஸ்தைகளில், ஜாக்ரத் - முதலியமூன்றவஸ்தைகளும் சம்சாரத்திற் கண்டுண்டிருப்பனுகிய ஜீவனுக்குப் பந்தத்தைவிளைவிப்பதால், பந்தமென்றும், இதை நாசஞ்செய்வது துரியம் - துரீயாதீதமாதலா விவ்விரண்டவஸ்தைகளு மோக்ஷமென்றும், பந்தமோக்ஷமிரண்டும் ஜீவகல்பனையேயன்றி, மேற்சொன்ன அகண்டவடிவத்திற்கு இல்லை யென்றுங் கூறப்பட்டது. இதுவே யறுதியுபதேசமென்று மொருமொழியாகவும் வேதநிச்சயார்த்தம். அகத்துக் கருத்தம், அருவமே யுருவா - யுருவ

---

* மோனதுரியனும் - நாடாந்த துரியனுமாவது, ஈஸ்வர துரியமும் - ஜீவதுரியமும் என்று அர்த்தம்.

மே யருவந்தானய் விளக்கமாயிருக்கின்றது. இதத்துக் கருத்த முருவமேயருவா - யருவமே யுருவந்தானயனு பூதியாயிருக்கின்றது. மத்தியத்துக்கருத்த மருவமே யுருவா யுருவமே யருவந்தானய், விளங்குகின்றதென வறிக. (உஉசு)

வின.—அவிருத்தாமிசாயிக்கிய மெப்படியென்னில்?

விடை.—அது வென்கிற பரனுடைய சுத்தார்த்த துரியமான வியாபகமே, நீயென்கிற சீவபத சுத்தார்த்த துரியமான விளக்கமென்ற விடத்தி லந்தவியாபகமே விளக்கமாதலா லது - நீ - யானயென்று சொல்லப்பட்டது. இதுவே வாக்கியத்துக் கயிக்கியமென்றும், விருத்தா விருத்தமென்கிற விரண்டறக்கலந்து - விரண்டறக்கலந்த ஸ்புரணந் தானய்த் தான் ஸ்புரண விளக்கமாயதுவென்கிற வாகாரவிருத்தியி லதுவதுவாய் விளங்காநின்ற வியாபகவிளக்கந் தானய், "எம்பிரா னிடந்தொறு மிடந்தொறு மதுவதுவாய்த் - தம்பிரானடஞ் செயும் வகை." என்பது - எமதாசிரியரோ, எவ்வெவ் விடங்களி லெப்படி யெப்படியோ? அவ்வவ்விடங்களி லப்படியப்படியாக யாதொரு பிரம்மவஸ்துவானது விளங்குந் தன்மை;— என்கிற பாடலினருத்தப்படிக்கு விளங்குகின்றதென வறிக. (உஉஎ)

வின.—இன்னம் - வஸ்து * நிர்த்தாரணமான அனுபவமே - ஸ்வபாவமென்ப தெப்படி யென்னில்?

விடை.—இறண்டறக்கலந்த ஸ்புரணந் தானய்த் தான் ஸ்புரணவிளக்கமா யிப்படி விளங்காநின்ற சுகவிளக்கமே, சுகாவேசசொரூபமாய் விளங்காநின்ற பரமான

---

* நிர்த்தாரணமாவது, நிச்சயம் - என்று அர்த்தம்.

ந்தபதமே குருஸ்வரூபமென்றும், அதினபின்ன ஸ்வ பாவமாய் விளங்கா நின்ற விளக்கவியாபகமே சிஷ னென்றும், குருசிட வயிக்கியமே சொரூப ஸ்வபாவமெ ன்றுஞ் சொல்லப்படும். இதுவேயறுதி யுபதேச மென வறிக. (உஉஅ)

(சாதன சாத்தியம்.)

வினு.—சாதன சாத்திய மெப்படி யென்னில்?

விடை.—சொரூபத்தை யடையச் சாதனமாவது, * மணிப்பாம்புக்குச் சீவரத்தின மென்றுஞ் சிரோரத் தினமென்றும், இரண்டுவிதம். இவற்றுள், சீவரத்தின மாயிருக்கிற காலத்தி லந்தகாரமான விருட்டிற்கிடக்கி ன்றநாக மிரையெடுக்கும்போது, ரத்தினத்தைக் கக்கி வைத்து அந்த ரத்தினத்தின் பிரகாசமயமா யிருந்து கொண்டுயிரைபுசித்துப் பின் ரத்தினத்தை விழுங்கும். கக்கி யிரைபுசிக்கும்போது - அந்த ரத்தினத்தின், கண் ணயிராமல் மனது,பிரிந்துதானு லந்தரத்தினத்துக்குஅ பகரிப்புவந்து, தானும் தனக்குச் சீவரத்தினமெப்போ து பிரிந்துதோ? அப்போதே யிறந்துபோகு மாகையா லந்த நாகம் - ரத்தினத்தின்பேரிற் கண்ணுகவிருந்து புசி த்தபின்பு, ரத்தினத்தை விழுங்கி மூன்றுகாலமும் ரத் தினமயமா யிருப்பது போல, விது திருஷ்டாந்தம். இப்படிக்குத் தாஷ்டாந்தத்தில், சாதன திசையாவது, யாதொரு ஸ்ரீமத் - சத்குருகடாட்சிக்காநின்ற மஹாவா க்கிய சிந்தனமாகின்றரத்தினந் தன்னிடத்தி லிருக்கின்

---

* மணிப்பாம்பாவது, அஷ்டமா நாகங்களுக்குள் முதலாவது சாதி. மணியென்னும் ரத்தினமுண்டாகிற நாகமாதலால் - மணிப்பாம்பு என்று அர்த்தம். மற்ற ப்பாம்புக்கு மணிப்பாம்பென்று பெயர் வாராது.

றதே, யந்தச் சிந்தனமயமாக விருக்கும்போது பசிமு தலாகச் சொல்லப்பட்ட விருத்திகள் வந்த போது மந்தச் சிந்தனத்தில் மிகவுங் கண்ணு யிருந்து கொண்டு தள்ளப் படாத விருத்திகள் வரினு மவைகளை ச்சகித்து தள்ளிப்போட்டு, அந்தச் சிந்தனமயமாகவே யிருப்பதியல்பு. அப்படி யிராமல், சிந்தனம் விட்டுப்பி ரிந்தால், சிந்தனந் தன்னிட வுயிர்ப்பாதலால் சிந்தனம் பிரிந்தபோதே தானிறந்து அஞ்ஞானடியனுக யிறக்கி றதும் பிறக்கிறதுமே தொழிலாய்ப் போமாதலால், சதா சிந்தனமாத்திரமாய்ச் சேஷித்திருப்பதே சாதனம். இப்படிப்பட்ட சாதன மாவானே னென்னில்? திருஷ்டாந்தத்தில், நாகம் - ரத்தினத்தைக் கக்குகிறதும் விழுங்குகிறதுமா யிருக்கிறபடியாலுந் தாஷ்டாந்தத்தில், மறைப்பாகின்ற அக்ஞான மடுக்காமற் சிந்தனமாகிற நிலைப்பே ஞானமாக விருக்கிறபடியா விது சாதன மாயிற்று. இனிச்சாத்தியமாவது, இச்சாதனமே சாத்தியமாம். அஃதெப்படி யென்னில், திருஷ்டாந்தத்தி லிப்படிக்குக் கக்கவும் விழுங்கவுமாக விருக்கப்பட்ட ரத்தினமே? சில காலத்தின்பின் - சிரோரத்தின மாவது, தன் னினைப்பன்றியில் பிரகாசமாய்ச் சிரசி லுதையமானதுபோலத், தாஷ்டாந்தத்தில், தன்னினைப்போடுங்கூடிச் சிந்தித்த நினைவிறந்து சிந்தனமாத்திரமான சொரூபந் தானேதானுய் ஸ்வயம் பிரகாசமாய் விளங்காநின்றதே சாத்தியம். சாத்தியத்தி லனுபூதி மிகவுஞ் சுலபமாதலா, லச்சாதனத்திற் றிடமுண்டானல், சாத்தியம் வருமென வறிக. (உஉசு)

வினு.—இன்னம் - சாதனசாத்திய மெப்படி யென்னில்?

விடை.—விளக்குக்கு யிருட்டுப் பிரகாசங்கொடுத்த

துபோல, மனதிற்கு விஷயம் பிரகாசம். ஆதலால் மனதை - மனதினுற் கெடுப்பது, காரியப்படுத்திக் கெடுப்பது சாதனம், நிறைவு, ஒருமொழி சாத்தியம், சகலத்துக்கு மருத்த மொருமொழி. பின்னுந் தடையெவ்விடமோ? அவ்விடமும் ஒருமொழி பண்ணவேண்டுமென வறிக. (உகூ0)

வினு.—சாதன சாத்திய மெப்படி யென்னில்?

விடை.—சுகம் ஸ்புரித்து அறிவாகி - யது மனதாகியாகாரமாகி யறிவுங் கூடினபோது, வுடைந்து யின்பம் வெளிப்பட்ட வெக்தியில் சாதியைக்காட்டி யழிந்துபோ மிது சாதனம். ஸ்புரித்து வியாபகம் வெக்தியாய்ச் சாதியைக் காட்டு மிதுசாத்தியம். வெளியில் கண்ட ஞானவாகாசத்தைக் காட்டுஞ் சாயாபுருஷன்போல, வின்பமான * தேகவெஞ்சம் புருஷனுன வான்மாவைக் காட்டும். நானே, யறிகிறதல்லாமல், மற்றொன்றால் தன்னை யறியப்போகாது. கண்ணாடிபோல வென வறிக. (உகூக)

---

* தேகவெஞ்சகமாவது, தேகத்தினிறைந்திருக்கும் ப்ரம்மானந்தமென் றர்த்தம். தேகத்தின்கண் ப்ரம்மானந்த மிருந்தும் - ஏன் உயிர்களுக்குத் தோன்றவில்லையென்றால், தன்னிடத்துச் சுக மிருக்கிறதாக வெண்ணாமல், அன்னியத்தைச் சுகமாகநினைத்துத் தன் சுகத்தை யன்னியத்திற்குக் கொடுத்தபடியால், தன்சுகந் தனக்குத் தோன்றவில்லை. ஆதலின், தன்னையே சுகவடிவமாக வெண்ணிக் குரு சொன்னவாக்கியப்படி சாதனம்பண்ணினுல், தன் சுகந் தனக்குக் கிடைக்கு மென்றபிப்ராயம்.

வினா.—இன்னந் தன்னை யறிகிற சாதனமெப்படி யென்னில்?

விடை.—* கண்ணாடி சாதனத்திற் றன்னைப் பார்க்கிறதுபோல, விருத்தியினாலே தன்னை யறியலாம். இன்னஞ் சூரியன் சாதனத்தி லெல்லாங் கண்டதுபோல வென வறிக. (உ௯உ)

வினா.—இன்னஞ் சாதனம் பண்ணுவ தெப்படி யென்னில்?

விடை.—நீ யாரென்றார்? குரு, தேகமென்றான், சீஷன், தேகமென்று பார்த்தபோதல்லவா? யிருக்கின்றது. பின்னை யொன்றைப் பார்க்கும்போது தேகந் தெரிகிறதாவென்றார்? தெரியவில்லையென்றான். ஆகையால், நீ யறிவென்றார். இப்படியே யறிவென்று பழகின செகத்து மருபடி தோற்றுதென்றான், தோன்ற லறிவென்றார்? ஆனா லெல்லா மறிவுதானென்றான்; எல்லாமென்கிறது யெங்கே யிருக்கிறது யில்லை. யிருக்கிறது, ஒன்றுதானென்று சொன்னார். அப்படியே பார்க்க? அறிவாகவே சேஷித்து தென்றான்? அப்பா லானந்தவிளக்கத்தை யனுக்ரகம் பண்ணினாரென வறிக. (உ௯௩)

---

* கண்ணாடி சாதனமாவது, பிருதிவியம்சத்தில் ஸ்வச்சத்ரவ்யமாகிய, கண்ணாடியில் தன்முகத்தைப் பார்க்கிறதுபோல, விருத்தி யென்பது - மனோவிருத்திக் ஞானம். அல்லது ஸ்வரூபக்ஞானம் நிர்மலமாதலால், அவ்விதமாயுள்ள நிர்மலவிருத்தியில் தனது ஞானப்ரகாசம் ப்ரதிபலித்தலாலும், சூரியப்ரகாசத்தால் த்ருஸ்யவஸ்துக்கள் விளங்குவதுபோல, ஞானசூரியோ தயத்தால், சர்வவியாபகமாயுள்ள த்ருக்கு வென்னும் தனது வடிவம் விளங்குமென் றபிப்ராயம்.

வினு.—இன்னஞ் சாதன மெங்கே யென்னில்?

விடை.—மன மெவ்விடத் தெவ்விடத்திற் செல்லு கின்றதோ? அவ்வவ்விடத்திற் ருன் விளங்கப் பார்ப்ப தே சாதனமென வறிக. (உஙசு)

வினு.—இன்னஞ் சாதன மெப்படி யென்னில்?

விடை.—அறிவுதானே யாகாரமாகி யறிகிறபடியா லாகாரமில்லை. யாகலாதந் தானே யறிவாகிச் சுகத்தைத் தேடுகிறபடியா லறிவில்லை யென வறிக. (உஙரு)

வினு.—சதா அனுசந்தான மெப்படி யென்னில்?

விடை.—கிரணத்தின் வடிவஞ் சூரியன் போலத், தோணப்பட்ட செக வெக்தியெல்லாம் ஆகலாதம். அ தைப் பற்றி யெழுந்த அறிவிற் ருனிறைவது சைதன் னியமென வறிக. (உஙசா)

வினு.—இன்னம் - சதா நித்தியாப்பியாச மெதுவெ ன்னில்?

விடை.—மகாராஜனுந் தரித்திரனுஞ் சாமானியத்தி ற் சமமாயிருப்பார்கள். நாலுநாழிகை யிரண்டுநாழி கையிற் சடுதியில் விசேஷப்பட்டபோது ஸ்புரிப்பாகி ற ஞானத்தினுல் மகாராஜன் சுகத்தையடைவன். தரித் திரன் துக்கத்தையடைவான். அப்படிப்போல, அடிக் கடி ஸ்புரிப்பு மத்தியில் சைதன்னியம் விளங்கவேண்டு மென வறிக. (உஙஎ)

வினு.—இன்ன மனுசந்தான மெப்படி யென்னில்?

விடை.—சதா பூரணத்தை யடுத்து அதை விளக்க வேண்டு மென வறிக. (உஙஅ)

வினா.—இன்ன மெனதயறிகின்றோமோ? அவ்விடத் திற் றான்விளங்குவ தெப்படி யென்னில்?

விடை.—அறிவுகொண் டறிந்தா லெட்டாது. யே னென்றால், அதுவதுவா யிருக்கிறதை யெப்படியறிகி றது, அதி லிருக்கிறபடியினா லறிகின்றது, அறியப் போனா லெட்டாது. நிறைவானா லெட்டும். அதுவா யிருக்கிறதை விட்டு அன்னியமா யெப்படி யறியலாமெ ன வறிக. (உ௩௯)

வினா.—இன்னம் - உண்மை நிஷ்டையெது வென் னில்?

விடை.—தோற்றிக்கொண் டிருக்கிறபோது தானே தோன்றும லிருக்கிறது அனுபூதி யென வறிக (உ௪0)

வினா.—இன்னஞ் சகச * நிஷ்டையெப்படி யென் னில்?

விடை.—பேசிக்கொண் டிருக்கிற போது தானே தோற்றரவு மில்லாம லிருக்கிறது சகசானுபவ மென் றார்? குரு! அது - அஞ்ஞான மாயிற்றென்றான் சீடன். உனக்கு அறிவுபிறந்தபோது, முன்னிருந்த அனுபவ மஞ்ஞான மாயிற்று. அனுபூதியா யிருக்கும்போது, வொருபக்கஞ் சாஞ்சலவிருத்தியு மயமுமாமெனவறிக.

வினா.—இன்னம் - விலட்சணத்திலுஞ் சலட்சணத் திலுந் தானாதல் நிஷ்டை யெப்படி யென்னில்?

---

* நிஷ்டையாவது - நிஷ்ட்ட:—என்னும் கிரந் தமொழி, தமிழில் நிஷ்டையென்றுவந்தது. நிஷ்டை இருக்கிறது. எதிலிருக்கிற தென்றால், தானாகிய வஸ் துவில் மனதைநிறுத்தி யன்னியமின்றித் தானே தானாக நிலைத்திருக்க வேண்டுமென்று அபிப்ராயம்.

விடை.—தத்துவசுத்தியா யாத்மசுத்தியாய்ச் சிவசுத்தியாய், நிஷ்டைபுரிந்தது விலட்சணம். சலட்சணமாது, நடுநிலையின்கண் சுவாமிகள் திருவடியில் நிஷ்டை நிலைநிற்பது சிந்திப்பதென் வறிக. (உசஉ)

வின.—எப்போதுந் தானுயிருக்கிற சமாதியென்பதெப்படி யென்னில்?

விடை.—ஆயினவென்றபதந் தானுயிருத்தல். இஃதல்ல வென்று சொல்லும்போது யெல்லாம் நீங்கின நிரதிசய மிச்சமா யெல்லாவற்றிலுந் தானு யிருக்கிறபடியினுலே யெல்லாமில்லை, இதுவே * சமாதி யென வறிக. (உசங)

வின.—இன்னம் - பக்குவம் வந்தமட்டுந் தன்னைத் தெரிவ தெப்படியென்னில்?

விடை.—பாவத்தி லொரு ரத்தினந் தோன்றிற்று.

---

* சமாதியாவது, தேகேந்திரியப் பிரபஞ்சமுதலியவைகளை யானெனதென் றபிமானிப்பவன் ஜீவனுதலினுனும், ஜீவத்வ மிருக்கிறபரியந்தம் தேகம் வருமாதலானும், சப்தமுதலிய விஷயங்களை மனதிலும், மனமுதலாகிய கரணங்களைச் சீவனிலும், சீவனையறிவிலும் லயம்பண்ணுமிடத்துப், பிரத்யகான்மா வுதயமாகும், ஆகவே - சச்சிதானந்த லக்ஷணம் விளங்கும். அவ்வாறு விளங்குகின்ற சுத்த விருத்திகளைத் தனது வியாபகத்தி லயம்பண்ணுங்கால், மீண்டும் வரும். அப்படி வருமானுல், கிஞ்சிற்றும் வராமல் தன்னிடத்தி னிறுத்தித்தானுக அமைதிபெற்றிருப்பதே சமாதியென்று அர்த்தம். இதைவிரிக்கிற் பெருகுமாதலின், சுருக்கமாகச் சொன்னதென் றறிக.

அந்த ரத்தினந் தோன்றுததற்குமுன்னே தானிருந்தும், ரத்தினமுந் தெரியாவிட்டா லது அக்ஞானம். ரத்தின மாகாரமென்று தெரிந்தால், முன்னிருந்தது அறிவு. ரத்தின மறிவென்றுதெரிந்தால் முன்னிருந்தது, ஆகலாதம், ரத்தினமாகலாதமாய்த் தெரிந்தால், முன்னிருந்தது தானெனவறிக. (உசச)

வின.—இன்னந் தமோமயமாவதும், விஷயமயமாவதுங் கேவலமயமாவது முண்மைவிளங்குவது மெப்படியென்னில்?

விடை.—தானயிருக்கிறபோது ஸ்புரிப்பான வுதையத்தில் தன்னைவிட்டு மயப்பட்டால், தமோமயமாம். தப்பினற் கீழே விஷயத்திற்சென்றால் விஷயமயமாம். தப்பினல் விஷயமயமா யிருந்தபடியே நித்திரையிற் கொண்டுபோனல் கேவலமயமாம். உண்மை யெப்படி யென்னில்? சங்கற்பவிகற்பந் தள்ளி நிருவிகற்பத்திற் றானயிருந்து ஸ்புரிக்கத் தன்னை விளக்கும், இப்படி நவநவமாய் விளங்குகிற படியினலே ஸ்புரிப்பதிற் றன்னைப்பார்த்தால் பரமசுகமாம். தன்னைப் பாராவிடில், உலக மயமாமென வறிக. (உசரு)

வின—இன்னஞ் * சம்ஸ்காரமே சாட்சாத்காரமென்ப தெப்படி யென்னில்?

விடை.—சமஸ்த காரியத்திலும் சம்ஸ்கார மேற்றினதற்குத் தகுந்த சாட்சாத்காரம் வருமென வறிக. (உசகூ)

வின.—இன்னஞ் சொரூபபாவனைக்குக் காரண மெதுவென்னில்?

விடை.—ஏகாக்ர சித்தமே காரணமென வறிக. ()

வினு.—இன்னஞ் சித்தத்தைச் சோதிக்கிற * அடை வெப்படி யென்னில்?

விடை.—அந்தக்கரணத்தை விஷயத்திற் பற்றுவைக்கிறதுபோலப், பிரம்மத்திற் பற்று வைக்கின்றதென வறிக. (உ௪அ)

வினு.—இன்ன மனுபவமாய்த் தோன்றப்படுவானேனென்னில்?

விடை.—நிஷ்டையிலிருந்து தியானம்பண்ணுமிடத்து, அறிவு ஆகலாத வசப்படு மப்போ நிஷ்டையை விட்டு மறந்துபோனேமென்று விசனப்படு மது தன்மயம். அறிவு தனியேநில்லாம லறிவை, வியாபக முழுங்கிக்கொள்ளுமென வறிக. (உ௪௯)

வினு.—சகலவுயிருந் தியானமுதலான சிந்தனை பண்ணும்போது மறைப்பு வருவானேனென்னில்?

விடை.—சிந்தனை பண்ணுமுன்னந் தானுயிருக்கிறது. சிந்தனை, தன்னை மறக்கும். உடனே யாகலாதஞ் சிந்தனையை விழுங்கித் தன்வசம் பண்ணிக் கொள்ளுமென வறிக. (உ௫0)

வினு.—ஆகாரத்தைக் கனைப்ப தெப்படியென்னில்?

விடை.—பாவத்தி லாகாரமுண்டே? யதையறிகிறதுண்டே? யது வின்பம். அந்த யின்பம் விளங்கு கின்றது, தானுகிறது. இதைக்கொண்டு வெளியி லாகாரத்தைக் கனைக்கவேண்டுமென வறிக. (உ௫௧)

வினு.—சாதன சாத்தியத்தில் - பளுவு சுளுவாவதெதுவென்னில்?

விடை.—சாதனத்தி லுள்ளும் வெளியுஞ் சுளுவு,

---

* அடைவாவது, மார்க்கம் - வழி.

மத்தியிற் போதம் நிலைக்கிறது வருத்தம், சாத்தியத்தில் மத்தியந்தான் சுளுவு, உள்ளும் வெளியும் வருத்தமென வறிக. (உருஉ)

வினு.—இன்னங் - குருசொன்ன சிந்தனை யெப்ப வுதவவேண்டு மென்னில்?

விடை.—சதா யிருக்கவேண்டும், அப்படி யிராமற் போயிற்று, சகலவிவகாரமும் பண்ணும்போது தானு யிருக்கிற விவகாரம் விட்டால் ஸ்புரணம் வரும். அப் போவாகிலும், சிந்தனை யுதவவேண்டுமென வறிக. ()

(சச்சிதானந்தாவரணம்.)

வினு—சச்சிதானந் தாவரண நிவர்த்தி யெப்படியென்னில்?

விடை.—ஆனந்தமே சத்தாகையால், சத்தாவரண நிவர்த்தி. யானந்தமே தானுய் நித்தியமாய் விளங்குகையே, சித்தாவரண நிவர்த்தி. ஆனந்தந் தானுய்விளங்குகிறதே பூரணமாகையா லானந் தாவரண நிவர்த்தி யென வறிக. (உருச)

வினு.—இன்ன - மவஸ்தைகளிலே யெது யிருக்கலாம், எது யிருக்கப்போகா தென்னில்?

விடை.—சாக்ரத்தி லாகார மிருக்கப்போகாது சத்திருக்கவேண்டும். சொற்பனத்தி லறியாமை யிருக்கப்போகாது, சித்திருக்கவேண்டும் சுழுப்தியி லறி விருக்கப்போகாது, ஆனந்த மிருக்கவேண்டு மென வறிக.()

வினு—இன்ன - மவஸ்தையிற் சொரூபந் திரிவாயிருப்ப தெப்படி யென்னில்?

விடை.—சுழுப்தியி லறியாமைபோலே யிருந்தது

சத்து. அறியாமையான சத்தையு மானந்தத்தையும் விளக்கிக்கொண்டிருந்தது சித்து. சொற்பனத்தி லாகாரமானது சத்து. அந்த ஆகார மானந்தமா விருக்கிறதென்று விளங்கினது சித்து. சாக்ரத்தி லாகாரமா யிருக்கிறது சத்து. அதை யானந்தமா யிருக்கிறதென்று கண்டது சித்தென வறிக. (௨௫௬)

வினா.—இன்னம் - * அஸ்தி பாதிப் பிரியம் விளங்குவதெப்படி யென்னில்?

விடை.—ஒருவஸ்துவுக்குப் பளபளப்பு மறிதலு மில்லாமல் விளங்காது. அறிதலுக்கு யிருக்கிறது பளபளப்பு இல்லாமல் விளங்காது, பளபளப்புக்கு அறிதலாகிற விளக்கமு மிருப்பு மில்லாமல் விளங்காது, பளபளப்பான விளக்கத்துக்குத் தானில்லாவிட்டால், விளங்காதென வறிக. (௨௫௭)

வினா.—இன்னஞ் - சச்சிதானந் தாவரண மெதுவென்னில்?

விடை.—தன்னிலிருக்கிற வனுபூதி தோன்றாதது, சித்தாவரணமான விருத்தி. தன்னிலிருந்த அறிவு தோன்றாதது, ஆனந்தாவரணமான மயத்துவம். அறிவையும் அறியாமையையும், பாவம் பண்ணுவது சத்தாவரணமான ஆகாரமென வறிக. (௨௫௮)

(தேகமில்லை யென்பது)

வினா.—தேகமில்லையென்ப தெப்படி யென்னில்?

---

* அஸ்தி பாதிப்பிரியமாவது, அஸ்தி - யிருக்கிறது, சத்து. பாதி - பிரகாசிக்கின்றது, சித்து. ப்ரியம் - தனக்குத்தானே சுகமாயிருக்கிறது, ஆநந்தம். என்றர்த்தம்.

விடை.—முன்னே தேகந் தோன்றிற்ரு? யில்லை. யிப்போது தோற்றுகிற தென்ருல்தானே தோற்றுது- தேகந் தோற்ருததற்குமுன்னே, தானிருக்கிருனே? வில்லையோ? இருக்கிருன் தேகமில்லையே; தேகமானதுந் தான்ருனே யாகையால், தேகமில்லையென வறிக. ()

வினு.—இன்னந் தேகமில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—புசிப்பதுந் தூங்குவதும், க்ஷவரம்பண்ணுவதும், ஸ்நானம் பண்ணுவதும், அலங்காரம்பண்ணுவதுமுதல் சவுக்கியமென்று தோன்றுவதெல்லாந் தன்பிரியமென்று விலட்சணப்பட்டால் தேக மில்லையென வறிக. (௨௬௦)

வினு.—இன்னந் தேகமில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—தேகந் தானுயிருக்கும். அறிகிறதிற் ருன் விளங்கினுல், தேகமில்லையென வறிக. (௨௬௧)

வினு.—இன்னந் தேகமில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—எல்லாக் கருத்துஞ்சேர்ந் துள்நிற்குமென்று சொல்லுமிடத்துத் தேகமில்லை; போதமில்லை, அறியாமையில்லை, நீங்கினுல் தேகமென்று வருகின்றது- அதிலுந் தான் விளங்கினுல் தேகமில்லையென வறிக. ()

வினு.—தேக த்ரயமுஞ் சகலமுமில்லாமல் எல்லாந் தானுய்விளங்குவ தெப்படி யென்னில்?

விடை.—ஸ்தூல சூக்கும காரணத்தைப் போக்கடிக்கக் கட்டையை அக்கினியென்று பார்த்தால் கட்டையிருக்க அக்கினியா யெப்படித் தோன்றி விளங்குகிற

தோ? அப்படிப்போல, விருக்கிறதைப் பார்த்தால், ஸ்தூலமில்லை. தோற்றரவாய்ப் பார்த்தால் சூட்சுமமில்லை. பலமாய்ப் பார்த்தால் காரணமில்லை. துரியவிளக்கந் தானுய்ச் சகலத்திலு மொருமொழியாய் ஸ்தூலத்தில் விளங்குகிறதென வறிக. (உசுரு)

வினு.—மூன்றுதேகமாவ தெது? அவைகளில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—தோற்றல் ஆகாரம், தோன்ற லறிவு, தோன்ருமை யறியாமை. தோற்றாவிற் றுரியன்விளங்கினுல் மூன்றுதேகமுமில்லாமல் தான்விளங்கிப் போமென வறிக. (உசுசு)

வினு.—இன்னம் - ஆகாரமு மறிவு மில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—தானிருந் தல்லவா? அறிய வருகின்றது. அப்பவல்லவா? ஆகாரமு மறிவு மில்லையென வறிக. ()

வினு.—இன்ன மெல்லா மில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—எல்லாவற்றிலுங் * தன் முகத்தைக்கண்டா லெல்லா மில்லையென வறிக. (உசுசு)

---

* தன்முகமாவது, தன்னறிவென்றர்த்தம். அஃதாவது, முகம் - பிம்பம், கண்ணுடியிற் றேற்றுகிற ரூபம் ப்ரதி பிம்பம். கண்ணுடியை யுற்றுப்பார்த்தால், ப்ரதி பிம்பந்தோற்றுது. இதுபோல, அறிவு - பிம்பம், தேகேந்திரிய ப்ரபஞ்சம் ப்ரதி பிம்பம். ஆதலின், தானுகிய அறிவென்னுங் கண்ணுடியில் - தன்னையுற்றுப்பார்த்தால், தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய ப்ரதிபிம்பங்கள் தோற்றுதென்று அபிப்ராயம்.

வினு.—இன்னம் - ஆகாரமு மறிவு மறியாமையுங் கெடுவ தெப்படி யென்னில்?

விடை.—சுழுப்தியினுடைய கேவலா னந்தத்தைச் சாக்ரத்திற் கொடுத்து ஆகாரத்தைக் கெடுத்துச் சந்தைவிளக்கிச் சாக்ர வாகாரத்திலிருந்த சொற்பனவறிவைச் சுழுப்தியிற் கொடுத்து மயத்தைக் கெடுத்துச் சித்தைவிளக்கினு, லாகாரமு மறிவு மறியாமையுங் கெட்டுத் தானே விளக்க வியாபக மாமென வறிக. (உசுஎ)

வினு.—இன்ன மஞ்ஞானமு மறிவு மாகாரமுங் கெட்ட தெப்படி யென்னில்?

விடை.—அறிவு தானுகாரமுமா யிருந்தது மஞ்ஞானமுமா யிருந்ததுமென்று அறிவையறிந்து வியாபகத்துக்குத் தான் விளக்கமானுல், மூன்றுங் கெடுமென வறிக. (உசுஅ)

வினு.—இன்ன - மாகாரமு மறிவு மஞ்ஞானமுந் துவிதக்காட்சியு மில்லையென்ப தெப்படியென்னில்?

விடை.—அறிவு தானு யிருக்கிறபடியினுலே தேகமில்லை. அந்த அறிவி லனுபூதி யிருக்கிறபடியினுலே, யறிவில்லை; யந்த அனுபூதி தானு யிருக்கிறபடியினுலே யஞ்ஞானமில்லை, பிராரத்துவப் புசிப்புக்குப் பிரபஞ்சமிருந்துந் துவிதமில்லை, சித்தமாகிற விளக்க மிருக்கிறபடியினுலே, நித்திரையு மல்லவென வறிக. (உசுகூ)

வினு.—இன்ன மவஸ்தை, புலன், வினை, யிம்மூன்று மில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை.—ஸ்வயஞ்சத்துத் தானுயிருந்து, தானே விளக்கமான படியினுலே ஸ்தூலமாயிருந்துஞ் ஸ்தூல மி

ல்லை, நிரதிசயந் தானுயிருந்து ஸ்வயஞ்சித்து விளக்கமா ன படியினுலே சூட்சுமமாயிருந்துஞ் சூட்சும மில்லை; ஸ்வயஞ்சித்துத், தானுயிருந்து நிரதிசயம், விளக்கமான படியினுலே காரணமாயிருந்துங் காரண மில்லையென வறிக. (உஎ0)

வினு.—இன்னம் - விஷயங் களைவ தெப்படி யென் னில்.

விடை.—ஸ்புரிக்கிறபோது வியாபகத்தி லிருந்து ஸ் புரிக்கிறபடியினுலே யப்படிப் பூரணத்தைக் கொடுத்தா ல், விஷயங் களையுமென வறிக. (உஎக)

வினு.—இன்ன மாகாரமும் விருத்தியு மயமும் போ வதெப்படி யென்னில்?

விடை.—நித்தியம் பிரமம். அநித்தியஞ் செகமெ ன்று மத்தியில் விவேகம் பசுவிற்படும். * பசுவிற் சை தன்னியம் விளங்கினுல், மூன்றுங்கெட்டு மூன்று மொ ன்றுமென வறிக. (உஎஉ)

வினு.—இன்னம் - சர்வமு மில்லை, சர்வத்தினுல்வரா நின்ற வேதையு மில்லையென்ப தெப்படியென்னில்?

விடை.—சாக்ரத்துக்குஞ் சொற்பனத் துக்குஞ் சு ழுப்தியான காரணம் நடுவைப்பிடித்து யிருபக்கமும்

---

* பசுவிலென்பது, ஜீவனிலென்றர்த்தம். ஜீவ னைப் பசுவென்று யேன் சொல்லவேண்டுமெனின்? பா சமாவது, கயிறு. கயிற்ருற் பசு வெப்படிக் கட்டப்ப டுகிறதோ? அப்படிப்போலத், தேகேந்திரிய ப்ரபஞ்ச மென்னும் - பாசத்தால் - அல்லது, ஆசையாகிய கயிற் ருல், கட்டுண்டிருப்பவன் ஜீவனுதலின், பசு வென்று சொன்னதெனத் தாத்பர்யம்.

விளங்கினால், சர்வமு மில்லை. * வேதையுமில்லை யெ
ன வறிக. (உஎ௩)

வினு.—இன்னஞ் சர்வமு மில்லையென்ப தெப்படி
யென்றால்?

விடை.—அப்படி யப்படித் தானுயிருக்கிறது வெ
ன்றான படியினாலே, சர்வமு மில்லையென வறிக.(உஎச)

வினு.—இன்னஞ் - சர்வமு மில்லையென்ப தெ
யென்னில்?

விடை.—சர்வமானது போதம், போதத்தில் நிறைந்
தால் சர்வமு மில்லை, சர்வமுமான போதமு மில்லை.
யென வறிக. (உஎரு)

வினு.—இன்னம் - இச்சாஞானக் கிரியாசக்தி யில்லை
யென்ப தெப்படி யென்னில்?

விடை.—கிரிகையுடைய சத்தி கிரிகை பண்ணச்சே
கிரிகையில்லை, தானே? ஞானசத்தி யறியவந்த விடத்து
ஞானமில்லை தானே?யிச்சாசக்தி யிச்சைபண்ணும்போ
து யிச்சையில்லை - தானே? இது நிச அனுபவ மென
வறிக. (உஎசு)

வினு.—இன்னம் - விஷய மில்லாமற் றான்விளங்க
வேண்டிய தெப்படி யென்னில்?

விடை.—விஷயந் தானுயிருக்க விஷயம் பொய்யெ
ன்றுந் தான் மெய்யென்றும், போதங்கொண் டறியவே
ண்டிய தில்லை, தான் விளங்க விஷயம் பொய்யாய்ப்
போமென வறிக. (உஎஎ)

---

* வேதையாவது, தேகேந்திரிய ப்ராஞ்சமுதலி
யவைகளால் விளையுந்துன்பமென் றர்த்தம்.

வினு.—நேதிபண்ண லெப்படி யென்னில்?

விடை.—ஆகாரந் தானயிருந்தது நினைப்பென்றறிந் தா லாகாரம் போயிற்று, நினைப்புத்தானயிற்று. நினை ப்பாயிருந்தது ஞானமென் றறிந்தால், நினைப்புப் போ யிற்று, ஞானந்தாஞ யிற்று. ஞானமாயிருந்தது ஆ னந்தமென்றறிந்தால், ஞானம் போயிற்று, ஆனந்தந் னயிற்று; ஆனந்தமாயிருந்தது துரியமென் றறிந்தா ளக்கந்தானயிற்றென வறிக. (உஎஅ)

வினு.—இன்னம் - நேதிபண்ண லெப்படியென்னில்?

விடை—ஆகாரஞ் சுகமென் றறிந்ததை நினைப்பென் றறிந்தால், நினைப்புச் சுகமாயிற்று. ஞானந் தானினைக்க வந்துதென்றறிந்தால், ஞானந்தான் சுகமாயிற்று; ஆன ந்தந் தானறியவந்துதென் றறிந்தா லானந்தந்தான் சுக மாயிற்று; துரியந் தானனந்திக்க வந்துதென் றறிந்தா ல், துரியந் தான் சுகமாயிற்றென வறிக. (உஎகூ)

வினு.—இன்னம் - நேதிபண்ணச் சொரூபானுபவம் வருவதெப்படி யென்னில்?

விடை.—நினைப்பென்றறிந்தால் ஸ்தூலமில்லை; யறி வென்றறிந்தால். நினைப்பில்லை, ஆனந்தமென் றறிந் தால் - அறிவில்லை; அந்த ஆனந்தமயத்துவம் விடும்படி சமாதியைவிட்டு நித்திரையைவிட்டுப் புசித்தலை விட்டு விவகாரமயமா யிருந்ததைவிட்டு; ஆகநாலும் நீங்கின போது, ஆகாரந்தோற்ருமல் வியாபக ஸ்புரணமானல், அது துரியம். அந்த வியாபகவிளக்கந் தானயிருக்கிற து சொரூபமென வறிக. (உஅ0)

வினு.—இன்னந் - தோற்றுவதெல்லாம் வியாபக வி ளக்கந் தாஞ யிருக்குமென்பதெப்படி யென்னில்?

விடை.—ஸ்தூலமா யிருந்தால், ஸ்தூலந் தோற்றும் தோற்ற லென்று பார்த்தால், ஸ்தூலம் போயிற்று, தோற்றல் தானாயிற்று, மறுபடியும் ஸ்தூலந்தோற்றும் என்தோற்றுது; பலங்கருத்தானபடியால் தோற்றுது. தோற்றல் பலமென்றுபார்த்தால் தோற்றல் போயிற்று; மயம் நீங்கிப் பலந்தானாயிற்று, துரியமென்று பார்த்தால் - பலமும் துரியமும் தானாயிற்று, தோற்றுவதெல்லாம் பலமுந் துரியமுந் தானாய் விளங்குவதென வறிக. (உஅக)

வினா.—இன்னம் - தேகத்திரயம் நீங்குவ தெப்படி யென்னில்?

விடை.—அறிவென்று சிந்திக்க ஆகாரம் நீங்கி யறிவு விலட்சணப்படும். அப்படியேயிராமல் மறுபடியுந்தேகமாம். அறிவு தான் ஸ்தூலமென்றுகண்டும் அறிவுக்கு * மூலாவித்தை யிருக்கிறபடியினாலே, யப்பவும் ஸ்தூலம்போகாது. துரியவறிவி லாகலாதம் வெளிப்பட்டால் ஆகாரமும் - அறிவும் - இச்சையும் - விடும். ஆகாரத்திற் ஸ்ரேஷதிருஷ்டிவந்தா லனுபூதி வெளியாகு மென வறிக. (உஅஉ)

வினா.—சர்வமான ஞானத்தை நீங்கிச் சொரூபத்தை யறியலாமோ வென்னில்?

விடை.—மரக்காவில் முன்னிருந்ததைக் கொட்டிப் போட்டு மற்றொன்றளக்கிறது போல, நிறைவாகிய சமத்துவமான படியினாலே, மனோவாக்குக் காயங்களாயிருக்கிறதை நீக்கி யறியப்போகாதென வறிக. (உஅ௩)

---

* மூலாவித்தையாவது, த்ருஸ்யப் பிரபஞ்சமுதலியவைகளுக்குக் காரணமாயுள்ள மூலாஞ்ஞானமென்றர்த்தம்.

(பிரகிருதிபுருஷன்.)

வினா.—பிரகிருதி புருஷனுவ தெதுவென்னில்?

விடை.—பஞ்ச தன்மாத்திரையை விசாரிக்கு மிடத்து அக்ஞானமுந் தன்மாத்திரையுஞ் சேஷித்தது. அதிலே, சத்தம் - க, அசைவு - க, ரூபம் - க, மதுரம் - க, வாசனை - க, ஆக யிந்த ஐந்தும் பிரியாமல் ஒன்றாய் விளங்குவது ஆகலாதம். இதுதெரியாதது அக்ஞானம் இவ்வஞ்ஞானத்துடனே கூடினது சித்து. இந்தவிரண்டுங்கூடினது தன் ஸ்புரிப்பென்று கண்டால், விளக்கந் தோன்றும னின்றால் * பிரகிருதியாயிற்று. சித்தான அறிவே புருஷன். நிரதிசயமே பிரகிருதி. இந்த விரண்டுந் தெரியாவிடில், இதுவே காரிய காரணமாகுமென வறிக. (உஅச)

(வியாபகம்.)

வினா.—இன்னம் - வியாபகம் பண்ணுகிற தெப்படியென்னில்?

விடை.—ஸ்தூலமுதற் றன்மாத்திரை வரைக்கும் ஒன்றைப் பார்க்கிறபோது வொன்றில்லை. பார்க்கின்றதானிருக்கிறதே விளக்க மவைகளில்லை. யெங்குமாயிருக்கிற விளக்கமும் நிறைந்திருக்கிற பூர்ணமும், உணர்

---

* பிரகிருதி - காரணம், புருஷன் - காரியம், இவ்விரண்டி னிலைமையைத் தனது ஞானனுபவத்தாற் றெரிந்தால் காரணகாரியமில்லை. தெரியாவிடின், காரணமான பிரகிருதியின் வசத்தாகிக் காரியமான ஜீவப்பிராந்தி வருமென்றும், காரணகாரிய ரகிதமான தனது ஸ்வரூப மெப்போது தர்சனமாயிற்றோ? அப்போது காரணகாரியந் தனக்கில்லையென்றுந் தாத்பர்யம்.

விற் காண்பது, அனுபூதியிற் பூர்ணமான சமமென வறிக. (உஅரு)

(அத்தியாத்மப் பிரளயப் பெருங்கற்பம்.)

வினு.—* அத்யாத்ம ப்ரளயமான பெருங்கற்ப மெதுவென்னில்?

விடை.—அசுத்தம் நீங்கிச் சுத்தத்தில் ஏககாலத்தில் மயத்துவநீக்கமு மறிதல் விடுதலுமான வனுபூதி குளமும் நீரும்போல வினிது விளங்கிடுமென வறிக. ()

---

* அத்தியாத்மமாவது, ஆத்மநீதி யத்யாத்மம், அஃதாவது,தானாகிய ஆத்ம நிஸ்சயத்தைத் தெரிவிப்பது வேதாந்தமாதலால், வேதாந்த நூலுக்கு அத்தியாத்ம சாஸ்த்ரமென்று பெயர். அத்தியாத்ம க்ஞானமாவது, ஆத்மக்ஞானம் - அல்லது ப்ரம்ம க்ஞானமென்றர்த்தம். ஆகாசத்தை மேகங்கள் மூடினகாலத்துப் பெருங்காற்றுண்டாகி மேகங்களையடித்து விலக்கினால், ஆகாசமெப்படி நிர்மலமாயிருக்குமோ? அப்படிப்போல, ப்ராளயப்பெருங்கற்பமாவது, நித்யப்ராளயம் - யுகப்ராளயம் - மன்வந்தாப்ராளயம் - அவாந்தாப்ராளயம் - ப்ராம்மா தினப்ராளயம் - பிரம்மப்ராளயம் - விஷ்ணுப்ராளயம்- ருத்ரப்ராளயம் - ப்ரகிருதிப்ராளயம்- அத்யந்தப்ராளயம்- அல்லது, சர்வசங்கார ப்ராளயமென்னு மேகங்கள் - சிதாகாசத்தை மூடிக்கொண்டிருப்பதால்; ஞானேதயமென்னும் பெருங்காற்றுண்டான காலத்து, மேற்சொல்லிய அசுத்தமான ப்ராளயங்கள் நீங்குமெனவும், நீங்கவே, குளமு நீரும் அபேதமாயிருப்பது போலச், சுத்தாசுத்த மிரண்டுந் தனக்கபேதமாயிருப்பதால், அவ்விதமான ஸ்வானுபூதி நன்றாக ப்ரகாசிக்குமெனவுந் தாத்பர்யம்.

(அன்வயவ்யதிரேகம்.)

வினு.—அன்வய வ்யதிரேகமாவ தெதுவென்னில்?

விடை.—தேகந் தானுயிருந்தது அன்வயம், தோற்றல் - தானுனபோது - ஸ்தூலம் வியதிரேகம், சூக்குமம் - அன்வயம், பலந தானுனபோது சூக்குமம் வியதிரேகம், காரணமான பலம் - அன்வயம், விளக்கம்- தானுனபோது காரணம் வியதிரேகம், பலவிளக்கந் தானுனது அன்வயமெனவறிக. (௨அஎ)

(லட்சணையெப்படி யென்னில்)

வினு.—லட்சணை யெப்படி என்னில்?

விடை.—விஷயத்தை விட்டு அறிவு விலட்சணப்படுவது விட்டலக்கணை. அறிவு - ஆகலாதத்தை விடாதிருப்பது, விடாதலக்கணை. வியாபகமும் - விளக்கமும் பரோட்சாபரோட்சத்தில் விட்டாலுந் தான் விடாதிருப்பது, விட்டுவிடாத லட்சணையென வறிக. ()

வினு.—இன்னம் - லட்சணையெப்படி யென்னில்?

விடை.—சத்துமயஞ் சித்து மயம் விட்டது. சித்து மயம் ஆனந்தமயம் விடாதது, சித்து ஆக்லாதத்தை விடாதது. விட்டும் விடாததாவது, விளக்கமும் வியாபகமும் பரோட்சாபரோட்சத்துவம் விட்டாலுந் தான் விடாதிருக்குமென வறிக. (௨அகூ)

(எதிரில்லாதது)

வினு.—எதிரில்லாத யுக்தியெப்படியென்னில்?

விடை.—எதிரே ஒரு சுவரைவைத்து அதையதையாகாசபாவனையாக அணுவணுவா யணுவுக்கும் ஆகாச

மே தானுகப்பார்த்தால் ஊடுருவி மேலே கீழ்ப்பக்கந் தானே யல்லாமல் எதிரில்லை, சமாதியில் எதிரில்லை; வியாபகத்தி லெதிரில்லை, தானுயிருத்தலில் எதிரில்லை, என வறிக. (உகூ0)

வினு.—இன்னம் - எதிரில்லாமல் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை.—தன்னைப் பூர்ணமாய்க்கண்டால் தன்னைவிடப்பிரபஞ்சமிராது. தன்னை வேருய்க்கண்டால் பிரபஞ்சமும் வேருய்த் தோற்றுமென வறிக. (உகூக)

(சுத்தாசுத்தம்)

வினு.—ஜீவனுக்கு அசுத்தஞ் சுத்தமாவ தெதுவென்னில்?

விடை.—*எழுபாதியுந் தானென்பது அசுத்தமென வறிக. (உகூஉ)

வினு.—ஜீவனுக்குச் சுத்தமாவதெது வென்னில்?

விடை.—உபாதி தானல்ல வென்றும், அறிவுதானென்றுஞ் சிந்தித்து, அறிவு மயமாகுதலே சுத்தமென வறிக. (உகூங)

வினு.—இந்த வறிவு உபாதி யாவானே னென்னில்?

விடை.—மயம்நீங்கி விருத்திவந்து உபாதிதோற்றுதலா லென வறிக. (உகூச)

வினு.—இனி ஈஸ்வரனுக்கு அசுத்தவுபாதியாவ தெதுவென்னில்?

---

* ஜீவனுக் கேழுபாதியாவன, ஸ்தூலம் - க, இந்திரியம் - க, காரணம் - ச, பிராணன் - க, ஆகியவேழும் ஸ்தூலமுதலிய மூன்று சரீரங்களாம்.

விடை.—சர்வேசனெனவும், சர்வக்ஞ னெனவும், சர்வாந்தர்யாமி யெனவும், சர்வகாரணனெனவும், சர்வ ஸ்திதி யெனவும், சர்வசங்காரனென்னவும், சர்வஸ்ருஷ்டியெனவும், சொல்லியவேழுங் காரண சரீரமுதலிய மூன்று சரீரங்களாதலினிது ஈஸ்வாா சுத்தவுபாதி யென வறிக. (உகரு)

வினா.—இனி யனுபவ மெப்படி என்னில்?

விடை—ஈஸ்வாாசுத்தத்தில் இருந்த வறிவுதானே சர்வத்திலு மிருந்தறிகிறதென்று அறிவாகாரமாய்ப் பார்ப்பதென வறிக. (உகசு)

வினா.—இன்னம் - ஈஸ்வானுக்குச் சுத்தமாவ தெது வென்னில்?

விடை.—இப்படி யறிவாகாரமாய்த் தோன்றுகிறது விடுபட்டு அறிவி லனுபவமயமாவது சுத்தமெனவறிக.

வினா.—இன்ன மிந்த அறிவு அனுபவமா யிருக்க, வுபாதி யாவானே னென்னில்?

விடை.—அகண்டாகாரமா யறிகின்ற காரியவுபாதியி லறிவு அனுபவமாகிற காரணவுபாதியில்லை; அகண்டாகாரமான காரியவுபாதியில்லை; இப்படிக்காரியத்திற் காரணங்கெட்டுக் காரணத்திற் காரியங்கெடுகையா லிரண்டு முபாதியாயிற்றென வறிக. (உகஅ)

வினா.—இன்னம் - பிரம்மத்திற்கு அசுத்தவுபாதி யெதுவென்னில்?

விடை.—இந்தக் காரிய காரணங்க ளிரண்டும் விடுபட்டு இரண்டுக்கு மேலாய்ப் பொதுவாய் நின்றறிகிறதென வறிக. (உகக)

வினா.—இன்ன மிது அநுபவமாயிருக்க வுபாதி யாவானே னென்னில்?

விடை.—காரியகாரணங்க ளில்லாவிட்டால் மேலாய் நின் றறியவேண்டியதில்லை, யறிகின்றபடியினால், சுத்த வுபாதி யாயிற்றென வறிக. (ந௨00)

வினா.—இன்னம் - பிர்ம்மத்துக்குச் சுத்தவுபாதி யெப்படி யென்னில்?

விடை.—காரிய காரணங்களைக்கொண்டு அறியவில்லை. தன்னைக்கொண்டு அறிந்தேனென்கிறதே சுத்தவு பாதி. இதுவு மெத்தனமில்லாமல் விட்டுப்போ மிப்படி விட்டுப்போனவிடமே யானாயென்றதென வறிக.()

வினா.—இன்னம் தத்பத லட்சியார்த்த மாவ தெது வென்னில்?

விடை.—இப்படித் தானாயிருந்த பிர்ம்மமே யது - நீ- யானாயென்றதென வறிக. (ந௨0உ)

வினா.—இனி த்வம்பத லட்சியார்த்தமாவ தெதுவென்னில்?

விடை.—போதசூனியமாய்த் தானாயிருந்ததே - நீ- யது - வானா யென்றதென வறிக. (ந௨0ந)

வினா.—இன்னந் - திரும்ப வுணரவருவானே னென்னில்?

விடை.—உணர்வைக்கொண்டு தானாகவில்லை, தன்னைக்கொண்டே யுணருகின்றது, தானானே யென வறிக. (ந௨0ச)

வினா.—அப்போ? வுணர்த்துவ தாயிற்றே யென்னில்?

விடை.—சர்வ சராசரங்களையுந் தன்னுள்ளே யொடுக்கிக்கொண்டு உணர்த்துவது தான்ருனென வறிக. ()

வினு.—ஆனு லது உணர்ச்சியாயிற்றே யென்னில்?

விடை.—எறும்புமுதல் யானையீருகத் தானுய் விளங்குகையால்; விளக்கமென்று சொல்ல, இந்த விளக்கம் நீ யென்பது, பதத்துக்கு லட்சியார்த்தமென வறிக. ()

வினு.—இன்னம் - பிர்ம்ஹபத லட்சியார்த்த மெது வென்னில்?

விடை.—இப்படி வியாபகமே விளக்கம். விளக்கமே வியாபகமாய், அயிக்கியங் கூடுதலே, பிர்ம்மபதத்துக்கு லட்சியார்த்தமென வறிக. (௩௦௭)

வினு.—தானுய் முந்தியிருப்ப தெப்படியென்னில்?

விடை.—படிக்கும்போது இன்ன வெழுத்து யினியவெழுத்து என்று தெறியாம லர்த்மதாத்திரம் எப்படித்தோன்றுகிறதோ? அப்படிப்போலச், சகல விவகாரத்திலுந் தான் முந்தியிருக்குமென வறிக. (௩௦அ)

வினு.—இன்னந் தான் முந்தவேண்டுமென்ப தெப்படியென்னில்?

விடை.—போதங்கொண்டு விவேகவிருத்தி பண்ணுவானப்படியல்ல, அது தானே முந்திச் சுகசொருபமாகவிருக்கின்றது, * ஆகாரமென்று மறிவென்றும், பகுப்பில்லாமல் - எல்லாவற்றையும் விழுங்கித் தானுயிருக்கு மிது யாருக்குந் தெரியாதென வறிக. (௩௦௯)

---

* ஆகாரம் - ப்ரபஞ்சம், அறிவு - த்ருக்கு, இவ்விரண்டும், பாலும் ஜலமும்போலக் கலந்திருப்பதால், பக்ஷிகளில் அன்னப்பக்ஷி நீரைவேருகப்பிரித்துப் பா

வினா.—இன்னந் - தான் முந்தவேண்டுமோ விளக்க முந்த வேண்டுமோ வென்னில்?

விடை.—தான் முந்தி விளக்கமுந்தி னாலுந்தானே, விளக்கமுந்தித் தான் பிந்தினாலுந் தானேயென வறிக.

வினா.—மட்டாவ தெதுவென்னில்?

விடை.—தனக்கு யெங்கெந்தமட்டில், அநுபவமோ? அந்தநிலையே நின்றுசாதிக்க வேண்டும். மேலும் போகப் போகாது, கீழேயு மிறங்கப்போகாதென வறிக.()

வினா.—இன்னம் - மட்டாவ தெதுவென்னில்?

விடை.—தடை யெவ்விடமோ? அவ்விடமே மட்டு அறிகின்றவிட மெந்தயிடமோ? அந்தயிடமே - மட்டு, அவ்விடத்திலேயே - செம்பிலிட்ட குளிகைபோல,உண்மைவிளங்கவேண்டும். மேலே போய், எட்டப்போகாதென வறிக. (ருகஉ)

வினா.—சகலத்துக்கு மர்த்தம் விளங்குவ தெப்படி யென்னில்?

லைச்சாப்பிடுவதுபோல, மனிதர்களில் - அனேக ஜன்ம புண்யபரிபாகமமைந்த பரிசுத்தாத்மாக்கள், ப்ரபஞ்சத்தையும் அறிவையும் வேறாகப்பிரித் துணர்ந்தாலும், சுழுப்தி யவஸ்தையில், அறிவை யானந்தம் விழுங்குகிறபடியால், குருவினது பரிபூர்ண கடாக்ஷ வீக்ஷண்யம் பெற்று ஆனந்தாதீதமானவர்களுக்கே சுழுப்தி ரகஸ்யந்தெரியும். சுழுப்திரகஸ்யமாவது, தானே தானாயிருக்கும் ஸ்வாநுபவமாதலானும் ஸ்வாநுபவத்தில் அறிவறியாமை பேதங்களில்லாமையாலும், தன்னனுபவத்தை யுணர்ந்தவர்களுக் கிந்தவுண்மைதெரியு மன்றி, மற்றவர்களுக்குத் தெரியாதென்று தாத்பர்யம்.

விடை.—எதைக் கேட்டாலு மெதைப்பார்த்தாலும் சாஸ்திரத்தி லேதுசொன்னாலும் மேலாவது,கீழாவது, யேதாகிலுந் தன்கண் விடாம லிரண்டும் விளங்க வறிந் தாற்போதமல்ல. சகலத்துக்கு மர்த்தஞ் சரிப்படுமெ ன வறிக. (௫கங)

வினா.—இன்னந் தோன்றாத அர்த்தங்கள் தோன் றுவ தெப்படியென்னில்?

விடை.— * நித்திரைக்குப் போகும்போது ஆகலாத மாய்ப் போகின்றது, முழிக்கின்ற போது ஆகலாதமா ய் முழிக்கின்றது, அவ்விடங் குரு சொரூபமான படியி னாலே யந்தவிடத்திற் றனக்குத் தோன்றாத அர்த்தங்க ளை நின்று விசாரித்தால், வெளியாமென வறிக. (௫கச)

---

* நித்திரைக்கும் போகும்போதென்பது, மன து - சாக்ராவஸ்தையிற் பலவ்யாபாரஞ்செய்து, சுகமில் லாமையின், சுகத்தைவிரும்பிச் சுழுப்தி யவஸ்தைக்கு ப் போகின்றது. சுழுப்தியவஸ்தையி லிருந்து விழிக் கும்போது, விஷயசுகத்தைவிரும்பி யானந்தமாக வெ ளிப்படுகின்றது. இப்படிச்சொல்லிய சகலகேவல மிர ண்டுந் தோன்றி விளங்கி மறைகின்றவிடந் துரியமாத லானும், துரியமே, மத்யகதமாகியும், ப்ரத்யு கான்மா வாகியும் விளங்குகின்ற குருஸ்வரூபமாதலானும், அவ் விதமாயுள்ள குருஸ்வரூபமே அறிவுக்கறிவா யிருந்து சகலசங்கைகளையும் நிவர்த்தி செய்கின்றமையாலும், அ வ்விடத்தில் மனதைநிறுத்திச் சூட்சுமமாக விசாரித் தால் சகல சம்சயங்களும் கெடும். கெடவே, தனது எதார்த்தவடிவம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல, விள ங்குமென் றபிப்பிராயம்.

வினு.—ஆனது மறிகின்றதுந் தானுயிருக்கிறது மெப்படியென்னில்?

விடை.—மத்தியமான சைதன்னியமே யங்கங்கே யகமிதமாய்க் குழந்தையாய்ப் பாலனுய்க் கிழவனுய் எழுவகையாய் (அசு) லட்சமா யனந்தமயமாகி அங்கங்கே விளங்கித் தானு யிருக்கின்றதென வறிக. (ருகரு)

வினு.—எதிலும் வஸ்து நிர்த்தாரணமா யிருப்பதெப்படி யென்னில்?

விடை.—தானுகித் தானென்றதை யழித்துத் தானும்போத மெப்பவுமில்லை, யதுவதுவாகவே யிருக்கின்றது. எதுவானுலும், வஸ்து நிர்த்தாரணமாய்க் குறைவு தீர்வாயென வறிக. (ருகசு)

வினு.—தானுயிருப்பதுந் தானுகி யிருப்பது மெதுவென்னில்?

விடை.—ஆகாரந் தோற்றரவில்லாமல் தோற்றுது, அது ஆகலாத மதுவிளக்கம். சைதன்னியமிரண்டிலும் நிறைவு தானுயிருக்கின்றது. முன்னிரண்டும் விட்டுப் போயிற்று. அந்த விரண்டுமொனது அதுவுந்தானுக விருக்குமென வறிக. (ருகஎ)

வினு.—தானுனது விளங்காவிடி லாகார மாமென்பதெப்படியென்னில்?

விடை.—மத்தியி லஞ்ஞானத்திற் சைதன்னியம் விளங்கி வெளியிற் ருனுனது தெரியவேண்டும். மப்படித் தெரியாம லறிவுக்கு மறதிவந்தால், அறிவு தானே தடித்து, ஆகாரமாமென வறிக. (ருகஅ)

வினு.—மயம் நீங்கித் தானுவதெப்படியென்னில்?

விடை.—மயமானது, அநுபவம் அறிந்தபோது அநுபவித்த லறிந்து மயம்நீங்கித் தானனது அநுபூதி யென வறிக. (௱கக௯)

(அனுபவ மனுபவித்த லனுபூதி)

வினா.—அநுபவ மநுபவித்த லநுபூதி யிம்மூன்று மெப்படி யென்னில்?

விடை.—சுகந் தானனதே யநுபவம். அதைச் சிந்தித்தவறிவே, யநுபவித்தல். இவ்விரண்டு மிறந்து தானனதே யநுபூதியென வறிக. (௱உ0)

வினா.—அநுபவமுதலிய மூன்று மெப்படி யென்னில்?

விடை.—சச்சிதானந்தமே - யநுபவம், ஸ்வபாவவிளக்கமே - யனுபவித்தல், ஸ்வானுபூதியே யநுபூதியெனவறிக. (௱உக)

வினா.—இன்னம் - அனுபவாதி மூன்றுமெப்படி யென்னில்?

விடை.—இன்னந் துரியமான சொரூபந் தானகின்றதே யநுபவித்தலென்றும், அந்தச் சொரூபந் தானனதே - யனுபவமென்றும், இவ்விரண்டு மிறந்து - சொரூபஸ்வபாவ சொயம்பிரகாச நித்தியானந்த நிரதிசயமாகத் தானே தானய், விளங்குகின்றதே சொரூபானுபூதி யென வறிக. (௱உஉ)

வினா.—இன்னம் - அனுபூதிமுதலாகிய மூன்று மெப்படி யென்னில்?

விடை.—இன்னந் தான்மாத்திரமாய் விளங்காநின்ற சொரூபந் தானேதானய் விளங்குகிறேமென்கிற நாட்டமில்லாததே - யநுபூதி; யதுவதுதானகை விளங்குகை

யே - யநுபவம், சகலமுந் தானாக விளங்குகின்றபோது சகலமும் நீங்கித் தானாய் விளங்குகின்றோ மென்கிறதே யநுபவித்த லென வறிக. (௩உ௩)

(ஸ்புரிப்பு.)

வின.—ஸ்ரீமத் மகாகுருஸ்வாமிகளுக்கு ஸ்புரிப்பு வாத்தக்கதாக அடியார்களில் யாதாமொருத்தர் நன்மையாய் நடந்துகொள்ளு கின்றார்களோ? அவர்களுடைய சஞ்சிதாதி சகலபாசங்களும் விடுபட்டு முக்தராவார்களென்ப தெப்படி யென்னில்?

விடை.—ஸ்தூலமுதல் மோனபரியந்த மந்தந்தத் திசையிற் பிரிந்தவிடத்திற் பிரிதலை யழுத்தித் தானாக்கிக்கொண்ட லட்சியங்கொண்டு இந்த ஸ்தூலமுதல் மோனபரியந்தந் தான்மாத்திர மூடுருவி நின்றதென்றறிந்து உள்ளும் புறம்புந் தான்மாத்திரமாகச் சதாசமாதியி லிருந்தபோது, முன்னிருந்த ஸ்தூலமுதல் மோனபரியந்தமற்றுத் தானாய்விளங்கின விளக்க மிந்த ஸ்தூலமுதல் மோனபரியந்தத்திலு மூடுருவிக் கனாந்து தானாயிருக்கிற சமாதிக்கு மேற்பட்ட ஸ்வபாவஸ் புரணம் வரும்போது, அந்த ஸ்புரணந்தானாக விளங்குகையாலும், அதுவே யநுபூதியாகையாலும், இம்மூன்றுமொத்த யேகாட்சரமே, தானேதானென்கையாலும், ஸ்வாமிகளுக்குத் தானாய் ஸ்புரணம்வருகின்றபோது, அந்த ஸ்புரணமென்ப தில்லாமல் சொரூபப்பிரத்தியட்ச ஸ்வானுபூதி யாதலா லந்த ஸ்புரணத்தி லடியார்களுடைய பாவிப்பு வந்தால், பாவிப்பிறந்து சுவாமிகள் சொரூபமாத்திரமாக விளங்கிப்போவார்களென வறிக. (௩உ௪)

வின.—இன்னம் - ஸ்புரிப்பே யேகமென்ப தெப்படி யென்னில்?

விடை.—ஏகமே யநேகமல்லவா? அநேகஞ் செடமாயிற்றே? ஆனகையால், ஸ்புரிப்பே - யெல்லாமான யேகம், எல்லாமில்லையென வறிக. (ருஉரு)

வினு.—இன்னம் - ஸ்புரணமுண்டானு லெது நீங்குமென்னில்?

விடை.— * ஸ்புரணம் விளங்கினுல் தனக்கு மயத்துவம் நீங்குமென வறிக. (ருஉசு)

வினு.—இன்னம் - ஸ்புரணமே ஞானுக்ஞான மாவதெப்படி யென்னில்?

விடை.—விருத்தி, தோன்றி யிருக்கிறதைக்காட்டிவிட்டு யிறந்துபோயிற்று. இஃது - ஞானம். விருத்திக்குத் தான் ருேன்றினவிடம் எட்டாதபடியா லஃதேயக்ஞான மாயிற்றென வறிக. (ருஉஎ)

வினு.—இன்னம் - ஸ்புரணமே விளக்கமு மறைப்புமென்ப தெப்படி யென்னில்?

விடை.—ஸ்புரணம் வந்தபோது தன்னைக் காணுவிடில், மறைப்புந் தன்னைக் கண்டால் விளக்கமு மென வறிக. (ருஉஅ)

வினு.—இன்னம் - ஸ்புரிப்பு இருவிதமாவ தெப்படி யென்னில்?

விடை.—ஸ்புரிக்கிறபோது மனம் விஷயத்தை யின்

---

* ஸ்புரணமாவது - அறிவு, தன்னறிவு ப்ரகாசித்தால், மயத்துவமாவது, அறியாமையாகிற தேகேந்திரியப்பிரபஞ்சவாதனைகள், தனக்கில்லாமையால், தன்னைவிட்டு நீங்குமென்றபிப்ராயம்.

பமென்று நாடிக் கெட்டுப்போகின்றது. அதுவதுவா யிருந்த வியாபக ஸ்புரணத்தைக் கண்டு துரியந் தா ளுய் விளங்குகிறதென வறிக. (ருஉகூ)

வினு.—இன்னம் - ஸ்புரணமே யெல்லாமா யல்லவு மா யென்பதெப்படி யென்னில்?

விடை.—எல்லாமானது, ஸ்புரணம். அல்லவென்பது, தானென வறிக. (ருரு0)

வினு.—இன்னந் - தானுக்கிவிடுவ தெப்படி யென் னில்?

விடை.—சதா ஸ்புரணத்தையே பார்க்கத் தானுக்கி விடுமென வறிக. (ருருக)

வினு.—இன்ன மூன்றிடத்திலும் ஒரே யனுபவமெ ன்ப தெப்படியென்னில்?

விடை.—தானு யிருக்கின்றதொன்று, ஸ்புரணமொ ன்று, விஷயமொன்று, ஸ்புரணத்தில் முன் தானுயிரு ந்த மயத்துவம் விட்டு விளங்கினுல், மூன்றிடத்திலும் ஒரே யனுபவமாமென வறிக. (ருருஉ)

வினு.—இன்னங் குருவார்? சீஷனுரென்னில்?

விடை.—ஸ்புரணஞ் சீஷன். தானனது - குருவென வறிக. (ருருரு)

வினு.—இன்னம் - ஸ்புரிப்ப தெவ்விட மென்னில்?

விடை.—சர்வ வுயிர்களுக்கு மத்தியி லனுபூதியாகி ற துரியம் ஸ்புரிப்பது சகசம். அப்படியென்று அறிவி ற்பட்டிருந்தாலும், அனுபவமாகாமல் ஸ்புரிப்பது அகத் திலே யொதுங்குமல்லாமல், மத்தியி லனுபூதி வராது.

ஏனென்றால், * இதபலத்தை யுத்தேசித்துக் கொண்டு அறிவினால் மத்தியகதநிலையை நிச்சயிப்பதால், விகாரா திகள் நீங்காதென வறிக. (௬௬௪)

வினா.—இன்னம் - ஸ்புரிப்பு உதித்தது சைதன்னிய த்திலோ? சடத்திலோ? வென்னில்?

விடை.—தோற்றவு மாத்திரமென்று சொல்லாமுன்ன முண்டோவென்றால், இல்லை. இல்லையென்று லபாவ மானபடியினாலே அக்ஞான மிருக்கின்றது. தோற்ற வந்ததென்றால், பாவமல்ல ஸ்வயஞ் சைதன்ய மென வறிக. (௬௬௫)

இன்னம் - "விடலரு மசைவு விட்டு விடயத்தின் மீண்டநெஞ்சன், வடவரை யுறையுந் தாதை மருங்குற வெய்தியிந்த, விடருறு மாயை வந்த தெங்ஙன மிறப்ப தெங்ஙன், றொடர்பிலா ருடைய தெம்மட் டென்றிது தோன்றிற் றென்றான்."

(பொழிப்புரை)

விடுதற்கரிய சஞ்சலத்தைநீக்கி விடயபோகத்தினின்றுந் திரும்பிய மனதையுடைய சுகரும், மகாமேருவில் வசிக்கின்ற பிதாவின்பக்கத்தி லடைந்து இத்துக்கமயமான மாயையானது வந்ததெப்படி, நசிப்பதெப்படி, தொடர்ச்சியில் ஆரையுடையது, எவ்வளவுள்ளது எப்போ தீதுண்டாயிற்றென்றுகேட்டார் - என்பதாம்.

---

* இதபலமாவது, இதமாவது - சுட்டியறியப்பட்ட ப்ரபஞ்சம். பலமாவது, தேகாதி ப்ரபஞ்சத்திற் பிரயோசன மிருக்கிறதாக வெண்ணுகிற தென்று அர்த்தம்.

(பதசாரம்)

மாயை சீவனையுடையதா? அல்லது ஈசனையுடையதா வென்பார் ஆருடையதென்றார். இதின் தாத்பர்யம். * மாயையினது உற்பத்தி, ஸ்திதி, லயத்தை விசாரித்ததாம்.

"தன்னுள்விகற் பித்தெழுந்த விகற்பம் போகிற் றவிர்ந்திடு மாயையின் பயனேர் சற்று மில்லை, யின்னவனைத் தோருண்மை யியம்பவேண்டு மியாவர்மயக் கமுமாற்று மிறைவ வென்ன, மன்னனதற் குறைசெய்வான் முனிவ நீயே மதித்துணர்ந்தும் பிதாவுரைக்க மறுத்துங் கேட்டா, யன்னிலையே நிச்சயமிங் ககண்டஞான வாகாய புருடனுள னயலொன்றில்லை."

(பொழிப்புரை.)

ஆத்மாவில் ஸ்புரண ரூபமாய் வேறுபட்டுதித்த மாயாவேற்றுமை யானது, உதித்தவிடத் தொடுங்குமாயின், கெடாநின்ற மாயையினிடத்தில் பிரயோசனமோரணுவளவாகினுங் கிடையாது. அஃதித்தன்மைத்து ஒப்பற்ற நிச்சயமான வாத்மஸ்வரூபத்தைச் சொல்லவேண்டும். சகலருடைய மயக்கங்களையுங் கெடுக்கின்ற குருவே யென்றுகேட்க, அதற் கரசன் சொல்லுவான், சுகரோ? நீரோ வனையறுத் தறிந்தும் பிதாவாகிய வியாசமுனிவர் சொல்லத் தடுத்துங் கேட்டாய் அந்தநிலையே சத்தியம், ஆனாலும் இவ்விடத்தில் பரிபூரணமான சிதாகாயமே சாட்சாத்கரித்த ஆத்மாவே யுள்ளது:— வேறொருவஸ்துவு மில்லை என்பதாம்.

(பதசாரம்.)

ஆத்ம வ்யதிரிக்தமாகத் தோற்றப்பட்ட சகலவடி

வங்களும், அத்துவிதாத்ம சாக்ஷாத்காரமாய்ப் பிரகாசிக்கின்றதென்பார், ஆகாயபுருஷனுள னயலொன்றில்லையென்றார். (இதின்தாத்பர்யம்.) ஆத்ம ஸ்புரணத்திலுதித்த திருஸ்யத்தை ஆத்மசாக்ஷாத்காரமாக வறியின், விஸ்ராந்தி யுண்டாமென் றுபதேசித்ததாம்.

* ஆதியிலுண்டான யிதினங்குராந்தா னனுபவமே யாகியறிதியிடுவதாகியெனவறிக. (நுநுசு)

---

* ஆதியிலுண்டான யிதினங்குரமென்பது, மெழுக்குருண்டையில் பொன் வெள்ளி முதலிய அனுக்கள் மறைந்திருப்பதுபோல, மாயையென்னு மெருக்குருண்டையில் தேவர் முதலிய எழுவகைத் தோற்றமான (அச) லக்ஷம், ஜீவர்க ளனைவரும், சுழுப்தியிலும், சர்வசங்கார ப்ரளயத்திலும், மறைந்திருக்கின்றனர். மீண்டுஞ் சாக்ராவஸ்தை வந்தவுடனே நேற்று நடந்த காரியத்தில் ஞாபகம் வருவதுபோல, ஸ்ருஷ்டியிலிருந்து வெளிப்பட்டவுடனே பூர்வஜன்மத்தில் பந்தகர்மத்தை யனுஷ்டித்தவர்களும் விடுதிகர்மத்தை அனுஷ்டித்தவர்களு மாகிய அனைவரு மப்படியே வெளிப்படுவதாயிருப்பதாலும், விடுதிகர்மத்தி லிச்சை யுடையவர்கள் தவஞ்செய்து, அத்தவநிறைவேறுமையா லவர்களிடத்து ஸ்ரீமகாதேவர் கருணைவைத்து, என்னைத் தியானஞ் செய்து பந்தம் விடுதியென்னு மிரண்டுகர்மத்தின் வசத்தாகாம விரண்டையும் விட்டு எனது சாயுஜயமாவது, அயிக்யமுக்தியை யடையுங்களென்று இவர்கள் நிமித்தம் ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்தனர். ஸ்ருஷ்டியாவது, உத்பத்தி. உற்பத்திக்குக் காரணம், மாயை. சத்துவகுணமுதலிய மூன்றுகுணமும் வெளிப்படாம லவ்யக்தமாயிருப்பது மாயையாதலானும், இதில் - இந்தமா

(நானுகாவிடிற் றான் விளங்காது)

வின.—நானுகாவிடிற் றான்விளங்காதென்ப தெப்படியென்னில்?

விடை.—தான் பரிபூர்ணந் தன்னையறியப் போகாது தான் - நானுகித் தன்னை யறியவேண்டும். நானுகாவிடிற் றான்மயம் அறிவுசொரூபம். நான், சொரூப வறிவு தானென வறிக. (௩௩௭)

யையினிடத்து - முதலிற் சத்துவகுணமுண்டானபடியாலும், இதினங்குரமென்றார். அங்குரமாவது, ஞானங்குரமாகிய முளை. முளையாவது, ஸ்புரணம். ஸ்புரணமாவது, அறிவு. இவ்வறிவு ஏனுண்டாயிற்றெனில்; தன்னை யறியவுண்டாயிற்று. எப்படியறியலாமெனில்? மனமுண்டாகிப் பகிர்முகமானுல், பிரபஞ்சவசமாகும். மனமிறந்தாற் சுழுப்திவசத்தாகும். இவ்விரண்டின்வசமாகி யிருக்கிறபரியந்தம் தன்னை யறியக்கூடாது. ஆகையால், நினைப்புமறைப்பென்னும் இவ்விரண்டின் வசமாகாமல் அந்தர்முகமாவது, நடுநிலை. நடுநிலையாவது, நினைப்புமறைப்பு வசமாகாதிருப்பது. இதையே பாராமற் பார்ப்பது, கேளாமற்கேட்பது, உறங்காதுறங்குவது, என்றுசொல்வார்கள். இவ்விதமாகிய நிலையினின்று தன்னையுற்றுப் பார்த்தால், தன் அனுபவந் தனக்கு உரியதாகித் தன்னிலைமை யிவ்வாறெனவும், மாயையினது நிலைமை யிப்படியெனவும், அறுதியிடுவதாவது, முடிவுசெய்யலாம். அல்லது, நிஸ்சயம் பண்ணலாமெனவும், நிஸ்சயமாவது, வஸ்து நிர்த்தாரணம், நிர்த்தாரணமாவது, சித்தாந்தமெனவுந் தாத்பர்யம்.

(ஞானுஞ் ஞானம்.)

வினு.—ஞானுக் ஞானமாவ தெதுவென்னில்?

விடை.—விளங்குகிற விடத்தைவிட்டு விளக்கத்தைப் பிடிந்தது ஞானம். விளக்கத்தைவிட்டு விளங்குகிற விடத்தைப் பிடித்தது, அக்ஞானமென வறிக. (ருருஅ)

வினு.—இன்னம் - ஞானுக்ஞான மெப்படி யில்லையென்னில்?

விடை.—தானு யிருக்கிறபடியால், அஞ்ஞானமு மல்ல. தானே யறிகிறபடியினுலே யறிவென்று வொன்றல்ல வென வறிக. (ருருகூ)

(மறைப்பு நினைப்பு.)

வினு.—தன்னை மறந்தவிட மெங்கேயென்னில்?

விடை.—ஸ்புரிக்கும் போது விளங்காமல் எதிரில் தோற்றலே, தன்னை மறந்த விடமென வறிக. (ருச0)

வினு.—இன்னம் - நினைப்பு மறைப்பு யெதுவென்னில்?

விடை.—மறைப்புக் கேவலானந்தமான தன்வயம், நினைப்பு - ஸ்புரணமென வறிக. (ருசக)

வினு.—இன்னம் - மறைப்பு நினைப்பு யெப்படி யில்லையென்னில்?

விடை.—அறியப்போனுல் மறைப்புண்டு, அறிதலே மறைப்பு. நினைக்கு முன் தானிருக்கிற படியினுலே? நினைப்பல்லவென வறிக. (ருசஉ)

வினு.—இன்னம் - மறைப்பிலும் நினைப்பிலுந் தான் ருனென்ப தெப்படியென்னில்?

விடை.—நினைத்தாற் றான் பிரகாசிக்கும். மறந்தாற் றன்னைத் தவிர மற்றொன்றுந் தோன்றாதென வறிக.()

வினா.—இன்னம் - மறந்ததும் நினைத்ததுமெப்போ? கெட்டதும் - விளங்கினதுமெப்போ? அவையெப்படி யென்னில்?

விடை.—நினைப்பிற் றன்னைக் கண்டபடியினாலே, முன்மறைப்பும் - பின்நினைப்பும், இரண்டுங் கெட்டுத் தான் விளங்கிப்போயிற்று; இந்தவிட * மயிர்ப்பால நெருப்பாறென வறிக. (௬சச)

* நெருப்பாறு மயிர்ப்பாலமாவது, த்ருஷ்டாந்தம். நெருப்பாற்றில் மயிர்ப்பாலங் கட்டினால், நெருப்பு மயிரைத் தன்மய மாக்கிக்கொள்ளுமன்றி - மயிர்ப்பால மிராது. அஃது இருந்தாலல்லவா? நெருப்பாற்றைக் கடந்துபோகலாம். ஆகையால், உலகத்தில் வழங்கும் நெருப்பாறு மயிர்ப்பாலமென்னும் வார்த்தை மிகவும் அருமையானதென்று சொல்லுகின்றனர். தாஷ்டாந்தமெப்படி யென்றால், நெருப்பு - ஞானம், ஆறு நதி, எனவே - ஞானநதியென்றாயிற்று. ஞானத்தை நெருப்பாக யேன்சொல்லவேண்டுமென்றால், வெளியிலிருக்கும் வஸ்துக்களை நெருப்புக் கொளுத்துவதுபோல, அகத்திலிருக்கும் அவஸ்தாத்ரயங் காட்சித்ரய மபிமானத்ரய முதலிய த்ருஶ்யங்களையும், உதராக்நி - மந்தாக்நி - தாபாக்நி - சோகாக்நி - காமாக்நி - கோபாக்நி முதலாகிய அக்நிகளையும், ஞானாக்நி தகனஞ் செய்யுமாகையாலும், நெருப்பாறென்று பெயராயிற்று. மயிர்ப்பாலமாவது, நுட்பமானமயிரால் கட்டுவது மயிர்ப்பாலம் - அதுபோல, நுட்பம் - அல்லது, சூட்சுமமான மனோவிருத்திகளால் ஞானநதியில் கட்டுகிற தாவது

வினா.—இன்னம் - அநாதியே மறைப்பாவதேது வென்னில்?

விடை.அறிவு விஷயமானு லநாதியே மறைப்பென வறிக. (௩சரு)

வினா.—இன்ன மறைப்புந் தோற்றலு மில்லையென்பதெப்படி யென்னில்?

விடை.—தானானது தானென்றறிந்ததில் தான் விளங்கினுல் முன்மறைப்பில்லை பின்தோற்றலு மில்லை, தானேயென வறிக. (௩சசு)

வினா.—இன்னம் - மயத்துவநீக்கமு மறிதல்விடுதலு மொருகால மொருயிடமென்ப தெப்படி யென்னில்?

விடை.—தான் விளங்கலாலென வறிக. (௩சஎ)

வினா.—இன்ன மறிந்தது மறைந்தது மெது வென்னில்?

மனதை நிறுத்தித் தியானஞ் செய்கின்றது, அல்லது, இரண்டுபுருவமத்தியம், ஆக்ஞையென்றும், சுழிமுனை யென்றும், பெயராதலின், அந்தவிடத்தில், மனதையும், த்ருஷ்டியையுமசையாமனிருத்தித் தியானஞ்செய்வது மயிர்ப்பாலமாம். மயிர்ப்பாலம் ஏன் கட்டுகிறதென்றால், தன்னைக்காணு நிமித்தம்ஆதலின்; அவ்விதமாகிய மயிர்ப்பாலத்தில் அறிவைச்செலுத்தித் தன்னைப்பார்க்குமிடத்தில்,நினைப்பு மறப்பென்னும் அவ்விருத்திகளை ஞானுக்நிதகனஞ்செய்து அன்னியமின்றித்தானே தானுகச்செய்கின்றது. இவ்விதஞ் செய்கிற தபசு மிகவுமருமையாதலின், நெருப்பாறு மயிர்ப்பால மென்று சொன்னதென்றறிக. இதைவிரிக்கிற் பெருகுமாதலின் சுருக்கமாகத் தெரிவித்தனம்.

விடை.—தானுயிருந்தா லறிந்தது, அறிந்தால் மறைந்ததாமென வறிக. (௩சஅ)

வினு.—இன்னம் - நீ - யென்னவிதமா யிருக்கிறு யென்னில்?

விடை.—அறிவா யிருக்கிறேனென்ன; இப்பவல்லவா, அறிவா யிருக்கிறுய். முன் னெப்படி யிருந்தாயென்னில்? அறிவாகவே யிருந்தேனென்ன! உனக்கு மறைப்பு நினைப் பில்லையாவென்னில்? எனக்கு மறைப்புத் தன்மயம். நினைப்பு யென்னையே நான், நினைக்கிறதென் வறிக. (௩சகூ)

வினு.—இன்ன மறைப்பென்ப தெப்படி யென்னில்?

விடை.—வடிவுக்குங் கருத்துக்கு மத்தியமாயிருந்த அறிவுருவான விருத்தியே, வடிவாயுங் கருத்தாயு மிருந்துதென் றறியாததே மறைப்பென வறிக. (௩௫0)

வினு.—இன்னம் - *மரிக்கிறதும் - விளங்குகிறதும்- ஒரோயிட மெப்படியென்னில்?

விடை.—மரிக்கிறதற்குத் தான்வெளியானுல் மரிக்கும். மரிக்கிறதிற் ருனிருந்தாலல்லவா? விளங்கும். மரிக்கிறதும், விளங்குகிறது மொரோயிடமென வறிக. ()

(அறிவறியாமை.)

வினு.—அறிவே யறியாமையும் - அறிவுக்கே யறியாமையு மென்ப தெப்படி யென்னில்?

விடை.—அறியாமையாகின்ற விஷயமும் - அறிவாய்விளங்குகின்ற விஷயமும் - முன்னறியாமையாகின்ற அக்ஞானமும், அறிவாகின்ற விருத்திக்கேயாகையால்

---

* மரிக்கிறதாவது சாக்கிரமுதலிய அவஸ்தைகள் அறிவி லடங்குகின்றன வென்றர்த்தம்.

நடுவே சித்து விளங்கினால், எதிர்விஷயந் தள்ளி யானந் தங் கருத்தாய்த் தான் விளங்குமென வறிக. (கூருஉ)

வினா.—இன்னம் - அறிவறியாமை யெங்கே யுண்டா மென்னில்?

விடை.—தன்னையறியப்போகிற விடத்தி லறிவு மறி யாமையு முண்டாமென வறிக. (கூருகூ)

வினா.—இன்ன மறிவறியாமை யெதுவென்னில்?

விடை.—மனோவிருத்தி யறியாமை யகண்டாகாரவி ருத்தி யறிவு என வறிக. (கூருச)

வினா.—இன்ன மறிவறியாமை யாமென்பது மல்ல வென்பது மெப்படி யென்னில்?

விடை.—விளக்கமானபடியா லறிவுமாம், ஆனந்தமா னபடியினால் அறியாமையுமாம், விருத்தி யில்லாதபடி யால் - அறிவுமல்ல, விளக்கமானபடியினால் - அறியா மையுமல்ல, விளக்கமென் றறியாதபடியால் - அறியா மையுமாம், விளக்கமென் றறிந்தபடியினால், அறிவு மா மென வறிக. (கூருரு)

வினா.—இன்ன மறிவறியாமை யெங்கே யிருக்கு மென்னில்?

விடை.—விருத்தியினிடத்தி லிருக்கும், நிறைவானா ல் விடுமென வறிக. (கூருசா)

வினா.—இன்ன மறிவுமில்லை - யறியாமையு மில்லை, யென்ப தெப்படியென்னில்?

விடை.—அங்கங்கே தானாகவிருந்தா லறிவெங்கே, யாகாரமெங்கே, இல்லவே யில்லையென வறிக. (கூருஎ)

வினு:—இன்ன மறிவறியாமையில்லாத தெப்படியெ ன்னில்?

விடை.—நடுவே தான்விளங்கினல் கீழேஜடமில்லை, மேலே மறைப்பில்லை யென வறிக, (௩௫௮)

வினு.—இன்ன மறிவுமல்ல வறியாமையு மல்லவென் ப தெப்படியென்னில்?

விடை.—ஒன்றிருந்து அதுதானே அறியவந்துதெ ன்ரூ லறிவுமல்ல, அந்த அறிவு அடங்கினவிடந் தானெ ன்ரூ லஞ்ஞானமு மல்லவென வறிக. (௩௫௯)

வினு.—இன்ன மறிவுமல்ல அறியாமையுமல்ல வெ ன்ப தெப்படியென்னில்?

விடை.—தான் விளங்கி விளக்கந் தானுயிருந்த சத் தில் - சித்து நீங்கி யறிகின்றபோது விஷயமில்லாதபடி யால் அறிவுமல்ல, தான் விளங்கினபடியினுல் அறியா மையு மல்லவென வறிக- (௩௬0)

வினு.—இன்ன மறிவறியாமை யில்லையென்ப தெப் படி யென்னில்?

விடை.—கண்ணனது மூக்குக்கண்ணுடியோடே கூ டிக்கொண்டு - அட்சாங்களை யறியும், கண்ணுடி யில்லா தபோது கண்ணனது அறியவில்லையென்று சொல்லு ம், அப்படிச் சொன்ன போதிலும், அறிந்தபோதுங் கண்ணுயிருக்கின்றது, அறியாதபோதுங் கண்ணுயிரு க்கின்றது, அறிவறியாமை மூக்காலத்திலுங் கண்ணுக் கில்லாததுபோலத், தானுகிற அறிவானந்தசொரூபத்தி லுண்டான அறிவாகின்ற விருத்தி - விஷயங்களை யறி யும், விருத்தியில்லாதபோது சொரூபம், அறியவில்லை

யென்று சொல்லப்படும். சொன்னபோதைக்கும் சொரூபத்திலறிவறியாமையில்லை, அறிவறியாமை, விருத்திக்கேயல்லாமல், தானாகிற அறிவானந்த சொரூபத்தில் அறிவறியாமை யில்லை யென வறிக. (௩௬௧)

வினா.—இன்னஞ் சதா அறிவறியாமை யில்லையென்பதெப்படி யென்னில்?

விடை.—அறிவா யிருந்தால் அறிவென்கிற போதமிருக்கவேண்டும், அறியாமையாயிருந்தால் விளங்காதிருக்கவேண்டும், ஆகையா விரண்டுமில்லை. யனுபூதியாகிற விளக்கந் தானா யிருக்கின்றதென வறிக. (௩௬௨)

வினா.—இன்னம் - உள்ள தான அறிவு மில்லாததான வறியாமையு மெப்படிக் கெடுமென்னில்?

விடை.—இல்லது யில்லவே யில்லை, உள்ளதே யில்லாததாயிருக்கின்றது, உள்ளதே யில்லாததா யிருக்கிறபடியினாலே, இல்லது வுள்ளதா யிருக்கிறது, உள்ளதிலிருக்கிற யில்லதே யறியாமை, யுள்ளதிலுள்ளது விளங்கின லுள்ளதான அறிவு மில்லாததான அறியாமையுங் கெடுமென வறிக. (௩௬௩)

வினா.—இன்ன மறிவறியாமை யில்லையென்ப தெப்படியென்னில்?

விடை.—எந்த அறிவு தன்னைமறந்ததோ? அந்த அறிவு தன்னை யறிவானந்த சொரூபமென்று அறியவே, அறிவு மறியாமையுங் கூடப்போய்த் தான் அறிவானந்த சொரூபமாத்திரமாய்ச் சேடிக்கு மெனவறிக. ()

வினா.—இன்ன மறிவறியாமை விட்டதெப்படி யென்னில்?

விடை.— * மணந்தபோது தணந்தவிடத்தில் அனுபூதி யறிவிலிருக்க முன்னறியே னென்றது அறியாமை. தான் விளங்குமிடத்து அறிவறியாமை யிரண்டும் விட்டுதென வறிக. (கூசரு)

---

* மணந்தபோது தணந்தவிடத்திலென்பது, ஜீவன், சாக்ராவஸ்தையில் மனதுடன்சேர்ந்து விஷயசுகங்களை யநுபவித்தும்; சுழுப்தி அவஸ்தையில் மனதை விட்டு நீங்கிக் கேவலசுகத்தைத் தெரிந்து அனுபவித்துஞ், சாக்ராவஸ்தையில் வந்த பின்பு முன் அனுபவித்தசுகத்தை மறந்தனன். இதற்குத் திருஷ்டாந்தம்; ஓர் அரசன் நாலுபெயர் மந்திரிகளுடன் சபையிலிருந்து ராஜ்ய வியாபாரஞ்செய்து பின்பு, அதைவிட்டுச் சுழுப்தியவஸ்தை யடைந்து மருதினஞ் சபைக்குவந்து மந்திரிகளுடன் நேற்று நடந்தகாரியத்தை ஆலோசிப்பது போலத் தாஷ்டாந்தமெப்படியென்றால், ஜீவனென்னு மரசன் மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னு மந்திரிகளுடன் ஜாக்ராவஸ்தையிற் பலவியாபாரஞ் செய்து தனக்குச் சுகமில்லாமையால், நாலுபெயர் மந்திரிகளில், முதல்மந்திரியாகியமனம், சத்துவத்தில் வாயுவாம் சமாதலின், வாயு வெப்படிச்சஞ்சரிக்கின்றதோ? அப்படிப்போலச், சீவனை எவ்விடத்துஞ் சஞ்சரிக்கும்படி செய்கின்றது. புத்தி சத்துவத்தில் அக்கினியம்சமாதலின், சத்புத்தி அசத்புத்தி யென யிருவகைப்படும். அவற்றுள் சத்புத்தி விளக்கு யிருட்டைநீக்குவதுபோல, மனோசாஞ்சல்யமாகிய விருட்டைநீக்கிப் பிரகாசமாயிருந்து சுழுப்தியில் சுகத்தைக் கொடுக்கின்றது. சித்தமுமகங்காரமு மடங்கியிருந்து விழித்தவுடனே மூன்றுகாலத்தும் நடந்ததைச் சிந்தனைசெய்கின்றது சித்தமாதலின்; சுழுப்தியினடந்ததைச் சிந்திக்கின்றது. அச

வினா.—இன்ன மறிவாவதெது, அறிவறியாமை யெதினாலே விடுமென்னில்?

விடை.—அறியாமையினு லறியப்போகிறது, அப்

த்தைநிச்சயிப்பது அசத் புத்தியாதலின், அறிந்ததை யறியவில்லை என நிச்சயிக்கின்றது. அகங்காரம் அ ம்பாவமாகி நானென்றுந் தெரியாமல் தூங்கினேனென்று சொல்லுகின்றது. ஆகையால், ஜீவனென்னும் ராஜன் இவ்வாறுசொல்லிய அசத்மனம், அசத்புத்தி,அசத்சித்தம், அசத் அகங்காரமென்னு மந்திரிகளுடன் கூடிக்கொண்டு அறிவிலனுபூதி யிருக்கத் தன்னறியாமையை மேற்கொண்டு நானென்றுந்தெரியாமல் தூங்கினேனென்று சொல்லுகின்றான். இதிலென்ன அபிப்ராய மாகுதென்றால், ஒன்றுந்தெரியாமல் தூங்கினேனென்று சொல்லவே, வேறொன்றுந் தோன்றவில்லை ப்ரம்மானந்த சுகமாத்திரமாக விருந்தேனென்று அபிப்ராயமாகின்றது. ஆதலின், ஒன்றுந்தெரியாமற் றூங்கினேனென்பவன், ஜீவன். சுகமாத்திரமாக விருந்தேனென்பவர். பிரத்யகான்மாவாகிய ஞானவரசன். இவருக்கு மந்திரிகளாரென்றால், சத்மனம், சத்புத்தி, சத்சித்தம், சத் அகங்காரம், இவர்களுடன்கூடி யென்ன செய்கிறாரென்றால்; மேற்சொன்ன இந்தாஜால ப்ரபஞ்சத்துக்கு ராஜாவாகிய ஜீவனையும் இவன்மந்திரிகளையும் இவர்களா லாளப்பட்ட தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலிய எல்லாவற்றையும் நாசம்பண்ணி இந்திரஜாலாதீதமான மோக்ஷவுலகத்திற்குச் சக்ரவர்த்தியாகிச் சர்வாத்ம சாம்ராஜ்ய பட்டாபிஷேகமென்னுங் கிரீடந்தரித்து அன்னியமில்லாமல் தானே தானக இருந்து ஞான அரசாங்கஞ் செய்கிறாரென்று அபிப்ராயம்.

படி அறிவாகவே யிராமல் மறக்கும், மறைப்பாவதென் ன? ஆகாரமாம். திரும்பி யறியவே, அறிவாம். ஆகையா லறிவே யாகார மறிவே மறைப்பு, தோற்றுவது அறிவு மாகாரமுமில்லை, வியாபகம் விளங்கினல் மறைப்புவிடும். அறியப்போகின்றது விடுமென வறிக. (௩௬௬)

வின.—தன்னை விருத்தாவிருத்தமாய் நாடுவதெப்படி யென்னில்?

விடை.—தன்னையுந் தன் தெளிவையுந் தன் சுகமாகிற அழகையுந் தானே யறியவேண்டிக் கண்ணுடியில் எதிரிட்டுக் காண்பது போலத், தானே விருத்திருபமாக விருந்துகொண்டு தன்னையே பூசிக்கின்றதும், தன்னையே ஸ்தோத்ரஞ்செய்கிறதும், தன்னையே யாநந்தமாய் நாடிச் சந்தோஷிக்கிறதுந், தானே பந்தப்பட்டதாய்த் துக்கிக்கிறதுந் தானே தனக்கு மோட்சங் கிட்டினதாய்ச் சந்தோஷிக்கின்றது மித்தனையுந் தானே தானுமல்லவென வறிக. (௩௬௭)

வின.—இன்னம் - விருந்தா விருத்தமாவ தெதுவென்னில்?

விடை.—மனேவிருத்தி யகண்டாகார விருத்தி வாசனுவிருத்தி யிம்மூன்றும், நீங்கவே- யொன்பதவஸ்தைகளும் - ஓன்ப தபிமானிகளும் விடுபட்டு முச்சூனியத்திலு மானந்தானுபூதி யொன்றும். இது விருத்தாமிசம் முச்சூனியத்திலும் தானுயிருப்பது அவிருத்தாமிச மிது * வொருமொழி யிடந்தோறு மிடந்தோறு மென வறிக. (௩௬௮)

---

* ஒருமொழியாவது, நடக்கிற செந்துக்க ளெல்லாம் சரம். அசையாதிருக்கிற பூமிமுதலிய வைகளெல்லாம் அசரம். இப்படிச்சொல்லுகின்ற சரம் அசர

வினு.—இன்னம் - விருத்தாமிச மவிருத்தாமிச மாவ தெது வென்னில்?

விடை.—கேவலானந்தமா யிருப்பது விருத்தாம்சம், ஸ்வபாவமான தான் உள்ளும் புறம்புங் கேவலானந்த மு மத்தியிற் றுரியவறிவாய்ப் பிரகாசிக்கிறது அவிரு த்தாமிச மென வறிக, (கூசுகூ)

வினு.—இன்னம் - விருந்தா விருத்தமென்ப தெப்ப டியென்னில்?

விடை.—அனந்தா னந்தங்களுமொன்று, அவையெ ப்படியென்னில்? பிரம்மா முதற் பிபீலிகாந்தம்வரைக்கு ம் விருத்தாமிச மனந்தம்; அவிருத்தாமிச மொரோ பிர காரமான ஏகமென வறிக. (கூஎ0)

வினு.—இன்னம் - விருத்தாவிருத்தமாவ தெப்படி யென்னில்?

விடை.—தானறிவானுல், தனக்கு விளக்க மாகலாத மா மிது அவிருத்தம். அறிவுதானுு லாகலாத விளக் கம் பலவிதமா மிது விருத்தமென வறிக. (கூஎக)

வினு.—இன்னம் - அவிருத்தந் தானு யிருக்கிறபடி யினுலே விருத்தந் தோற்றுவதில்லை யென்ப தெப்ப டியென்னில்?

மென்பவைக ளெல்லாவற்றிலும் அணுவுக்கணுவாயும் மஹத்துக்கு மகத்தாயும், ஏகமாயும் விளங்குவதுதானு தலால், இதுவே ஒருமொழி. இடந்தோறுமிடந்தோ றுமென்பது, எவ்வெவ் விடங்களி லெப்படி யெப்படி யோ? அவ்வவ்விடங்களி லப்படியப்படியாக ப்ரகாசிப் பது ஒருமொழியாகிய தானே யென்று தாத்பர்யம்.

விடை.—அதுவதுவாய் விளங்குகிற படியினாலென வறிக. (கூஎஉ)

"எப்பொருளெத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு."

(பொழிப்புரை.)

புறம்பில் காணப்படுகிற காட்சிப் பொருள்களில் யாதொருபொருள் யாதோரியல்புடையதாய்த் தோன்றினும் - அப்படித்தோன்றிய விதத்தைக் கண்டுவிடாமல், தோன்றிய அப்பொருளிடத்திருந்தும், மெய்யாகியபொருளைக்காண்பது மெய்யுணர்வு. எனவே, பொய்யாகிய பொருளைப் பொய்யாய்க்காணுமல் - மெய்யாயறிகிறபடியாலும், தானறிவாயிருந்து மகம்புறத்தில் காணப்படுகிற திருஸ்யங்கள் தனது கற்பனையாலுண்டாயினவென்று தெளிவு வாாமல் பொய்ப்பொருளை மெய்ப்பொருளாகவெண்ணி மயக்கமுற் றிருப்பதாலும் மெய்யைமெய்யாகப் பார்த்தா லிம்மயக்கங் கெடுமன்றி வேறெவ்வித வுபாயத்தாலு மிம்மயக்க நீங்காதாதலானும், மெய்ப்பொருளைத் தரிசிப்பதே தனது யதார்த்த ஞானமென்று தாத்பர்யம்.

"முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினுங் காயினுந் தான்முந் துறும்."

பொழிப்புரை.

உயிரானது, விரும்பினாலும், வெறுத்தாலுந் தான் அறிந்து அவ்விரண்டிலும் அவ்வுயிர்க்கு முற்பட்டு நிற்கும்; ஆதலால், முகம்போல் அறிவுமிகுந்ததுவேறுண்டோ? இல்லை. எனவே, அறிவு உயிருக்கே யல்லாமல் முகத்திற்கு யில்லையென்று சொல்லுகிற வர்களைப்

பார்த்து, உயிரினது கருத்தை யறிந்து அவ்வுயிர் விரும்பினால் தன்முக மலர்ந்தும், அது வெறுத்தால் தன்முகங் கருகியும் வரலாலும்; உயிரெனினும் - அறிவெனினு மொருபொருளாதலாலும், விருப்பு வெறுப்புமுதலியவைகள் அறிவினிடத்திலுண்டாகி - விளங்கி மறைவதாலு மிவைகளால் வருஞ் சுகதுக்கமுதலிய பேதங்கள் தனக்குக் கிஞ்சிற்றுமில்லாமல் அபேதமாக விருப்பதாலுந், தான் அறிவேவடிவமென்று சாதனஞ்செய்ய வேண்டுமெனவும், அப்படிச் செய்தால், அதுவதுவாகியு மாகாது ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்ற அவ்வஸ்து நிலைமை விளங்குமெனவும் அபிப்ராயம்.

வினா.—இன்னம் - விருத்தா விருத்தமாவ தெப்படியென்னில்?

விடை.—ஆகாரத்தின் பேரிலெழுகிற அறிவுவிருத்தம், இது - அறியாமையா யிருக்கும் இருக்கிற அனுபூதியின்பேரி லெழுகிற அறிவு துரியம், அது அவிருத்தந் தானா யிருக்குமென வறிக. (௩௭௩)

வினா.—இன்ன மறிவு கெடுவ தெப்படியென்னில்?

விடை.—*விஷயத்தை யடுத்தா லறிவு யெப்படிக்கெடுகின்றதோ? அப்படிப் போலச், சொரூபத்தை யடுத்தாற் கெடுமென வறிக. (௩௭௪)

வினா.—இன்னம் - விருத்தாமிசத்தி லனுபூதி யெதுவென்னில்?

---

* விஷயத்தை யடுத்தா லறிவு கெடுவதென்பது, அறிவு ஜீவனாகி ஜீவன் மனதுக்குக்காரணமாகிய அந்தக்காரணமாகி, அந்தக்காரணம் மனதாகி, மனம், சப்தமுதலிய ஞானேந்திரிய கர்மேந்திரியங்களைச் சங்கற்பித்

விடை.—அறிவு ஆகாரமானபோது அறிவில்லை, ஆகலாதந் தானுயிருக்கின்றது. ஆகார மறிவானபோது ஆகாரமில்லை, யாகலாதந் தானு யிருக்குமென வறிக. ()

வினு.—இன்னம் - அவிர்த்தாமிசத்தில் அனுபூதியெதுவென்னில்?

விடை.—விளக்கம் வியாபக மானபோது விளக்கமில்லை, தானுயிருக்கின்றது. வியாபகம் விளக்கமானபோதுவியாபகமில்லை, தானுகவே யிருக்கிறது. ஒன்றிலொன்றில்லை, தானெப்போது மிருக்கிறதென வறிக. ()

வினு.—இன்னம் - விருத்த வனுபூதியாவ தெதுவென்னில்?

விடை.—தேகமுதலாகிய சகலவிஷயங்களுந் தானுயிருக்கிறது சீவபாவம். இது தானல்ல, தானறிவென்று சிந்தித்து அறிவாகாரந் தானுயிருக்கின்றது, ஈஸ்வரபாவ மிது விருத்தாமிசம், குருவாக்கியப்படி நிஷ்டை

தால் அவைகள் தோற்றும். அப்படித் தோற்றுகிற விஷயாதிகளைச் சுகமெனவிரும்புகிறவன் ஜீவனுதலாலும், சீவன் அறிவுவடிவாயிருந்தும் அதை மறந்து அன்னியமான விஷயங்களைச் சுகமெனவிரும்புமிடத்து, அறிவினது தன்மைகெடுகிறதுபோலச்; சர்வாதீதமாயுள்ளதானுகிய அகண்டவியாபகத்தில் அறிவு யெழுந்ததாதலானும் தன்னைமறந்தமறதியே சீவன்முதலிய வைகளாகத் தோற்றுகிறபடியாலும், தன்னை நினைக்குமிடத்துச் சகலகற்பனைகளுக்கெல்லாங் காரணமாகிய சீவன் அறிவிலடங்கி, சீவனுக்குக் காரணமாகிய அறிவு, தனது ஸ்வரூபத்திலடங்கித் தன்னைத்தவிர அன்னியமில்லாமையின் தானேயிருக்குமென் றபிப்பிராயம்.

க்கண்ணில், அனுபவ மெப்படியென்றால்? அறிவாகார மா யிருந்தாலும், விஷயங் கொண்டு போகிற படியால் விருத்தாமிச மாயிற்று. ஏகாந்த ஸ்தானத்திலிருந்து நிஷ்டைபண்ணும்போது, விஷயங்களில்லையே! இல்லாதிருந்துந் தோற்றுவானேனென்னில்? சுகஞ் சொரூபமான படியினாலே, சுகத்தைப்பற்றித் தோற்றுது, சர்வமுஞ் சுகசொரூபமா யிருக்கையில், விஷயம் யியல்பா யில்லவேயில்லை, விஷயத்தை யில்லையென்று யிப்போது அறிகின்றது பொருளல்ல, விஷயமில்லாமற் சர்வமுந் தானாயிருக்கிறது அதுவென்ற பதத்திற் கர்த்தம். தான்றானே சர்வத்திலும் - விளங்குகிற படியால் நீயென்ற பதத்துக் கர்த்தம். அந்த விளக்கத்துக்கு அறிவென்றுசொல்லப்படும். இந்தவிட மறிகிற ஸ்வபாவந் தா னறிவானந்தமென்று சிந்திக்கையால், அந்த அறிவுந்தோன்றாமல் ஆனந்த சொரூபமா யிருக்கையே, கேவலானந்தம். ஒருலட்சண மனுபவமாயிருந்தாலும் போதுமென வறிக. (௬எஎ)

வி௲.—இன்னம் -விருந்தா விருத்த அனுபூதி யெப்படி யென்னில்?

விடை.—சுருக்கமாவது, சுகத்தைத் தவிர விஷயமில்லை, யந்தசுகத்தைக் குருவானவர்தான், என்று சொன்னாரென்றறிந்தால், அந்த அறிவு தோன்றாமற் கேவலாநந்தமாம். அந்த ஆனந்தத்திலும் நின்று அறியவருகிறது துரியம். அப்போ தானென்றறியாமல் தானென்கிறதும்-கேவலாநந்தமா யிருக்கும், தானென்றறிகின்றது விருத்தாமிசம், உள்ளும் புறம்பும் கேவலானந்தமும்; நடுவேதுரியவறிவு தானாய்ப்பிரகாசிக்கிறது அவிருத்தாமிசமென வறிக. (௬எஅ)

வினு.—இன்னம் - விருத்தம் நீங்குவதெப்படி யென்றால்?

விடை.—* லட்சணையைப் பிடித்தால் விருத்தந் தானே நீங்குமென வறிக. (ருஎகூ)

---

* லட்சணையாவது, விட்டலக்ஷணை, விடாதலக்ஷணை, விட்டுவிடாதலக்ஷணையென மூன்றுவகைப்படும். அவற்றுள், கங்கைக்கரையில் தயிர்விற்பவள் சப்தங்கேட்டவள்வில் இச்சப்தம் கங்கைக்கரையி லிருக்கிறதாக நினைத்து ஜலத்திலிருக்குமா விடைச்சேரி கங்கைக் கரையிலிருக்கும் நீரிலிராது; என்றுசொன்னவிடத்துக் கங்கைவிட்டது. அதுபோல, அறியுந்தர்ம முபாதிதோறுமிருப்பதால், அஃதுபாதியின் தர்மமா? வேறொன்றின் தர்மமா? ஸ்தூலமுதலிய மூன்றுசரீரமும் ஜடமாயு முபாதியாயுமிருப்பதால், உபாதியின்தர்மமல்லஎன்றுசொன்னவிடத்து, உபாதிவிட்டது. ஆதலால், தேகத்தை விட்டுத்தேகத்தில்வாசஞ்செய்கின்ற தேகியான கூடஸ்தரே யறிகிறாரென்று லட்சியிப்பதனால், விட்டலட்சணையெனப் பெயராயிற்று. ஒருவன், தனது சிவப்புக் குதிரையும், வெள்ளைப்பசுவையும் பிடிக்கப் போகும்போது அவைகள் மிகவும் வேகமாகவோட இவன் - தேகப்ரயாசையாய் நின்று அந்த மார்க்கமா யெதிரில் வருவோனைக் கண்டு சிவப்பும் வெள்ளையும் பார்த்தையாவென்று கேட்க, இதனால் சிவப்பும் வெள்ளையுங்குணமாதலானும் தாமொரு முதலல்லாமையானும் ஓடுதலாகிய தொழிலுக்கு வினைமுத லுடலல்லவெனக் கண்டு அவைகாரணமாகத் தனக்கபேதமாயு முதலாயு முள்ள குணியாகிய சிவப்புக்குதிரை நிற்கின்றது வெள்ளைப் பசு போகின்றது எனக்கேட்டவனுக்குத் தெரிவிப்ப

துபோலச், சச்சிதானந்தமென்னுங் குணம் அசேதன மாதலானும், தாமொரு முதலல்லாமையானும், ப்ரவர்த்தி நிவர்த்திமுதலிய சக்திகள் தனக்குரிய தல்லவெனக் கண்டு, அவைகாரணமாகத் தனக்கபேதமாயு முதலாயு நின்று எவ்விடத்துஞ் சதோதயமாக ப்ரகாசிக்கின்ற ஸ்வயஞ்சைதன்ய ஸ்வரூபமாகிய குணியைத் தீவாதார்க்குத் தெரிவிப்பதாலும், சச்சிதானந்தமென்னுங் குணத்தைவிடாமல், குணியாகிய சைதன்யத்தை லட்சியிப்பது விடாதலட்சணை யெனப்பெயராயிற்று. தேவதத்தனென்னும் புருடன் பொருட்செல்வத்தை விரும்பிச் சீவாத்மாக்களைச் சம்ரக்ஷணை பண்ணுநிமித்தமவர்களில் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்யுந்தொழிலுக் குரியவனுகக் காசியிற் சிலகாலம் ராஜனுக விருந்தான். அஃதூழ்வலியால் நீங்கப் பின்பு அருட்செல்வத்தை விரும்பித் தன்னைச் சம்ரட்சணை பண்ணுநிமித்தந் தனக்குச் சத்துருவாகிய காமக்குரோதாதிகளை நீக்கும் வைராக்யமும், விவேக முதலியவைகளைக் காக்கும்பரிபாலனமுஞ் செய்தற்குரியவனுகத் தென்றிசையிற் சிதம்பரத்திற் சம்ந்யாசியானுன். என்று சொன்னவிடத்து; ராஜவேடமும், அந்தக்காலமும், அந்தவிடமும் இந்தச் சம்ந்யாசவேடமும், இந்தக்காலமும், இந்தவிடமும், தேவதத்தனையன்றி யில்லாமையால்; ராஜனே! சம்நியாசி, சம்ந்யாசியே ராஜன். என்று சொல்லவேண்டுமல்லவா? அப்படியானுலும், குடும்பத்திற் சம்ந்யாசமும் சம்நியாசத்திற் குடும்பமும், ஒன்றிலொன் றில்லையேனும், இவ்விரண்டிலுந் தேவதத்த னொருவனே யிருக்கின்றுன். இவ்விரண்டுவேடமுந் தேவதத்தனல்ல, தேவதத்தனையன்றி யிவ்விரண்டுவேஷமுமில்லை, தேவதத்தன்மாத்திர முண்மை. ஏனைய வேஷமுதலிய வனைத்து

(தெரிவுதெரியாது.)

விஞ.—சொரூபந் தெரியாமல் தெரிந்ததெப்படி யென்றால்?

விடை.—நான் சொன்னது தெரிந்துதா? தெரியவி

ங்கற்பனை. இவன் அவையல்லனாதலின், விட்டும். இவனையன்றி யவையில்லையாதலின், விடாதும் இருப்பதுபற்றி இஃது விடாதது. இதுபோலச், சதோதயமாக விளங்கிய பரவஸ்துவே, தனது லீலாவிபூதியால், தனது அம்சமாகத் தோற்றிய ஜீவசமூகங்களைச் சம்ரக்ஷணை செய்யுநிமித்தம் அவர்க ளுள்ளத்தினிடத்திருந்து அவர்களை வருத்துங் காமமுதலிய துர்க்குணங்களைக்கெடுத்து, விவேகமுதலாகிய சத்குணங்களை வருவித்து, அதனால் தானாக விளங்கச்செய்யும் ஸ்ருஷ்டியாதி தொழிலுக்குரிய ஈஸ்வர வேடங்கொண்ட பிரமமாகவும், இந்த ஜீவாத்மாக்களிடத்துத் தானிருப்பதைத் தானாகவே காண்பதினிமித்தந் தானே தனித்தனியே தன்னைவிசாரித்துச் சிந்தனைசெய்யுந் தொழிலையுடைய ஜீவவேடங்கொண்ட கூடஸ்தனாகவும், பிர்ம்மமே கூடஸ்தன், கூடஸ்தனே பிரம்மமெனக் காணும்போது, அவனிவனென்னுந் த்வைதநீங்கி ஸ்வயஞ்சைதன்யமாகவும் விளங்குமாதலின்; அவ்வெதார்த்த ஸ்வரூபத்தை யுள்ளபடி யறிவதே விட்டுவிடாத லட்சணையெனப்பெயராயிற்று. இப்படிச்சொல்லிய மூன்றுலக்ஷணைகளை மோக்ஷவிருப்ப முடையவர்கள் மனனஞ்செய்தால் விருத்தமாவது, விரோதமாகிய தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகளால் விளையுந் துன்பநீங்கி யுள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தனது ஞானனுபவம் விளங்குமென் றபிப்ராயம்.

ல்லை; ஏன் தெரியவில்லை, அவ்விடத்தில் விருத்தியில்லை, தெரியவில்லை. தெரியவில்லையென்று தெரிந்துதா? தெரிந்துது, இவ்விடத்தில் விருத்தியுண்டாயிற்று. தெரியவில்லையென்றது சொரூபம், தெரிந்தது விருத்தி, தெரியாமற் தெரிந்தது; துரியவிருத்தி யுண்டானபோதென வறிக. (௩அ௦)

வினு.—இன்னம் - எல்லாருக்கும் அனுபூதி ஏகமென்பதெப்படியென்னில்?

விடை.—உன்னை உனக்குத் தோன்றுகிறதா வென்றால்? தோன்றவில்லையென்று சொன்னான். தோன்றாதது தோன்றியதோ? இல்லையோவென்று கேழ்க்கத் தோன்றாதது தோன்றிற்றென்றான். ஆகையால், எல்லாருக்கும் அனுபூதி ஏகமென வறிக. (௩அக)

வினு.—இன்னம் - தன்னை அறியாமல் அறிகிற விளக்கமாவதெப்படி யென்னில்?

விடை.—உன்னைத் தெரிந்துதா? தெரியவில்லை. தெரியவில்லையென்று தெரிந்துதா? தெரிந்துது. ஏன் தெரியவில்லை, அவ்விடம் விருத்தியில்லாத படியால்- தெரியவில்லை, யது தெரிவான படியினாலே தெரியாத தான்தெரிந்துது, அது தெரிவுமல்ல, தெரியாமையுமல்ல, தானாயிருக்கிறதென வறிக. (௩அஉ)

வினு.—இன்னஞ் சொரூபந் தெரியாமல் தெரிந்ததெப்படி யென்னில்?

விடை.—நான்சொன்னது தெரிந்துதா? தெரியவில்லை, தெரியவில்லையென்று, தெரிந்துதா? தெரிந்துது தெரியவில்லையென்று சொன்னது தெரிந்திருந்தும், தானா யிருக்கின்றது மூன்றிடமுந் தானாயிருக்கிறது. அறி

கிறேமென்று மேலே யொரு போதமில்லை. அறியவி ல்லையென்றொரு மயமுமில்லை, கேட்ட சப்தத்திலும் தா னப்படியிராவிட்டால் சொன்னசப்தந் தெரியாதெ ன வறிக. (௩அ௩)

வினு.—ஸ்புரிப்பி லியல்பாக அழிவது மியல்பாகவி ளங்குவது மெப்படி யென்னில்?

விடை.—விஷயமு மிந்திரியமும், கரணமும், சீவ னும், அதுவதுவாய்க்கெடச் சத்தியமும் ஞானமும் அனந்தமும், ஆனந்தமும், அதுவதுவாய் விளங்குகிற தென வறிக. (௩அச)

(அதுவதுவாய்க் கெடுவதுந் தான்தானய் விளங்குவதும்.)

வினு.—இன்ன மதுவதுவாய்க் கெடுவதும் தான் தா னய் விளங்குவது மெப்படியென்னில்?

விடை.—தானயிருக்கிற விளக்கவியாபகம் அப்படி யே யிராமல் ஸ்புரிக்கும், ஸ்புரிக்கிறபோது விருத்தந் தன்னையறியாமலே நீங்கும், அவிருத்தமான மௌன துரியனும், அதீததுரியனு மத்தியில் தானய் விளங்கிப் போமென வறிக. (௩அரு)

வினு.—இன்ன மதுவதுவாய்க் கெடுவதுந் தான்ற னய் விளங்குவது மெப்படியென்னில்?

விடை.—தாம்பூலத்திற் பலமிருக்கிறதென்று விரு த்தி நாடிக்கொண்டு பகிர்முகத்தில்வந்து கெட்டுது, அந்தர்முகவிளக்கந் தன்னைக்காட்டி விளங்கிப் போயிற் றென வறிக. (௩அசு)

வினு.—இன்னம் - அதுவதுவாய்க் கெட்டுப்போகத் தான்றனய் விளங்குவ தெப்படி யென்னில்?

ல்லை; ஏன் தெரியவில்லை, அவ்விடத்தில் விருத்தியில்லை, தெரியவில்லை. தெரியவில்லையென்று தெரிந்துதா? தெரிந்துது, இவ்விடத்தில் விருத்தியுண்டாயிற்று. தெரியவில்லையென்றது சொரூபம், தெரிந்தது விருத்தி, தெரியாமற் றெரிந்தது; துரியவிருத்தி யுண்டானபோதென வறிக. (ஙஅ0)

வினு.—இன்னம் - எல்லாருக்கும் அனுபூதி ஏகமென்பதெப்படியென்னில்?

விடை.—உன்னை உனக்குத் தோன்றுகிறதா வென்றால்? தோன்றவில்லையென்று சொன்னான். தோன்றாதது தோன்றியதோ? இல்லையோவென்று கேழ்க்கத் தோன்றாதது தோன்றிற்றென்றான். ஆகையால், எல்லாருக்கும் அனுபூதி ஏகமென வறிக. (ஙஅக)

வினு.—இன்னம் - தன்னை அறியாமல் அறிகிற விளக்கமாவதெப்படி யென்னில்?

விடை.—உன்னைத் தெரிந்துதா? தெரியவில்லை. தெரியாவில்லையென்று தெரிந்துதா? தெரிந்துது. ஏன் தெரியவில்லை, அவ்விடம் விருத்தியில்லாத படியால்-தெரியவில்லை, யது தெரிவான படியினாலே தெரியாத தான்தெரிந்துது, அது தெரிவுமல்ல, தெரியாமையுமல்ல, தானாயிருக்கிறதென வறிக. (ஙஅஉ)

வினு.—இன்னஞ் சொரூபந் தெரியாமல் தெரிந்ததெப்படி யென்னில்?

விடை.—நான்சொன்னது தெரிந்துதா? தெரியவில்லை, தெரியவில்லையென்று, தெரிந்துதா? தெரிந்துது தெரியவில்லையென்று சொன்னது தெரிந்திருந்தும், தானா யிருக்கின்றது மூன்றிடமுந் தானாயிருக்கிறது. அறி

கிறேமென்று மேலே யொரு போதமில்லை. அறியவி ல்லையென்றொரு மயமுமில்லை, கேட்ட சப்தத்திலும் தா னப்படியிராவிட்டால் சொன்னசப்தந் தெரியாதெ ன வறிக. (௩அ௩)

வினா.—ஸ்புரிப்பி லியல்பாக அழிவது மியல்பாகவி ளங்குவது மெப்படி யென்னில்?

விடை.—விஷயமு மிந்திரியமும், காணமும், சீவ னும், அதுவதுவாய்க்கெடச் சத்தியமும் க்ஞானமும் அனந்தமும், ஆனந்தமும், அதுவதுவாய் விளங்குகிற தென வறிக. (௩அச)

(அதுவதுவாய்க் கெடுவதுந் தான்தானாய்
விளங்குவதும்.)

வினா.—இன்ன மதுவதுவாய்க் கெடுவதும் தான் தா னாய் விளங்குவது மெப்படி யென்னில்?

விடை.—தானாயிருக்கிற விளக்கவியாபகம் அப்படி யே யிராமல் ஸ்புரிக்கும், ஸ்புரிக்கிறபோது விருத்தந் தன்னையறியாமலே நீங்கும், அவிருத்தமான மௌன துரியனும், அதீததுரியனு மத்தியில் தானாய் விளங்கிப் போமென வறிக. (௩அரு)

வினா.—இன்ன மதுவதுவாய்க் கெடுவதுந் தான்றா னாய் விளங்குவது மெப்படியென்னில்?

விடை.—தாம்பூலத்திற் பலமிருக்கிறதென்று விரு த்தி நாடிக்கொண்டு பகிர்முகத்தில்வந்து கெட்டது, அந்தர்முகவிளக்கந் தன்னைக்காட்டி விளங்கிப் போயிற் றென வறிக. (௩அசு)

வினா.—இன்னம் - அதுவதுவாய்க் கெட்டுப்போகத் தான்றானாய் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை.—ஜாக்ரத்தி லீஸ்வரனு லுண்டான விஷய முஞ், சொற்பனத்தில் - ஜீவனு லுண்டாகிய போதமு ங்கூடிக் கெடுமிடத்துச் சாக்ராதீதத்தில் மயத்துவம் நீங்கின ஈஸ்வர சாட்சியுந் துரியத்தில் விருத்திநீங்கின ஜீவசாட்சியு மதுவது தானய், மத்தியத்தில் விளங்கிக் கொண்டிருக்கிறதென வறிக. (ரு௯௬)

வின.—இன்ன மதுவதுவாய்க் கெடுவதுந் தான்கெ டாமலே யதுவதுவா யிருப்பதுமெப்படியென்னில்?

விடை.—விருத்தியும் - விஷயமு மொன்றிலே யொ ன்று கெடுகின்றது. அதுவதுவா யிருந்த தான் கெட வில்லை. எப்படியென்னில்? மனதுபோயிற்று. மனதா யிருந்த தான் போகவில்லை, புத்திபோயிற்று, புத்தியா யிருந்த தான் போகவில்லை, சித்தம்போயிற்று, சித்த மாயிருந்த தான் போகவில்லை; ஆங்காரம் போயிற்று, ஆங்காரமாயிருந்த தான்போகவில்லை; இந்திரியம்போயி ற்று. இந்திரியமாயிருந்த தான்போகவில்லை; தேகம்போ யிற்று, தேகமாயிருந்த தான் - போகவில்லை. இப்படிச் சர்வத்துக்கும் அதுவதுவாயிருந்தால் தானில்லை, தானு யிருந்தா லவைகளில்லையென வறிக. (ரு௯௭)

வின.—இன்னம் அதுவதுவாய்க் கெடுவதும் அது வதுவாயிருந்து தான்கெடாமல் விளங்குவது மெப்படி யென்னில்?

விடை.—ஸ்தூலத்தில் விராட்டு கூடும்போதும், சூ ட்சுமத்தி லிரண்ய கெற்பங்கூடும்போதும், அவித்தை யில் மாயைகூடும்போதும், ஜீவசூனிய வியாபகபூரண த்தில், ஈஸ்வரசூனிய வறிவுபூரணங் கூடும்போதும்; ஒ ன்று ஒன்றிலே கூடும்போது * உடைந்து அகத்தில் விள

---

* உடைந்தென்பது வேறாய்ப் பிரிந்து என்றர்த்தம்.

க்கமும்; இதந்தில் வியாபகமும் மத்தியிற்கூடித் தானு க விளங்கிப்போமென வறிக. (ருகூஅ)

வினு.—இன்னங் - தானதுவதுவா யிருப்ப தெப்படி யென்னில்?

விடை.—பருப்புடனே பொசிக்கிறபோது பாலுடனே சாப்பிடும்போது, கீரையுடனே சாப்பிடுகிறபோது பின்னுங் கூழ்மருந்து இவைகள் சாப்பிடுகிறபோது, நினைக்கும்போது, பார்க்கும்போது, காரண காரியத்துக்கு நடுவே தானிருந்து அந்தந்தச் சுகந் தானுகவே இருக்கின்றதெனவறிக. (ருகூகூ)

(அதுவதுவாய் விளங்குகிறது.)

வினு.—அதுவதுவா யென்ப தெப்படி யென்னில்?

விடை.—அதுவதுவா யிருக்கும்போதே தானு மானந்தமாத்திரமென வறிக. (ச00)

வினு.—இன்னம் - இருக்கிறதே யப்படி யப்படியா யிருக்கின்றதே யல்லாமல், அப்படியப்படியென் ருென்றல்ல வென்ப தெப்படியென்னில்?

விடை.—நினைக்கிறது அறிகிறது கேட்பது பார்ப்பது, யிருப்பது, அப்படியப்படியா யிருந்த தல்லாமல்; அப்படியப்படியென் ருென்றல்லவென வறிக. (ச0க)

வினு.—இன்னம் - இடைவிடாமல், சொரூபத்தை நினைப்பது எப்படி யென்னில்?

விடை.—அதுவதுவாக விளங்குகையே, இடைவிடாது நினைத்தலென வறிக. (ச0உ)

(மூன்றுகாலமுஞ் சொரூபம் ஒருபடித்து.)

வினு—பூத பவிஷ்ய வர்த்தமானகாலத்திலே சத்தி

ருக்கின்றதென்பது மாயையில்லையென்பது, மெப்படியென்னில்?

விடை.—அஞ்ஞான திசையிலுஞ் சாட்சாத்கார திசையிலுஞ் சத்திருக்கிறதென்றும், மாயை யில்லையென்றும் போதமில்லை; வர்த்தமானகாலத்தில் சத்திருக்கிறதென்றும், மாயை யில்லையென்றும், விவேகிக்கத் தக்கதாயிருக்கின்றது. சத்தாயிருக்கிறது மூன்றுகாலத்திலு மிருக்குமென்றும், மூன்றுகாலத்திலு மிருக்கின்றது யெல்லாவற்றிலு மிருக்குமென்றுந் தோற்றுகிறது. அறியாமைகாலத்திலே சத்திருக்கின்றதற்குப் பிரமாணம், சத்தாவது - உள்ளது, விஷயமாவது-இல்லது, இல்லது - முதன்மையானால்; உள்ளது தோன்றாது, உள்ளது - முதன்மையானால், இல்லது தோற்றாது; ஆதலால், அந்தக்காலத்திலு முள்ளது முதன்மையா யிருப்பது இயல்பாகையாலும், விஷயமுந் தோற்றலு மில்லையாதலாலும், * இதற்குக்காரணமாகிய மாயையு மில்லை. வர்த்தமானகாலத்திலும் சத்துமுதன்மையாய்க் காட்சிப்படுகையால், தோற்றலுமில்லை, விஷயமுமில்லை, யாகையா லிதற்குக் காரணமான மாயை யில்லை யென்பது வர்த்தமானகாலத்திற் பிரத்தியட்சமான படியால், பூர்வகாலத்திலும் - வர்த்தமானகாலத்திலும் - மாயை யில்லாமலும், சத்திருக்கவும் - பிரத்தியட்சமாகத் தோற்றுகின்றபடியால், பவுஷ்யகாலத்திலு மாயை யில்லையென்பதற்கும் சத்திருக்கிறதென்பதற்கும் சம்சய மில்லையென வறிக. (ச0௬)

---

* இதற்குக்காரணமாகிய மாயையுமில்லையென்பது, * "யாநவித்யதே வஸ்துத:—ஸாமாயா" இதன்பதப்பொருள் - யா - யாதொன்று, வஸ்துத:—வா

ஸ்தவமாக, நவித்யதே - இல்லையோ, ஸா - அது, மாயா மாயையென்று பெயராயிற்று. அங்ஙன மாயினும், ஆகாசமுதலிய பஞ்சமகாபூதங்களாலாகிய அண்டங்களில் ஜீவர்கள் சஞ்சரிப்பதாலிவைகளுக்குத் திருஸ்யப்ரபஞ்சமெனப் பெயராயிற்று. அபஞ்சீக்ருத பஞ்சபூதங்களாலாகிய ஸ்வர்க்கலோகமுதலிய அண்டங்களில் தேவர்கள் சஞ்சரிப்பதாலிவைகளுக்கு அதிருஸ்யப்ரபஞ்சமெனப்பெயராயிற்று. இப்படிச்சொல்லியதிருஸ்யாதிருஸ்ய ப்ரபஞ்சங்களுக்குக் காரணமாயுள்ளது மாயையாதலானும்; லாந்தர் குளோப்பு முதலியவைகளில் தீபம்வைத்தால் மறைப்பில்லாம லிருக்கிறதுபோல, அகண்டவடிவமாகிய ஈஸ்வராதிகளை, மாயை மறைக்காமலும், மோகத்தை விளைவிக்காமலு மிருப்பதால், அமோககாரணியென்று சொல்லப்படும். ஈஸ்வரனது நேத்ரமாகிய சந்திரசூரியாக்நியாலும் லாந்தர் முதலிய ப்ரகாசங்களாலும், பகலிலு மிரவிலும் உயிர்கள், பாகிய வியவகாரஞ் செய்கின்றார்கள். இப்படியே, உள்ளத்தின்கண் பிரகாசமயமாக ஈஸ்வர னிருப்பதாலும்; கடத்தினுள் வைத்த தீபம் வெளியே தெரியாம லெப்படிமறைந்திருக்கிறதோ? அப்படிப்போல, ஜீவர்களுடைய தேகத்தினுள் ப்ரத்யகான்மாவாகிய ஞானப்ரகாச மிருந்தும், அதைத்தெரியாமல் மாயாவித்தை மறைத்திருப்பதாலும், மயக்கத்தை விளைவிப்பதாலும்; மோககாரணியென்று சொல்லப்படும். இப்படிச் சொல்லிய பொய்மை அறிவாகிய மாயாவித்தை யெப்படிக் கெடுமென்றால் [illegible]த்யக்ஷம், அநுமானம், ஆகமம், உபமானம், அருத்தாபத்தி, அபாவம், சம்பவம், ஐதீகமென்னும் பிரமாணங்களைக் குருமுன்னிலையில் விசாரணை செய்வதாலுண்டாகும், மெய்மை அறிவினால்மித்தியாஞானமாகிய

வினு.—இன்னங் காலத்ரயத்திலு மயமில்லாமல் விளக்கமா யிருப்ப தெப்படி யென்னில்?

விடை.—செல்காலந் தானுயிருந்தது, நிகழ்காலம்-ஸ்புரிப்பு வருங்காலம், பலத்தில் மயம், மத்திய நிகழ் காலத்திற் ருனுயிருக்கிற விளக்கவ்யாபகம் விளங்கினுல், செல்காலமும் வருங்காலமும், அப்படியே யென வறிக. (சOச)

பொய்மை அறிவு நீங்கும்; அதுநீங்க, அதுகாரணமாகப் பிறக்கும் காமவெகுளிமயக்கமாகிய முக்குற்றமகலும்; அவையகல, அவற்றின் காரியமாகப்பிறக்கும் புண்ணியபாவங்களாகிய பிரவிருத்திநீங்கும். அது நீங்க, அதின்காரியமாகிய பிறப்பு நீங்கும். அது நீங்கவே, அனேக ஜன்மங்களா யனுபவித்த துன்பமகலும், அத்துன்ப மில்லாமையே; அபவர்க்கமென்றும், நிஸ்ரேயசமென்றும், கைவல்யமென்றும், நிர்வாண மென்றுஞ் சொல்லப்படுகிற மோக்ஷமாதலால், அவ்விதமா யுள்ள மோக்ஷத்தில் மனமுதலிய காணங்களிருந்தாலல்லவா? மாயையுண்டென்றும், இல்லையென்றுஞ் சொல்லலாம். மனமேயில்லாதவிடத்து எப்படி வியவகாரஞ் செய்யக் கூடும். கூடாமையால், மாயையில்லையென்று ஏன்சொன்னுரென்ருல்; மாணுக்கன் - தேகேந்திரிய ப்ரபஞ்சமென்னு மயக்கத்தில் கட்டுண்டிருப்பதால், அதுகெடும்பொருட்டுக் குருவானவர், கருணைவைத்துப் பகிர்முகமாகிச் சகலவேதாகம புராணுதிகளிலும் மாயை - இல்லையென்றும், தானுகிய பாவஸ்துவே யிருக்கிறதென்றுங் கூறினுர். இதை விரிக்கிற் பெருகுமாதலின், சுருக்கமாகச் சொன்னதென் றறிக.

வினா:—மூன்றுகாலமுஞ் சொரூபஸ்வபாவ மெப்படி யென்னில்?

விடை:—பூதகாலத்திற் பொய் மெய்யென்று * பகுப்பில்லை, பவுஷ்யகால சாட்சாத்கார திசையி லதுவுமில்லை; மத்தியமான வர்த்தமானகாலத்தில் * மெய்யுதயமான போது பொய்யான ப்ரபஞ்சந்தோன்றிக் கெட்டதில்லை, விளக்கமான மெய் யெல்லாமா யிருந்தபடியால், காலமில்லையென வறிக. (சுOரு)

வினா:—இன்ன மூன்றுகாலத்திலும் துரியம், விளங்குவதும் ப்ரமீதியாய்ப் போவது மெப்படி யென்னில்?

விடை:—செல்காலம் வருங்காலம் தோற்றன் மாத்திரம், நிகழ்காலம் நசித்து விளங்குவது துரியம், மத்திய நிகழ்கால[illegible] தடையானால், ப்ரமீதியுண்டாய்ச் செல்கால [illegible]றியாமையும், வருங்காலம் விஷயமு மாமென வறிக.

---

* பகுப்பாவது, நித்யாநித்ய முதலிய வஸ்துக்களைப் பிரித்துப் பார்ப்பது என்றர்த்தம்.

* "மெய்யுதயமானபோதென்பதற்கு, சத்யஞ்ஞானாநந்த வடிவமா யாதொரு ஞானஸ்வரூபமுண்டோ? அந்த ஞானம் உதயமானகாலத்தில் என்பதுபொருள். எப்படி ஞானோதய மாகுமெனின், மாணாக்கனது திரவியத்தை யபகரித்துப் போதிக்கின்ற பொய்க்குருவை விரும்பாமல், மெய்க்குருவைச் சரணுகெதி யடைந்து அவர் சொல்லுகிற வாக்யப்படி நடந்து, மனங் குவிந்து அன்பு கனிந்து நிஷ்டைகூடிப் பார்க்குங்கால், பூர்வஜன்மத்திற் றவஞ்செய்து முடிந்தவர்களுக்கு அந்தக்ஷணமே தனது ஞானோதயமாகும். அத்தவமில்லாதவர்களுக்கு

உடனே ஞான முதயமாகாவிடினும், சதாகாலமும் ஸ்ராவணம் மனன முதலியவைகளைச்செய்தால், கிரமக்கிரமமாக ஞானானுபவந் தோன்றுமென்க. பொய்யான ப்ரபஞ்சந் தோன்றிக் கெட்டதில்லை யென்பது, சூரிய னுதயமானபோது இருள் தோன்றிக் கெட்டதில்லை என்று சொல்வதுபோல, மெய்யான ஞானசூரிய னுதயமானகாலத்து, பொய்யே வடிவாயிருத்தலி னில்லாததாகிய வுலகமானது, உண்டாகி நாசமாகவில்லை என்றாயிற்று. அங்ஙனமானால், ப்ரபஞ்சங் கண்ணுக்குத் தோன்றுகிறபடியாலும், சராசரங்களாயுள்ள யெழுவகைத் தோற்றங்கள் நாசமாகின்றனவாதலாலும், கிரந்தகர்த்தா சொன்ன வாக்யத்திற் சிலருக்குச் சங்கை வருமென்னில்; ப்ரபஞ்சம் யாருக்குத் தோன்றிக் கெட்டதில்லை, யாருக்குத் தோன்றிக் கெடுகின்றது, என்றாலோசிக்குமிடத்து: கர்மி, பக்தன்-முமுட்சு-அப்பியாசி முதலானவர்கள் தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகளோடு கூடியிருக்கின்றாராதலின், இவர்களுக்கு அபிமானமுள்ளபோது ப்ரபஞ்சந் தோன்றுகிறது, அபிமான மில்லாதகாலத்திற் கெடுகின்றது. ஞானநேத்ரமுள்ள அநுபவி ஆரூடர்களுக்குத் தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலிய வபிமானமில்லாமையாலும், பஞ்சபூத பௌதிகமாகிய ப்ரபஞ்சம் பிர்ம்ஹ ஸ்வரூபமாக விளங்குகின்றமையாலும், அவ்விதமான தனது ஞானப்ரகாசத்திற் காரணகாரிய சமூகங்க ளில்லாமையாலும், உலகந் தோன்றிக் கெட்டதில்லையென்க. ஆத்மா சர்வமும் பரிபூரணமாக வியாபித்திருப்பதால்; தோன்றல் கெடுத லிரண்டும் ஆத்மாவின் தர்மமா? ப்ரபஞ்சத்தினுடைய தர்மமாவென்னில்; ப்ரபஞ்சம் தன்னையும் அன்னியத்தையு மறியாதாதலின்

ஜடம், ஜடத்திற்குத் தோன்றல் கெடுத லிரண்டுமில்லை, ஜீவன் தன்னையு மன்னியத்தையு மறிவானாகையால் சித்து, ஜீவசங்கற்பமான மனமுண்டானா லுலகந் தோன்றுகிறது, மனமில்லாவிடின் உலகம் மறைகின்றது. இங்ஙனந் தோன்றலும் மறைதலும் மனோவிகார தர்மமேயன்றி, ஆத்மதர்மமல்ல என்பதற்குப் பிரமாணம் "என்றுமிருந்தபடி யிருப்ப தியல்பேயென்னு மொருவேதம்" என்பது எக்காலத்திலும் சிவஸ்வரூபமாய் ஒரு படித்தாய்ப் பிரகாசித்துக்கொண் டிருந்தவண்ண மிருப்பதே அதின் றன்மையென்று ஒருவேதஞ் சொல்லுகின்றதென்பதாம். எனவே, சிவமெனினும் ஆத்மாவெனினும் ஒரு பொருளென்றாயிற்று. சிலர் ஆத்மாவேறு சிவம் வேறெனச்சொல்வர், அங்ஙனங்கூறக்கூடாது. ஏனெனில், ஆத்மா என்பது ஜீவாத்மா அன்று, சர்வ வியாபகமாயிரா நின்ற பரமாத்மா, சிவமென்பது ஸ்வயம்பிரகாசமான மோக்ஷவடிவம், அதுவும் சர்வவியாபகமாயுள்ளது. எது ஸ்தாவரஜங்கமமாகிய சகலத்திற்கும் இடங்கொடுத் திருக்கிறதோ? அதுவே சர்வவியாபகம்; அது ஒன்றென்று சொல்லப்படுமன்றி, இரண்டென்று கூறக்கூடாது. இரண்டெனச் சொல்லுதல் ஆகாச புஷ்பம்போலுமென்க. இந்த ஜடமான பூதாகாசம் சகல அண்டங்களுக்கு ஸ்தானமாயினும் சர்வசம்ஹாரம் வருகிறகாலத்தில் ஆகாசம் அஞ்ஞானத்தி லடங்கும், அஞ்ஞானம் ஞானத்தி லடங்கும், ஞானம் பரமாத்ம ஸ்வரூபமான தன்னிலடங்கும்; அங்ஙனமாகிய தனக்குமே லொன்றில்லாததாலும், தானே மிச்சமாயும் காலாதீதமாயு மிருப்பதாலும், என்றுமிருந்த படியிருப்ப தியல்பேயெனச் சொன்னாரென்றபிப்பிராயம்."

வினு:—இன்னங் காலத்ரயத்திலும் அனுபூதியாய்த் தான் விளங்குவ தெப்படியென்னில் ?

விடை:—யாதொன்றைக் கேட்டால் கேளாதது கேழ்க்கப்படுகின்றது, கேழ்வியில் நிறைவானுல் நிகழ்காலம் பூர்ணமாய்ச் செல்கால மறியாமையும், வருங்காலம் விஷயமு மிறந்து மூன்றுகாலமுந் தானுய் விளங்குமென வறிக. (௬0எ)

வினு:—இன்ன மூன்றுகாலமுஞ் சொரூபவிளக்க மென்ப தெப்படி யென்னில் ?

விடை:—மத்தியஸ்தசொரூபம் விளங்கி மோகம் நீங்கினுல், அறியாமை காலத்திற் போதமில்லை, அத்வைதம் சாட்சாத்கார காலத்திலும் போதமில்லை, அத்வைதம் நிகழ்காலத்வைதம் போதத்தினு லதி லனுபூதி விளங்குகிறபடியினுலே யறிகிற தர்மமில்லை ; ஆகையால், மூன்றுகாலமுஞ் சொரூபவிளக்கமே யென வறிக. (௬0அ)

வினு:—இன்னம் நிகழ்காலத்தில் முன்னும் பின்னும் விளங்குவ தெப்படியென்னில் ?

விடை:—நிகழ்காலத்தில் விளக்கமாய் விளங்கினு லறியாமையுமல்ல, அறிவுமல்ல, முன் தானுயிருந்ததும்; பின்னனுபூதியும், உன்னிடத்தில் விளங்குகிறதென வறிக. (௬0௯)

(மூன்றிடமும்ஒரேபடித்து.)

வினு:—மூன்றிடமும் ஓரேபிரகார மென்ப தெப்படி யென்னில் ?

விடை:—நித்திரையசதியில் வாசனையிற்செல்லாமல், வியாபகமாய்த் தானே துரியனைக் கொடுத்தாற் பூர்ண

விளக்கமாகவே யிருக்கும். சுழுத்திமயம் போயிற்று, சொற்பனங்கண்டு விழித்தவுடனே யிப்படி யெல்லா மானது தானென்றுகண்டால், சொற்பனம் போயிற்று ஜாக்ரத்தில் துரியனைக்கொடுத்துக் கரைத்தால் ஜாக்ரம் போயிற்று; மூன்றிடமும் ஓரேபிரகாரமாய் விளங்குகின்றதென வறிக. (சகO)

(மூன்றுதிசையிலும் நிரைவு.)

வினா:—மூன்று திசையிலும் நிரைவெப்படியென்னில்?

விடை:—எதிர்விஷயத்திலும் உள்ளேயறிந்த வறிவிலும் நிறைவு, இப்படியும் அப்படியு மிருக்கிறதென் றறிந்த மத்திய அறிவில் நிறைவு, இது ஏகதேசத்தில் ஜீவதிசை, இப்படிச் சமஷ்டியான அகண்டாகார அகமித மத்தியமான மூன்றிடமும் நிறைவாகியது, அகண்டவறிவி லீசதிசை; இப்படி யப்படியான மத்தியம் பிர்ம்மதிசை; துரியவியாபகத்தில் நிறைவென வறிக.

(ஒன்றுமல்ல இரண்டுமல்ல மூன்றுமல்ல.)

வினா:—ஒன்றுமல்ல இரண்டுமல்ல மூன்றுமல்ல வென்பதெப்படியென்னில்?

விடை:—பழுதை - க, பாம்பு - க, பார்க்கிறவன் - க, ஆக—ந; மூன்றானும் பார்க்கிறவன் ஒன்றாய்த் தானே பார்ப்பனென்ன? அப்போ இரண்டாயிற்றே யென்ன, ஒன்றைப் பார்க்கிறபோது ஒன்றைப் பார்க்கிறேனென்கிற போதமில்லை, ஆகையால், ஒன்றுமல்ல, இரண்டுமல்ல, மூன்று மல்லவென வறிக. (சகஉ)

வினா:—இன்னம் ஒன்றாயிருந்து மிரண்டாய்! ஒன்றான தெப்படியென்னில்?

விடை:—தானுயிருப்பதும் ஸ்புரண விளக்கமுமென வறிக. (சகங)

வினு:—ஒன்ருயு மிரண்டாயும் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை:—பசுவாயிருந்து பதியென்றுசொன்னு விரண்டாம்,ஒன்ருகிறசொருபத்தில் ஒன்ருகிற போதம்விளங்கினுல், ஒன்றென வறிக. (சகச)

வினு:—இன்ன மனந்தமு மத்வைதமுமாய் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை:— தானேதானு யிருக்கிறபடியினுலே ஏகத்வமில்லை, தானேதானுய் விளங்குகிறபடியினுலே த்வைதமில்லை; தானே விளக்கவியாபக மானபடியினுலே திரிபுடியில்லை; தன் விளக்கவியாபகமே நித்தியமானபடியினுலே * யபாவம் நாலுமில்லை, தானே வியாபகவிளக்க நித்தியபூர்ண மானபடியினுலே * பஞ்சவிருத்தியில்லை; இவன் போகம் சகச சமாதியானபடியினுலே * ஷட்சமாதி யில்லை, மேற்சொன்ன ஆறிலுங் கூடியிருந்து மேகதேசப் படாதபடியினுலே * சப்தாவஸ்தை யில்லை, இப்படி நவநவ அனுபவமாயிருந்தும் தன் வியாபக முள்ளதாகையால், * அஷ்டவித ஆனந்தமில்லை; இதி லைந்து சமாதி சத்தாவரணநிவர்த்தி இரண்டுசமாதி * சித்தாவரணநிவர்த்தி ஒருசமாதி ஆனந்தாவரணநிவர்த்தி; இப்படி யனந்தவிதமாய்ப் பார்த்தாலும் விளக்கவியாபகமே யுள்ளதாகத் தான் விளங்குவது இயல்பென வறிக. (சகரு)

---

* அபாவம் நான்குவிதமாவன, ப்ராகபாவம்-ப்ரத்வம்ஸாபாவம்-அன்யோன்யாபாவம் - அத்யந்தாபாவம் என வருவன.

* பஞ்சவ்ருத்தியாவன,மனம்-புத்தி-சித்தம்-அகங்கா ரம்-உள்ளம்-எனவருவன.

* ஷட்சமாதியாவன, அந்தர்த் திருஸ்யானுவித்தசவி கற்பகசமாதி, அந்தஸ் ஸப்தாநுவித்த சவிகற்பக சமா தி-அந்தர் நிர்விகற்பக சமாதி-பாகிய த்ருஸ்யானுவித்த சவிகற்பக சமாதி-பாகிய சப்தானுவித்த சவிகற்பக சமா தி-பாகிய நிர்விகற்பக சமாதி; இவற்றுள், அந்தர்த் திரு ஸ்யானுவித்த முதலிய மூன்றும் அகத்திலனுசரித்து வருதலால் அந்தர்முக சமாதிஎனவும், பாகிய திருஸ்யா னுவித்த முதலிய மூன்றும் புறத்திலநுசரித்து வருத லால் பகிர்முகசமாதி எனவும் வருவன.

* சப்தாவஸ்தையாவன, சுபேச்சை-விசாரணை-தனு மானசி-சத்துவாபத்தி-சம்சக்தி - பதார்த்தாபாவனே-து ரியம்-துரியாதீதம், எனவருவன.

* அஷ்டவிதாநந்தமாவன, விஷயாநந்தம்-பிரம்ஹாநந் தம்-வாசனாநந்தம்-முக்கியாநந்தம்-நிஜாநந்தம்-ஆத்மாநந் தம்-அத்வைதாநந்தம்-வித்யாநந்தமென்பன.

* ஆவரணம்-மறைத்தல், சத்துமுதலிய மூன்றினியல் மை தெரியாது எவை மறைக்கின்றனவோ? அவைக ளே சத்தாவரண முதலியவைகளாம். இங்ஙனஞ்சொல் லிய மூன்றுவரணங்களையும் நாசமாக்கும் பொருட்டுச் சமாதி எட்டுவிதமாகச் சொல்லியிருப்பதனாலும், (சு) சமாதியின் பெயர் தெரிவித்திருக்கிறதன்றி இரண்டு சமாதிகளது நாமந் தெரியவில்லையாகையாலும், நிஸ்ஸங் கற்பசமாதி நிர்வாசனாசமாதி யிரண்டுடன் (அ) விதமெ னக்கொள்க.

(சகல வுயிர்களுமிருக்கிறது.)

வினு:—சகல உயிர்களுமிருக்கிற தெப்படியென்னில்?

விடை:—வெளியி லாகாரவானந்தமும் தானும், உள்ளே பாவனானந்தமும் தானும், இந்த விரண்டும் விட்ட பாவனாதீதத்தில் தானு மானந்தமு மிப்படியே சகலவுயிர்களு மிருக்கின்றனவென்றறிக. (சகசு)

வினு:—இன்னஞ் சொரூபத்தை விட்டுப்பிரிந்த வுயிரில்லையென்ப தெப்படியென்னில்?

விடை:—"பண்ணப்படாத உபசாந்த பதமே யெவர்க்கும் பற்றுகும்" எனவறிக.

(பொழிப்புரை.) நித்யமாகிய வுபசாந்தமானவிடமே யாவருக்கும் பிடிப்பாகும் என்பதாம். உபஸாந்தமென்பது, ஜாக்ரம், ஸ்வப்னமென்னு மிரண்டவஸ்தைகளிலுள்ள துன்பங்களை விட்டு நித்யப்ரளயமாகிய சுழுப்தியவஸ்தையில், ஜீவன்மாத்திரந் தனித்திருந்து அநுபவிக்கின்ற யாதொரு ஆநந்தமுண்டோ? அவ்வாநந்தம். அந்த ஆநந்தத்தை யறிந்தது அறிவு, அநுபவித்தவன் ஜீவன், ஆதலானும், ஜீவன் ஜாக்ரத்தில் மனமுதலாகிய கரணங்களுடன் கூடியவிடத்து விஷயவாசனையா லவ்வாநந்தத்தை மறந்து மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் எண்ணி வியவகாரஞ் செய்கின்றுனுகலாலும், நான் ஒன்றுந்தெரியாமற் சுகமாய்த் தூங்கினேனென்று சொல்லுகின்றுன். அப்படித் தூங்கினுல், தான் அறிந்த ஆநந்தத்தைச் சொல்லக்கூடுமா? கூடாது. அங்ஙன மறிந்த சுழுப்தி ஆநந்தத்தை விஷயவாசனையால் மறந்து நான் அறியவில்லை எனச்சொல்லுகிறு

னுதலின், இது வாசனாநந்த மெனவும், தினந்தோறுந் தோன்றிமறைவதா லநித்யமான ஆநந்தமெனவும், பிறவிக்கு வித்தாயிருப்பதாற் காரணதேகமெனவும், இந்த காரணசரீர மிருக்கிறபரியந்தம் ஜீவன் பிறப்பு இறப்பென்னுந் துன்பத்தி லகப்பட்டுக் காற்றாடி சுழல்வது போலச் சுழலுகின்றான். இவ்விதமாயுள்ள பிறவித் துன்பத்திற்கு விவேகிகள் பயமடைந்து தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகளா லுண்டான பற்றுக்களைத் தும் விட்டு, உபரதி வைராக்யம்பெற்று, சர்வாதாரமான தனது நித்யமாகிய ஆநந்தந் தோன்றுமிட மெவ்விடமோ? அந்தவிடமே சாஸ்வதமானதென்று உறுதியாகப் பிடிக்குமிடத்து, ஜாக்ரம் ஸ்வப்னமென்னு மிரண்டவஸ்தைகளிலுள்ள துன்பங்கள் சுழுப்தியவஸ்தையிலடங்கி ஆநந்தத்தை யநுபவிப்பதுபோல, வினைகாரணமாக உண்டாகின்ற அநேக ஜன்மங்களா னேரிட்ட பிறப்பு இறப்பென்னும் பெரியதுன்பங்க ணீங்கித் தானே தானாயும் நித்யமாயு மிராநின்ற தனது அகண்டப்ர்ம்ஹாநந்தமென்னும் உபசாந்தபதத்தி லிருப்பார்களென்றபிப்ராயம். (சுகன)

வினா:—இன்னஞ் சர்வ வுயிர்களுக்கு மனுபவ மெப்படியென்னில்?

விடை:—தானாயிருத்தலும் ஸ்புரணமு மென வறிக.

வினா:—இன்னஞ் சர்வவுயிர்களுந் தானாயிருத்தலில் * வெக்திபண்ண லெப்படியென்னில்?

விடை:—தானாயிருத்தலிற் போதமில்லை, வியஷ்டியிலேயே சமஷ்டியுந் தானாயிருக்கின்றது. ஒருவன் பாக

* வெக்திபண்ணல், எல்லாவுயிர்களிலுந் தானாயிருக்கிற அறிவைச் சுருதி யுக்தியா லாராய்ச்சிபண்ணுதல்.

ற்காய் கசப்புத் தானாய், ஒருவன் சர்க்கரை தித்திப்புத் தானாய், ஒருவன் பழருசி தானாய், சர்வவுயிரு மிப்படி யே தானாயிருக்கிறதில் தடையில்லை, அங்கங்கே * வெக் தியாகவேண்டும் தடையானவிடம் மயத்துவம், இவ் விடத்திலேயே வெக்தியாகவேண்டுமெனவறிக. (சுகக)

வினா:—இன்னஞ் சர்வவுயிர்களுக்கு மதுவது தானா யிருப்ப தொன்றென்ப தெப்படி யென்னில்?

விடை.—எந்த விஷயமாகினு மொருவிஷயம் புசிக் கும்போது அந்த விஷயமும் போதமுமில்லாமற் றானாய் விளங்குகிறபடியினாலே, ஒரு நிமிஷத்தில் அனந்த கோடி யண்டங்களிலே யநந்தகோடி ஜீவர்கள் அனந்த கோடி விஷயங்களை யனந்தம் பிரகாரமாய்ப் புசிக்கின்ற போது அந்தந்தப் போதமு மந்தந்த விஷயமும், இல் லாமையால், அனந்தத்திலுந் தானாய் விளங்குவது ஒன் றென்பதற்குச் சமுசயமே யில்லையெனவறிக. (சஉ0)

வினா:—இன்னஞ் சர்வவுயிர்களுந் தானாயிருக்கிற நிர திசயமும் போதமுதிக்கிற அவசரமும் எப்படியென் னில்?

விடை:—சர்வ அண்டங்களிலே யுண்டான எழுவ கைத் தோற்றமான - எண்பத்து நாலுலட்சம் ஜீவரா சிகளனைவரும் எந்த அவஸ்தையில் எந்த விஷயத்தில் இருந்தாலும் * தானாயிருக்கிற நிரதிசயமாகிற அனுப

---

* வெக்தி, அறிவு, ஞானம்; ப்ரக்ஞை, ஸ்புரணம் என் பன ஒருபொருள்.

* தானாயிருக்கிற நிரதிசயமாகிற அநுபவத்தி லிருக் கிறார்களென்பதற்கு, தேகேந்திரியப் பிரபஞ்சமுதலிய

வத்தி லிருக்கிறார்கள். நம்முடைய அனுபவமும் நாமும் எந்த அவஸ்தையில், எந்தவிஷயமா யிருந்தாலுந் தா... கவே யிருக்கிறோம், இப்படி யிருக்கிறோமென்கிற போ... தமில்லை, போதமுண்டாகிறவித மிந்தவிஷயத்தி லின்... முண்டென்று உதிக்கிறதென வறிக. (சூஉக)

அபிமானமின்றித் தானேதானா யிராநின்ற நிரதிசயமென்னும் பிர்ம்ஹாநந்தத்திற் சகலமானவர்களு மிருக்கின்றார்களென்பது பொருள். நிரதிசயம்-அதிசயமின்மை அதிசயம்-ஆச்சர்யமாகிய பஞ்சேந்திரிய விஷயசுகத்திற் பலரும் முழுகி யிருக்கிறார்களன்றிப் பிர்ம்மாநந்தத்தி லிருந்தாற் பிறவிவராது. யாவரும் பிறவி யெடுத்திருப்பதால், கிரந்தகர்த்தா சொன்ன வாக்யத்திற் பலருக்குஞ் சங்கைநேரிடும். இதற்குச் சமாதானமாவது யாதெனின்; நான் தான்-நீதான்-அவன்றான்-அவர்தான்-அவள் தான்-அதுதான், கடந்தான்-படந்தான்-மரந்தான்-மலை தான்-ஜகந்தான்-ஜலந்தான் - அக்நிதான் -வாயுதான்-ஆகாசந்தான், என்று சொல்லுமிடத்து; நான்-நீ-அவன்-அவர்-அவள்-அது-கடம்-படம்-மரம்-மலை-ஜகம்-ஜலம் - அக்நி-வாயு - ஆகாசம், என்பனவிசேஷணம். தான் என்பது-விசேஷியம். விசேஷணம் ஜீவர்களாதலாற் பல பேதமாயிருக்கிறார்கள். விசேஷியம் அபேதமாகிய தானாதலின்; ஒன்றாயிருக்கின்றது. உற்பத்தி நாசமுள்ளதாகையால் விசேஷணம் பொய். உற்பத்தி முதலிய கற்பனையாவுங் கடந்து தானேதானா யிருப்பதாகலின், விசேஷியம் மெய். இதுவுமன்றி, யோனி நான்குவிதமாயிருக்கும். அவையாவன; பையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது சாயுஜம், முட்டையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது அண்டஜம், வியர்வையிடமாகப் பிறப்பது சுவேதஜம்,

பூமியிடமாகப் பிறப்பது உத்பிஜம் என்பனவாம். தோற்றம் ஏழுவகையா யிருக்கும், அவையாவன ; தேவர்-மானுடர்-மிருகம்-பக்ஷிகள்-ஊர்வன-நீர்வாழ்வன-ஸ்தாவரங்கள் என்பனவாம். ஜீவபேதங்கள் அளவில்லாதனவாயிருப்பினும் (அசு) விதமாயிருக்கும்.

அவையாவன; தேவபேதம் பதினறுலக்ஷம், மானுடபேதம் ஒன்பதுலக்ஷம், மிருகபேதம் பத்துலக்ஷம், பக்ஷிபதம் பத்துலக்ஷம், ஊர்வனபேதம் பதினேருலக்ஷம், நீர்வாழ்வனபேதம் பத்துலக்ஷம், ஸ்தாவரபேதம் பதினெட்டுலக்ஷம் என்பனவாம். பின்னும், ஆகாசத்தில் நிறைந்துள்ள அணுக்களை இத்தனையென்றெண்ணி அளவிடக் கூடாததுபோலச், சிதாகாசத்திற் பரமாணுவடிவாயிராநின்ற ஜீவர்களை யிவ்வளவென் றெண்ணி நிச்சயிக்கக்கூடாது. ஆதலின், ஆகாசந் தெரிகிறதுபோலச் சிதாகாசந் தெரியவில்லையென்னில்; பூதாகாசம் ஜடமாதலின் ஜடமான தேகத்ருஷ்டி யுடையவர்களுக்குத் தோற்றும், சிதாகாசம் சித்ஸ்வரூபமாக விளங்குகின்றமையின், சித்தான ஞானத்ருஷ்டி யுள்ளவர்களுக்குத் தோன்றுமாதலானும்; ஆகாசத்தில அளவில்லாத அண்டங்கள் கற்பனையாக இருக்கின்றன. அதுபோலச், சிதாகாசத்தில் அளவின்றிய பூதாகாசங்கள் பொய்யாக ஸ்ருஷ்டித்திருக்கின்றன ஆதலானும், இருக்கிறது சிதாகாசமேயென்க. அங்ஙனமிருக்கிற சிதாகாசம் என் கண்ணிற்குத் தோன்றவில்லை யென்றால்; பிறவிக்குருடர்க ளிருக்கின்றவூரில் கோடிசூரியர்கள் இராப்பகலின்றிப் பிரகாசித்தாலும், குருடர்களுக்குச் சூரியப்ரகாசந் தெரியாததுபோலும், கோட்டானென்னும் பக்ஷிக்குப் பெரிய நேத்ரமிருந்துஞ் சூரியனைப்பார்த்தா லெப்படி

பிருளாகத் தோற்றுகிறதோ அப்படிப்போலும், சகல
வுயிர்களுக்கு உள்ளும்புறம்பும் ஞானசூரியன் சதாகால
மும் பிரகாசித்தும்; அந்த ஞானத்தைப் பார்க்கக்கூடா
மல் அஞ்ஞானமென்னு மிருள் மூடியிருப்பதனாலும்,
சிதாகாசந் தோன்றவில்லை. சிதாகாசமாவது சிதம்பரம்,
அல்லது ஞானாகாசமென்றாயிற்று. அவ்வித ஞானாகா
சம் ஞானநேத்ர முள்ளவர்களுக்குத் தோன்றும், ஊன
நேத்ர முடையவர்களுக்குச் சிதாகாசமே பூதாகாச
மாகத் தோற்றுகிற தாகையால், பூதாகாசத்திலுள்ள
அண்டங்களையும், அவ்வண்டங்களிலுள்ள ஜீவர்களையு
மித்தனையென்றெண்ணி அளவிடக்கூடாதல்லவா, அங்
ஙன மளவில்லாதனவா யிருக்கிற நானென்னும் வுயிர்
கள் விசேஷணம்; தான் என்னும் ஆத்மா விசேஷியம்.
இங்ஙனந் தானாயிருக்கிற நிரதிசயானுபவத்தி லெல்லா
வுயிர்களு மிருக்க, அதை யேனறியவில்லை யெனின்;
பாற்கடலில் வாழுமீன்கள் சுத்தமான பாலைப்புசிக்க
அறியாமல், அசுத்தமான மீனையுண்ண விரும்புதல்போ
லத், தானாயிருக்கிற நிரதிசயானந்த சமுத்ரத்தில் வாசஞ்
செய்கிற வுயிர்கள் பரிசுத்தமான ஞானாம்ருதமென்னும்
பாலைச் சாப்பிட அறியாமல், அசுத்தமான தேகேந்தி
ரிய ப்ரபஞ்சமென்னும் புலால்நாற்றத்தை விரும்பிப்
புசித்து, பிறப்பு இறப்பென்னுந் துக்கத்தை யனுப
வித்து, இதுவே நித்யமான சுகமென் றெண்ணி இதற்
கே பிரயத்னம் பண்ணிச் சந்தோஷிக்கின்றனர்; அப்
படிச்சந்தோஷமடைகின்ற காலத்திற் சுகம் மாறித் துக்
கந் தோன்றியும், அப்போதாகிலும் ஆலோசிக்காமல்,
முன்போலவே பிரயத்னஞ் செய்கின்றார்கள். அவ்
வாறு செய்கின்றவர்களுக்கு ஓர்காலத்தில் வைராக்ய

முண்டாகின்றது. அந்த வைராக்யமும் நான்குவிதமா யிருக்கும். அவையாவன; பிரசவவைராக்யம் புராண வைராக்யம் ஸ்மசானவைராக்யம் யாத்திரைவைராக்யம் என்பனவாம். இவற்றுள்; கெற்பமாயிருந்த ஸ்த்ரீயான வள்பிரசவகாலத்தில் மிகவுந் துன்பமடைந்து அத்துன் பந் தன்னுற் சகிக்கமுடியாமல், இந்த குழந்தை ப்ரசவ மானுற் போதும், இனிமேல் தேகமிருக்கிற பரியந்தம் புருஷனைச் சேருகிறதில்லையென்று வைராக்யமா யிருந்து குழந்தை ப்ரசவமானவுடனே துன்பம் நீங்கினமையால், அவ்வைராக்யத்தை மறந்து முன்போலப் புருஷன்மேல் மோகப்படுகின்றுள், இஃது பிரசவிக்கின்ற காலத்தில் வருகிற வைராக்யமாதலின், பிரசவவைராக்யமெனவும்; ஓர் புராணிகர் சுரைக்காயின்மே லதிகப் பிரியமுள்ளவ ராதலால், தினந்தோறுஞ் சுரைக்காயில்லாவிடிற் போச னஞ் செய்யார். அவர், ஆற்றங்கரை யிலிருந்து மாக புராணம் பிரசங்கம்பண்ணிச் சீவனஞ்செய்வார்; அப் படிச் செய்துவருங்காலத்து, ஓர்தினந் தனது பெண்சா தியானவள், ஸ்நானத்தின்பொருட்டு ஆற்றிற்குப்போய் நீராடிக் கரையில்வந்து தனது நாயகர், மாகபுராணப் பிரசங்கம் பண்ணுகிறதைச் சிலநோம் கேட்கும்போது- அச்சமையத்திற் சுரைக்காய் சாப்பிடக் கூடாதெனவும், அதைச் சாப்பிடுவதினு லதிக தோஷமெனவுஞ் சொன் னுர். அதன்பின்பு வீட்டிற்குவந்து புருஷன் வாக்யப்படி சுரைக்காயைச் சமையற்பண்ணுது நிறுத்தி மற்றப் பதார்த்தங்களைப் பாகஞ்செய்தனள்; அத்தருணத்தில் தனது பர்த்தா போஜனத்திற்கு வந்தவுடனே எலையிற் சாதங்கறிகளை வட்டிக்கும்போது சுரைக்காய்ப் பதார்த்த மில்லாமையால் எங்கேயென்று கேட்க? நீர் புராணப்

பிரசங்கம் பண்ணுகிறகாலத்திற் சுரைக்காய் சாப்பிட்
டால் தோஷமென்று சொன்னதுபற்றிப் பாகஞ் செய்
யவில்லை என்றனள்; அவ்வார்த்தையைப் புராணிகர்
கேட்டவுடன் மிகவுங் கோபந்தோன்றி நான் ஊருக்குக்
கூடாதென்று சொன்னேனேயன்றி உனக்குச் சொல்ல
வில்லை யென்றனர். இஃது புராணஞ் சொல்லுகிற கா
லத்தில்மாத்திரம் வைராக்ய முள்ளவர்போலச் சொல்வி
யும், புராணங் கட்டினவுடன் மறந்து மிருக்கின்ற தன்
மையுள்ள தாகையாற் புராணவைராக்யமெனவும்; இப்
புராண வைராக்யத்தி னபிப்பிராயத்தை ஆலோசிக்கு
மிடத்து, ஸ்காந்த முதலாகிய பதினெண் புராணங்க
ளிலுஞ் சிவபெருமானுர் ஒருவரிருக்கின்றாரெனச் சொ
ல்லுகிறபடியே, சகல வேதாந்த சாஸ்த்ரங்களிலும் த்ரி
குணாதீதமாயும் காலாதீதமாயும் ஓர் பரவஸ்து இருக்
கின்றதெனச் சத்தியமாகச் சொல்லியிருக்கின்றன; அ
ந்த சாஸ்த்ரங்களை விவேகிகள் வாசித்தும், அதின் பொ
ருளையறிந்தும் பிறர்க்குப்போதித்தும் வருகின்றனர்
அவர்களிற் சிலர், தனது பூர்வவாசனையான துர்க்குண
ங்களைப் போக்கிச் சத்குணமான ஞானத்ருஷ்டியை நோ
க்கிக் காருண்யத்தால் மோக்ஷாபேக்ஷை யுள்ளவர்க
ளுக்குத் தாம் அடைந்த ஸ்வாநுபூதி மகிமையைச்
சொல்லுகின்றனர். இன்னஞ் சில ரெப்படியிருக்கின்
றார்க ளெனின்; புராணிகர், பிரசங்கம் பண்ணுகிறகா
லத்திற் சுரைக்காய் சாப்பிட்டா லதிக தோஷமாதலி
ன், அதனைப் புசிக்கக் கூடாதென்று பலருக்குஞ்சொ
ல்லிப் புராணப்ரசங்க முடிந்த பின்பு சொன்னதை மறந்
து சுரைக்காயைநினைந்து அதினிமித்தங் கோபம் பிறந்
ததுபோல, வேதாந்த ப்ரசங்கம் பண்ணுகிறபோது வி

ரோதிகளான காமமுதலாகியபதின்மூன்று குணங்களு ஞ் சீவர்களைத் துன்பஞ் செய்கின்றமையால் இத்துர் க்குணங்களைக் கெடுத்து, சாதுசங்கமாகிய சன்மார்க்க த்தை யடுத்து, சாந்த சமதமமுதலாகிய சத்குணங் களால் தங்னது ஆத்மஸ்வரூபத்தைத் தியானித்திருப் பதே மேலான மோக்ஷமார்க்கமெனப் பலருக்குஞ்சொ ல்லி வேதாந்தப்ரசங்கம் ஆனபின்பு, ஒருவன் கடினமா ன வார்த்தைசொன்னான், அவ்வார்த்தையைக் கேட்ட வுடன் வேதாந்திக்குக் கோபமுண்டாயிற்று. அந்தம னிதன் வேதாந்தியைப் பார்த்து ஐயா, காமமுதலிய துர்க்குணங்கள் யாவரையும் விரோதஞ் செய்கின்ற மையால், அவைகளின் வசமாகக்கூடாது எனவும், து ர்க்குணங்க ளெல்லாவற்றையும் விடவேண்டுமெனவும், பலருக்கும் போதித்ததை மறந்து என்பேரில் கோபிக் கின்றது மன்றி உமக்கு ஒருகுணமாகிலும் போகவில் லையே எனக் கேட்டபோது அது காரணமாக மிகுந்த கோபந்தோன்றி இருவருக்கும் பெரிய சண்டைவிளைந் தன. இங்ஙனஞ் சில வேதாந்திகளிருக்கிறபடியாலும், வேதாந்தத்திற் சகல மதநிஸ்சயங்க ளியாவுஞ்சொல்லி யும், சர்வத்திற்கும் ஆதாரமான பரம்பொருள் ஒன்றே எல்லாமா யல்லவுமாயிருக்கிறதெனப் பிரமாணமாகக் கூறியு மிருப்பதாலும் இதனைச் சமயாபிமானிகளுடன் வாதித்தாற் கலகம் வருமெனத் தெரிந்தும் சிலர் வாதி க்கிறாதலாலும் சைவமுதலிய சமையத்தவர்கள் வே தாந்திகளைத் தூஷிப்பதும், வேதாந்திகள் சமையாபி மானிகளை நிந்திப்பதுமான கலகம் அதிகமா யிருக் கின்றமையாலும், கற்றுணர்ந்த விவேகிக ளனைவரும் அடியேனுக்குப் பந்துக்க ளாதலாலும், பந்துத்வம்

பற்றிச் சிற்சில வார்த்தைசொல்ல விருப்பங்கொண்டனன். அவையாவன, மரத்தினது கோணலை நூல் ஒழுங்குசெய்வதுபோல, மனத்தினது கோணலை நூலென்னும் சாஸ்திரம் ஒழுங்குபடுத்தும். ஒழுங்கு படுத்தலாவது, சப்தமுதலிய விஷயவாசனைகளை நினைத்துப் புறத்திலும் அகத்திலும் போகின்ற மனதைத் தனது விவேகத்தாற் றிருப்பி பகவத்தியானமென்னும் ஒரு வழியினிறுத்தல். ஒருவழியாவது, ஒருபொருளுக்குப் பல பெயர் சொல்லினும் ஒருபொருளைக் காட்டுவதுபோல, ஒரு கடவுளுக்குச் சைவமுதலிய அளவில்லாத மதங்களில் அநேகம்பெயர் கூறினும் யாவருக்கும் பொதுவான ஒரு பரம்பொருளைத் தெரிவித்த லெதுவோ? அதுவென்றாயிற்று. ஆகவே, கோணலாயிருக்கிற தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகளை விவேகமென்னு நூல் ஒழுங்குபண்ணு மென்பதுபெற்றும். நூலாவது நித்யம் அநித்யமுதலியவைகளைப் பிரித்தறிகின்ற யாதொரு அறிவுண்டோ? அவ்வறிவாம். அறிவு எல்லாவற்றையு மறிகிற ஞானம். அந்த ஞானம், தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலானவைகளுக்கு எட்டாததாயும், சர்வவியாபகமாயும், சூரிய சந்திர அக்நி ப்ரகாசங்களுக்குக் காரணமாயும், ஜீவன் அந்தக்கரண முதலிய தேஜசுகளுக்கு ஆதாரமான ஸ்வயம்பிரகாசமாயு மிருப்பதால், அங்ஙனமிருக்கிற ரகஸ்யத்தைப் பெரியோர்கள் ஞானத்ருஷ்டியா லுணர்ந்து சிவம் எனவும், ப்ரம்ஹம் எனவும், விஷ்ணு எனவும், பற்பலவிதமான மதங்கட்குரிய பல பெயர் வைத்தனராதலாலும், அந்தப் பெயர்பேதத்தாற் சண்டை விளைகின்றனவன்றி, பெயருக்குரிய பொருளைச் சூட்சுமபுத்தியால் ஆலோசித்துப் பார்த்தாற் கலக

மில்லையென அறிவையுணர்ந்தோர் அறிவார்கள். அப்படி யிருக்கின்ற பரம்பொருளை அறிவதற்கு இச்செனனம் முடிவானதெனப் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றதை மறக்கலாமா? இப்பிறவியிற் செய்கிற தபசினுற் பலன்கிடைக்குமேயன்றி கலகத்தாற் கிஞ்சிற்றும் பயனில்லை எனத்தோன்றவில்லையா? அனேக ஜனனங்களோறுஞ் செய்த தபமுதிர்ச்சியினுல் ஒரு ஜன்மத்தில் ஞான முண்டாகுமென்று மகானுக்கள் சொல்லியிருப்பதை நாம் வாசிக்கவில்லையா? வாசித்தும் அதனை மறக்கலாமா? இப்பிறப்பிற் சகல துர்க்குணங்களையும் விட்டு, நித்யவைராக்யம் பெற்று பரம்பொருளைக் காண விருப்பமுற்றுத் தவஞ்செய்தால், அப்பொருள் கிடைக்குமன்றி அவ்விதமான தவமில்லாவிடின், முற்சொன்ன துர்க்குணங்கள் நமக்கு உறவா யிருப்பனபோ லிருந்து பலவிதமான விரோதங்களை விளைவிக்கின்றன; எனத் தெரியவில்லையா? இங்ஙனம், எல்லாவற்றையும் பிரித்துப் பார்க்கின்ற இந்த ஜன்மம் போனுல் இனி எந்த ஜன்மம் வருமோவெனப் பயமுண்டாகவில்லையா? ஜனனமரணமிரண்டும் பெரிய துக்கம் என நடுக்கம் வரவில்லையா? எமவாதை வருங்காலத்திற் கற்றகல்வி பயன் படாது என ஆலோசிக்கக் கூடாதா? இவ்வுலகத்திற் பிறக்கிறதுக்கமும் இறக்கிறதுக்கமும் பார்க்கவில்லையா? பார்த்திருந்தும் மறப்புவறலாமா? மறப்பு வந்திருப்பதால், அதனை நிவர்த்திக்கும்பொருட்டு அடியேன் தெரிவித்தனன்; இதை விரிக்கிற் பெருகுமாதலின், சுருக்கிச் சொன்னதென் றறிக.

உயிர் நீங்கிய பிரேதத்தைச் சுற்றத்தார்கள் சுடலைக்குக் கொண்டுபோய் அதிக வருத்தமடைந்து, நேற்று

இருந்தவன் இன்று இறந்தனன். இன்னம் அனேககால மிருந்தாலும் மரணமடைவது நிஸ்சயம், சம்சாரவாழ்க்கை அற்பமானது, இதிலிருந்து வாழ்வதிற் பிரயோஜனமில்லை. நமக்கு மிப்படியே மரணம் வருமென்று சுடுகாட்டில் வைராக்யம் வந்தவர்கள்போலப் பேசுகின்றனர். அதைவிட்டு வெளியில் வந்தவுடனே சம்சார துக்கம் வந்து மூடிக்கொள்வதால், மறக்கின்றனர். இஃது ஸ்மசானத்தி லிருக்கிறபோது தோன்றுகிற வைராக்யமாதலின் ஸ்மசான வைராக்ய மெனவும்; சிலர் குடும்பத்தில் பெண்டுபிள்ளை முதலியவைகளைக் காப்பாற்றுவதனால் மனவருத்த முண்டாகிச் சகிக்கமுடியாமல், இச்சம்சாரத்தி லிருந்து துன்ப மடைவதிற் பிரயோஜனமில்லை. பல திவ்யதேசங்களிற் சென்று காலங் கழிப்போமென்று யாத்திரையாக வெளியிற் பிரவேசித்துச் சில தேசம்போய்ச் சஞ்சரித்து மழை வெயில் முதலியவைகளாற் றவித்துப் பசிவேளைக்கு அன்னம் பதார்த்தம் ருசியாக அகப்படாமையால் தேகங்களைத்து, சம்சார சுகத்தை நினைத்து மனம் பதைத்துச் சிலர் சம்சாரத்தில் வருகின்றனர். யாத்திரை காஷாயமென்று கட்டிக்கொண்டவர்கள் மறுபடியுங் குடும்பத்தில் வந்தால் உறவின்முறைபார் பழிப்பார்களென் றெண்ணி சம்சார வொழுங்குமில்லாமல் சந்யாசக்ரமமு மில்லாமல் உபயப் பிரஷ்டாளாய்ச் சிலர் இருக்கின்றனர். எது நிமித்தஞ் சம்சார முதலியவைகளை விட்டுத் துறவாஸ்ரமத்திற் பிரவேசித்துக் காஷாயந்தரித்தார்களோ? அதை மறந்து போஜன முதலிய விருப்பங்களைப் பயனுகக் கொண்டு இதற்கே சிலர் பிரயத்தனஞ் செய்கின்றனர். இதுவுமன்றி, இன்னு மனேகபேதங்களா யிருக்கின்றூர்

கள், இஃது சம்சார துக்கத்தினுல் வருத்தந்தோன்ற அதனைத் தணிக்கு நிமித்தம் யாத்திரை பண்ணவேண்டு மென்று வைராக்ய முண்டான தாதலின் யாத்திரை வைராக்ய மெனவுமாம். இங்ஙனஞ் சொல்லிய நான்கு வைராக்யங்களிலும் மூன்று வைராக்யங்கள் சொல்லு கிறவுடன் மறந்து விடுகின்றமையாற் பிரயோஜனமில்லை யாதலாலும், குடும்பத்தைவிட்டு வெளியிற் பிரவேசித்த யாத்திரை வைராக்யஞ் சிறந்ததாயினுங் கொஞ்சகாலத் தில் மறந்தனராதலாலும் அந்த வைராக்யத்தால் யா தொரு பயனில்லாமையாலும், நான்கு வைராக்யங்க ளும் அநித்ய வைராக்யமென்று சொல்லப்படும். அப் படியானுல், நித்யவைராக்யமாவது யாதெனில்; இதுவும் நித்யம். அநித்யமென இரண்டுவகையாம். இவற்றுள் முற்பிறப்பில் தவஞ்செய்தவர்கள் துறவாஸ்ரமத்தில், வந்தாலும் அனேகஜனனப் பழக்கத்தால் மறப்புவரும் அம்மறப்பு பிரகிருதியின் தர்மமே யன்றி அறிவின் தர்ம மல்லவென்று விவேகந் தோன்றி எடுத்தவிரதந் தவரு திருப்பர். இவர்க ளில்லறத்தி லிருப்பவர்களைப் பார்த்து துறவறமே பெரிதெனவும், இதிலிருந்து தவஞ்செய்து ஞான மடைவதே சிறந்ததெனவும், இல்லறத்திலிருந்து வருத்தமுற்றுத் தவஞ்செய்வதிற் பிரயோஜன மில்லை எனவுஞ் சொல்வர். இல்லறத்தின்க ணிருப்பவர்கள் துறவிகளை நோக்கி, இல்லறமே பெரிதெனவும், பார்யா ளோடு கூடியிருந்து தவமியற்றுவதே மேலானதென வும், துறவறத்திற்போய் அன்னவஸ்திராதிகளைக் குறி த்து மனவியாகூல மடைவதாற் பயனில்லை யாதலின் இல்லற ஞானியே மேலானவ னெனவுஞ் சொல்லுவர்; இவர்கள் சொல்லுகிற வார்த்தை சரியல்ல. ஏனெனில்,

சகல வேதாந்த சாஸ்திரங்களில் ப்ரம்ஹசர்யமுதலிய நான்கு ஆஸ்ரமங்களும் பிராப்ஹணுள் முதலான நான்கு ஜாதிகளும் பொய்யென்றும், பரம்பொருளே மெய்யென் றுஞ் சொல்லியிருக்க, அதை மறந்து அநித்யமான தேக த்திற் பொய்யாகக் கற்பித்திருக்கின்ற க்ருகஸ்தன் சந் யாசி முதலாகிய அபிமானவேசத்தால் இல்லாதவற்றை உண்டெனச் சொல்லுகிறார்களாதலால், இஃது அநித்ய வைராக்யமெனவும்; குடும்பத்தி லிருந்தாலுஞ் சரி சந் யாசம் பெற்றுக்கொண்டாலுஞ் சரி குடும்பியாயிருக்கிற வேஷமும் சந்யாசியாயிருக்கிற வேஷமும் உடலிற்கே யன்றி இவ்விரண்டு வேஷங்களும் உயிருக்கு இல்லை எனவும், உயிர் அபிமானித்தால் சகலமான வேஷங்க ளும் உண்டெனவும், உயிரானது யாதொரு வேஷங்களு மல்லவெனவும் நன்றாக ஆலோசித்து அவரவர்களுக்கு விதித்துள்ள ஆஸ்ரம ஒழுங்கு தவறாம னடந்து பரம சிவத்தையுங் குருவையுந் திரிகரண சுத்தியாய்ப் பணி ந்து, காமமுதலிய துர்க்குணங்கள் தவிர்ந்து பக்திசிரத் தை முதலானவைகளில் மனங்கனிந்து குரு சொன்ன வாக்யந் தவறாம னடந்து வருவதே நித்ய வைராக்யமெ னவுமாம். இவ்வாறு சொல்லிய நித்ய வைராக்யத்தா ல் அன்னியமின்றித் தானே தானாயிருந்துள்ள நிரதி ச யாநந்தத்தை அடையலாமென்றும், அதனையடைந்தவர் களுக்குப் பிறவி யில்லையென்றும் அடையாதவர்களுக் குப் பிறப்பு இறப்பு மாறிமாறி வருமெனவும், இதை யின்னும் விரிக்கிற் பெருகுமாதலின், சுருக்கமாகச் சொ ன்னதெனவும் தாத்பர்யம். (சஉஉ)

வினா:—இன்னந் தெரியாத விருத்தியையும் அனுபூதி யையுந் தெரியப்படுத்துவ தெப்படியென்னில்?

...டை:—ஜகம் மெய்யோ? பொய்யோ வெனின்; ...பொய்யென்றால், நான் தோன்றவில்லையாவென்று கேழ்க்கத் தோன்றவில்லையென்றால், அறிந்து தோன்றவில்லையோ? அறியாமற் றோற்றவில்லையோ? என்று கேழ்க்க, அறிந்து தோன்றவில்லையென்றால், அது விருத்தியாயிற்று; அறியாமற் றோன்றவில்லையென்றால், அது ஸ்புரணமான அனுபூதியாயிற்றெனவறிக. (௨௨௩)

(மனதை மனதாற் கெடுப்பது.)

வினா:—மனதை மனதினால் வெல்வதெப்படியென்னில்?

விடை:—சுகத்தைக்குறித்து மனம், அந்த மனத்தை விரிக்க மனங்கெடும். அஃதெப்படியென்னில்? வீடுகட்டியதிலிருந்து சுகத்தைப் பெறவேண்டுமென்று கருதி வீடுகட்ட மனத்தை விரித்து வருத்தப்பட்டுக் கட்டியனுபவிக்குமளவில், சுகந்தானைப் போயிற்று; மனமும் விஷயமும் கெட்டது எனவறிக. (௨௨௪)

வினா:—இன்னம் மனதை மனதினால் மாய்ப்பதெப்படி யென்னில்?

விடை:—உள்ளே நெஞ்சிற் சாயைபோல வடிவுகாரணம், அதை வெளியில் நெஞ்சைக் காரியப்படுத்தி மாய்க்கவேண்டுமெனவறிக. (௨௨௫)

(மனோலயம்)

வினா:—மனோலய நிஜமெதுவென்னில்?

விடை:—விருத்தி யெப்போதும் ஒடுங்காது வியாபகத்தினால் இயல்பா யொடுங்கவேண்டும் * அதுவாக்களும் போதலயம் எனவறிக. (௨௨௬)

---

* அதுவாக்களும் - தேசிகமொழி, அதுவாக்களும் போதலயமென்பதற்கு, அத்தன்மையா யடங்குவது எ

வினு:—இன்னம் - மனேலயம் எப்படி யென்னில் ?

விடை:—ஒன்றை நினைத்தபோது, அவ்விடத்தில் னதில்லை * பதார்த்தமில்லை அந்த ஆகாரமா யுள்ளே ர்த்தபோது யாகாரமுமில்லை, மனதுமில்லை, தன்னெ ணமானுற் பதார்த்தமாயிருக்கின்றது, தன் ஸ்புரண ஞ லனுபவமா யிருக்கிறதென வறிக. (சஉ

வினு:—இன்னம்-மனேலயம் எப்படி யென்னில் ?

விடை:—வாசனுச் சித்தான உள்ளத்திற்குச் யோகத்திற்றுனுயிருக்கிற லயம் தன்னை யறியாமலே ருமென வறிக. (சஉ

வினு:—இன்னம் மனேலயம் வர லெதுபோல ன்னில் ?

விடை:—காக்கைக்குச் சாதம்வைத்துக் கிட்டயி து சாப்பிடக்கூப்பிட்டா லெப்படிக் கிட்டவாராதோ? ப்படிப்போல*மனேலயம் வரவேண்டுமென்று சாதனை பண்ணினு லெதிரிடுமே யல்லாமல் லயமாகாது. க கையை யழையாமற் போய்விட்டால் தானே வந்து ப்படிச் சாப்பிடுமோ? அப்படிபோலத் தானே லயப் த்திக் கொள்ளும். "போக்கும் வரவும் இறவும் பகலு புறமு முள்ளும் வாக்கும் வடிவு முடிவு மில்லாதொன் வந்து வந்து தாக்கு மனேலயந்தானே தருமெனைத் த வசத்தேயாக்கும்" என்ற பாட்டின்படி யென வறிக.

துவோ? அதுவே ஞானலயமென்பது பொருள். இ படி யர்த்தங்கொள்ளாவிடின் - முரணும்.

* பதார்த்தம் - கடபட முதலாகிய ப்ரபஞ்சம்.

* இந்த விடையில்; மனேலயம் வரவேண்டுமென் சாதனம் பண்ணினுல், வருமே யல்லாமற் சாதனமில்

மனோலயம் வராது. என த்ருஷ்டாந்த பூர்வகமாய்ச்
சொல்லியிருக்கிறபடியால், அவஸ்யம் சாதனம் பண்ண
வண்டுமெனத் தோன்றுகிறது. தாஷ்டாந்தத்திற் கா
கையை யழையாமற் போய்விட்டால், தானே வந்து
ப்படிச் சாப்பிடுமோ? அப்படிப்போலத், தானே லய
படுத்திக்கொள்ளும் - எனக் கந்தரலங்கார உதாரணச்
சய்யுட் பிரமாணமாக விடைகூறி யிருக்கின்றனர். இங்
ஙஞ் சொல்லிய வாக்யத்தை யாலோசிக்குமிடத்து;
ன்பு சாதனம் வேண்டுமெனச் சொன்னவர் - பின்பு
னே லயப்படுத்திக்கொள்ளும், என்று கூறியிருக்கின்
மையாற் சாதனம் வேண்டியதில்லையென வெளிப்ப
டயாகத் தோன்றுகிறது. இப்படி யிரண்டுவிதமாகச்
சால்வி யிருப்பதாற் சிலருக்குச் சம்ஸ்ய முண்டாவது
ற்றிச் சமாதானமாவது யாதெனின்; சத்வாம்சமாகிய
வனது நினைவு - சங்கற்பம். சங்கற்பவடிவமே மனம்
ந்த மனது-தானே சஞ்சரிக்குமோ வென்னில், சகாய
ல்லாமற் சஞ்சரிக்காது; ஏனெனில், ஒருவன் ஓரிடம்
பாகவேண்டுமென நினைக்கிறது நினைப்பு - அந்த நினைவு
ட்சுமமாதலின், அதற்குச் சகாயம் கால்வேண்டும்.
ாலில்லாவிடின் நினைத்தவிடம் போகக்கூடாததுபோல,
ரிடம் போகவேண்டுமென நினைக்கின்றவன் ஜீவன்;
ங்ஙன நினைப்பது சூட்சும்மான மனது, அம்மனதிற்கு
ாருதமென்னுங் காற்றுரூபமான வ்ருத்தி சகாயமா யி
ருப்பதா லந்த வ்ருத்தியுடன்கூடி வெளியிற் சஞ்சரிக்கி
ற வாயுவைப்போல, அகம்புறமான பலவிடங்களிலு
ம் பலவிதமான பிறவிகளிலும் ஜீவனை யிழுத்துக்கொண்
அம்மனது சஞ்சரிக்கின்றது. இந்த மாருதமென்னும்
ருத்தியில்லாவிடின், மனம் எவ்விடத்திலும் போகாது;

இப்படி எங்கும்போய் அலைகின்ற மனதை லயமாகவே
ண்டுமெனக் கூப்பிட்டால் வராதல்லவா; ஏன் வரா
னின், தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலான விஷயங்க
மனமென்னுங் காகத்திற்குச் சமீபமாயும் புசிப்பாயு
ருப்பதனாலும், இவற்றை மிகுந்த ப்ரியமாக நினைத்
புசித்துத்-திருப்தியடைந் திருப்பதனாலும், கூப்பி
ல் வராது. ஆனதுபற்றி, கிட்டவிருந்து சாப்பிட
ப்பிட்டால் எப்படி வராதோ ? அப்படிப்போல, என
கூறினர். இங்ஙனம், ப்ரம்ஹாநந்த மென்னும் அ
த்தைப் புசிக்க வாவென்று கூப்பிட்டால் வராத ப
தை யார் லயம் பண்ணுவார்க ளெனின் ; தேகேந்தி
ப்ரபஞ்ச முதலியவைகளிற் கிஞ்சிற்றுஞ் சத்யபுத்தி
லாத முமூட்சுக்கள், நித்யாநித்யவஸ்து விவேகமுத
நான்குசாதன மடைந்து மனதையடக்கு மு
குரு முன்னிலையிற் றெரிந்து எப்பொழுதும் நிவ
சாதனஞ் செய்வார்களாதலாலும், அப்படிச் செய்
ருகிற சாதன முதிர்ந்தகாலத்து மனதிலுண்டான
தம் மனதிலடங்கும்; மனது ஜீவசங்கற்பமாதலின்,
னிலடங்கும். எப்போது ஜீவனிடத்தில் மனம் அ
கியதோ ? அப்போது அசுத்தமனமென்னும் பெயர்
கிச் சுத்தமனமெனப் பெயர்வந்தமையாலும், ஜீவ
மான அஞ்ஞான மகன்று ஞானந்தோன்றும். இ
மனோவ்ருத்திக ளடங்கிய விடத்து உதயமாகின்ற ஞ
மாதலின், வ்ருத்திஞானமெனவும், துரியமெனவும்
யோர் சொல்லுவர்;இவ்விதமாயுள்ள துரியவடிவந்
ன்றுகிற பரியந்தஞ் சாதிக்கவேண்டிய கஷ்டமெதுவோ
அது புருஷப்ரயத்னம் ; அதன்பின்பு புருஷப்ரயத்
வேண்டியதில்லை. ஏனெனில், காந்தம் - ஊசியை

வினா:—இன்னம்-மனோலயம் எப்படி யென்னில் ?

விடை:—ஸ்புரிக்கிறபோது ஸ்புரிக்கிறபோது தானே புரிப்பில்லாமலும், உச்சரிக்கும்போது உச்சரிக்கும் பாது தானே யுச்சரிப்பில்லாமலும், மனோலயம் வர ண்டும், ஒன்றென்று சொல்லும்போது தானே ஒ ல்லாமல் நிறைவானு லப்போது மனோலயம் வர வண்டுமென வறிக. (சகூ0)

வினா:—இன்னம்-மனதைக் கெடுப்பதெப்படி யெ னில் ?

விடை:—அசைவில் நிறைவைக் கண்டபடியினாலே ங்கெடுகின்றதெனவறிக. (சகூக)

வினா:—இன்னம் மனோலய மெப்படி யென்னில்?

விடை:—ஒன்றொன்றாய் நிறுத்திப்பார்த்தால் அது யமாய் விளங்கும் அகமிதமும், அதுவே யாகையால் மில்லையென வறிக. (சகூஉ)

த் தானே யிழுத்துக்கொள்ளுகிறதோ? அப்படிப் ால, அகண்டவடிவமான துரியாதீதப் பரம்பொரு ன்னும் காந்தம் - துரியமென்னும் ஊசியைத்தானே ழுத்துக்கொள்ளும்; அல்லது, தானே தன்னிடத்தில் மாகச் செய்துகொள்ளும். இவ்வாறு செய்வது ம்பொருளா லாகவேண்டிய ப்ரயத்னமன்றி, வேறொரு ாற் செய்யக்கூடாததலின், இஃது வஸ்து ப்ராயத்ன ன மகானுக்கள் சொல்வார்கள். இந்த விபரங் குரு ன்னிலையிற் கேட்டுத் தெளியவேண்டுமாதலால், முமு க்கள் நிமித்தஞ் சுருக்கமாகத்தெரிவித்த தென்றபி ாயம்.

(ஆனந்தவிளக்கம்.)

வினு:—ஆனந்தமெப்போது வெளியாகு மென்னில்?

விடை:—பிரம்ஹாப்பியாசத்தினுலே யகங்காரத்தை மறந்தாற்ருேன்றும்; அப்படித்தோன்று மகங்காரத்தை நன்ருக மறந்தாற் சித்த மிருக்கிறபடியினுலே நித்திரை யுமல்ல, பிராரப்தம் இருக்கிறபடியினுலே, தேகமும் விழாது ஆகலின், இப்படி த்வைதமுந் தோற்ருமல் நித்திரை யுமல்லாம லிருக்கிற பிரம்மானந்த நிலை வெளியாகு மென வறிக. (சஙந)

வினு:—இன்னம் - ஆனந்த விளக்க மெப்படி யென்னில் ?

விடை:—சகல வியாபாரம் பண்ணுகிறபோது மறிவு மாகாரமுந் தோற்ரும லானந்த விளக்கம் அந்தர்கெதமாய் விகாரமற்று விளங்குமென வறிக. (சஙச)

வினு:—இன்னம், மூன்றவஸ்தையிலும் வியாபகந் தானு யிருக்குமென்பதெப்படி யென்னில் ?

விடை:—ஜாக்ரத்தில் ஸ்புரிப்புவருகிறபோதும் வியாபகந் தானுயிருக்கிறது; இன்னம் வேண்டுமென்று சஞ்சலப்படுகிறபோதும் வியாபகந் தானுயிருக்கின்றது; சுழுப்தியிலும் ஆனந்தந்தானுய் ஸ்வபாவமாகவே யிருக்கிறது, ஆகாரத்தி லின்பமுண்டென்று கண்டது விருத்தி, வியாபகந்தானுயிருக்கிற தென்று விளங்கினது துரியவிளக்கம் என வறிக. (சஙரு)

வினு:—இன்னந் தன்மயமே மறைப்பென்பதெப்படி யென்னில்?

விடை:—ஸ்வபாவ ஆகலாதமே விளக்கமாய்த் தன்மயமாக விருக்கும், அக்ஞானத்தினுலே தெரியாது, ஆச்

சாரிய ரெடுத்துக்காட்டத் தெரியவரும்; அவ்விடத்தில் வ்ருத்தி யில்லாதபடியினாலே, இப்பாற்றோன்றின அறிவே மறைப்பாயிற்றென வறிக. (௪௬௬)

வினா:—இன்னந் தானாயிருக்கிற சத்தையும் ஸ்புரணமான சித்தையும் விளக்கின தெதுவென்னில்?

விடை:—சத்துத் தானாயிருக்கும், சித்து விளக்கமான ஸ்புரணம்; இவ்விரண்டையு மானந்தந்தான் விளக்கின தென வறிக. (௪௬௭)

வினா:—இன்னம் வியாபக முன்னே யிருந்து விளங்குவ தெப்படி யென்னில்?

விடை:—இராஜ சபையில் ராஜாவைச் சர்வஜனங்களும் ஓயாம லெப்படிப் பார்த்திருக்கின்றார்களோ, அப்படிப்போலக், கருவிகரணமான தத்துவக் கூட்டங்கள் வியாபகத்தையே பிரதானமாய்ப் பார்த்திருக்கின்றனவென்றறிக. (௪௬௮)

வினா:—இன்னம் வ்யவகார மிருக்க அனுபவமா யிருப்ப தெப்படி யென்னில்?

விடை:—சகல வ்யவகாரங்களுஞ் சகல தொழில்களு மிருக்கும்போது தானே வியாபகந் தானாயிருக்கின்றது * சாரதியில்லாமல் வண்டி யெப்படி நடக்கிறதோ? அப்படிப்போல, போதமில்லாமல் வியாபகமாத்திரம் விளங்குகின்றதென வறிக. (௪௬௯)

---

* சாரதி - வண்டியை ஓட்டுகிறவன், அங்ஙனம் ஓட்டுகிறவ னில்லாவிடின் வண்டி ஓடாது; றெயில்வண்டியிலும்இஞ்சின் பிடித்து ஓட்டுகிறவனிருந்தன்றோ? வண்டிஓடுகிறது. இப்படி யிருக்க,இந்தவிடையில் சாரதியில்

லாமல் வண்டி யெப்படி ஓடுகிறதோ? அப்படிப்போல, என த்ருஷ்டாந்தஞ் சொல்லியிருப்பதுமன்றி, தாஷ்டாந்தத்திற் போதமில்லாமல் வ்யாபகமாத்திரம் விளங்குகிறதெனக் கூறியிருக்கின்றனர். இதனை யாலோசிக்குமிடத்து; போதமாவது, ஞான ஸ்வரூபமாக ப்ரகாசித்தல். அஃதாவது, ஜடமான தேகங்கள் சஞ்சரிக்கின்றபாகிய ப்ரபஞ்சத்தைச் சூரிய சந்திர அக்நி ப்ரகாசங்கள் விளக்கு விப்பதுபோலச், சித்தான ஜீவன் வியவகரிக்கின்ற சூட்சுமமான அந்தர்ப் பிரபஞ்சத்தையும், ஜாக்ர முதலிய பஞ்சாவஸ்தைகளையும், விளக்கு விப்பது எதுவோ? அது ஞானப்ரகாசம் என்றாயிற்று. ஆகவே, சூர்ய சந்திராக்நி ப்ரகாசங்க ளில்லாவிடின், சகலமான வுலகங்களிலும் பாகிய வ்யவகாரங்கள் செய்யக் கூடாதனவா யிருப்பனபோல, ஞானப்ரகாச மில்லாவிட்டால், ஜீவன் வ்யவகரிப்பதாகியபாகியாந்தர்ப்பிரபஞ்சமுதலிய வ்யாபாரங்க ளில்லையாதலாலும், எவ்விடத்தும் சஞ்சரிப்பவனாகிய ஜீவன் - சூக்ஷமமாக நினைத்து ஸ்தூலமாக வ்யவகாரஞ் செய்யவந்த படியாலும், சூட்சுமப்ரபஞ்சங் காரணம், ஸ்தூலப்ரபஞ்சங் காரியமாதலாலும், இங்ஙனஞ் சொல்லிய ஸ்தூலசூட்சும முதலியவைகளுக் கெல்லாங் காரணமாயும் ஆதாரமாயு மிருந்து ப்ரகாசிப்பதே ஞானஸ்வரூப மென்பது பெற்றாம். அங்ஙனமாயினும், சூரியனிடத்து உண்டான மேகஞ் சூரியனை மறைத்ததுபோல, ஞானத்தினின்றுந் தோன்றிய அஞ்ஞானம்-ஞானத்தை மறைத்தமையால், அவ்வஞ்ஞானத்தை ஞானத்தாற் கெடுக்கவேண்டுமெனவும், அங்ஙனங் கெடுத்த பின்பு - சமுத்ரத்திலுண்டான அலையாதிகள் சமுத்திரத்தி லடங்கின வாறுபோலத், தன்னிடத்திலுண்டான

தாயும் - தனக்குக் காரியமாயு மிருக்கிற ஞானுஞ்ஞான சமூகங்க ளனைத்துந் தன் வியாபகத்தி லடங்கித் தானே தானாக விளங்கவேண்டு மெனவும், இங்ஙனம் விளங்கும் ஸ்வயம்பிரகாச ஸ்வரூபமே தானாதலின் தனது ப்ரகாசத்தால் துரியமாகிற போதம் விளங்குகிற படியாலும், இந்த போதத்திற்கு ஞானமெனவும் - சாக்ஷியெனவும் மகாகாரண சரீரமெனவும் - கூடஸ்தனெனவும் பெயராதலாலும், இவைகள் துரியாதீதத்தி லடங்கத் - துரியாதீதந் தன்னி லடங்குதலாலும்; போதமில்லாமல் வியாபகமாத்திரம் விளங்குகிற தெனக்கூறிய தாஷ்டாந்தரம் அங்கீகரிக்க வேண்டுமென்க. த்ருஷ்டாந்தமோ வென்றால்; ஸ்தூலமாயிருக்கிற வண்டியை ஓட்டுகிற சாரதி கண்ணிற்குத்தோன்றுகிறானே யன்றி, ஸ்தூலமான தேகத்தை நடத்துகிற சாரதி கண்ணிற்குத் தோன்றவில்லை. தோன்றுவிடினும், சகலமானவரும் போதல் வருதல் முதலிய தொழில்களைக் கண்ணாற் பார்க்கின்றோமாதலின், அதின் விபரமாவது யாதெனின்; சரீரம்-ரதமாகவும், கால்கள் - ஊருஞ்சக்கரமாகவும், மார்பு - பீடமாகவும், பரமாத்மா - அந்த பீடத்தின்கண் வசிக்கும் ரதியாகவும், சிரசு - தாமரை யரும்புபோன்ற சிகரமாகவும், மனமானது - ப்ரகாசமாகவும், பஞ்சேந்திரியங்கள்- குதிரைகளாகவும், இந்த குதிரைகள் - சப்த முதலிய பஞ்சவிஷயங்களிற் பிரவர்த்திக்கிறதாகவு மிருத்தலின்: ஜீவன் - மனமுதலிய கரணங்களுடன் கூடிக்கொண்டு சுகத்தைப் புசிக்கின்றான். எப்படி யெனின், எஜமான் ஏவினால்-சாரதி வண்டியை ஓட்டுகிறதுபோலத், தேவர்-மானுடர் முதலாகிய தேகங்களிலிருக்கிற ஜீவனென்னும் எஜமான் ஏவினால் புத்தியென்னுஞ் சாரதியான

வன் - சூட்சுமமா யிருந்து தேகாதங்களை நடத்துகின்ற
னைகயால், சகலமானவுலகங்களிலும் சமஸ்த வியவகார
ங்கள் நடக்கின்றன. ஆனல், அந்த சாரதி கண்ணிற்
குத் தோன்றவில்லையே யெனின், தேக முதலியவைக
ளுக்குள் சூட்சுமமா யிருந்து அவன் தொழிலைச் செய்
யாது நிறுத்துவானயின், தேகம் பிணமாகிப் பூமியில்
விழுமாகையாலும், கண்ணிற்குத் தோன்றுவிடினும், எ
ல்லாவுயிர்களுஞ் சஞ்சரிப்பதை கண்ணுற் பார்க்கிறோ
மாதலாலும், கண்ணுற் பார்த்து புத்தியாற் சாரதி யிருக்
கிறனென நிச்சயிக்கலாமாதலின், சாரதி யென்பவனி
ருப்பது வாஸ்தவம். அதுவுமன்றி, ஒருவன் செய்கிற
ஆச்சர்யமான வேலையை யாவரும் பார்த்து இவன் புத்தி
எவ்வளவு சூட்சும புத்தியென்று சொல்லுகிறார்க ளா
கையால், புத்தியென்னுஞ் சாரதி யிருப்பது உண்மை
யென்க. இங்ஙனஞ் சாரதியிருக்க யில்லையென்று ஏன்
சொன்னரெனில், ஜீவன் - அவித்தையில் பிரதிபலித்த
வனதலின்; இல்லாததை யுள்ளதாகவும், உள்ளதை யி
ல்லாததாகவும் எண்ணுவான். அவை யெப்படி யென்
றல்; குழந்தையினது முகம் - கண்ணுடியிற் பிரதிபலி
த்துக் காட்ட, அதனைப் பார்த்துத் தன் பிரதிபிம்பமென்
றறியாமல், தன்னைப்போ லொருகுழந்தை யிருக்கிற
தென்றெண்ணி அதனுடன் விளையாடத் தாவித்தாவி
வருந்தினதுபோல, ஜீவனது சங்கற்பமாகிய மனமென்
னுங் கண்ணுடியிற் பிரபஞ்சம் பிரதிபலித்துத் தோற்ற
அதனைப்பார்த்துத் தனது ப்ரதிபிம்பமென் றறியாமல்
தனக்கு வேருகவும் அதனிடத்துச் சுகமிருக்கிறதாக
வும் - எண்ணி, நான் - கர்த்தா, நான் - போக்தா, நா
ன் - சுகி, நான் - துக்கி என்றெண்ணி வ்யவஹாரம் பண்

வினு:—இன்ன மெந்தத் துவாரமாய்த் தன்னை யறிய லாமென்னில் ?

விடை:—அறிவானது, * சொரூபத்தைச் சிந்திக்க வெட்டுகிறதில்லை, இந்த அறிவைச் சொரூபம் விழுங் கிக்கொள்ளு மிந்தத் * துவாரமாய்த்தன்னை யறியலாமல் லாமல், வேறே தன்னையறிய வழியில்லை ; அறியப் போனால், முழுங்குமென வறிக. (௪௪0)

ணித் தாவித்தாவி வருந்துகிற ஜீவன் ஸ்வதந்தரசக்தி யி ல்லாதவ னுதலாலும், சர்வதந்தர ஸ்வதந்தரராயும்-அக ண்ட சச்சிதாநந்த வடிவமாயுமுள்ள பரமாத்மா - சகல ஜீவர்களுடைய இருதயமென்னும் பீடத்தில் வசித்திரு ப்பதாலும், சூரிய சந்நிதானத்திற் சகல அண்டங்க ளசைவனபோலப், பரவஸ்துவின் சந்நிதானமென்னும் அ கண்ட தேதீப்யமான ப்ரகாசத்திற் சகல அண்டாண்ட-பிண்டாண்ட - ப்ரம்மாண்ட - நிர்க்குணண்ட முதலிய தொழில்கள் நடக்கின்றன; ஆதலாலும், "சாரதியில் லாமல் வண்டி ஓடுகிறதெனக் கூறியதென்க." "சார தியில்லாமல் வண்டி ஓடுகிறதென்பதற்கு, ஜீவன் மந்தி ரியாகிய புத்தியென்னுஞ் சாரதி யில்லாமல், எல்லாம் வல்லசித்தரான பகவானது ஆக்ஞையால் , அல்லது - தேஜோ வீக்ஷணத்தால், தேகரதம் ஓடுகின்றது என் பது பொருள்.

* சொரூபத்தைச் சிந்திக்க வெட்டுகிறதில்லை யென் பது, தனது ஸ்வரூபமானது கற்பனுவடிவான மனமுத லிய காணங்களுக் கப்பாலா யிருப்பதாலும், அவ்வித ஸ்வரூபத்தைக் கற்பனையான மனது சிந்தித்தா லம்ம னதைச் சொரூபம் விழுங்கும், கற்பனரகிதமான சுத்த

வினா:—இன்னம் வியாபக மெந்தாவஸ்தைகளிலும் நீங்காதென்ப தெப்படி யென்னில்?

விடை:—ஒரு ஸ்திரீயைப் பார்க்கும்போது மறிவில் நினைக்கிறபோதும் புசிக்கும்போதும் ஆகாரமில்லை, அறிவில்லை வியாபகமாத்திர மிருக்கின்றது; மறுபடி யந்த வின்பத்தை நினைத்து அறிந்த அறிவே, அந்த ஸ்திரீயான ஆகாரமாய்க் கண்டு அந்த அறிவே யாநந்திக்கின்றதென வறிக. (உசஉக)

வினா:—இன்னம் வியாபகத்தி லெதுவுமில்லை, யெல்லாவற்றிலும் வ்யாபகமுண்டென்ப தெப்படி யென்னில்?

விடை:—தோன்றுவதெல்லாம் வியாபக மதிலறிவு மாகாரமுமில்லை, அறிவிலு மாகாரத்திலும் வியாபக மிருக்கின்றது, ஆகாரமில்லை, இஃது ஒன்றிலொன்றில்லை, வியாபக மெல்லாவற்றிலு மிருக்கிறதென வறிக.

வினா:—இன்னஞ் சுகாகார மெதுவென்னில்?

விடை:—எந்த நினைவு தன்னை மறந்ததோ? * அந்த மறதியே சுகாகாரமென வறிக. (உசஉரு)

மனதிற்கு அறிவென்று பெயராதலினாலும், அவ்வறிவுக்குச் சச்சிதாநந்தமென்னும் லக்ஷணங்க ளிருப்பதாலு மிந்த லக்ஷணங்களின் வழியாகத் தன்னைக்காணலாமென்பது தாத்பர்யம்.

* த்வாரம் வழி.

* அந்த மறதியே சுகாகாரமென்பது; தன்னை மறந்த யாதொரு மறதியுண்டோ? அந்த மறதியே பிரபஞ்சத்திற்குக் காரணமாதலின், அங்ஙன மறதிவடிவான ஜீவ

வினா:—இன்னஞ் * சர்வசமைய சம்மத மெப்படி யென்னில்?

விடை:—தேக மானந்த மிந்திரிய மானந்தங் கரண மானந்தம், ஜீவ னானந்தம், ஈச னானந்தம், சாட்சி யானந்தம், ஆனபடியினாலே, இரண்டில்லை, சர்வசமை யமும் அபேதமென் றறிக. (சசச)

வினா:—இன்னம் எதார்த்தானுபவ மெதுவென்னில்?

விடை:—ஆனந்தந்தா னறியாமையா யிருந்தது; ஆன ந்தந்தா னறியவந்தது, அறியவே முன்னறியாமை விட் டுப்போயிற்று. பிற்பாடு என்ன இருந்து அறிந்து ஆனந் திக்கப் போகின்றது, ஆனந்தந் தானாயிருந்தது; மயத் தை யடைந்திருந்தது, அதற்கு ஸ்புரணவிளக்க மானந் தமயத்துவத்தை நீக்கவே யெதார்த்தம் விளங்கிற்றென வறிக. (சசரு)

னுக்குப் பிரபஞ்சஞ் சுகவடிவமாகத் தோன்றுகிறதென் பது தாத்பர்யம்.

* சர்வசமைய சம்மதமாவது, சைவமுதலிய அளவி ல்லாத மதத்தவர்களனைவரு மங்கீகரித்தல்; அஃதாவது, ஜாக்ரமுதலிய அவஸ்தாத்ரயங்கள் சகலமானவர்களுக் கும் பொதுவாதலாலும், ஜாக்ராவஸ்தையி லவரவர்க ளபிமானம் பலவாதலா லவ்வபிமானத்தா லவரவர்கள் மதசித்தாந்தத்தின்படி வாதிக்கிறார்களன்றி சுழுப்தியில் யாதொருவாதமு மில்லாமையாலும், ஜாக்ரத்திற் காணங் களுடன்கூடி யநுபவிக்கிற ப்ரபஞ்ச சுகமும் சுழுப்தி யில் மனமுதலிய காணங்களைவிட்டு அநுபவிக்கிற சுழு ப்தி சுகமும் யாவருக்கும் பொதுவாகையாலும், அவ்

வினா:—இன்னம் * உபசாந்தமாவ தெதுவென்னில்?

விடை:—* விவித வெக்தியில் சுகத்தைக்கண்டு நிற்
சுகத்தை விளக்குகிறதென வறிக. (சுசச)

வினா:—இன்னஞ் ஜாக்ரசொற்பன சுழுப்தியில் ...
மெப்படி யிருக்கிறதென்னில்?

வித சுகத்தையே யாவரும் விரும்புகிறார்க ளாகையா லும், ஆநந்தவடிவமே சிவஸ்வரூபமென வேதஞ்சொல் லுகிற தாதலாலும்; அவ்வாநந்தம் யாவருக்கும் பொது வாயிருப்பதாலும், சர்வசமையமு மபேதமென்று சொ ன்னாரென்றபிப்பிராயம்.

* உபசாந்தமாவது, அறிவறியாமையென்னு மிரண் டில், அறிவே யறியாமையாகி அறியாமையே பிரபஞ்ச மாகிச் சுகமாயுந் துக்கமாயும், மாறிமாறித் தோற்றுவ தாலும், இவற்றை யுண்மையெனக் கொள்ளுகிறவனா யில் தனக்குச் சுகமில்லை யாதலானும், இல்லாததை யுள்ளதென அபிமானித்து மயங்குங் கற்பனாசகித அறி வின்வசமாகாமல், உள்ளதை யுள்ளதாக எண்ணினால் அறிவறியாமையென்னுஞ் சகல கற்பனைகளுந் தன்னி டத்திலடங்கும் அடங்கவே, பகிர்முகத்திலும் அந்தர் முகத்திலும் அன்னியமில்லாமல் தானே தானாயிருப்ப தெதுவோ அதுவே யுபசாந்தமென்றர்த்தம்.

* விவித வெக்தியி லென்பதற்கு, ஸ்ரோத்ராமுதலிய ஞானேந்திரியம், கர்மேந்திரிய முதலியவைகளி லிருந் ...றிகிற யாதொரு அறிவுண்டோ? அவ்வறிவிலென்பது பொருள்.

விடை:—ஜாக்ரம் புசிக்கின்றதிற் சுகம், சொற்பனம் நினைக்கிறதிற் சுகம், சுழுப்தி தானாயிருக்கிறதிற் சுக மென வறிக. (சுசஎ)

வினா:—இன்ன மநுபூதியே பிரதானமாய்த் தோன் றுவ தெப்படியென்னில்?

விடை:—இதனாலே, இந்தக்கடத்தாலே, * இந்த விஷ யத்தாலே, சுகசௌக்கியத்தை யடையலாமென்று நிரதிசயம் * தடிப்பாகிற வெஞ்சகத்தில் விளங்குகிறதெ னவறிக. (சுசஅ)

வினா:—இன்னம் விஷய நிமித்திய மன்றியிலே வரு கின்ற ஆனந்தத்தையு முள்ளே ப்ரதிபிம் பானந்தத்தை யும் ஸ்வபாவ ஆனந்தமாகப் பார்ப்ப தெப்படியென் னில்?

விடை:—உள்ளே விஞ்ஞானமய ஆனந்தமும், வெளி யிலே மனோமய ஆனந்தமும், சுழுப்தியி லானந்தமய ஆனந்தமுமாய்ப் பார்ப்பதென வறிக. (சுசகூ)

---

* இந்த விஷயமாவது, கண்ணிற்குத் தோற்றுகிற தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய விஷயங்களாம்.

* தடிப்பாகிற வெஞ்சகமாவது, வ்யஞ்ஜகம் ஓர்பொ ருளை விளங்கக்காட்டுதல், இஃது ஆரியமொழி; தமிழில் வெஞ்சகமென வந்தது, தடிப்பாகிற வெஞ்சகமெனவே தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியனவாகத் தடித்துக் கா ணப்படுகிறதெனப் பொருளாயிற்று. இங்ஙனங் காணப் படுகிற ப்ரபஞ்சத்தில் நிரதிசயம் விளங்குகிறதென்று சொன்னபடியால், தனது நிஜாநந்தமே விஷயாநந்தமா கத் தோற்றுகிறதென் றபிப்பிராயம்.

வினு:—இன்னஞ் சர்வம் பிர்ம்ம மயமென்ப தெப் படியென்னில் ?

விடை:—சர்வத்திலும் ஏகானுபூதி யிருக்கிறபடியி ஞலே சர்வமுமில்லே, அநுபூதி யேகமென வறிக. ()

வினு:—இன்னம் விஷயத்தி லின்பந்தோற்றிஞ லெப் படியென்னில் ?

விடை:—உடனே முன் தாஞயிருந்த வியாபகத்தை க்கொடுக்கவே விட்டுப்போமென வறிக. (சுருக)

வினு:—இன்ன மதுவது தாஞயிருந்து அனுபவிப்ப் தெப்படியென்னில் ?

விடை:—நினைத்தபோதுந் தாஞயிருக்கிறது சுகம், புசிக்கிறபோதுந் தாஞயிருக்கிறது சுகம்; தான் இந்த விரண்டாயு மிருக்கிறபடியா லதுவது தாஞயிருந்து அநுபவிக்கலாமென வறிக. (சுருஉ)

வினு:—இன்னம் எல்லா மாகலாத மெப்படியென் னில் ?

விடை:—ஆகாரமென்கிறது என்னவென்று பார்த் தா லறியாமையா யிருக்கின்றது, அப்போ ஆகாரமில்லே. இந்தவறிவு யேனறியவந்ததென்று பார்த்தால், இச்சை யிஞலே வந்ததென்று அறிந்தபோதே, அப்போ அறி வில்லே, இச்சை யேன்வந்ததென்று விசாரிக்கில், தன் சுகத்தை மறந்த மறைப்பினல் வந்தது, மறைப்புத் தரிசனமாஞல், அப்போ ஆகாரமில்லே, யறிவில்லே, வா சனே மயமில்லே; எல்லா மாகலாதமென வறிக. (சருங)

வினு:—இன்ப மெங்கேயுண் டெங்கே யில்லையென்னில் ?

விடை:—எதிலே யின்பமில்லை, தன்னைப்பார்த்தால் விடாதலக்கணையி லின்ப மதுதா னெதிரே தோற்றுகிற இன்பமென வறிக. (சுடுச)

வினு:—(வாசனை) வாசனையாவ தெதுவென்னில் ?

விடை:—*ஆகலாதத்தை விட்டா லறிவு நானென்கிறஅகங்காரமாகி, அறிவிலிருந்த வின்பம் எனதென்கிறவாகாரமாயிற்று; இவ்விரண்டுமே வாசனையென் வறிக.

வினு:—இன்னம் - வாசனை யெங்கேயுண்டு, எங்கே யில்லையென்னில் ?

விடை:—தானுயிருக்கிற நனவிற் சுழுப்தியி லில்லை * சகலமான சொற்பனத்தி லுண்டென வறிக (சுடுரு)

---

* ஆகலாதம் - அன்னியமின்றித் தானேதானு யிருக்கின்ற ப்ரம்மாநந்தம்.

* சகலமான சொற்பனத்தி லென்பது, தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியபவைகளுடன்கூடி நான் - கர்த்தா, நான் - போக்தா, நான் - சுகீ, நான் - துக்கி, என்று வியவகாரஞ் செய்பவன் ஜீவனுதலானும் (கo) வருஷத்தின் முன் இறந்துபோன தாயினுடைய வுடல் நாசமாகியும் ஸ்வப்னத்தில் உண்மைபோல மனோவாசனையினுல் ப்ரதிபலித்துத் தோற்ற, அதைச் சத்தியமென் றெண்ணி மிகவும் பிரியமாகத் தாயோடு வார்த்தை சொல்லியிருக்கிற சமையத்தில், ஜாக்ராவஸ்தை தோற்றியவுடன் விழித்துப் பார்க்கத் தாயைக் காணுமையாலும், ஆச்சர்யமடைந்தனன். இதுபோல, ஸ்வப்னத்திற் காணப்

வினா:—இன்ன மாகார வாசனைவந்தா லனுபூதியெப் படி யிருக்குமென்னில்?

விடை:—அறிவிற்கு மறதிவரும்,அனுபூதியுமாமென வறிக. (சருஎ)

வினா:—இன்ன மறிவு வாசனைவந்தா லநுபூதி யெப் படி யிருக்குமென்னில்?

விடை:—அனுபூதி பளிச்சென்று விளங்கு மென வறிக. (சருஅ)

வினா:—இன்னம் வாசனைச்சித்து நீங்குவ தெப்படி யென்னில்?

விடை:—முன்னே தேகந் தோற்றியதா? யில்லை. அது அஞ்ஞானம்;மறுபடியுந் தேகந்தோற்றுமற் போகி றதா? தோற்றுகிறதா? தோற்றாது; தோற்றினாலும், அறிவு தோன்றாது. ஆகையால் அறிவறியாமை யிரண் டும் போகவேண்டுமே யென்னில்? அது வொன்றி

படுகிற தேகேந்திரிய ப்ரபஞ்சம் ஜாக்ரத்தி லில்லை; ஜாக்ரத்திற் காணப்படுகிற தேகேந்திரியப் பிரபஞ்சம் ஸ்வப்பனத்தி லில்லை, அப்படி யில்லாத பிரபஞ்சம் பிரி தினமுந் தோற்றி மறைவதுபோல, நெடுங்கால மிரு க்கிறதாகவும், உண்மையாகவுந் தோற்றி இல்லாததாக மறையும தேகேந்திரியப் பிரபஞ்ச முதலியவைகளை உள்ளதாக எண்ணி மயங்கிச் சகல வுயிர்களும் வியவ காரஞ் செய்வதால், ஜாக்ராவஸ்தையை ஸ்வப்பனத் துக்குச் சமானமெனவும் ஜாக்ராவஸ்தையில் சகல வா சனையும் உண்டெனவுஞ் சொன்னாரென்று அபிப்ரா யம்.

லொன்று கெடுகிறது; நான் விலட்சணமாய்ச் சித்தா யிருக்கின்றே னென்று சொன்னுன்; அறிவறியாமை யைக் குறித்துவந்த வாசனுவிருத்தியை யதுதானென் று கருதிச் சொன்னுய்; ஆகையால், அதுவும் பொய் நிரதிசய மாகவேண்டுமென வறிக. (சருக)

வினு:—நனவில் நனவாவ தெதுவென்னில்?

விடை:—ஆகலாதமாத்திரம் விளங்குவதென வறிக.

வினு:—இன்னம் - நனவில் நனவாவ தெப்படியென் னில் ?

விடை:—புசிப்பானவிடம்-மயத்துவமானபடியினுலே யாகாரமில்லே, யறிவில்லே, ஆனந்தவிளக்கமா யிருக்கு மென வறிக. (சசுக)

வினு:—இன்னம் நனவிற் கனவாவ தெது வென் னில் ?

விடை:—அந்த மயத்துவம் நீங்கின ஸ்புரணமென வறிக. (சசுஉ)

வினு:—இன்னம் - நனவிற் கனவாவ தெதுவென் னில் ?

விடை:—வேப்பங்காயிற் கசப்புத் தோற்றுமேயானு லது விருத்தி, ஆகலாதந் தோன்றுமேயானு லது துரிய விளக்கமென வறிக. (சசுங)

வினு:—இன்னம் நனவிற் கனவாவ தெதுவென்னில்?

விடை:—சற்கண்டு ஆகாரத்தில் தித்திப்புத் தோன் றுமேயானுல், விருத்தி யுண்டு ; ஆகாரமில்லே யானுல்,

விருத்தியல்ல. ஆகலாதமாய் விளங்குமானாலது துரிய விளக்கம். இந்த வநுபவந் தோன்றியுந் தோன்றாதவிடம் "காணத்திர ணிற்பினுமென்ற" பாடற் படிக்கென வறிக. (சகூச)

* "காணத்திர ணிற்பினு மப்பொருளைக் காணக்கிடை யாதவை கையறவே, மரணப்படி னும்மது கண்டுகொளும் வழியில்லை யெனும்படி நீமதியே" (பொழிப்புரை.) மனமுதலிய வகக்கரணங்க ளிருந்தாலு மக்குரு துரியத்தைத் தரிசிக்கக் கூடாது, அவ்வகக்கரண முதலிய தத்துவங்கள் முழுவது நசித்தாலு மத்துரியத்தைத் தெரிந்துகொள்ளும் மார்க்கமில்லை யென்னும் விதத்தை நீ தெரிந்துகொள்வா யென்பதாம்:—எனவே, சகல கேவல வசமானு லவ்வஸ்துவைக் காணக்கூடா தெனவும், சகல கேவல மிரண்டிலும் பற்றின்றிச் சாக்ஷிபூதமாயும் - நடுநிலை யாயும் விளங்குகின்ற தனது ஸ்வரூபத்தை நடுநிலையா யிருந்தால் தரிசிக்கலா மெனவும், இஃது நனவிற் சுழுப்தி யநுபவ மெனவும், இவ் வநுபவமாகிய துரியந் தோன்றியவிடத்துச் சகல கேவல மில்லாமையாலும், தோன்றுதல் மறைத விரண்டுக்கு மிடந் துரியமாகையாலும், தோன்றியுந் தோன்றாத விடமெனக் கூறினாரென்ப தபிப்பிராயம்.

(நனவிற் சுழுப்தி.)

வினா:—இன்னம் நனவிற் சுழுப்தியாவ தெதுவென்னில்?

விடை:—சகல விவகாரிப்பிலு மறிவு மாகாரமுமில்லாம லண்டபிண்டங்களெல்லாங் கரைந்து யாவர்க்குமியல்பாய்ச் சுகவறிவு தானாய் விளங்குமென வறிக.

வினா:—இன்னம் நனவிற் சுழுப்தியாவதெதுவென்னில்?

விடை:—அநுபூதியானால் அக்ஞானம் போம், அனுபவமானாலாகாரம்போமனுபவித்தலுண்டானால் விருத்திபோம், நனவிற் சுழுப்தி வருமென வறிக. (சசுசு)

வினா:—இன்னம் நனவிற் சுழுப்தி யெப்படியென்னில்?

விடை:—அறிகிற தர்மமில்லை, அறியாத தர்மமில்லை, தானாய் விளக்கமா யிருக்கிற தாகையா லறிவில்லை; யக்ஞானமில்லை, யாகார மில்லையென வறிக. (சசுஎ)

வினா:—இன்னம் நனவிற் சுழுப்தி யெப்படி யென்னில்?

விடை:—ஒன்றைப் புசிக்கிறபோது ஆகாரமு மறிவுமில்லை, யானந்தமாத்திரமிருக்கின்றது. இஃது சுழுப்தி; பிற்பாடு, அறிவு உதித்து இன்னம் புசித்தது வேண்டுமென்று பகுக்கிறபோது மாகாரமு மறிவுமில்லை, யானந்தமாத்திர மிருக்கிறது, இஃது சொற்பனம். அந்த விஷயத்தைப் பார்த்தபோது ஆகாரமு மறிவுமில்லை, யானந்தமாத்திர மிருக்கின்றது இது ஜாக்ரம். இந்த மூன்றிடத்திலும், ஒரேபிரகார மானந்தவிளக்கமா யிருக்குமென வறிக. (சசுஅ)

வினா:—இன்னம் சுழுப்தி நனவிற்கு அக்ஞானமில்லை, யறிவில்லை, யாகார மில்லையென்பதெப்படி யென்னில்?

விடை:—ஸ்புரணம் வந்தபோது தான் விளங்கினால், முன்னஞ்ஞானமில்லை, பின்னாகாரமில்லை, யது அனுபூதி

விருத்தியானல், முன் னக்ஞானமுண்டு, பின்னுகார முண்டென வறிக. (சசுசு)

வினு:—இன்ன பந்தாங்கமான சுழுப்தி யனுபவ மெப்படியென்னில்?

விடை:—ஒருவனை யொருவன் பார்த்துப் பேசும் போது இருதயமாத்திரம் விடாமல், அவன் சொன்ன சத்தத்தை யிவன் விட்டுவிட்டு, இவன் சொன்ன சத்தத்தை யவன் விட்டுவிட்டு அர்த்தமாத்திர மெப்படிக் கிருகியமாகுமோ? அப்படிப்போல, அறிவும் விஷயமும் விவகரிக்கிறபோது ஆனந்தமாத்திர மிச்சமாய்ச் சேடித்துவரும் அறிவு மாகாரமுந் தோற்றமில்லாமற் போகு மென வறிக. (சஎ0)

வினு:—இன்னம் நனவிற் சுழுப்தி யெதுவென்னில்?

விடை:—ஒரு பழத்தை வேண்டுமென்று நினைத்த போது அறிவிலே பழமு மின்பமுமடங்கியிருக்கிறது இஃது ஸ்வப்னம். பழத்தைப் பார்க்கும்போது பழத்திலே யறிவு மின்பமு மடங்கியிருக்கின்றது; இஃது ஜாக்ரம். அந்த பழத்தைச் சாப்பிடுகிறபோது பழமில்லை, யறிவில்லை, யானந்தமாத்திர மிருக்கிறது, இது அஞ்ஞானமா யிருக்கும்; இஃது சுழுப்தி, மறுபடி விருத்தி பிறந்தபோது துரியமானு வின்பம்விளக்கித் தான் விளங்கும்; அப்போது அஞ்ஞானமில்லை, யறிவில்லை, யாகாரமில்லை, இது நனவிற் சுழுப்தியென வறிக. (சஎக)

வினு:—இன்னம் நனவிற் சுழுப்தி யெதுவென்னில்?

விடை:—அறித லற்றவிடத்தி லஞ்ஞானமில்லை, அஞ்ஞான மில்லாதவிடத்தி லறிதவில்லை, யறிதலோடுங்கூ

டின் விவகாரத்தி லாகாரமில்லை, யறிவில்லை, யஞ்ஞான மில்லை, யங்கங்கே தானு யிருக்கிறதென வறிக. (சஎஉ)

வினு:—இன்னம் * நனவிற் சுழுப்தி யெப்படியென் னில்?

---

* நனவிற் சுழுப்தியென்பது, விவேகமென்னும் நிர்ம லமான ஜாக்கிரத்தி லனுபவிக்கப்படுகிற ப்ரம்மானந்தம். அஃதெப்படியென்னில், தினந்தோறும் விவேகமில்லாத மூடசுழுப்தியிற் சகல வுயிர்களுஞ் சுகமாய் நித்திரை செய் தெழுந்தோமென்று அவ்வவஸ்தையி லனுபவித்த சுகத்தைச் சொல்வதுபோலப், பிர்ம்மாநந்தத்தை யநுப வித்த பெரியோர்கள் நனவிற்சுழுப்தி சுகத்தின் றன்மை யைச் சொல்லுகின்றார்கள். அதுவுமன்றி ஜாக்ரமுதலிய நான்கு அவஸ்தைகளில் ஜாக்ரத்ஜாக்ரத், ஜாக்கிரத் ஸ்வ ப்பனம், ஜாக்கிரத் சுழுப்தி, ஜாக்ரத் துரீயம்எனவும்,இப் படியே சொற்பன ஜாக்கிரத்து முதலானவைகளும், சுழு ப்தி ஜாக்கிரத்முதலியவைகளும், துரியஜாக்கிரத் முத லானவைகளுங்கூடிப் பதினாறுகுமெனவுஞ் சொல்லுவ ர். இவற்றுள்-ஜாக்கிரத்ஜாக்கிரத் அவஸ்தையாவதெப்ப டியென்னில், ஸ்தூலசூட்சும காரணங்களான சகல திரி ஸ்யபதார்த்தங்களில் யான் எனதென்னும் பாவனையில் லாததே ஜாக்கிரத் ஜாக்கிரதா வஸ்தையாகும்; சச்சிதான ந்த ஸ்வரூபியான தன்னிடத்தில் திருஸ்ய பரம்பரையா யுள்ள தீர்க்கசொற்பன ப்ரபஞ்சம் நெடுங்கால மிருப்ப தாகத் தோற்றி விளங்கி மறைகின்றதெனத் திருஸ்யபர ம்பரையை யறிந்து நாமரூபங்களைப் பரிஷ்காரமாய் விடு வதே ஜாக்கிரத் சொற்பனமாகும்; அகண்ட பரிபூர்ண சிதாகாச ஸ்வரூபியான தன்னிடத்தில் ஞானஸ்வரூபத்

னைத் தவிர வேறே யொன்றுமில்லையென் றறிவதே ஜாக்ரத்சுழுப்தியாகும், ஜிதாபாசன் ஜீவனாதலாலும் சித்தினது ஆபாசன் சிதாபாசன், சித்து-ப்ரகாசம், ஆபாசம்= கடஜலத்திற் பிரதிபலித்துத் தோற்றுவது சூரியப்ரகாசமாயினும் வாஸ்தவ மல்லாததா லிதற்கு ஆபாசமெனப் பெயர்வந்தது; இப்படிப்போல ஞானசூரியன் கடமென்னுந் தேகத்திலுள்ள அந்தக்கரணத்திற் பிரதிபலித்துத் தோற்றுகிறது பொய்யாதலின் சிதாபாசனெனப் பெயர் வந்தது; இங்ஙனஞ்சொல்லிய சிதாபாசன் ஸ்தூலமுதலிய மூன்று தேகங்களோடுகூடி யாபாசமான வியவகாரஞ்செய்கின்றமையின் இந்த வியாபாரத்தால் தேகேந்திரிய ப்ராண அந்தக்கரணங்கள் நசியாமற்போனாலு மவைகளி லசத்தியபுத்தி யுண்டாகியந்தவ்யவகாரங்களெல்லாம் பொய்யென்று வருகிற நிச்சயஞ்ஞானமே ஜாக்ரத்துரியமாகும்; ஸ்தூலதேகத்தை யானெனதெனக் கொள்ளும் அஞ்ஞானங்கெட்டுஞ் சிதாபாசனது ஆபாசகாரண சேஷ்டைகளினாலே யெனக்கு யாதொரு பந்தமுமில்லையென்றறிவதே ஸ்வப்பன ஜாக்ரத் ஆகும், காரணாஞ்ஞானமாகிய ஜீவத்வங் கெட்டதனா லசுத்ததிரிபுடி யென்னுங் காண்பான் காக்ஷி காணும்பொருளான மூன்றுபேதமுமதன்காரியமான துக்கமும் விஞ்ஞானமுமாகிய இவைகளில்லையென் றறிவதே ஸ்வப்பன ஸ்வப்பனமாகும்; அதிசூட்சுமமான யுக்தியினா லசஞ்சலையான தன் புத்திவிர்த்தியானது எப்போது ஞானத்திற் கெடுகின்றதோ, அப்போதுள்ள அவஸ்தை ஸ்வப்பன சுழுப்தியாகும்; சஹஜாநுபவம்வந்து மகண்டாகாரவிருத்தியின் ஒடுக்கம் நேரிடாததனால் ஆநந்தானுபவஞ் சகஜமாகாம லிருப்பதே ஸ்வப்பன துரீயமாகும்; சின்மயாகாரத்தையடைந்து அகண்

விடை:—அறிந்தபோதும் அறியாதபோது *மனுபூதி நீங்காதிருக்கிறதென வறிக. (சஎங)

டாகாரவிர்த்தி யொடுங்குவதே சுழுப்திஜாக்ரத் ஆகும்; அகண்டாகார விர்த்தியில் வெகுகால மனுபவிக்கப்பட்ட ஆநந்தானுபவஸ்திதியில் சமமான ஸ்வரூபத்தை யடைவதே சுழுப்தி ஸ்வப்னமாகும்; திரிஸ்யமான அகண்டாகாரவிர்த்தியும் நசித்துக் கேவலம் அகண்டைக ரசபாவனையே சுழுப்திசுழுப்தியாகும்; அந்த வகண்டைக ரசானுபவம் பாவனையையபேக்ஷியாமல் தன்னுலாவிர்ப்பவிப்பதே சுழுப்தி துரியமாகும்; அந்தரசானுபவம் ஜாக்ரத்தியிலுஞ் சஹஜமாயிருப்பதே துரீய ஜாக்ரத்ஆகும்; அஃது ஸ்வப்னத்திலுஞ் சகஜமாவதே துரீய ஸ்வப்னமாகும்; அவ்வநுபவம் சுழுப்தியிலுஞ் சகசமாவதே துரீய சுழுப்தியாகும்; தேற்றாங்கொட்டை ஜலத்திலுள்ள கல்மஷத்தைப் போக்கித் தானு மங்கீரி லடங்குவது போல அந்த அகண்டைக ரசாநுபூதியு மவித்யா காரியங்களான தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய சகல கல்மஷங்களைப் போக்கித் தானு மடங்குவதே துரீய துரீயமாகும், இவ்விதமாகிய (கசு) அவஸ்தைகளுக்கு மப்புறப்பட்டதாயும் வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததாயும் நாமரூப மற்றதாயு மிருக்கின்ற நிஷ்ப்ரதியோகிக பிரமத்தை ஜாக்ரத்ஜாக்ரதான முதலாவ தவஸ்தையைக் கூட அநுபவியாதவர்கள் வாக்கினற் புலம்புவது மிகவும் உசித மல்லாததா யிருக்கின்றது; ஆதலின் மேற்சொன்ன பதினாறு அவஸ்தைகளை நனவி னனவுமுதலிய நான்கவஸ்தைகளாகச் சுருக்கி இந்நூலாசிரியர் சொன்னதுபற்றி யவற்றின் விரிவைத் தெரிவித்ததென் றபிப்ராயம்.

* அநுபூதியாவது - தானேதானாகிய துரியாநுபவமாம்.

(தாள்தலையென்பது.)

வினு:—இன்னனந் தாள்தலை யென்ப தெப்படியென்னில் ?

விடை:—* உடலைவிட் டுயிராகிய பாதம் சிவமாகிற ஆகலாத சிரசைச் சிந்திக்கச் சிந்திக்க வுயிர் சிவத்திலடங்கினது நனவில் நனவு, அதிலிருந்து மயத்துவம் நீங்கியுண்டான துரியம் நனவிற் கனவு சிரசாயிற்று, முன்னு கலாதம் பாதமாயிற்று, இந்த விரண்டுந் தானுனது நனவிற் சுழுப்தி முடியென வறிக. (சஎச)

* உடலைவிட் டுயிராகிய பாதமென்பது, தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலாகிய வபிமானத்தை விட்ட வுயிர் அறியுந் திருவடியாகிய அறிவெனவும், தேகாபிமானத்தை விடாத வுயிர்ஜீவனெனவும், அறிவு முதற்காரணம், ஜீவன் நிமித்தகாரணம், காணேந்திரியங்கள் துணைக்காரணமெனவும், இவைகளுடன் கூடி வியாபாரஞ்செய்வதே ஜீவனுக்குப் பகிர்முக மெனவும், பகிர்முக வ்யாபாரத்திற் கிஞ்சிற்றுஞ் சுகமில்லாமையானும், அறிவு மாத்திரமா யிருப்பதே ஜீவனுக் கந்தர்முக மாதலானும், அறியுந் திருவடியாகியவறிவு;சிவமாகிற ஆகலாதசிரசைச் சிந்திக்கச் சிந்திக்கவென்பது-ஆஹ்லாதமென் னுங்கிரந்த மொழி தமிழி லாகலாதமென வந்தமையால், அதின் பொருளாநந்தம். அவ்வாநந்தமே ப்ரம்ஹமாதலின், பிரம்மமாகிற நிரதிசயாநந்த மென்னும் ஸ்வதந்தாநிலைமையை யடையவேண்டுமெனச் சாஸ்த்ரயுக்தியாலுங் குரு சொன்ன அநுபவ யுக்தியாலும் நன்று யாலோசித்துச் சிந்தனை பண்ண, உயிர் சிவத்திலடங்கினது நனவில் நனவென்பது - சமுத்ரத்தி லுண்டான அலை சமுத்தி

ரத்தி லடங்கினதுபோல வகண்ட வியாபகமான ப்ரம்ஹாநந்த சமுத்ரத்தில் ஸ்புரணரூபமா யெழுந்த உயிரென்னு மறிவு ப்ரம்ஹாநந்தத்தி லடங்கி யவ்வாநந்தத்தை யநுபவிப்பதே நனவில் நனவெனவும்; அதிலிருந்து மயத்துவநீங்கி யுண்டான துரியமென்பது - அங்ஙன நிரதிசயாநந்தத்தை யநுபவித்த வறிவு அவ்வாநந்தத்தினின்று சகசசமாதியாகி வெளிப்படுங் காலத்து மயத்வமென்னுந் தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய சகல துன்பங்களு நீங்கிப் பகிர்முகத்திலுந் துரியமே விளங்குகிற தெனவும்; நனவிற் கனவு சிரசாயிற்றென்பது- ஜீவனிடத்தி லாரோபமா யெழுந்த ஸ்வப்னம் ஜீவனிலடங்குவதுபோலத், தன்னிடத்தி லாரோபமா யெழுந்த துரியந் தன்னிடத்தி லடங்கவேண்டு மாதலின், துரியத்தைக் கனவெனவும், சூரியோதயமானல், தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய த்ருஸ்யவஸ்துக்களைப் பார்க்கலாமன்றி மற்றொன்றுங் காணக் கூடாததுபோலப், பிரத்யகானந்த வுதயமானல் தன்னைக் காணலாமன்றி வேறொன்றுங் காணக்கூடாததாதலின் துரியமென்னும் ஞானசூரிய னுதயமாவதே சிரசாயிற்றெனவும்; முன்னுகலாதம் பாதமாயிற்றென்பது - முன்சொன்ன நிரதிசயாநந்தத்தை யிவ்வறிவு அநுபவிப்பதா லவ்வாநந்தமே யறுதித்திருவடியாகிய பாதமாயிற்றெனவும்; இந்த விரண்டுந் தானனது நனவிற் சுழுப்தி முடியெனவறிக என்பது - அறியுந் திருவடி யென்னுந் துரியமும், அறுதித்திடிவடியென்னுந் துரியாதீதமுமாகிய விரண்டுந் தனதகண்ட வியாபகத்தி லெழுந்த மோக்ஷாவஸ்தைகளாதலானும், தன்னைத்தவிர வேறில்லாமையின் தன்னி லடங்கவேண்டு மாதலானும், அங்ஙனமடங்கித்

(துரியமும் விருத்தியும்.)

வினு:—துரியமும் விருத்தியு மெப்படியென்னில்?

விடை:—துரியந்தன்னை நினைத்து ஆகலாதமானுல், சரி, அறிவாகி யாகாரமானுல், துக்கமென வறிக. ()

வினு:— இன்னந் துரியமும் விருத்தியுமாவ தெப்படி யென்னில் ?

விடை:—புசித்தவிடம் விஷயமில்லை, போதமில்லை, யவட மநுபூதியென்று கண்டால், வெளிப்பட்டவிருத் திதுரியம்; அனுபூதி யென்று தெரியாவிடில் அவட மஞ்ஞானம், உதித்தது விருத்தியென வறிக. (சுஎசு)

வினு:—இன்னந் துரிய மெப்படி யென்னில் ?

விடை:—ஒரு பழமான ஆகாரத்தை யறிவானது நல மென்று சாப்பிட்டபோது அந்தப்பழத்தி லறிவு முழு ங்கி மயத்தை யடைந்து பின்னறிவு வெளியே வந்த போது பழம் நன்று யிருந்ததென்று வந்தால், மயத் தையடைந்த விருத்தி, தன் வடிவென்று கண்டாற் றுரி யம்; மயமில்லை, விருத்தியில்லை, இயல்பாய்ச்சுகவறிவா யிருக்கிறதென வறிக. (சுஎஎ)

தானேதாஞு யமைதி பெற்றிருப்ப தெதுவோ? அது வே நனவிற் சுழுப்தி முடியெனவும் கூறினர். இஃது எல்லாவழக்குகளுங் கடந்த ஸ்வாநுபவமாதலின், யா வருமங்கீகரிக்க வேண்டுமென்பது தாத்பர்யம். இவ்வி டையில் யோகசாம்பிரதாயத்தைச் சொல்லி யிருப்பத ஞலும், அவ்வித யோகம் ஞானத்துக் கங்கமாதலானும் அதனையெடுத்துக் கூறினுல் விரியுமென்பது கருதி மூக் யாபிப்ராயத்தைத் தெரிவித்தனம்.

வினா:—இன்னம் விருத்தி ஸ்வபாவமுந் துரியஸ்வபாவமு மெப்படியென்னில்?

விடை:—த்வைதப்படுத்தி யிரண்டாக்கிறது விருத்திக்கி ஸ்வபாவம், அதுவது தானாக வொன்றாய்விளங்குகிறது, துரியவிளக்கத்திற்கு ஸ்வபாவம்; விருத்தி யொன்றாகிறபோது துரிய மதிலதிற் றானாயிருக்கும். துரிய மெல்லாவற்றிலு நிறைந்திருக்கிறபடியினாலே, விஷயத்தைப் பார்த்தபோதுதானே விஷய மில்லையென வறிக. (௭௭௮)

வினா:—இன்னம் விருத்தியுந் துரியமு மெதுவென்னில்?

விடை:—தத்தரிசனமானா லது துரியம், விஷய தரிசனமானா லது விருத்தியென வறிக. (௭௭௯)

(துரியமும் பிரமீதி.)

வினா:—துரியமும் பிரமீதியு மெப்படியென்னில்?

விடை:—மத்தியில் ஸ்புரிக்கிறபோது துரியமானால் தான் விளங்கும், பிரமீதி கட்டினால், சத்தைத் தரிசித்து, ஆகாசமாய்ப் போகுமென வறிக. (௭௮௦)

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியுமாவதெதுவென்னில்?

விடை:—இருக்கிறதில் ஸ்புரித்தா லது துரியவியாபகமா யிருக்கும்; வியாபகத்தி லெழுந்தஞானம் வியாபகமே! யது தானாயிருக்கும், அறியாமைகட்டி ஸ்புரித்தா லது விருத்தி, விஷய மாய்விடுமென வறிக. (௭௮௧)

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியு மெப்படியென்னில்?

விடை:—தானாயிராநின்ற சைதன்னியத்தில் ஸ்புரித்துத் தானுள்ளடங்கி மயத்தையடைந்து சலித்து வெளிப்பட்டது ப்ரமீதி, ஸ்புரித்ததிற் றான்விளங்கின லது துரியம், தடையும் விடையு மொரே யிடமென வறிக.

வினா:—இன்னந் துரியம்விளங்குவதும் பிரமீதிகட்டுவது மெப்படியென்னில்?

விடை:—கண்ணாடியைப் பாராமல் முகத்தைப்பார்த்தால் ஒடுங்கிப்போம், கண்ணாடியைப்பார்த்தா லிரண்டுபக்கமுந் தானாகவே தெரியும். அதுபோல, மத்தியிற் காட்டாதிருந்து காட்டுகிறதும், அசமிதமாகியுஞ் சர்வமாகியு மிருக்கிற துரியத்தைவிட்டுக் காட்சிப்பொருளைப் பிரமீதியினால் சுகமாகக் கருதவே, யது அழியும் பொருளாகையாற் சுகத்தையடைந்து ப்ரமீதி யாகிறதென வறிக. (சஅ௩)

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியு மெப்படியென்னில்?

விடை:—கேட்ட அறிவு, பார்த்த அறிவு உபாதியையடுத்தாற் பிரமீதி, யதிற் பலம்விளங்கித் தானாயிருந்தாற் றுரியவனுபூதி, கேட்ட அறிவு பார்த்த அறிவு-இந்து விதத்திலு மந்த அறிவிற் றுரியவியாபகந் தானாயிராவிட்டா லதுவதுவாகி யறிந்து தானாகமாட்டாதென வறிக.

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியு மெதுவென்னில்?

விடை:—ஒரு பலத்தைநாடி இராமஸ்வாமி வீட்டிற்குப்போகத் தோன்றல்வர, அது துரியத்தில் விளங்காம லகமிதமாகித் தடித்தது ப்ரமீதி, தோற்றாவிற் றன் பலம்விளங்கினாற் றுரியமென வறிக. (சஅரு)

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியு மெதுவென்னில்?

விடை:—மத்தியிற் றானே ஞானமாகி யொதுங்கிய கமிதமாகி, யெதிரே அவன் அவள் - அதுவென்று பாவப்பட்டுப் * படிகமண்டப நாய்போலவாகிறது * ப்ரமீதி, மத்தியிற் றுரியம் விளங்கினா லவைகளில்லை; இதிலேயு மதிலேயு பானாவென்கிற வியாபகத்தை மத்தியிலெடுத்துக்கொண்டு துரியம் வெளிப்பட்டுத் தானாகவேண்டுமென வறிக. (சுஅசு)

---

* ஸ்படிகமண்டப நாய்போலவென்பது, ஸ்படிகமண்டபத்தி னடுவிற் கட்டிய நாயினுடையநிழ லப்படிகமண்டபத்திற் ப்ரதிபலித்து மெய்போலத்தோற்ற, அதனைத் தனது நிழலென் றறியாமல், நாயென்றெண்ணிக் குலைத்துக் குலைத்து வருத்தமடைந்து பின்பக்கந் திரும்ப, எவ்விடத்தும் நாயினது வடிவமே தோற்றுகிறபடியாற் கிஞ்சிற்றுஞ் சுகமில்லாம லெப்படி வருத்தமடைந்ததோ? அப்படிப்போல, நிர்மலமாகிய துரியஞ் சர்வவியாபகமா யிருப்பதா லத்துரியமென்னும் ஸ்படிகமண்டபத்தில், அல்லது துரியவியாபகத்தில் ஜீவனானவன் நல்வினை தீவினையென்னுங் கயிற்றினாற் கட்டுப்பட்டிருப்பதாலும், ஜீவனது ப்ரதிபிம்பமான மனம்-நினைக்கப் புலப்படுகிற கருத்துப்பொருளான அந்தர்ப்ரபஞ்சமாகவும், பஞ்சேந்திரியங்காரணமாகத் தோற்றுகிற காட்சிப்பொருளான பாஹ்ய ப்ரபஞ்சமாகவும், அனேக சித்திர விசித்திரமாகவும், அவ னவ ளதுவாகவுங் காணப்படுகிறவனைத்தும் ஜீவனது மனோபாவனையாகிய நிழல் பொய்யாகலானு மிவற்றைத் தனது நிழலென் றறிந்தால் வருத்தம் வாராது; அப்படியறியவில்லை யாகலானும், அ

வினா:—விளங்கிப்போவதும் பிரமீதியாவது மெப்படியென்னில்?

விடை:—தேகம் நான், எதிரே யனந்தமான தேகவுபாதி யீஸ்வரன், மத்தியி லறியாமை யேகதேச வறிவு, நான்-அகண்ட அறிவு, யீஸ்வரன் மத்தியம், ஆகலாதம் ஏகதேசவின்பம், நான்-அகண்ட வின்பம், ஈஸ்வரன் மத்தியிற்றுரியம், ஜீவதுரியம்-நான், வெளியி லெதிரே யீசதுரியம், மத்தியம் பிரமதுரியம்—மத்தியில் தானறிவானந்தம், மத்திய அறிவிற் றானு மனுபூதியும் விளங்காதபடியினாலே, அறிவு - விருத்தியான ப்ரமீதியாயிற்று; அறிவிற் சைதன்னியம் விளங்கினால் மூன்றிடமுமொரே பிரகாரமென வறிக. (௪௮௭)

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியு மெப்படியென்னில்?

விடை:—தானா யிருக்கிறபடியினாலே, ஜாக்ரமில்லை, தானா யறிகின்றபடியினாலே சொற்பனமில்லை, மத்தி

வைகளி னாகாரமாகி யுண்மையென்றெண்ணி வ்யவஹாரம்பண்ணிக் கிஞ்சிற்றுஞ் சுகமில்லாமல் மேற்சொன்ன ஸ்படிகமண்டப நாய் போல, ஜீவன்வருத்த மடைகின்றாகலானும், உபமானம் நாய். உபமேயம் ஜீவன். இந்த ஜீவன் வருத்தமடைதல், சாதாரணதர்மமென்றபிப்ராயம்.

* ப்ரமீதி - கிளிஞ்சிலின்க ணில்லாத வெள்ளியை யுள்ளதென்று ப்ரமிப்பதுபோலத், தன்னிடத்தி லில்லாத ப்ரபஞ்சத்தை யுள்ளதென்று ப்ரமிக்கிற யாதொரு பொய்யான ஞானமுண்டோ? அதற்கு ப்ரமீதி யென்று பொருள்.

யம் வியாபகமானபடியினாலே, சுழுப்தியில்லை; மூன்றிடமு மொன்றாய் விளங்குகிறபடியினாலே, யது-துரியம், முன்னும் பின்னுந் தானாயிருப்பது. மத்தியிற் றுரியவிளக்கந் தானாகவந்தாற் றுரியம், தானாய் வரர்விடிற் பிரமீதி யாகுமென வறிக. (௪௮௮)

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியு மாவதேதுவென்னில்?

விடை:—தன்னையும் பிரமையு மத்தியிலிராநின்ற சுகசொரூபம் விளக்கி வைத்துக்கொண் டிருப்பதைக் கண்டால் அது-துரியம், சுகதுக்க வேதனை யில்லை. இத மகமாய்க்கண்டால், சுகதுக்கமாகிற ப்ரமீதி யாமென வறிக. (௪௮௯)

வினா:—இன்னம்-துரியமும் பிரமீதியு மெப்படியென்னில்?

விடை:—சொரூப பூரணத்தை விட்டு யேகதேசமான தன்னை யொருமுதலாய்க் காணவே? எதிர்ப்பட்டது ஆகாரமாய் அதிற் சுகதுக்கமுண்டாகின்றது, அப்படிக்காண்கிறதற்கு மந்தச்சொரூப மப்படியாயிருந்து பிரேரகம்பண்ணுகின்றது, அது விளங்காதது பிரமீதி; விளங்குகிறது துரியமென வறிக. (௪௯௦)

வினா:—இன்னந் துரியமும் ப்ரமீதியுமாவ தெப்படி யென்னில்?

விடை:—சகலவுயிர்களு முருவமில்லாமல் விளங்குகிறார்கள். எப்படியென்னில்? ஒருவிஷயந் தானாகாவிடிற் றோற்றுகிறதில்லை, அனந்தமாகிய அண்டபிண்டச

ராசரங்களு மிப்படியே; அப்போ அவைகளில்லை, தானே யேகதேசமா யிருக்கிறது; ஆகையால், தானுஞ் சர்வவுயிர்களுந் தேகமில்லாமலே விளங்கத் தன்னைத் தேகாகார மாக்கிக்கொண்டு வருகிறதே ப்ரமீதியென வறிக. (௪௯௧)

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியு மெதுவென்னில்?

விடை:—நான் சொன்னது தெரிந்துதா? வென்கிற போது, தெரிந்துதென்றான். தெரிந்தது யிருக்கிறதற்குத் தெரிந்துதே யல்லாமல், மற்றொன்றிற்குந் தெரிந்ததல்ல; அப்படியிருக்கிற சொரூபத்திற்குத் தெரிந்துதென்கிறது துரியம்; அதற்கபாயமாய் நான்கேட்டேனென்கிறதுதான் மலமான ப்ரமீதியெனவறிக. (௪௯௨)

வினா:—இன்னந் துரியமும் பிரமீதியு மெதுவென்னில்?

விடை:—*இதமென்கிற போதத்தி லகந் தானாயிருக்கிறது; அகமென்கிற போதத்தி லிதந் தானாயிருக்கின்றது, இப்படி நானெனதென்பதையெல்லாந் தானாய் நானெனதென்ப தில்லாமலிருக்க நானென்றுவருவதே ப்ரமீதி; இப்படி வருவதைச் சுவானுபவத்திற் றானாய் விளக்கிக்கொண்டு வருவதே துரியமென வறிக. (௪௯௩)

(துரியம்.)

வினா:—முத்துரியனுக்கும் போத மெதுவென்னில்?

விடை:—ஜீவதுரியனுக்கு அறிவு போதம், ஈஸ்வர துரீயனுக்கு அறிவிறந்த போதம், பிரம்ம துரியனுக்கு வாசனை போதமென வறிக. (௪௯௪)

---

* இதம் - ஆரியமொழி, இதுவென்பது பொருள்.

வின:—துரிய மதுவதுவா யிருப்ப தெப்படி யென்னில் ?

விடை:—அகமாயிருப்பது மிதமாயிருப்பது மத்திய மான துரியமாகவே யிருக்கின்றது. அதுவாய்த்தோன்றுது, அஃதே யின்பமாயிருக்கின்றது. அதுவே யனுபவிக்கின்றது, அதுவது தானு யிருக்கிறதென வறிக

வின:—இன்னங் துரியம் விளங்கினல் உபாதிகளில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை:—நனவிற் றுனைது கனவில் விளங்கினபடியினுலே, மூன்றவஸ்தையு மூன்றுதேகமு மில்லை, மூன்றிடத்திலுந் தானேயெனவறிக. (சுகூசு)

வின:—இன்னங் துரியமாவ தெதுவென்னில் ?

விடை:—அகத்திலு மிதத்திலு மத்தியிலுந் தன்னை வியாபக பூரணமாய்க் காண்பது துரியம். எங்கெங்கே யெப்படி யெப்படி வந்தாலு மப்படியப்படியாய் விளங்குவதுந் துரியமெனவறிக. (சுகூஎ)

வின:—இன்னங் துரியமே யனேகமாவ தெப்படியென்னில் ?

விடை:—* மூன்றுவிரலைப்போல மத்தியமான துரியமே யகமிதமானதுஞ் சுற்றி வருகிறது மனந்தமானது மதுவே; யனந்தமு மில்லையென வறிக. (சுகூஅ)

---

* மூன்று விரலைப்போலவென்பது, மூன்றுவிரலினடுவிர னீண்டிருப்பது போலச், சராயுஜ முதலிய நால்வகையோனி யெழுவகைத் தோற்றம் (அசு) லட்சமென்னப் பெயருள்ள சராசர வஸ்துக்களில் யாதொரு பரம்பொருள் பற்றியும் பற்றில்லாமல் வியாபித்திருக்கிறதோ, அதுவே நீண்டிருக்கிற தென்பது பொருள்.

வினா:—இன்னந் துரியந் தானாய் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை:—அகமுமிதமு மொன்றிலே யொன்றுகூடிக் கெடுக்கின்றது, மத்திய வனுபூதியை நீங்கித் துரியம் விளங்கித் தானாய்ப்போகிறதெனவறிக, (௯௯)

வினா:—துரியம் விளங்கினா லவைக ளில்லையென்ப தெப்படியெனனில்?

விடை:—சொற்பனத்திற்கண்டது ஜாக்ரத்திற் பார்க்க வெப்படி யில்லையோ? தோன்றிக்கொண் டிருக்கிறபோதுதானே யெப்படியில்லையோ? அப்படிப்போலத் துரியம் விளங்கும்போது சகலமு மிருந்துஞ் சகலமு மில்லை யெனவறிக. (௱)

வினா:—இன்னஞ் சதா தான் விளங்கவேண்டுவதெப் படியென்னில்?

விடை:—ஒருவனுடனே பேசப்போகிறபோதும், மத்தியிலே நின்றவிடத்துந் துரியம், பூரணமாய் விளங்க வேண்டு மெனவறிக. (௱௧)

வினா:—இன்னந் துரியம் வெளிப்படுவ தெப்படி யென்னில்?

விடை:—* இருபக்கமுஞ் சமத்துவம்வந்தால் துரியம் வெளிப்படுமெனவறிக. (௱௨)

வினா:—இன்னம் ஏகதேசதுரியமும் பூரண துரியமு மெப்படியென்னில்?

விடை:—ஏகதேசத்தினாலே யிருக்கிறதும் அறிகிறதும் ஆனந்தமும் விறிவாய் விளங்கும், ஏகதேசம்விட்

---

* இருபக்க மென்பதற்கு, அந்தர்முகம்—பகிர்முக மாகிய விரண்டிடத்திலுமென்பது பொருள்.

டால் கண்ட அறிவினு லகண்டானந்தம் விளங்கும், ம மயமில்லை, யகணடானந்தத்தினுல் அகண்டவறிவு விள ங்கும் போதமில்லை, அறிவுமானந்தமுந் தனித்தாலுந் தானீங்காது, அறிவுமானந்தமுந் தானுனது தானுயிரு க்கிறது பூரண சைதன்னியமாதலால், பூதகாலஞ் சத் து, வர்த்தமானஞ் சித்து, பவுஷ்யகாலமானந்தம், பூர ணசைதன்னியமாவது, அநாமயம். அகமித மத்தியமு மனேமயமே; பூரண சைதன்னியத்திற்கு யிந்த மூன் றுகாலப்பிரிவுமில்லையென வறிக. (௫0௩)

வினு;—இன்னம் துரியம் விளங்குவ தெப்படியென் னில்?

விடை:—விஷயமாய் நின்றுபார்த்தால் விளங்காது, துரியமாய் நின்றுபார்த்தால் விளங்கும், பார்ப்பதும், சமனுயறிவதும், மேலே மத்தியிலெனவறிக. (௫0௪)

வினு:—இன்னம் ஞானசூரிய னெங்கேயுதயமாகு மென்னில்?

விடை:—* ஆகலாத வெற்பி லுதயமா மெனவறிக.

வினு:—இன்னந் துரியமெப்படியென்னில்?

---

* ஆகலாத வெற்பிலென்பதற்கு, ப்ரத்யட்சமான ஜ டப்ரபஞ்ச வஸ்துக்களை ப்ரகாசிக்கச்செய்கிற பூதாம்ச மான சூரியன் உதயகிரியென்னும் பர்வதத்தி லுதயமா தல் போலச், சித்துவடிவான ஜீவன்முதலிய தத்துவங் களை ப்ரகாசிக்கும்படி செய்கிற ஞானசூரியன் ஆனந்த மெனப் பெயருள்ள மலையின்கணுதயமாகிறுரென்பது பொருள்.

விடை;—தன்னுடைய வியாபகத்தை மறந்தவிடமே மூலப்பிரகிருதி யாயிற்று. தன்னுடைய வியாபகத்தில் ஸ்புரணம் விளங்கின லது துரியமெனவறிக. (௫0௬)

வினா:—இன்னந் துரியமாவ தெப்படியென்னில்?

விடை:—ஜீவதிசை யாகாரம், ஈஸ்வரதிசை யறிவு, பிரம்மதிசை அறியாமை, இவை மூன்றுங் கெட்டுச் சிவதிசை தானாயிருக்கிற சத்தும், ஈஸ்வரதிசை விளக்க மாகிற சித்தும், பிர்ம்மதிசை யானந்தமாகவும், விளங்கினது துரியமெனவறிக. (௫0௭)

வினா:—இன்னந் துரியமெப்படி யென்னில்?

விடை:—ஸ்தூலதேகந் தானாயிருந்தது சத்து, அது மயமாயிருக்கிறது. ஸ்புரணமாகிற அறிவுபிறக்கவே, தானாயிருக்கிறதிற் பிறந்த அறிவென்று அறியாதபடியால், முன் தானாயிருந்தது அஞ்ஞானமாயிற்று; எதிரேதோன்றுகிற வொருதேகமே மனோவிருத்தியான ஆகாரமாயிற்று. இந்த அறிவுதா னெல்லாவற்றையு மறிகிறதென்றறிந்தால் அகண்டாகார விருத்தியாயிற்று, இந்த அறிவு தானாயிருக்கிறதிற்பிறந்த அறிவென்று விளங்கின லது துரிய ஆதலாதமாய் விளங்குமெனவறிக. (௫0௮)

வினா:—இன்னம் நனவிற்சுழுப்திக்குப் போதமிரு கலாமாவென்னில்?

விடை:—ஆகாரமான தேக மறிவைத்தவிர யில்லை அந்த அறிவுதானே யகண்டாகாரமான ஈஸ்வரசமஷ்டி, தேகவறிவு அந்த ஆகாரம்போகவே, யந்த அறிவும் கூடப்போயிற்று, அப்பாலெப்படியிருக்கிறதென்றால், ஆனந்தமாயிருக்கிறதென்றான். அப்படிச்சொன்ன அகங்கார

அறிவுயிருக்கிறபடியினாலே கூடாதென்னில், அது தன்னிடத்திலுண்டான அறிவுதான் தானானவறிக. (௫௦௯)

வினா:—இன்னந் துரியவிளக்கத்திற் சும்மாயிருப்பதெப்படியென்னில்?

விடை;—வெண்பா. "சுட்டறுதிசும்மா யிருவென்று சொன்னக்காற் றொட்டுக்கொள் வாய்நீ துடைத்திட்டாய்—விட்டுவிடச் சொன்னாலுங் கேளாய்ச் சுதந்தராயீனந்தன்னைப் பண்ணாயி தென்ன பயன்." இதன் கருத்து, சுட்டறிவுவந்தால்விஷயசம்பந்தம் வராது. குருவாக்கியப்படி நடக்கவும், வரும். சுதந்தராயீனமும் வரும், ஆகையாற், சுட்டறுதியே சும்மாயிருத்தல். சுட்டறுதியெப்படி வருமென்றால்? சிறிது மதானுசாரிகள், ஜீவபோதமிறந்த சூனியத்தைச் சும்மா யிருத்தலாக வொப்புக்கொள்வார்கள்; நமக்கப்படியல்ல அச்சூனியத்திலானந்தானுபூதியுற்றுத் துரியக்காட்சி வந்தவிடத்தில் சும்மா யிருத்தல்கூடும். துரியக்காட்சி பூரணக்காட்சியாகையாலும், எல்லாமாயல்லவுமா யிருக்குமாகையாலும், மஹத்துக்கள் சர்வார்த்தங்களை யெடுத்துப் பேசியும் பேசாமலும் சொல்லியுஞ் சொல்லாமலிருக்குகையாலுந் துரியக்காட்சியிற் சுட்டறுதியே சும்மா யிருத்தல் இதற்கு உதாரணம்-வாசிட்டம், *"நிட்டை சொல்லிடத்திற் றொழில் நனவிற் சலனத்திற்றீர்தல். (௫௧௦)

(பொழிப்புரை.) * நிஷ்டையினது தன்மையைக் கூறுமிடத்து, ஜாக்ரத்தில் ஜீவன் சகலேந்திரிய ப்ராணாந்தக்கரண முதலியவைகளுடன் கூடி யவற்றிற்குரியதொழில்களைச் செய்யுங்கால் மிகுந்தசலன மிருக்கிறபடியாலுமச்சலனத்திற் கபிமானி ஜீவனுதலாலும், ஜீவத்வத்தி

னின்று நீங்கி யாதொரு பற்றின்றித் தனது ப்ரத்யகாத்மஸ்வரூபத்தி லிருப்பதுவே நிஷ்டையென்பதாம். எனவே, ஸ்தூலதேகங்களை யபிமானித்தவர்கள் சஞ்சரிப்பதற்கிட முலகமாதல்போலச், சூட்சுமதேகங்களை யபிமானித்த ஜீவர்கள் சஞ்சரிப்பதற்கிட முணர்வாதலி னவ்வுணர்விற் சலனமின்றி யமைதியுற் றிருப்பதெனப் பெற்றும்.

வினு:—இன்னுந் துரியமாவ தெதுவென்னில்?

விடை:—எத்தன்மையாக விருக்கிறு யென்ன அறிவாயிருக்கிறேனென்ன? இப்பவல்லவா அறிவாயிருக்கிறுய் முன்னென்னவிதமா யிருந்தாயென்ன? முன் தானுயிருந்தேன், இப்பவுந் தானுயிருந்தறிகிறேனென்ன, அறிகிறேனென்கிற போதமிருக்கிறதே யென்ன; தானுயிருந்தறிகிறேனென்று வேறேயொரு அறிவிருந்து அறியவில்லை, அறிகிற அறிவிற் ருனுயிருக்கிறபடியினுலே போதமில்லையென்ன, போதமில்லையென்று சொல்லுகிறுயேயென்ன; தான் போதத்தில்லாவிட்டால் எப்படிச்சொல்லும், அங்கங்கே யப்படியப்படித் தானுயிருந்தறிகின்றது, இதுதான் துரியம்; சவிகற்பமும் நிருவிகற்பமுந் தனியறிவல்ல, இரண்டும் அநுபூதி ஞானமென வறிக. (ருகக)

வினு:—இன்னுந் தனது நிஜத்தைத் துரியத்திற் றெரிசிப்பதெப்படி யென்னில்?

விடை:—நித்தியத்துக்கே தானுயிருக்கிற பூரணமுமாகலாதமு மெக்காலமுந் தானுய்ப் பூரணமாய் நித்தியமா யிருக்கிறேமென்று துரியத்திற் றெரிசிக்க வேண்டுமென் வறிக. (ருகஉ)

வினா:—இன்னுந் துரியமெப்படியென்னில் ?

விடை:—மத்தியிலிருந்து இருபக்கமு மானந்த மாத்திரத்தை யறியப்பட்டதே துரியமென வறிக. ()

வினா:—இன்னும் நான்தானென்றுசொன்ன தேது வென்னில் ?

விடை:—அதுவாகிற அகண்டந் தானாயிருக்கும், அதைத்தான் நானென்று ஸ்புரணமாகிற ஜீவன் சொன்னானென வறிக. (௫௧௪)

வினா:—உள்ளே சாட்சியநுபவ மெப்படி யென்னில்?

விடை:—அகமென்கிற விருத்தியான ஜீவனையுங் காமக்குரோதாதி விஷயங்களையு மறிகிறவரே சாட்சியென வறிக. (௫௧௫)

வினா:—இன்னும் வெளியிலே சாட்சியனுபவ மெப்படியென்னில்?

விடை:—இஃதென்கிற விருத்தியான சிதாபாசனையும், கடபடாதி விஷயங்களையு மறிகிறவரே சாட்சிதானென வறிக. (௫௧௬)

வினா:—இன்னுங் கடத்திற் சாட்சியிருக்கிறதற் கடையாள மெப்படியென்னில்?

விடை:—முன்பு அறியப்படாததும் பின்பறியப் பட்டதுமாய்க்காண்கிற தன்னனுபவமே அடையாளமென வறிக. (௫௧௭)

வினா:—இன்னுஞ் சாட்சி யெப்படியென்னில்?

விடை:—* காரணத்தைக் காரியம் மறைக்கும், மறைத்தாலுங் காரண அறிவைவிடக் காரியவாகாரந் தோற்றாதாகையாற் சாட்சிதானே யாகாரமாய்த் தோற்றுகிறாரென வறிக. (ருகஅ)

வினா:—இன்னுஞ் சாட்சி யெப்படியென்னில்?

விடை:—மனது அறிவைக்கொண்டு அனேகத்திற் பிரிந்தாலு மித்தனையிலு மொன்றிருந்து அறிந்து கொண்டிருக்கிறதே யதுதான் சாட்சியென வறிக. ()

வினா:—இன்னுஞ் சாட்சி யெதுவென்னில்?

விடை:—இப்படித் தோன்றித் தோன்றித் தானேகெடுகிற விருத்தியை யறிகின்ற வானந்தமே சாட்சியென வறிக. (ருஉ0)

---

* காரணத்தைக் காரிய மறைக்குமென்பது, காரணமான மரத்தைக் காரியமான யானைவாகனம் மறைத்தல். அஃதாவது, யானைவாகனஞ்செய்வதற்கு மரம் காரணமாதலின், மரத்தால் யானைவாகனஞ் செய்து சித்திரவேலைகளுஞ் செவ்வையாகச் செய்துமுடிந்த பின்பு அவ்வாகனத்தைப் பார்க்குமிடத்து, மரத்தின் காரியமாகிய யானைவாகனந் தோற்றுமன்றி காரணமான மரந்தோற்றாது. இந்த திருஷ்டாந்தம்போலப், பிரத்யக்ஷமாய்க் காணப்படுகிற தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகள் காரியமாகலானும், இவற்றிற்குக் காரணம் ஞானமாகலானும், காரியமான தேகாதி ப்ரபஞ்ச முதலியவற்றைப் பார்க்குமிடத்து, காரணமான ஞானந் தோன்றவில்லை. ஆனதுபற்றிச் சர்வத்திற்கு மாதாரமாயும், காரணமாயு மிராநின்ற ஞானத்தைக் காரியமாகிய ப்ரபஞ்சம் - மறைக்குமெனத் தாஷ்டாந்தங் கூறினாரென் றபிப்ராயம்.

வினு:—இன்னுஞ் சாட்சி தரிசனமெப்படி யென்னில்?

விடை:—ஜாக்ரவாகாரமுஞ் சொற்பனவறிவுஞ் சுழுப்தியிருட்டுஞ் சுகமென்றறிந்து சுகவறிவு தானுயிருப்பதென வறிக. (ருஉக)

வினு:—இன்னுஞ் சாட்சியாயிருப்பதுந் தானுயிருப்பது மெப்படி யென்னில்?

விடை:—ஸ்புரிக்கிறபோதே யதை வேருய்க் கண்டா லவன் தீர்ந்தவனல்ல, அவன்விருத்திக்கு அது சாட்சியாயிற்று. ஸ்புரிக்கிறது விளக்கமாய்க்கண்டா லவன் வேருய்க்கண்டவனல்ல, அவன் தீர்ந்தவன்; வியாபக விளக்கமே தானுயிருக்கிறவனென வறிக. ()

வினு:—இன்னுஞ் சாட்சி யெதினுலே விளங்க வேண்டுமென்னில்?

விடை:—விருத்தியினுலே விளங்க வேண்டுமென வறிக. (ருஉங)

(துரியாதீதம்.)

வினு:—துரியாதீதமாவ தெதுவென்னில்?

விடை:—அந்தத் துரியத்தின்கண் நிறைவா யாத்மாவினிடத்தில் * மனோமக்கினமாயிருப்பதே துரியாதீதமென வறிக. (ருஉச)

---

* மனோமக்கினமாவது சமுத்ரத்தின் கண்ணெழுந்த அலை, அச்சமுத்திரத்தி லடங்குவதுபோல அகண்டவியாபகமான வாத்மாவினிடத்தி லெழுந்த மனது, அந்த வியாபகத்திலடங்கல்.

வின:—இன்னும் விளக்கமாவதெது வென்னில்?

விடை:—எல்லாருந் துரியத்தை விளக்கமாய்ச் சொல்வார்கள். அப்படியல்ல, அதீதமான ஆனந்த விளக்கமே துரியம், தடை விடையமாய்க்கண்டது. தடை மயத்துவம், விஷயானந்த விளக்கமென வறிக,

வின:—நினைக்கிற ஸ்வபாவமு மறிகிற ஸ்வாபவமுமில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை:—நினைவே கேவலாநந்த ஸ்வரூபமான படியினலே யந்த நினைவுக்கு நினைக்கின்ற ஸ்வபாவமு மறிகிற ஸ்வபாவமுமில்லை. நினைவிலே யறிகிருப்போலே யிருக்கிறதேயென்ருல்; அதுவுங் கேவலானந்தமாய்த் தானே கரைந்து தானயிருக்குமென வறிக.

வின:—இன்னும் துரியமெது துரியாதீதமெது வென்னில்?

விடை:—ரமித்திருக்கிறது துரியமாம். ரமிப்புத் தானயிருக்கிறது, துரியாதீதமென வறிக. (ருஉஎ)

வின:—இன்னுந் துரியமெது துரியாதீத மெது வென்னில்?

விடை:—அறிகிற ஸ்புரணந்துரியம்; தானயிருக்கிற வியாபக விளக்கமே துரியாதீதமென வறிக. ()

(பூரண விருத்தி.)

வின:—பூரணவிருத்தி யெப்படி யென்னில்?

விடை:—எத்தனைநாழிகைபடித்தாலு மெத்தனை நாழிபேசினலு மிருந்த அலுவலிலிருந்தாலு மதை விட்ட விடத்தில் தன்னைப் பார்க்கவேண்டும். பார்த்

தா லாகாரமு மறிவுமில்லாமல் நிரதிசயமாத்திரமா யிருக்கு மதை விளக்கவேண்டுமென வறிக. (ருஉகூ)

வினு:—இன்னும் பூரணவிருத்திபண்ணித் தன்னைச் சோதித்து விளங்குவதெப்படி யென்னில்?

விடை:—படித்தாலும் பேசினுலுந் தூங்கப்போகிறபோதும் விழித்தபோதும், எந்தவியவகாரம் பண்ணினுலு மவைகள்நின்றவிடத்தில் ஒருநாழிகைக்கொருதர மிரண்டுநாழிகைக் கொருதரமானுலுந் தன்னை வாசனுனந்தம்போல ஸ்புரித்துப் பார்க்கவேண்டும். அங்ஙனம்பார்த்தால் சுகவிளக்க மொரேபிரகாரமாய் முடியவிருக்கு மல்லாமல் * அவிருத்தமாய் மயத்துவ மில்லாமலிருக்கும். இதுதான் தன்னுடையநிஜம், இது சகலவுயிர்களுக்குஞ் சரிதெரியாதென வறிக. (ருஙo)

வினு:—இன்னும் பூரணவிருத்திபண்ணி ஸ்புரித்ததைத் தன்னுளழுத்தித் தானுய்விளங்குவ தெப்படி யென்னில்?

விடை:—தான் பூரணம். ஒருவனுடனே பேசப் போகும்போதே படிக்கப்போகிறபோதே தானுயிருந்த பூரணத்தில் ஸ்புரிக்கும், அப்போது பேசுகிறமயமாய்ப் படிக்கிறமயமாய்த் தன்னைமறந்து பேசும் படிக்கும் ஆகையால் ஸ்புரித்ததைத் தன்னுள்ளழுத்திப் பேச்சு முதலில் விட்டால், முடியத்தானுகவே மயமில்லாமல் விளங்குமென வறிக. (ருஙக)

வினு:—இன்னும் பூரணவிருத்தியாவ தெப்படி யென்னில்?

---

* அவிருத்தம், யாதொரு விரோதமின்றி யெங்கும் வியாபித்திருத்தல்.

விடை:—தானாயிருக்கிற பூரணத்தை ஸ்புரித்து அங்கங்கே தன்னைக் காணுகிறதே பூரண விருத்தி யென வறிக. (ருஙஉ)

வினா:—இன்னும் பூரணவிருத்தியாவதெதுவென்னில்?

விடை:—நிரதிசயம் பூரணமாயிருக்கும்; மனது நடுவேயிருந்து சுகத்தை விளக்குகின்றது. அதுவே துரியம்; எதைச்சொன்னாலும் எதைக்கேட்டாலு மெதைப்பார்த்தாலு மெப்போதுந் தன் நிரதிசயமே விளங்குகிறது, அறிவைக்கொண்டறியப்போகாது; இருந்தபடியே யிருந்து பூரணவிருத்தி பண்ணவேண்டுமென வறிக. (ருஙங)

வினா:—இன்னும் பூரணவிருத்தி யாவதெப்படியென்னில்?

விடை:—ஆகாரத்திலின்பமிருக்கிறதென்று விஷயத்தைப் பார்க்கிறபோதும் அறிவில் விஷயத்தைச் சிந்திக்கிறபோதும் விஷயத்தைப் புசிக்கும்போதுந் தன்னாகலாதம் விலட்சணமாயிருக்கின்றது. இந்த விஷயங்கள் தன்வியாபகத்தை விளக்கவந்தனவென்று பூரண விருத்தி பண்ணவேண்டுமென வறிக. (ருஙச)

வினா:—இன்னும்பூரணவிருத்தி யெப்படியென்னில்?

விடை:—செகத்து ஆகலாத சொரூபமுந் தானாகலாத விளக்கமுமாகச் சார்வதா விளங்கிக்கொண்டிருக்கிறபடியினாலும், இந்தஅனுபவத்தில் திரிகாலத்திலும் துக்கமில்லாதபடியினாலுந் திரிகாலத்திலு மிந்த அனுபூதி ஏகதேசப்படாம லிருக்கையினாலு மறிகிறவன் அறிகிறது அறியப்பட்ட விஷயங்கள் முக்காலங்களிலு

மில்லாதபடியினுலும் பூரணவிருத்திக்குச் சமுசயமில்லையென வறிக. (ருநடு)

வினு:—இன்னும் பூரணமாவ தெதுவென்னில்?

விடை:—அறிகிறதில் தான் நிறைந்திருக்கிறபடியினுலும், அறிகிறேமென்று மேலேயொரு அறிவில்லாதபடியினுலும், பூரண மறிதலற்றவிடத்தில் அஞ்ஞானமில்லையென வறிக. (ருநசு)

வினு:—இன்னும் பூரணவிருத்தியாவ தெதுவென்னில்?

விடை:—விருத்தியில் நிறைவாய் விளங்குகிறது பூரணவிருத்தியென வறிக. (ருநஎ)

வினு:—இன்னும் பூரணமாவது வியாபக திசையாவதெது வென்னில்?

விடை:—அறிந்துகொண்டிருக்கவுமில்லை, அறியாமலுமிருக்கவில்லை, தானுய் விளக்கமா யிருக்கிறதென வறிக. (ருநஅ)

வினு:—இன்னும் பூரணனுபவ மெப்போ வரவேண்டு மென்னில்?

விடை:— *போகிறபோதே பூரணனுபவ மிருந்தாலல்லவா? எப்போது மிருக்குமென வறிக. (ருநகூ)

வினு:—இன்னும் பூரணவிருத்தி யெப்படி யென்னில்?

விடை:—ஆகாரத்தைக் குறித்து அறிவு, விருத்தி. ஆனந்தத்தைக் குறித்து அறிவு ஸ்வபாவம். ஆநந்தமுமறிவும் போனதைக்குறித்துச் சொரூபஸ்வபாவ மா

* போகிறபோது என்பதற்கு, சப்தமுதலிய விஷயங்களின் வசமாகப் போகிறபோதென்பது பொருள்.

கையா லெப்படிதோன்றினுலுந் தானென்று நடுநிலையி னின்று பூரணவிருத்தி பண்ணவேண்டுமென வறிக.()

வின:—இன்னுஞ் சதாவிளங்குவ தெதுவென்னில்?

விடை:—* புலியைப்பார்க்கப் புலி தன்னைப்பார்க் கப் போனதுபோல, அறிவென்றதைச் சதா அனு விளக்குகின்றது, இன்ன மிருக்கிறதென்றதை அ பூதி விழுங்குகின்றதென வறிக. (ருசக

---

* புலியைப்பார்க்கவென்பது, ஒருவன் புலியை பார்க்க; அங்ஙனம் பார்த்தவனை அப்புலி விழுங்கியது போலவென்பது த்ருஷ்டாந்தம்; தாஷ்டாந்தமா தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய த்ருஸ்யங்களை அ னிக்கின்ற ஜீவனை ஒருவனெனவும், ஜீவன்முதலி த்ருஸ்யங்களுக்கு விலக்ஷணமாகிய அறிவைப் புலி னவும், அந்தப் புலியென்னு மறிவைப்பார்த்த ஜீவ அப்புலிவிழுங்கியதெனவுங் கூறவேண்டும். ஏனென் தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகள் ஜீவனுக் காரியமாயும் புசிப்பாயுமிருப்பதா லறிவுக்குக் கா மாகிய ஜீவனை அவ்வறிவு விழுங்கியபின்ன ர மின்று. அன்னியமாகத் தோன்றுகிறதெனின், அபிமானிப்பதாயுள்ள தேகேந்திரியாதிகள் அ னிகளுக்கிருக்கிறதாகத் தோற்றுகின்றனவன் னிகளுக்கு ஞானப்ரகாசமாகத் தோன்றும். கால், தேகேந்திரிய ப்ரபஞ்சாதிகளாகத் தோ யின், ப்ரகாசம் இருளைத் தன்னிடத்தில் அடக்கி ள்வதுபோலத் தனது ஸ்வானுபூதி ப்ரகாசத்தி கேந்திரியாதிகளென்னும் இருளையடக்கிக் கொ ராதலி னிருப்பது சத்து, விளங்குவது சித்து, இச் துசித் துள்ளபரியந்த மசத்தான தேகேந்திரிய

வினா:—தானாயிருக்கிற தெதுவென்னில் ?

விடை:—விளக்க வியாபகமே அறிவையும், ஆகா ரத்தையும், முழுங்கிக்கொண்டு தானாயிருக்கும். சொ ரூபஞ் சடமல்ல, அறிகிறது நினைக்கிறது நில்லாது கெட்டுப்போகுமாகையால், அறிவுமாகாரமுந் தானாயி ஆகலாதமே முந்தித் தானாயிருக்குமென வறிக.

வினா:—இன்னுந் தானாயிருப்பதுமறியவந்தவிடத் ற் பதார்த்த முண்டென்பது மறிவு போனவிடத்திற் ார்த்தமும் போமென்பது மெப்படியென்னில் ?

விடை:—அறிவு தூணைப்பார்த்தால் தூணும், கட ப்பார்த்தாற் கடமாம், எதைப்பார்த்தாலதுவாம். றிவுபோனவிடத்திற் பதார்த்தமும்போம் தானாயிரு றபோது பதார்த்தமில்லை, அறிவுமில்லை. அறிய தாற் பதார்த்தமுண்டு தானாயிருக்கிறது. எந்த ஸ்தையிலும் போகாது எப்போதும் இருக்கும். ாரமாயிருக்கிறபோதும் அறிவாயிருக்கிறபோதும் ந்தவிளக்கந் தானாயிருக்கும், ஆகாரமு மறிவும் போய்த் தானேதானாயிருக்கிற சுழுப்தியிலும் தவிளக்கந் தானாயிருக்குமென வறிக. (ருசஙு)

னா:—இன்னும் ஆகாரமு மஞ்ஞானமுமில்லா னாயிருப்ப தெப்படி யென்னில் ?

முதலியவைகளுண்டாகும். ஆனதுபற்றி; சத் திரண்டையு மாநந்தம் தன்மயமாகச் செய்து ாண்டு தானேதானாயிருக்குமாதலால் இருக்கிறதெ ாதை அநுபூதி விழுங்குகிறதெனக் கூறினரென் பிப்ராயம்.

விடை:—சொற்பனந் துரியமானால் ஜாக்ரவாகாரமுஞ் சுழுப்தி அஞ்ஞானமுமில்லாமற் றானாயிருக்குமென வறிக. (ருசச)

வினா:—இன்னுஞ் சதா அனுபவ மெப்படியென்னில்?

விடை:—தானாயிருத்தலும் பிரக்ஞையுமென வறிக.

வினா:—இன்னும் போதமற்றுத் தானாயிருத்தலெப்படியெனின்?

விடை:—ஆகாரம் வேரற்று இருக்கிறதென்கிற ஸ்புரணமும்விட்டு விட்டதென்கிற ஸ்புரணவறிவுதானாய்த் தானாயிருக்கிறதென்கிற ஆனந்த ஸ்புரணவி[illegible]கமாயிருப்ப தியல்பாமென வறிக. (ருசசு)

வினா:—இன்னுந் தானாயிருப்பதும் விளங்குவதுமெப்படி யென்னில்?

விடை:—அறிகிறபோதுந் தான் விளங்குகிறது, ஆனந்திக்கிறபோதுந் தானாகவே யிருக்கிறதென வறிக. (ருசஎ)

வினா:—இன்னுந் தானாயிருத்தலெப்படியென்னி[illegible]

விடை:—இரண்டற்றதொன்றே இரண்டிலொ[illegible]றென்பது, இஃது தானாயிருத்தல். இரண்டா[illegible] அறிவு, ஆனந்தம், அறிவு-அறியாமை. இன்னமிப்[illegible] யிரண்டிரண்டு பலவாயிருக்கும், இவைகளில் ஒன்[illegible] தானாயிருக்குமெனவறிக. (ருச[illegible]

வினா:—இன்னும் எங்கேபார்த்தாலுந் தான்றானென்ப தெப்படி யென்னில்?

விடை:—விஷயகேவலத்திலுந் தான்றான், சொரூபகேவலத்திலுந் தான்றான், நடுவே ஸ்புரித்தாலுந்

தான்றான், இதற்குவிஷயகேவலம் வெளியில் ஸ்புரிப்பு உள்ளே சொரூபகேவலம் மத்தியிலெனவறிக. (ருசகூ)

வினா:—தானாயிருந்தாலுந் தானாயிருந்து அறிய வந்தாலுந் தான்றானென்ப தெப்படியென்னில்?

விடை:—இதுவரைக்குந் தேகந்தெரியாது தானா யிருந்தது, இப்போது தெரிகிறதென்றால், தெரிவில் தானில்லாவிட்டால்தெரியுமா? தெரியாது, தானாயிருந் தாலுந் தான்றான், அறிந்தாலுந் தன்னைத்தா னறிகிற தென வறிக. (ருரு0)

வினா:—இன்னுஞ் சதா தானாக விளங்குவ தெப் படி யெனின்?

விடை:—தானே அனுபூதியாய்க் * கனீபவித்து விளக்கந் தானாயிருக்கிறதென வறிக. (ருருக)

வினா:—இன்னு மூடுருவித் தான் விளங்குவ தெப் படி யெனில்?

விடை:—† பளிங்குப்பதுமையி லூடுருவித் தெரி கிறதுபோலச், சகலவிஷயத்திலுந் தான் விளக்கவியா பகமா யூடுருவித் தெரியவேண்டும், *போதங்கொண் ல்லவென வறிக. (ருருஉ)

---

* கனீபவித்து-எங்குந்தனதுவடிவமாகவியாபித்து.

† பளிங்குப்பதுமையிலென்பதற்கு, களங்கமின் ப படிகத்தினெதிரிற் காணப்படுவனவாகிய உருவங் ளப்படிகத்தி லூடுருவித் தெரிவனபோலக், களங்க மில்லாத தனது ஆத்மஸ்வரூபத்தில் அறிவறியாமைப் பிரிவுகளாகிய திருக்கு திரிஸ்யங்களு மவற்றின் காரணகாரியமாகிய அண்டபிண்ட சராசரங்களு மூடு ருவித் தோன்றுகின்றனவென்பது பொருள்.

வினு:—இன்னும் மூன்றிடத்திலுந் தானுயிருப்ப தெப்படி யெனில்?

விடை:—கேவலசுழுப்தியி லறிவு தானே சுகமா யிருந்தது, சொற்பனத்தி லறிவிலின்பந் தானுயிருந்த து, அதுதெரியாமல் ஜாக்ரத்தி லெதிரிட்டுப்பார்த்தா லாகாரத்தி லறிவும் இன்பமுமடங்கித் தானுயிருக்கும், மத்தியசொற்பன துரியத்தில் தானறிவானந்தமாய் விளங்கினுல் சுழுப்தி யறியாமையும் ஜாக்ரவாகாரமுஞ் சொற்பனவிருத்தியுமாகிய மூன்றுங்கெட்டன, † மணி கழன்றுஞ் சரடுகழலாததுபோலத், தான்முடிய வூடுரு வியிருக்குமென வறிக. (ருரு)

---

* போதங்கொண்டல்லவென்பதற்கு, அவஸ்தாத் ரயமுதலிய கற்பனுரகிதமாக விளங்காநின்ற தனது எதார்த்தவறிவைக் காரணமாகக்கொண்டு தன்னையறி யலாமேயன்றி, ஜாக்ராவஸ்தைமுதலிய கற்பனைகளோ டுகூடிய ஜீவவறிவால் தன்னையறியக் கூடாதென்பது பொருள்.

† மணிகழன்றுஞ் சரடுகழலாததுபோல வெ பது, நிகளமானசரட்டிற் பலமணிகளைக் கோர்த்தி குமாறுபோல, நிகளமான அல்லது சர்வவியாபகம அறிவென்னுஞ் சரட்டில் தேகேந்திரிய ப்ரபஞ்சமுத லிய மணிகளைக் கோர்த்திருக்கின்றன; ஆதலின், மணி களைக்கழட்டினுற் கழலுமன்றிச் சரடுகழலாதிருப்பது போலத், தேகேந்திரியாதிகளென்னு மணிகளைக்கழற் றுதலாவது, ஒவ்வொன்றுயப் பரிசோதித்து நிவர்த்தி செய்தல்; அங்ஙனநிவர்த்திசெய்கிற பொய்ப்பொருள் கள் மெய்ப்பொருள்போலத், தனது வியாபகத்தில் தோற்றியபடியினுலும், வியாப்பியங்களுக்கெல்லாம்

வினா:—இன்னுந் தான் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை:—சத்தியக்ஞான வனந்தானந்த ஸ்புரிப்பு வருமானால் தான் விளங்கும், ஜாக்ரமுதலிய மூன்றிட மூந் தானே * சாயவில்லையெனவறிக. (ருருச)

வினா:—இன்னுஞ் சர்வமு மில்லையென்ப தெப்படி யென்னில்?

விடை:—தானாயிருக்கிற திசையிலில்லை, இந்த † த்வாரமாக வில்லையேயல்லாமல் மற்றப்படிக்கு இல்லை யென்பது கூடாதெனவறிக. (ருருரு)

வியாபகமா யிடங்கொடுத்துச் சர்வவியாபகமாயும் தானே தானாயுமிருப்பது தனது எதார்த்தவடிவமாதலானும், தான்முடிய வூடுருவியிருக்குமெனக் கூறினாரென் றபிப்ராயம்.

* சாயவில்லையென்பதற்கு, ஜாக்ரமுதலிய மூன்ற ...ஸ்தைகள் தன்னிடத்தில் தோன்றி விளங்கி மறை ...மவைகளின்வசமாகாது யாதொருபற்றின்றிச் ...ஷிபூதமாக விளங்குகிற தான் அவஸ்தைகளின் ...காகச் சாயவில்லையென்பது பொருள்.

† † த்வாரம், தானேதானாகத் தனித்திருக்கிற மோக்ஷதிசை. அவ்வாறு தனித்து விளங்குகின்ற முக்தி திசையை வழியெனக்கூறியது எது குறித்தோ வெனின், காந்தார தேசத்தினின்றுங் காட்டிற் றிருடர்களாற் கண்ணைக் கட்டிவிடப்பட்ட புருஷனுக்கு நேத்ரமறைப்பைநீக்கிக் காந்தாரதேசத்தை யடையச்செய்வதுபோலத், தனது அறிவினின்றுந் தோற்றிய காம முதலிய திருடர்களால் பிரத்தியகான்மாவென்னும்ஞா

வினா:—இன்னும் உடல், பொருள், ஆவி, மூன்றுங்கொடுத்த தெப்படி யென்னில்?

விடை:—ஆகலாதமு மறிவுமிறந்து *தானாயிருத்தலிற் கொடுத்ததெனவறிக. (ருருசு)

னக்கண்ணைத் தெரியவொட்டாமல் காந்தார தேசமென்னும் காட்டில் அல்லது நராரண்யத்தில் அக்ஞானந்தகாரத்தால் மூடப்பெற்ற ஜீவனுக்குச், சாதுக்கள் யானெனதெனப்படுகிற வகங்கார மமகாரமென்னுந் திரையை விசாரணையினாற் கெடுத்துத் தனது யதார்த்தவடிவத்தை யடையச்செய்வா ராதலானும், இரவுநீங்கியவுடன் உதயகிரியின்கண் தோன்றிய பூதசூரியனை மானுடர்கள் தரிசனஞ்செய்வதுபோல, அக்ஞானமென்னு மிரவகன்றபின்னர், சத்துவகுணமென்னுங் குன்றின்மேல் உதயாஸ்தமனமில்லாது என்றுமொருபடித்தாகத் தோன்றுகின்ற தனது ஞானசூரியனை அநுபவிகள் தரிசிப்பராதலானும், இதனைக் "குணமென்னுங் குன்றேறி நின்றார்" எனத் திருவள்ளுவநாயனார் திருக்குறளிற் கூறியிருப்பதனானுமுணர்க. அன்றியும், சாந்தி விசாரணை சந்தோஷம் சாதுசங்கமென்னு நான்குபெயர்களும் மோக்ஷவாசற்படிக்குக் காவலாளிகளா யிருக்கின்றார்க ளாகையா லவர்களிலொருவனையாகிலும் முமுட்சுக்கள் சினேகம்பண்ணிக் கொண்டால் முக்திவாசற்படிக் கதவைத் திறப்பன். மோக்ஷவாச லெப்போது திறந்ததோ அப்போது தனது யதார்த்தவடிவத்தைப் பிரம்மஞானிகள் தெரிசிப்பது குறித்தென்க.

* தானாயிருத்தலிற் கொடுத்ததென்பது, அன்னியமின்றித் தானே தானாகவிளங்குகின்ற காரணகுரு

வினு:—இன்னுந் தானுயிருக்கிற நிரதிசயவிளக்க மெப்படி யென்னில்?

விடை:—ஆகாரமென்று பார்க்குமிடத்து மேலே இந்திரியமிருந் தறிகிறதென்று அறியவேண்டும், இங் வடிவத்தில், மாணுக்கன் தனது உடல்பொருளாவி மூன்றையுந் தானமாகக் கொடுத்தானென்பது பொருள். காரணகுருவாவது, குருவென்னுஞ் சொல், கு-எனவும், ரு-எனவு மிரண்டாகப்பிரிக்கப்பட்டு, கு-தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய அஞ்ஞானவிருள், ரு-சுஞ்ஞானவொளி என்ருகி அஞ்ஞான விருளைக் கெடுத்து மெய்ஞ்ஞானவொளியிற் கலப்பிப்பவனெவனே? அவனுக்குக் காரணகுருவெனப்பெயர். அல்லது கு-தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகளை யானெனதென்றபிமானிப்பவனுகிய ஜீவன், ரு - சராசரமுதலாகிய சகல கற்பனைகளுக் கதீதராயுந் திரிகுணமில்லாதவராயும் அறிவுக்கறிவாயும் விளங்காநின்ற ஞானுசாரியன், அவ்வித ஞானுசாரியன் மாணுக்கனது அஞ்ஞானத்தை யகற்றுபவனுதலின் பிறவிக்கு ஏதுவாகிய காரணவுடலையும், தன்னேடு சம்பந்தமில்லாத எனதென்னும் அநித்தியப்பொருளையும், அதனை யபிமானிக்கின்ற உயிரென்னும் ஜீவனையும் காணிக்கையாகப் பெற்றுக்கொண்டு தனது ஸ்வரூபத்தினின்றுந் தோன்றிய அறிவென்னுஞ் சீடனுக்கு நிரதிசயானந்தத்தைக்கொடுத்து, அவ்வறிவானந்த மிரண்டையும் வேறென்றெண்ணுகிற மாணுக்கனைத் தன்னிடத்தி லடக்கிக்கொண்டு அன்னியமின்றித் தானேதானுக விளங்குபவராதலின் தானுயிருத்தலிற் கொடுத்ததெனக் கூறினுரென் றபிப்ராயம்.

திரியமென்று பார்க்கும்போது மேலே காணமிருந் தறிகிறதென்று அறியவேண்டும், காணமென்று பார்க்குங்கால் மேலே விலக்ஷணமாய் ஜீவனிருந் தறிகிறு னென்றறியவேண்டும், ஜீவனென்று பார்க்கின்றபோது மேலே சாட்சியிருந் தறிகிறதென்றறியவேண்டும், அப்படி யில்லையாகையால் * இப்பதினைந்துக்கு முள்ளீடாயிருந்தறிகிறது நிரதிசயமுந் தானுமெனவறிக.

வினா:—இன்னுந் தானுயிருக்கிற திசைகளெ.து வென்னில்?

விடை:—† அபாவ ஆகலாதத்திலுந்தான், ‡ பாவ விளக்கத்திலுந் தான், பாவனாதீதத்திலுந் தானேயெனவறிக. (௫௫௮)

---

* இப்பதினைந்தென்பது—ஸ்தூலம், சூட்சுமம், காரணம், ஜீவன், சாட்சி, விராட்டு, இரண்யகொ்ப்பம், மாயை, ஈஸ்வரன், ப்ரம்மம், சத்து, சித்து, ஆனந்தம், பரப்ரம்ஹம், சர்வசாட்சி, இவைகளாம்.

† அபாவ ஆகலாதமென்பதற்குச், சுழுப்தியவஸ்தையில் ஜீவன் ப்ரக்ஞைமாத்திரமாகத் தனித்திருக்கிற காலத்தில் தோன்றுகிற தனது ஆனந்தம் விழித்த பின்பு மனமுதலிய அந்தக்கரணவசமாகி யவ்வாநந்தந் தோன்றாமையா லவ்வாநந்தத்தை மறந்து நானென்றுந் தெரியாமல் தூங்கினேனெனக் கூறுகிறதெதுவோ அதற்கு அபாவானந்தமென்பதுபொருள்.

‡ பாவவிளக்கம் தனது ஸ்வயம்பிரகாசமென்னுந் துரிய ஞானவிளக்கம், பாவனாதீதம் மனோவாக்குகளுக்கெட்டாத துரியாதீதம்.

வினு:—இன்னும் * ஆனது இல்லையென்பதும், என்றுமான தான் இருக்கிறதென்பது மெப்படியென்னில்?

விடை:—கடமிருக்கிறதாவென்று கேட்க? இல்லையென்றான், கடம், பிரத்யக்ஷமாவிருக்க எப்படி யில்லையென்றாயெனக் கேட்க? † அதுதானில்லை இருக்கிறதுதா னிருக்கிறதென வறிக. (௫௬௯)

வினு:—இன்னும் ‡ ஆகித்தோன்றி விளங்கினதெதுவென்னில்?

விடை:—தானுன்னது சத்து, தாமென்கிறது சித்து, தானிறைந்தது ஆகலாதமென வறிக. (௫௭0)

வினு:—இன்னுந் தானுயிருந்து தன்னைப்பார்ப்பதெப்படியெனில்?

விடை:—பூரணத்துக் குள்ளேயிருந்து தன்னைப் பார்க்கவேண்டும்; ஒதுங்கிப் பார்க்கப்போகாதென வறிக. (௫௭௧)

வினு:—இன்னுஞ் சைதன்யத்தி லன்னியமில்லையென்ப தெப்படியென்னில்?

---

* ஆனது என்பதற்கு, ப்ரம்மாமுதல் எறும்பீறுகிய சராசரத்தோற்றமான தென்பதுபொருள்.

† அதுதானில்லை யென்பதற்கு, மண்ணையன்றிக் கடத்தோற்ற மில்லையென்பது பொருள்.

‡ ஆகியென்பது, தானுகிய அகண்ட வியாபகத்திலிருந்து தன்னை யறியச் சத்துண்டாகிச் சத்தேசித்து, சித்தே ஆநந்தமாகி விளங்குகிறதென் றபிப்பிராயம்.

விடை:—தானு யிருக்கிறபடியினுலே நினைப்பில்லை, அறிவில்லை, அனுபூதியில்லை, துரியமில்லை, யெனவறிக. (ருசூஉ)

வினு:—இன்னுந் தானுயிருத்தலும் விளக்கமும் எப்படியென்னில்?

விடை:—தோன்றிக்கொண் டிருக்கவேண்டுமென்ருல், தோன்ருமற் போகிறது. தோன்ருமற் போகவேண்டுமென்ருல், தோன்றிக்கொண்டிருக்கிறது, ஆகையால் தானுனபோது விளக்கமில்லாமற் போகின்றது, ஸ்புரணம் வந்தால் விளங்குகிறதெனவறிக. (ருசூரு)

வினு:—இன்னுஞ் சதாகாலமும் முடிவான அனுபவ மெப்படியெனில்?

விடை:—அதுவாகிற ஸ்வரூபம் இதுவாகிற ஆனந்தஸ்புரணமா யிருக்கும், இதுவாகிற ஆனந்தஸ்புரண மதுவாகிற ஸ்வரூபமே தானுயிருக்கும், இந்த விரண்டுந்தா னெப்போதுஞ் சதாகால அனுபவம், அறிவு மாகாரமுமில்லை, அறியவந்தால் ஆனந்தமே யறிவாயும் ஆகாரமாயு மிருக்கும், உடனே தானுய்ப் போகுமென வறிக. (ருசூச)

வினு:—இன்னுந் தானும் விளக்கமும் நிஜமெப்படியெனில்?

விடை:— *ஜாக்ரத்திற்ருன் சுழுப்தியாகிற மாயை, இவடந்தான் மறைப்பு. இதுதான் தானுயிருக்

* ஜாக்ரத்திற்ருன் சுழுப்தியாகிற மாயையென்பது, நினைப்பு மறப்பின்றி யொருபடித்தாகப் பிரகாசித்துக்கொண்டிராநின்ற விவேகமென்னும் அல்லது

கிற விடம். இந்த அறியாமையு மாசாரமும் போக
வே, தானுதல் நிஜம், சொற்பனவித்தி போகவே, விள
க்கம் நிஜமெனவறிக. (ரு௬ரு)

துரியானுபாவமென்னும் தனது அறிவில் சுழுப்தியா
கிறமாயை தோன்றிய தென்றாயிற்று. இவடந்தான்
மறைப்பென்பது; மேற்கூறிய ஜாக்ராவஸ்தையிற்றான்
மாயை அகடிதகடன சாமர்த்தியமென்னுந் தனது
தொழிலைச் செய்யுமென்றாயிற்று. அஃதாவது, சூரி
யனது கிரணங்களிலொன்றாகிய மேகமானது ப்ரத்ய
க்ஷமான சூரியனைத் தெரியாமலெப்படிமறைத்ததோ
அப்படிபோலத், தனது சத்துவமுதலிய முக்குணங்
களி லொன்றாயும், தமோகுணவடிவமாயுமுள்ள மா
யையானது தனது ஞானத்தைத்தெரியாமல் மறைத்
தது. த்ருஷ்டாந்தத்தில், அகண்டமாக விளங்காநின்ற
சூரியனைக் கண்டமாகிய மேகமானது மறைக்கமுடி
யாதாயினும் கண்டத்ருஷ்டியால் அல்லது சிறியபார்
வையினுல் பார்ப்பவர்களுடைய கண்களுக்குச் சூரி
யன்மறைந்ததுபோலக், காணப்படுகிறதேயன்றி மேக
முதலிய மண்டலங்களுக் கப்பாலாய்விளங்காநின்ற
சூரிய ப்ரகாசத்தை மேகமானது எப்படிமறைக்கவில்
லையோ அப்படிபோலத், தாஷ்டாந்தத்தில், அகண்ட
வியாபகமாகவும் உதயாஸ்தமன மில்லாததாகவும் வி
ளங்காநின்ற தனது ஞானப்ரகாசத்தை மாயை மறை
க்கமுடியாதானலும், தேகேந்திரியப் பிரபஞ்சமுதலிய
வைகளைச் சத்தியமாகவும் பிரியமாகவுங்கருதி அஞ்
ஞான நேத்திரத்தினற் பார்ப்பவர்களுடைய கண்களு
க்கு ஞானசூரியன் மறைந்ததுபோலத் தோன்றுகிற
தேயல்லது, உதயாஸ்தமன மில்லாதபொருள் சதாகா

வினா:—இன்னுந் தானாயிருப்பதும் விளக்கமும் எப்படியென்னில்?

விடை:—அறிந்தறிந்து சொல்லுகிறதார்? தான்றான், தான்றானென் றறிகிறதார்? தான்றானென வறிக. (௫௬௬)

லமும் ஒருதன்மையாகவே விளங்குகின்றது. இங்ஙனந் தானேதானாக விளங்கிக்கொண்டிருக்கிற தன்னைத் தனது ஞானநேத்திரத்தா லறிவதெதுவோ? அது விவேக ஜாக்ரம். இத்தகைய ஜாக்ரநிலையினை அறிந்தவர்களுக்கு மாயையினது நிஜவடிவந் தெரியுமாகையா லவர்களை மயக்கஞ்செய்விக்காதேயன்றி, ஏனையோர்களைத் தன்வசமாக மயங்கும்படி செய்விக்கும். அன்றியும், இராக்காலத்தில் தெரியாத வொரு புருடன் பழுதையிற் பாம்புளதெனக்கருதி யெப்படி மயக்கமடைந்தானோ? அப்படிப்போலத், தன்னைத்தெரியாத மனிதன் தனதறிவி லறியாமையாகிய தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைக ளுளவென்றெண்ணி மயக்க மடைகின்றுதலாலும், காலஞ்சென்ற தாய்தந்தைகள் கனவில் மனமென்னும் மாயக்கண்ணாடியிற் ப்ரதிபலித்து மெய்போலத்தோற்ற, அங்ஙனந்தோற்றுபவர்களைப் பொய்யென்றெண்ணும லவர்களுடன் வார்த்தை பேசிக்கொண்டு ஜாக்ராவஸ்தையி லெப்படித்தன்னைப்பகுத்தறியாமல் வியவகரித்தானோ, அப்படிப் போல, ஸ்வப்னவஸ்தையிலும் வியவகாரஞ்செய்கிறுதலாலும், சமுத்திரத்தில் கப்பல் எவ்வாறுமுழுகியதோ அதுபோலச், சுழுப்தியவஸ்தையில் தேகமென்னுங் கப்பலும், இக்கப்பலுக்கு எஜமானனாகிய ஜீவனும், இவன் மந்திரியாகிய மனமும், கப்பலை நடத்து

வினா:—இன்னுந் தானனதுந் தானயிருக்கிறது மெப்படியென்னில்?

விடை:—தோன்றல், அறிவு, ஆனந்தம், ரமிக்கிறது, தானயிருக்கிறது ஆகிய இவ்வைந்தும் தானனது * மோனதீதம் தானயிருப்பதெனவறிக. (ருகூஎ)

பவனாகிய புத்தியென்னும் சாரதிமுதலிய யாவரும் மாயாசமுத்திரத்தில் முழுகிப்போனகாலத்தில் கிஞ்சிற்றும் பகுத்தறிவில்லை; இங்ஙனம் சுழுப்திஸ்வபனமிரண்டிலும் ஜீவர்களுக்குப் பகுத்தறிவில்லாதது பற்றி மாயை தெரியாமல் மறைக்கின்றது. பிரித்தரியத் தக்க விவேகமமைந்த ஜாக்ராவஸ்தையில் மாயை தனது வல்லமையினல் ஜீவர்களது மெய்யறிவைத்தெரிந்து மறைக்கின்றதாதலின், இவடந்தான் மறைப்பெனக்கூறின றென்ருயிற்று. இதுதான் தானயிருக்கிற விடமென்பது, முற்கூறிய துரியங்கடந்த துரியாதீதந்தான் காரணகாரியமுதலிய சகலகற்பனைகளுமின்றித் தானேதானகத் தனித்தனித்திருக்கிறவிடம். காரணமாவது, சகல கற்பனைகளுமிறந்த சுத்தவறிவு, காரியமாவது, மாயாகாரியமாகிய தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகளாம். இத்தேகேந்திரிய முதலியவைகளுக்குக் காரணமாகிய மாயை தனதறிவில் மெய்போலத்தோற்றியதும், பின்னர் இல்லாததும் துரியத்தில் தெரியுமேயன்றி காரணகாரிய முதலியவைகளில்லாத துரியாதீதத்தில் யாதொருகற்பனையுந் தெரியாதாதலின், இதுதான் தானயிருக்கிறவிடமெனக் கூறினறென்றபிப்ராயம்.

* மௌனதீதமென்பதற்கு, வாக்கு மௌனமுதலிய சகல மௌனங்களுக்கெல்லாம் எட்டாது விளங்காநின்ற பரவஸ்துவென்பது பொருள்.

(சைதன்யந் தானெனல்)

வினா:—சைதன்யந்தானாயிருப்ப தெப்படியென்னில்?

விடை:—ஜீவதுரியத்தில் தானாயிருப்பது சைதன்யமல்ல, ஈஸ்வரதுரிய வனுபூதியில் தானாயிருப்பது சைதன்யமல்ல, இரண்டும் பரோட்சாபரோட்சமா யிரண்டுமொன்றாய்த் தானாயிப்பது சைதன்யமெனவறிக.()

வினா:—நடுவணையாவ தெதுவென்னில்?

விடை:—சித்துவிளக்கத்திற் றானாயிருக்கிற சத்துமானந்தானுபவமும் விளங்குகின்றது. இப்படித் தன்னை யனுபவிப்பதுதவிர வேறே *வெட்டியில்லை, இப்படி யனுபவிக்கிற அவசரத்தில் அஞ்ஞானமும் விருத்தியும் விஷயமுமில்லை, ஆனந்தவெஞ்சகத்திற் சித்து ஸ்புரித்துத் தானாயிருத்தலைக் காட்டுகின்றதென வறிக. (௫௬௯)

வினா:—இன்னும் அனுபூதி நிலைத்ததற்கு அடையாள மெப்படியென்னில்?

விடை:—மத்தியில் தானறிவானந்தமென்று நிலைத்தால் வெளியினு மப்படியே யுள்ளேயு மப்படியே மத்தியிலிருந்தாலு மப்படியேயென வறிக. (௫௭0)

வினா:—இன்னு மத்தியகதநிலையாவ தெப்படியென்னில்?

விடை:—வெளியி லெப்போதுஞ் சகலத்திலும் சுகவறிவு தானாயிருக்கும், நீங்கினா லுள்ளேயறிவானந்

---

* வேறேவெட்டியில்லையென்பது, வேறே யில்லை, அல்லது, மார்க்கமில்லை யென்றர்த்தம் திசைச்சொல்.

தந் தானுயிருக்கும், காரியகாரணத்திற் றுன்மத்திய மிதமாயிருந்து விளங்குமென வறிக. (௫௭௧)

வினு:—இன்னு மத்தியிற் றுன்விளங்குவதெப் படியென்னில்?

விடை:—வெளியிலும் விளங்காது, உள்ளும் விளங்காது, மத்தியிற் றுன் விளங்கவேண்டுமென வறிக. ()

வினு:—இன்னும் நடுநிலை யெதுவென்னில்?

விடை:—போதமில்லாமல் அதுவது தானு யிருக்கிறதென வறிக. (௫௭௩)

வினு:—இன்னும் நடுநிலை யெப்படியென்னில்?

விடை:—பாவனையில், அறிவில், மனதில், நானென்கிறதில், பார்வையில், கேள்வியில், எல்லாவற்றிலும் நடுநிலை விளங்கினு லவைக ளில்லையென வறிக. (௫௭௪)

வினு:—இன்னும நடுநிலை யெப்படியென்னில்?

விடை:—ஒருவிஷயத்தை வெளியிலே கண்டபோது அதிலுண்டாகிய சுகம் ஈஸ்வரதுரியம், இந்தண்டை யந்தசுகத்தை யறிகிறபடியினுலே ஜீவதுரியம், இருபக்கமும் நிரதிசயம், மத்தியிற் றுனென வறிக. ()

வினு:—இன்னும் நடுநிலை யெப்படியென்னில்?

விடை:—அழிபொருளாகிய பொய்ப்பொருளுக்கு நாசம்வந்தபோது வேதைபிடிக்கும் †அந்தண்டை, யிந்தண்டை யொதுங்காமல் நடுநின்று நித்தியமாயிருக்கிற தன்னைப் பூர்ணமாய்க் கண்டால் *வேதைபிடி -தென வறிக. (௫௭௬)

---

*வ ...வேதை - துன்பம். †அந்தண்டை யிந்தண்டை, காநின்றக்கும். இஃது திசைச்சொல்.

வினா:—இன்னும் நடன மெப்படியென்னில்?

விடை:—வெளியில் ஈஸ்வர துரியம், உள்ளே ஜீவ துரியம், மத்தியில் சுழுப்தி, பிரம்ம துரியமே குரு துரியம்; இவ்விரண்டு துரியமும் குரு துரியத்திலயிக்கியம், மத்தியத்திலிருந்து இரண்டு தேகத்திலும் இரண்டு பக்கமாய்ச் சாய்கிறது நடனமென வறிக. ()

வினா:—இன்னு மத்தியம் விளங்குவ தெப்படியென்னில்?

விடை:—தெரிபொருளுந் தரிசனமுமிறந்த அனுபூதியிலும் போதமில்லை, இது யிதத்தி லதுவென்ற பொருள், அங்கங்கே யப்படி யப்படி அனுபூதியா யிருக்கிறதென்று அறிந்தபோதும் போதமில்லை, இது அகத்தில் நீயென்றபொருள், *இதத்தில் அகமில்லை, யகத்தி லிதமில்லை, இரண்டிலுமிருப்பது தானேயென வறிக. (௫எஅ)

வினா:—இன்னும், மயத்துவமும் விருத்தியுமில்லாமல் மத்தியமாய் விளங்குவ தெப்படி யென்னில்?

விடை:—காட்சி யிறத்தலாயிருந்தால் மயத்துவம், காட்சிப்பட்டால் விருத்தியாம், இந்த விரண்டுங் கூடாது, காட்சி மத்தியகதநிலையில் ஸ்வயஞ் சைதன்யம் விளக்கமாகையால் அது காட்சியுமல்ல, காட்சியிறத்தலுமல்ல, இஃதே † ஸ்வரூப சித்தாந்தமென வறிக. (௫எ௯)

---

* இதத்திலென்பதற்கு, கண்ணுக்குக் காணப்படுகிற ப்ரபஞ்சத்தி லென்பதுபொருள்.

† ஸ்வரூப சித்தாந்த மென்பதற்கு, வஸ்து நிச்சயம், அல்லது அத்வைத சித்தாந்த மென்பதுபொருள்.

வினா:—இன்னும் நடுநிலையான சமத்துவம் எது வென்னில்?

விடை:—அகத்தி லிதமில்லை, இதத்தில் அகமில்லை, யகமாயும் இதமாயுமிருக்கிற மத்தியமான சைதன்யமே சமமென வறிக. (௫௮0)

வினா:—இன்னும், மத்தியஸ்த்தமே யகமிதமாயிருப்ப தெப்படி யென்னில்?

விடை:—* கண்ணாடிபோல இருபுறமுங் காட்டி விளங்குகிறதென வறிக. (௫௮௧)

வினா:—த்ருக்கெல்லா மத்தியிலென்ப தெப்படி யென்னில்?

விடை:—காரணமாகிற த்ருக்கையன்றி விரவிய காரியமில்லை. நடுநிலையில் விளங்குகிற துரியமேயெவைக்குங் காரணம், மயமாயிருப்பதும் விருத்தியா யிருப்பதும் மனமேயென வறிக. (௫௮௨)

---

* கண்ணாடிபோலவென்றது, ரசம்பூசாத கண்ணாடியி லிரண்டுபக்கமுங் காட்டுகிற ரூபந் தோற்றும், ரசம்பூசிய கண்ணாடியினது முன்புறத்திற் காட்டுகிற ரூபந் தோற்றுமேயன்றி பின்புறத்தி லுருவந்தோற்றுததுபோல, ஜீவனது அறிவென்னுங் கண்ணாடியிலாசையென்னும் ரசம்பூசியிருப்பதனை லிச்சீவனுக்கு முன்புறம் அல்லது பகிர்முகத்தில்ப்ரபஞ்சந் தோற்றுகிறதேயல்லது, அந்தர்முகத்தில்தனதறிவுதோன்றுது. தோன்றுவிடினும் அகம்புற மென்னும் வியவகாரம் ஜீவர்களுடைய கற்பனையென்றே சொல்லவேண்டும். அஃதெப்படியெனின்? நிரந்தர தர்மத்தைப்பெற்ற ஆ

வினு:—இன்னுங் கொள்வானுங் கொள்பொருளுங் கூடுவ தெப்படி, கூடாத தெப்படி யென்னில்?

விடை:—மத்தியிற் சுக முதயமாகி விளங்காமல் அறிவிற்றோய்ந்து அறிவு மாகாரமு மாகும்விஷயத்தில் விருத்திகூடினது கூடல், உயிர்களுக் கெல்லாம் *பொதுவிளங்கினல் அது †கூடாதது, அப்போ மூன்றிடமு மொன்று, சமத்துவமானல் மத்தியம் நிலைக்கு மறைப்பில் விளங்குவது ஆதியென்றதில் நிறைவதென வறிக. (ரு அ௩)

காசத்தில் வீடுகட்டியிருப்பதனுல் அவ்வீட்டிற்கு அகப்புறமென்னும் வியவகாரமெப்படிக் கற்பனையோ? அப்படிப்போல, எங்கும் பரிபூரணமாகநிறைந்த சிதாகாசத்தில் அறிவுவடிவான ஜீவன்தோன்றி அந்தஜீவன் வசிக்கும்பொருட்டுத் தேகமென்னும் வீடுகட்டியிருப்பதனு லவன் வியவகரிப்பதற்கு அகம்புறமெனக் கற்பனைப்பெயர்கள்வந்தன. இவ்விரண்டிடத்தும் பற்றுடையவன் ஜீவன், பற்றில்லாதவன் கடவுள்; அல்லது தனது எதார்த்த அறிவு. இவ்வறிவுக்கு அகம்புற மில்லாமையாலும், ரசம்பூசாத கண்ணுடியில் இரண்டுபக்கமுங் காட்டுகிற உருவங்க ளெப்படிவிளங்குகின்றனவோ? அப்படிப்போல, அறிவின்கற்பனையாகிய அகம்புறமிரண்டிடத்துந் தோன்றுகிறவுருவங்க ளவ்வறிவிற்குத் தடையில்லாது விளங்குகின்றனவாதலாலும், கண்ணுடிபோல இருபுறமுங்காட்டியெனக்கூறினரென்ருயிற்று.

* பொதுவென்பது—நடுநிலையான துரியவிளக்கம்.

† கூடாததென்பதற்கு, துரியவிளக்கம் யாவருக்கும் பிரத்யக்ஷமாயிருந்து மதனைக்காணக் கூடாததென்பது பொருள்.

வினா:—இன்னு மிஃதனைத்தும் ஸ்வரூபமென்ப தெப்படி யென்னில்?

விடை:—இஃதென்பது துரியம், அனைத்துமென் பது ஆகலாதம், மத்தியஞ் சொரூபமென வறிக. ()

வினா:—இன்னு மத்திய மெப்படி விளங்குமென் னில்?

விடை:—ஒருபுருடன் எதிரேயிருந்த ஸ்த்ரீயாகி யந்தஸ்த்ரீயா யிருந்துகொண்டே புருடனைப் பார்க் கிறபடியினாலே இவன் புருடனுமல்ல, ஸ்த்ரீயுமல்ல, மத்தியிற் சுகஸ்வரூபமென வறிக. (ருஅரு)

வினா:—இன்னுஞ் சமத்துவத்தில் மத்தியம்விளங் குவ தெப்படியென்னில்?

விடை:—ஏகதேசவிருத்திக்கும், அகண்டாகார விருத்திக்குஞ் *சமத்துவங்கட்டி மத்தியம் விளங்க வேண்டும், தேகம் நிறைவைப்பிடித்து வெளியிலீ ஸ்வரதிசை, தேகத்தில் நிறைவையுஞ் சமத்துவமாக்கி மத்தியம் விளக்கவேண்டும், அப்படிச் சமத்துவங் கட்டி மத்தியம் விளக்க இப்படியு மப்படியுமா யிருக் கிறது ஆகாரமுமல்ல அறிவுமல்ல, அனுபூதியுமல்ல, இப்படியு மப்படியு மாகியிருந்தது மத்தியமான பூரண சைதன்யமேயென வறிக. (ருஅசு)

வினா:—இன்னும் மத்தியகத மெதுவென்னில்?

விடை:—ஸ்பரிச விஷயமாகிற இளநீர் சாப்பிடு ம்போது ஆனந்தம் இளநீர்வடிவமாகாவிடில் அந்த

---

* சமத்துவங்கட்டி யென்பதற்கு, கண்முதலிய புறக்கரணங்களையும், மனமுதலாகிய வகக்கரணங்களை யுமொன்றுபடுத்தி யென்பதுபொருள்.

வின்பந்தோன்றுது, தானே யந்த இன்பவடிவ மாகி யபடியால், இளநீரென்றொன் றில்லாமலுந் தானென் றொன் றில்லாமலு மத்தியகதமாய் விளங்குகிறதென வறிக. (௫அஎ)

(ஜீவன் முக்தன்.)

வினா:—ஜீவன்முக்தன் அஞ்ஞான திசையிலுந் தானா யிருந்த தெப்படி யென்னில்?

விடை:—தான் வியாபகவிளக்கமாய் விளங்கின போது அதுதான் முன்னேவிஷயமாயிருந்ததும், அது தான் தேகமாயிருந்ததும், அதுதான் இந்திரியமா யிருந்ததும், அதுதான் கரணமாயிருந்ததும், அதுதான் ஜீவனாயிருந்ததும், அதுதான் சாட்சியாயிருந்ததும், அதுதான் யெல்லாமா யதுவதுவா யிருந்ததென வறிக. (௫அஅ)

வினா:—இன்னும் ஜீவன்முக்தன் எப்படி இருப் பானென்னில்?

விடை:—மிகுந்த வீராப்பேச்சுகள் பேசாமல் குழந்தையைப்போல மனோசஞ்சார மில்லாமல் பயித் தியக்காரன்போல விருக்க, வாசனையானது புருஷனு டைய எத்தனமில்லாமலே வரும், வந்தபோதே சொர்ன வேலைக்காரன் உடைமை பண்ணுகிறபோது அவனுடையமனது உடைமை யாகாரமாக விராமற் சொர்னமா யெப்படியிருக்கிறதோ, அப்படிப்போல ஜீவன்முக்தன் தேகேந்திரியப்ரபஞ்சமென்னு மாபர ணங்களி னாகாரமாக விராமற் றன்னறிவுருவாகவே யி ருப்பனென வறிக. (௫அகூ)

வினா:—இன்னும் விசாரித்த விவேகிகள். உத்தமன்; மத்திமன் அதமனென மூன்றுவிதமாயிருப்பார்கள். அவர்க ளாரென்னில்?

விடை:—கண்ட அறிவு கடமாகு லதமன், கண்டது ஆகாரமல்ல அறிவென்று கண்டால் மத்திமன், அறிவு மாகாரமுந் தோன்றாமல் அனுபூதிவிளக்கமாகயிருக்கிறவன் உத்தமனென வறிக. (ருகூ0)

வினா:—இன்னுந் தானாகிற சச்சிதானந்த ஸ்வரூபத்தை மறந்து தேகந் தானாய்நின்ற நினைவாகிற வுயிருக்கு யென்ன தோற்றுமென்னில்?

விடை:—சுகதுக்க வேதனையுஞ் ஜடாகாரமுந் தோற்றுமென வறிக. (ருகூக)

வினா:—இன்னுந் தானாயிருக்கிற சச்சிதானந்த ஸ்வரூபத்தை நினைத்துச் சிந்தனைபண்ணிச் சாட்சி பாவமாய் நின்ற அறிவுக்கு யென்ன தோன்றுமென்னில்?

விடை:—ஞானம் இச்சை கிரியையோடுகூடத் தேகமுதற் ஜெகதாகாரமும் போய்த் தானாகிற அறிவானந்தமே மெய்யென்று தோன்றுமென வறிக. ()

வினா:—இன்னுஞ் ஜீவன் முக்தன் ஒன்றை நினையாதிருப்ப தெப்படியென்னில்?

விடை:—யாதொரு ஸ்வரூபானந்த சுகமே தானாயிருக்கிறவனுக்கு இதைத் தவிர வேறேயொரு சுகம் இருக்கிறதென்று நினையானென வறிக. (ருகூ௩)

வினா:—இன்னுஞ் * ஜீவன் முக்தன் ஒன்றை யறியாதிருப்ப தெப்படியென்னில்?

---

* ஜீவன் முக்தனென்றது, அறிசியை யுமியெப்படி மூடிக்கொண்டிருக்கிறதோ அப்படிப்போல, அறி

விடை:—யாதொரு அறிகிற ஸ்வரூபமே தானு யிருக்கிறவனுக்கு இதைப்பார்க்கிலு மறியவேண்டு மென்று ஞானவிச்சை யிராது, அவன் சாட்சாத் பிரம்ம ஸ்வரூபமென்றே யறிவாயென வறிக. (ருகூச)

வினு:—இன்னுஞ் ஜீவன்முக்தனுக்கு ஒருலாபத்தை யடையவேண்டுமென்று இச்சையா யிராதென்பதெப்படியென்னில்?

விடை:—யாதொரு கேவலானந்த ஸ்வரூபமே தானு யிருக்கிறவனுக்கு வேறேயொரு லாபத்தை யடையவேண்டுமென்று இச்சையிராதென வறிக. ()

வினு:—ஜீவன் முக்தனுக்கு வேண்டுமென்கிறதில்லையென்ப தெப்படியென்னில்?

விடை:—அறிவினிடத்திற் றேற்றின் ஜெகதாகாரத்திலே, யறிவு ஸ்வரூபமே யிருக்கிறபடியினுலே யன்னியமாய் வேண்டுமென்கிறதற்கு ஒரு ரூபமில்லை யென வறிக. (ருகூரு)

வென்னுமறிசியை யுமியென்னும் பாசம் மூடிக்கொண்டிருக்கின்றது. இவ்வித பாசமென்னும் அல்லது, பெண்டுபிள்ளைகளுடைய ஆசையென்னுங் கயற்றினுற் கட்டுப்பட்டிருக்கிற யாதொரு ஜீவனுண்டோ, அவனுக்குஜீவபத்தனெனப்பெயர்வந்தது. இத்தகைய ஜீவன் மேற்கூறிய பாசபந்தங்களினுல் தனக்குப் பெரியவருத்தமுண்டாகித் தன்னைச் சதாகாலமுந் துன்பப் படுத்துகின்ற ஆசாபாச நிலைமைகளையு மவைகளை யபிமானிக்கின்ற தனது நிலைமையினையுங் குருமுன்னிலையாகவாகிலுஞ் சாஸ்த்ரமூலமாகவாகிலுந் தனது சூக்குமபுத்தியினுல் நன்ருயாலோசித்து ஆகாசத்தின் கண்

வினா:—ஜீவன் முக்தனுக்கு வேண்டாமென்கிற தில்லையென்ப தெப்படியென்னில்?

விடை:—அறிவென்று வேறே யொரு பதார்த்தமு மில்லாதபடியினாலே, வேண்டாமென்கிறதற்கு ஒரு பதார்த்தமு மில்லையென வறிக. (ருகூஎ)

வினா:—இன்னுஞ் ஜீவன் முக்தன் தன்னை மறவாதிருப்ப தெப்படியென்னில்?

விடை:—தான் அறிவானந்த ஸ்வரூபமா யிருக்கிறபடியினாலே யறிவுக்கு மறதி யில்லையென வறிக.()

வினா:—இன்னுஞ் ஜீவன் முக்தன் சும்மா யிருக்கிற தெப்படியென்னில்?

விடை:—அறிவே தான், தானே யறிவானந்த ஸ்வரூபமா யிருக்கிறபடியினாலே சும்மா யிருக்கிறோமென்று சொல்லுகிறதற்கு ஒரு சப்தமு மில்லை யென வறிக. (ருகூகூ)

வினா:—இன்னுஞ் ஜீவன் முக்தனானவன் தேகேந்திரியாதிகளுடைய தர்மங்களுடனே கூடிக்கொண்டிருக்கிறதுபோலத் தோன்றிக்கொண்டிருந்தா லிவைகளை விடுபட்டவனென்ப தெப்படியென்னில்?

க்ஷணநேரத்தில் மேகமுண்டாகி மழை வருஷித்த தெப்படியோ, அப்படிப்போல,நிர்மலமாயுஞ் சிதாகாச வடிவமாயுமுள்ள தனதறிவினிடத்தில் க்ஷணகாலத்தை நெடுங்காலமாகவு மிடையிலவாந்தரமாகவுந் தனக்கு நேரிட்ட பற்றுக்களனைத்தையும் பரிஷ்காரமாக விடுவித்து யாதொரு பற்றில்லாமலிருக்கின்ற தனது எதார்த்தவறிவினது, லட்சியார்த்தத்தை யுள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தரிசித்தவனெவனோ,அவனுக்கு ஜீவன் முக்தனெனப் பொருளாயிற்று.

விடை:—தான் சிதாகார ஸ்வரூபமா யிருக்கிற படியினாலே தனக்கு மதற்குஞ் சம்பந்தமில்லை, அஃ தெப்படி யென்றால்? சகலத்திலு மாகாயம் நிறைந்தி ருந்து மாகாயத்துக் கொருசம்பந்தமு மில்லாதது போல, ஸ்வரூபமாத்திரமா யறிந்திருந்தும் அறிந்தே னென்கிற அறிவு ஸ்புரணமன்றியிலே கேவலானந்த ஸ்வரூபமா யிருக்கிறபடியினாலே யொன்றுமறியாத மூடன்போலே யிருப்பான், ஒரு வாசனைசங்கமன்றி யில் வாயுபோலவே நிச்சங்கமாய்ச் சஞ்சரிப்பனென வறிக. (௬00)

வினா:—ஜீவன் முக்தி விதேகமுக்தியாவ தெப் படியென்னில்?

விடை:— *காட்சிபிறத்தல் விதேகமுக்தி திசை, †துரியக்காட்சி ஜீவன்முக்தி திசையென வறிக. (௬0௧)

வினா:—விலட்சண நிரூபாதிகமுஞ் சலட்சண சோபாதிகமு மெப்படி யென்னில்?

விடை:—ஸ்புரிப்பிற் றான்விளங்கி முக்தியாவது நிரூபாதிகம், காரணவஞ்ஞானங் கெட்டுக் காரிய உபா தியிற் சலட்சணமாய் விளங்குவது சோபாதிகமென வறிக. (௬0௨)

வினா:—முக்தியாவ தெது, வ்யக்தியாவ தெது வென்னில்?

விடை:—முக்தி திசை யறிவு ஸ்வபாவம், வ்ய க்தி திசை சொரூப ஸ்வபாவமென வறிக. (௬0௩)

---

* காக்ஷியிறத்தலாவது, ரூபாரூப முதலிய சகல ற்பனா சமூகங்களுமிறந்து தானே தானாயிருத்தல்.

† துரியக்காட்சி, தனது எதார்த்த ஞானப்ரத் யக்ஷம்.

வினு:—இன்னும் முக்தியும் வ்யக்தியுமாவ தெது வென்னில்?

விடை:—மனோவிருத்தியை யகண்டாகார விருத்தியாக்கி, அகண்டாகார விருத்தியை வாசனைச்சித்தான ஆனந்தமாக்கினது முக்தி. மனோவிருத்தியினு மகண்டாகார விருத்தியிலும் வாசனு விருத்தியினு மனுபூதியாகி மயம் நீங்கி யிவைகளில் வியாபகவிளக்கந் தானுய் விளங்குவது வ்யக்தியென வறிக. (சுOச)

வினு:—இன்னும் முக்தியும் வ்யக்தியுமாவ தெதுவென்னில்?

விடை:—அறிவினு லொன்றை யறியப்போனுல் அஞ்ஞானமாம், அறிவாயிருந்தால் முக்தி, அறிதலிற் றன்னைக்கண்டால் வ்யக்தியென வறிக. (சுOரு)

வினு:—இன்னும் முக்தியும் வ்யக்தியுமாவ தெது வென்னில்?

விடை:—அனுபூதி விளைந்தா லறிவு தானுய்ப் போம், அறிவு மானந்தமுமே சாஸ்திரங்கள்தோறும் விளங்குவது, இஃது முக்தி, வஸ்து நிர்த்தாரண கிரமமான விலட்சண முக்தியுஞ் சலட்சண வ்யக்தியும் பண்ணுநின்ற சாம்பிரதாயத்திற் றுன்விளங்குமென வறிக. (சுOசு)

வினு:—இன்னும் முக்திக்கும் வ்யக்திக்கும் ஞான மெதுவென்னில்?

விடை:—நிச்சயமுஞ் சமாதியும் முக்திக்கு க்ஞானம், சகசமும் சாட்சாத்காரமும் வ்யக்திக்கென வறிக. (சுOஎ)

(சத்தியக்ஞான மனந்தானந்தம்)

வினா:—சத்தியக் கியான மனந்தானந்த மெது வென்னில்?

விடை:—இருந்து தோன்றி மலமாய் விளங்குகிறது சத்தியக்ஞான மனந்தானந்தமென வறிக. (௬0அ)

வினா:—இன்னு முண்மையாகிய ஸ்வானுபவ மெப்படியென்னில்?

விடை:—*சத்தியக்ஞான மனந்தானந்தம் நாலில் ஞானந் தானாகவும், அனந்த மானந்தமாகவும், தானே யானந்தமா யொன்றாய் விளங்குவது உண்மை நிச்சயார்த்தம்; இதற்குமேற் பொருளில்லையென வறிக. ()

---

* சத்தியக்ஞான மனந்தானந்த மென்றது, சத்தியம் - எக்காலத்திலுங் கெடாதிருப்பது, அஃதாவது - தோன்றுத லழிதல் முதலிய சகல ஜீவகற்பனைகளுமின்றி யென்று மொருதன்மையாயும் காலங்கடந்ததாயு முள்ளதெதுவோ அதற்குச் சத்தியமல்லது, சத்து எனப்பெயர்வந்தது. க்ஞானம் - அறிவு; அஃதாவது, சூரியன்முதலிய ப்ரகாசங்களுக்கு விராட்புருஷனதுப் ரகாசங்காரணமாயிருப்பதுபோலத், தனதெதார்த்தவறிவிற்கு யாதொரு காரணகாரிய மில்லாமையினாலும் தனக்குத்தானே ஸ்வயம்பிரகாசமாக விளங்கிக்கொண் டிருப்பதனாலும், அதற்கு ஞானமென நாமம் வந்தது. அநந்தம் - ஆதியந்தமில்லாதது, அஃதாவது - சூரியனுக்கு உதயாஸ்தமனமும் உத்பத்திநாசமு மிருப்பன போல, ஞானசூரியனுக்கு உதயாஸ்தமனமு முத்பத்திநாசமு மில்லாமையினாலும், அதனை யிப்படிப்பட்டதென வேதாகமமுதலியவைகளா லளவிடக்கூடாமை

வினா:—சடுதியிற் றான்விளங்குவது எப்படியென்னில்?

விடை:—எந்த விஷயம் வந்தடுத்தாலும், தனக்குத்தானே ஸ்புரிப்பு வந்தாலுந் தன்னுடைய வியாபகத்தைத் தானாகக் காணவந்த ஆகலாத வறிவு அதுவதுவாய்க் கெட்டுப்போகத் தன்னுடைய ஸ்புரிப்பு இறந்து தான்றானாய் விளங்குமென வறிக (௬௧௦)

யினாலும் மனோவாசா மகோசரமெனக் கூறுவதியாதோ, அதற்கு அநந்தமெனப்படும். ஆனந்தம் - மாறுச்சுகம், அஃதாவது - ஸ்த்ரீயினிடமாகப் பஞ்சேந்திரியங்களனைத்து மேககாலத்தி லொன்றாக வநுபவிக்கின்ற காமசுகங் கொஞ்சநேரத்தில் மாறும், தினந்தோறுஞ் சுழுப்தியவஸ்தையி லனுபவிக்கின்ற வானந்தங்காமசுகத்திலுங் கோடிப்பங்கதிகமாயினுமவ்வவஸ்தைவரையி லிருக்குமேயன்றி யதனைவிட்டு ஜாக்ராவஸ்தையில்வந்தவுடன்மாறுவதுமல்லாமல் ஜீவனநுபவித்தசுகத்தை ஜீவனுக்குத் தெரியாமல் நானொன்றுந் தெரியாமற் றூங்கினேனென்னு மஞ்ஞானத்தை விளைவிக்கின்றது, இவ்வஞ்ஞானமே பலபிறவிகளுக்குங் காரணமாக விருத்தலின் சுழுப்தியிற்றோன்றுகிற மாயாமோகினியினதுசுகமும் பயனில்லாத தாயிற்று. இம்மாயாமோகினி வசப்பட்டுத் துன்பமடைகின்ற ஜீவனுக்குப் பூர்வபுண்யத்தினால் விவேகந்தோன்றி ஜீவ னெப்படிப்பட்டவன், அவனுக்கு அஞ்ஞானம் எப்போதுண்டாயிற்று, இஃதெப்படிக் கெடுமென்னும்விசாரணையினால் ஜீவகற்பனாசமுகங்களை யெப்போது கெடுத்தானோ, அப்போதே தனதறிவின்கண் தனதெதார்த்தவின்பந் தோன்றும், அங்ஙனந்தோன்றுகிற வின்பமெய்

வினு:—இன்னுஞ் சடுதி யெப்படியென்னில்?

விடை:—இப்படி விளங்குகின்ற ஸ்வரூபஞ் * சமாதியிலிருந்து ஸ்புரித்தவிடத்தில் தானன விளக்கமே ஞானம், எந்தவிஷயந் தோன்றினுலுந் தோற்றினதெல்லாம் பேரானந்தமாத்திரமாக அனுபவிப்பதே ப்ரியம். இப்படி யனுபவிக்கிறேமென்கிற ஸ்புரணம் ஸ்வயமாக விளங்குவதனுல் இதுவே துரியஞானம், இதிலே தானய் நிறைந்திருக்கிறபடியால் தானென்பதும் ஆயிற்றென வறிக. (சுகக)

போது மொருபடித்தாயிருக்குமேயன்றி மாருது, அவ்வாறு மாருதிருக்கிற யாதொரு சுகமுண்டோ அதற்கு யதார்த்தவானந்தம், அல்லது ப்ரம்மாநந்தம் - சிவாநந்தமெனப்பொருளாயிற்று. இவ்வாநந்தஞ் சராசரப்பொருள்களுக் குள்ளும் புறம்பும் பரிபூரணமாக நிறைந்திருப்பதனுற் சகலவுயிர்களுக்கு எல்லாம் பிரியவடிவமாகக் காணப்படுகின்றதாயினும், சப்தமுதலிய விஷயங்களுக்குத்தோன்றி விஷம்போல மயக்கிக்கொண்டிருப்பதனுல் விஷயானந்தமெனப் பெயர்வந்தது. இவ்விஷயாநந்தத்தை மேற்கூறியப்ரகாரங் கெடுத்து ப்ரம்ஹாநந்தத்தை யநுபவித்த பெரியோர்களில் ஸ்ரீமான் பட்டிணத்துஸ்வாமிகள் "அத்தனை பேருண்டாலு மணுவுங்குறையாண்டி" எனவும், ஸ்ரீமான் தாயுமானவர் "பார்த்தவிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணனந்தமே" எனவுங்கூறினர்.

* சமாதியாவது, பஞ்சேந்திரியமுதலிய தத்துவச்சேட்டைகட் கேதுவாகிய தேகத்தினின் றவைகளோடுகூடினு மவற்றிற்பற்றின்றி யவைகளைத் தன்னறிவினிடத்தடக்கிப் பற்றில்லாதிருக்கு மான்மாவாகிய

வினா:—இன்னுஞ் சடுதி யெப்படியென்னில்?

விடை:—இன்னுந்தானாய்ச் சமாதியி லிருக்கும்போது சடுதியாகத் திடீலென்று யாராகிலும் எழுப்பினாலும், புறம்பிலுந் தானாயிருக்கிறபடியால் திடீலென்று வந்ததுந் தான்றான், அதிலேவந்த ஸ்புரணஞ் ஞானம். இது தன்னை விளக்குகின்றபடியாற் றான் சுக ஸ்வரூபமே; சுக ஸ்வரூபந் தானென்கிற ஸ்புரணமே துரியக்ஞானம். எதிர்ப்பட்டதுந் தானாய் விளங்குகின்றபடியாற் றானே யிப்படிச் * சடுதியி லிவ்வைந்துந் தானாய் விளங்குமென வறிக. (சுகஉ)

தன்னைத்தரிசித்தல். அஃது ப்ருதிவிசமாதி, அப்புசமாதி, அக்னிசமாதி, வாயுசமாதி, ஆகாசசமாதியென் றைந்துவகைப்படும். அவற்றுள், பூமியிற் புதைத்தல் ப்ருதிவிசமாதியும், நீரில்விடுத லப்புசமாதியும், நெருப்பில்வைத்துத் தகனம்செய்த லக்நிசமாதியும், உஸ்வாசநிஸ்வாச ரூபமாகிய ப்ராணவாயு நிலையினையு மிடைகலை பிங்கலைகளின் க்ரமத்தையுந் ரேசக பூரக கும்பக விபாகத்தையுங் குருமுன்னிலையிற் றெரிந்துகொண்டு மனதைத் தன்னறிவின்க ணடங்கச்செய்வது வாயுசமாதியும், வாயுவசத்திலகப்பட்ட மரமுதலியவைக ளெப்படி யசைகின்றனவோ, அப்படிப்போல, உதானவாயு வசமாகச்சென் றெங்கும்போய்ச் சஞ்சரிக்கின்ற மனது எதினின்றுந் தோற்றியதோ வதிலடங்கச்செய்வது ஆகாச்சமாதி யல்லது ஞானசமாதியுமாம். இவ்வைந்து சமாதிகளில் ப்ருதிவிசமாதி யக்நிசமாதி யிரண்டுமித்தேசத்தி லியற்றுகின்றனர்.

* சடுதி, சீக்கிரம்.

வினா:—இன்னுஞ் சடுதி யெப்படியென்னில்?

விடை:—ஒருவ ரடித்தபோதும் வைதபோது மனுபூதி பளிச்சென்று விளங்கவேண்டும், அடித்த தென்றும் வைததென்று மெண்ணிப் பிற்பாடு நினைத்து அனுபூதி வரலாகாதென வறிக. (கூகரு)

அப்புசமாதி வடதேச மல்லது காசியிற் செய்கின்றனர், இம்மூன்றுசமாதிகளும் ஸ்தூலதேகத்திற்குரியனவாம். வாயுசமாதி சூட்சுமசரீரமென்னு மனதிற்குரியது, ஞானசமாதி – காரணதேகத்திற் குரியது; இங்ஙனங்கூறிப வைந்துசமாதிகளில் பிருதிவி முதலிய மூன்றும் சுலபமாதலின் தேகாத்மவாதிகள் செய்யத்தக்கன. வாயுசமாதி யியற்றுவது மிகவுங் கஷ்டமாகையா லதனை யணிமாதிசித்திக ளமையப்பெற்ற வகஸ்தியர்முதலிய (மஅ) சித்தர்களும், சொக்கநாதர் முதலிய (கூச) மரபினரும், நவகோடிசித்தர்களு மியற்றுவார்கள். இங்ஙனமிருக்க, நெருப்பில்வைத்துச்சுடாத மட்பாண்டத்தினை ரில்வைத்தா லெப்படிக்கரையுமோ? அப்படிப்போல ஞானமென்னு மக்நியிற்சுடாத தேகமென்னு மண்பாண்டத்தைப் பூமியிற்புதைத்தாற் கரைதலாவது, வீங்கிவெடித்து மண்ணேடுமண்ணுகின்றது. யோகமென்னு நெருப்பின் கண்வைத்துச் சுட்ட சித்துபுருஷர்களுடைய தேகமென்னுங் கடத்தைப் பூமியிற்புதைத்தாற் கெடாமற் பூர்வமிருந்தபடியே யிருக்கின்றதாதலானும் இங்கிலீஷ்காரர் பூமியைப் பரிசோதிக்குங்கா லவ்விதசித்தர்களுடைய தேகத்திற்குச் சலனமுண்டாகி மனம் வெளிப்பட் டவர்களோடு முதலாவ திரண்டாவது யுகத்தினடந்த சிலவார்த்தைகளைப்பேசி யிது கலியுக

வினு:—இன்னுஞ் சடுதி யெப் டியென்னில்?

விடை:—பேசிக்கொண் டிருக்குமிடத்து ஆகலாதமான கேவலத்தி லறிவுலயித்துப்போயிற்று விளங்கும் பேச்சுகள் வியவகாரம் விட்டவுடனே ஸ்புரிப்பு வரவேண்டும், தான் விளங்கவேண்டுமெனவறிக. ()

மெனத் தெரிந்து கண்களைமூடித் தன்னிலைமையிலமைதி பெறுகின்றார்களாதலானும், பரமசிவத்தைப்போல நெடுங்காலமிருந்து சித்துவிளையாடிக் கொண்டிருக்கின்றார்க ளாதலானு மிவர்களுடைய தேகங்களகண்ட தேஜோன்மயமாகவே விளங்கும். இவ்விதமாகிய மகாத்மாக்கள் தேகத்தோ டிருந்தாலுமிருப்பர். கற்பூரத்தைத் தீபச்சுடரில் காட்டியவுடன் பிரகாசமாகவிளங்கி எப்படி ரூபமில்லாம லரூபமாகின்றதோ, அப்படிப்போலத் தேகமென்னுங் கற்பூரத்தை ஞானமென்னுந் தீபத்திலல்லது துரியங்கடந்த பெருவெளியிலயிக்கியம்பண்ணித் தானென்னு மதுவென்னுஞ் சகல பேதாபேதங்களிறந்த விதேகமுக்திதிசையினை யடைந்தாலுமடைவர். ஜீவன்முக்தி மனமடங்கினவர்களுக்கு நேரிடுமேயன்றி ஏனையோர்களுக்குப் புலப்படாது. யோகசாதனம் ஞானசாதனமிரண்டும் மனதை யடக்குவதற்குப் பெரியோர்கள் விதித்தார்கள், இவற்றி லெவர்களுக்கு எது அனுஷ்டிக்கக் கூடியதோ அதனை யநுஷ்டித்து மனோலயம்பெறலாம், யோகசாதனம் பொய்யெனவும் ஞானசாதனமே மெய்யெனவும் கூறுவதிற் பயனின்று. கர்மகாண்டம் பக்திகாண்டம், ஞானகாண்டமென்னு மூன்றுகாண்டங்களில் ஞானகாண்டத்தி லடங்கியது யோககாண்டமேயன்றி நான்காவது காண்ட மின்று, இங்ஙனங்கூறிய

வினா:—இன்னுஞ் சடுதி யெப்படியென்னில்?

விடை:—தோன்றல் வந்தவுடனே யிருக்கிற சத்தின்பேரிற் றோன்றல் வரவேண்டும், விஷயத்தின் பேரில் வரப்போகாதென வறிக. (௬௧௫)

வினா:—இன்னுஞ் சடுதி யெப்படியென்னில்?

விடை:—ஸ்புரிப்பாகிற விளக்கத்திற் றானுமானந்தமும் நிறையவேண்டுமென வறிக. (௬௧௬)

யோகஞானமிரண்டினையு மகஸ்தியர்முதலிய மகாபுருஷர்க ளுணர்ந்தவர்க ளாகையா லவர்களுக்கு யோகம் வேறெனவும், ஞானம்வேறெனவும் பேதமில்லையாதலின் "யோகமென்ன ஞானமென்ன விரண்டுமொன்று, உணர்வறியா மூடர்கள்தான் வெவ்வேறென்பார்" என்றகஸ்திய மகாமுனிவர் கூறினர். இதனைத்தனது சூட்சுமபுத்தியினா லாலோசிக்காமலுஞ் குரு - அல்லது சாஸ்த்ரத்திற் சொன்னவண்ணம் அனுஷ்டிக்காமலும் பெரியோர்க ளிம்மானுடர்கள் மீது மிகுந்த கருணைவைத்துக்கூறிய நல்வழியைப் பிசகெனச் சிலர் சொல்லுகின்றனர். இங்ஙனமிருக்க, ஓரூரைச்சேர்வதற்குப் பலமார்க்கங்க ளிருக்கின்றன், எந்தவழியாகப் போனாலு மவ்வூரையடைவ தெப்படியோ, அப்படிப்போல மோக்ஷமென்னும் பெரிய பட்டணத்தைச் சேர்வதற்குப் பலமார்க்கங்க ளுளவாதலி னெந்தவழியாகச் சென்றாலுந் தனது எதார்த்தமானவூரைச் சேரலாமேயன்றி வழியிற் குற்றமுளதெனக்கூறுதல் கூடாது. இப்படிக் கூறுவதற்குக் காரணமாயிருக்கின்ற ஜீவகற்டனைக ளனைத்தையுந் தன்னறிவின்க ணடக்குவதெதுவோ? அது ஞான

வினு:—இன்னும் எந்த அவஸ்தையிலிருந்து சடுதியிற் றேக *மரித்தாலும் பய மில்லையென்ப தெப்படியென்னில்?

விடை:—ஆனந்தமே யறிவானபடியினுலே, தனக்கு விருத்தியில்லை; அறிவே யானந்தமானபடியினுலே தனக்கு மறைப்பில்லை. இப்படிச் சதாயிருக்கிறபடியினுலே தேகம் எப்போது போனுலும் போகட்டும், பயமில்லையென வறிக. (௬௧௭)

வினு:—இன்னுஞ் சடுதி விளங்குவ தெப்படியென்னில்?

விடை:—மயத்துவம் நீங்கினுல் மத்தியமான தான் விளங்கும். அப்போ விருத்தியல்லாத அஃது துரியம், ஞானத்திற் சைதன்யம் விளங்கவேண்டுமென வறிக. (௬௧௮)

வினு:—இன்னுஞ் சடுதியனுபூதி யெப்படி யென்னில்?

விடை:—யாதொரு †படுகையும் வியாபகத்திற் பட்டுத் துரியன் ஸ்புரித்துவிளங்கிச் சைதன்யமாய்ப் போகுமென வறிக. (௬௧௯)

சமாதி, இன்னும்விரிக்கிற் பெருகுமெனக் கருதிச் சுருங்கியுரைத்தனம்.

* மரித்தாலும், இறந்தாலும்.

† படுகை - இஃது - தேசியமொழி. அஃதாவது - பிஞ்சை தானியங்கள் விளையுமிடம். இப்படிப்போலத் தேகேந்திரிய ப்ரபஞ்சமென்னும் ஜீவப்பயிர்களுண்டாவனவும், விளங்குவனவும், லயிப்பனவுமாகிய ஞானமென்னும் சர்வவியாபகமாகிய யாதொரு விடமுண்டோ, அதற்குப்படுகை யென்பது பொருள்.

வினு:—நிலைநிலையிலே வ்யக்தியெப்படி யென்னில்?

விடை:—எப்படி யிருக்கிறுயென்று கேட்க? அப்படியா யிருக்கிறே னென்றதில், நிறைகின்றது, விடுதியிற் ருனுகிறதென வறிக. (சுஉ0)

வினு:—இன்னுஞ் சடுதி யெப்படி யென்னில்?

விடை:—நான் சொன்னது கேட்டையாவென்ற தெதினுலே யென்னில், *நிலைநிலையிலே வயக்திக்குச் சொன்னதென வறிக. (சுஉக)

வினு:—இன்னுஞ் சடுதிவிளங்குவ தெப்படியென்னில்?

விடை:—தூங்கப் போகும்போதே விழிக்கிற போதே நடக்கும்போதே பேசும்போதே புசிக்கிற போதே, அடிக்கடி சோதித்துத் துரியவியாபகத்திற் சைதன்யம் விளங்கப் பார்க்கவேண்டுமென வறிக. ()

வினு:—சைதன்யம் ஒன்றுதானே சர்வத்திலும் சடுதியில் விளங்குவ தெப்படியென்னில்?

விடை:—என்ன பேசினது சாஸ்த்ரக்கருத்து அப்பா உண்டா? இப்போது வாவென்றுகேட்குமிடத்து அப்போயில்லை; இப்போதுதான் அதுவதுவா யிருந்தபடியினுலே போதமில்லை, உதித்த அறிவிற் பூரணசைதன்யம் இராவிட்டால் சாஸ்த்ரக்கருத்துப் பேசவருமா? இப்படி நீங்கள் கேட்டதில், அப்படி யிராவிட்டால் விளங்குமா? உதித்த அறிவி லப்படி

---

* நிலைநிலையிலென்பதற்கு, எக்காலத்திலு மழிவின்றி யொருபடித்தாக நிலைத்திருக்கிற தனது ஸ்வரூபத்திலென்பது பொருள்.

யிருக்கிறபடியினுலுஞ் சாஸ்த்ரபரமா யிருக்கிறபடியி ஞனும் சாஸ்த்ரமுமல்ல, போதமுமல்ல, மத்திய மாயிருக்கிற சைதன்யமே, அகபோதத்திலு மித விஷயத்திலும், இருக்கிறபடியினுலே யகமுமிதமு மில்லை, இருக்கிறது ஒன்றேயென வறிக. (சூஉங)

வினு:—இன்னும் ஸ்வாமிகள் சடுதியாய்க்கேட்ட தெப்படி யென்னில்?

விடை:—பேசுகிறபோது முன்னெப்படி யிருந் தாயென்று கேட்கச், சைதன்யமாக விருந்தேன். இப் போ துரியத்தில் விளங்குகிறேனென்ன, சைதன்யமா யிருந்தோமென்று மறிவாக யிருந்தோமென்றும், தே கமா யிருந்தோமென்றும், போதமிருந்துதாவென்ன, இல்லை, பின்னெப்படி யிருந்தாயென்ன; சகல வியவ காரத்திலும் அறிவறியாமை நீங்கி விளக்கவியாபகந் தானுயிருந்தேனென்று சொன்னுனென வறிக. (சூஉச)

வினு:—இன்னுஞ் சடுதிவிளங்குவ தெப்படி யென்னில்?

விடை:—யாதொரு * படுகையில் விருத்தமாகிற வறிவு தோன்றிஞ விருந்தது தோன்றுகிறதென்று வரும், சகலத்திற்கு மிப்படியே, விருத்தமே படுகிற தில்லை, மயமாயிருந்துபோது சதாபார்க்கிறது, † ஸ் வாமிகளைப் பத்துநாட்பார்த்தால் அப்பால் எத்தமில்

---

* படுகையில் - தனது எதார்த்தவறிவில்.

† ஸ்வாமிகளை யென்பதற்கு, திவ்யதேஜோமயப் பொருளாக விளங்காநின்ற குருஸ்வரூபத்தை யென் பது பொருள்.

லாம லயத்தனமாகவே * குளிகைபோலக் கொடுத்துக் கரைக்குமென வறிக. (கூஉ௫)

வினு:—இன்னுஞ் சடுதியிற் பிறமீதியாவ தெப்படியென்னில்?

விடை:—இஃதென்ன புஷ்பம், இப்படிமுடிய வஃதாயிருக்கத் திரித்துப் பிறமீதி யாகிறதென வறிக. (கூஉசு)

(சுத்தாசுத்த சம்ஸ்காரம்)

வினு:—சம்ஸ்கார மிரண்டுவிதமென்ப தெப்படியென்னில்?

---

* குளிகைபோல வென்றது, அணிமாமுதலிய வஷ்டசித்திகணிறைந்த சித்துபுருஷர்கள் ரசத்தை நெருப்பில்வைத்து மணியாக்கி யதற்கு நூறுசாரணையேத்தியபின்னர் (கஉ) மரக்கால் பாலில் ரசக்குளிகையைக் கொடுத்தவுடனே அப்பாலனைத்தையுங் குளிகை யெப்படிக்ரகிக்கின்றதோ, அப்படிப்போலச், சமதமமுதலாகிய சத்குணங்க ளமையப்பெற்ற முமுட்சுக்கள், தேகேந்திரியப்ரபஞ்ச முதலியவைகளைச் சத்தியமாகக்கருதி ரசத்தைப்போலச் சலிக்கிறமனதை ஞானுக்கியில்வைத்துச் சாரணையேற்றுதலாவது, மனதின் சஞ்சலத்தையடக்கித் தானேதாளுகத் தெளிந்த அறிவென்னும் ஞானகுளிகையைப் பிரபஞ்சத்திற் கொடுத்தவுடனே உருவமாயுள்ள த்ருஸ்யப்ரபஞ்ச முதலிய வைகளையெல்லாம் அருவமாகவுந் தாளுகவும் கிரகித்து அன்னியமின்றித் தானே தாளுகவிருப்பது எதுவோ, அது ஞானகுளிகையென்ருயிற்று.

விடை:—தேக மியல்பா யில்லாமலிருக்க, ஸ்புரித்தவிடத்தில் தேகந்தோற்றி முன்னமே யிருக்கிறதாகத் தோற்றுவது விஷயசம்ஸ்காரம், தோற்றரவு மாத்திரம் விளங்கினால் தேக மில்லவேயில்லை, இஃது சுத்த சம்ஸ்காரமென வறிக. இதற்குவாசிட்டகவி "தெரிபொருளொன்றுமில்லை பொய்யுமல்ல சொற்பனத்தின் றிறள்போற்றோன்றும்."

(இதன்பொருள்.)

கண்ணுக்குத் தோற்றுகிற பிரபஞ்சமானது எப்பொழுதும் சத்தியமுமல்ல அசத்தியமுமல்ல கனவின் கூட்டத்தைப்போலத் தோற்றும் என்பதாம். ஸ்வப்னுவஸ்தையிற் பலவிநோதங்களாகக் காணப்படுகிற காக்ஷிகளனைத்தும் மெய்போலத்தோற்றி விழித்தவுடனே பொய்யாகக் காணப்படுதலின் சத்தியமுமல்ல எனவும்; அந்தஸ்வப்னுவஸ்தையை மெய்யாகப்பார்த்த ஜீவன் விழித்தபின்பு ஸ்வப்னத்திற் பார்த்தவஸ்துக்களில்லாவிடினும் அவைகளைப் பார்த்தவ னிருப்பதனாலும் பார்வை அவனிடத்திலடங்கி மறுதினத்தில் முன்கண்ட காட்சியிலும் அதிகவிநோதமாயும் உண்மையாயும் காணுகின்றானதையாலும் அசத்தியமுமல்ல எனவும்; ஸ்வப்னத்திற் பார்த்தபொருள் ஜாக்ரத்தி லில்லாமைபற்றிப் பொய்யென்று யாவரும் சொல்லுகின்றார்கள். ஜாக்ரத்தில் மெய்யாகப்பார்த்த பெண்டுபிள்ளைகள் முதலிய சகலமும் ஸ்வப்னுவஸ்தையி லில்லாமையின் ஜாக்ராவஸ்தையும் அவ்வவஸ்தையிற்கண்ட காக்ஷிகளும் பொய்யன்றோ? இங்ஙனம் பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் எண்ணிப்பார்க்கின்ற ஜீவன் மாயையின் வசப்பட்டிருப்பதனாலும், இல்ல த

(ஒருமொழி.)

வினா:—ஒருமொழியாவதெது வென்னில் ?

விடை:—*சர்வமாகிற விருத்தத்தில் அவிருத்தந் தானாயிருத்தலென வறிக. (கூஉஅ)

வினா:—இன்னும் ஒரு மொழியாவ தெப்படியென் னில் ?

விடை:—மத்திய ஞானத்தில் முன்னும்பின்னும் விளங்கினு லெல்லாவற்றிலு மொருமொழியாம், ஞா னந் தனித்தா லொருமொழியாம், அங்ஙனமில்லாவிடி †லறியாமைகட்டி யாகாரமாமென வறிக. (கூஉகூ)

தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகளைப் பார்க்கும் போதுசத்தியமாயும் பின்னில்லாத்தாயும் செய்விக்கிற இந்திரஜாலசக்தி இந்த மாயையினிடத்தி லிருப்பதனு லும், கனவின் கூட்டத்தைப்போலத் தோற்றுமென வுங் கூறினர். (கூஉஎ)

* சர்வமாகிற விருத்தத்திலென்றது, சகலவுயிர் களுக்குச் சதாகாலமும் ராகமுதலிய (கங) குணங்களு மன்றிச் சகலதத்துவங்களும் விரோதத்தை யுண்டு பண்ணிக்கொண்டிருப்பதினுல் தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகளை விருத்தமெனக் கூறினரென்றாயிற்று.

† அறியாமைகட்டி யாகாரமென்றது, ப்ருதிவிய ணுக்களனைத்தும் ஒருருவாகத் திரண்டிருப்பதற்குப் பூமியல்லது ஆகாரமெனப் பெயர்வந்ததுபோலச் சுக் கிலஸ்ரோணித வணுக்கள் திரண்டுருப்பட்ட ஸ்தூல சரீரத்திற்கு ஆகாரமெனப் பெயர்வந்தது. இவ்வா காரமென்னுந் தேகந் தன்னையறியாமையாலிதற்கு அறியாமையெனப்பெயர்வந்தது, இவ்வித அறியாமை

வினு:—இன்னும் ஒருமொழியாவ தெப்படியென்னில்?

விடை:—தானுயிருப்பது அத்வைதம், போதமில்லை, தான் மாத்திரமாயிருந்து உதிக்கிறதிற் றன்னைக்கண்டா லவைக ளில்லை, இதுவே யொருமொழியென வறிக. (சுருO)

வினு:—இன்னுமொருமொழியெப்படியென்னில்?

விடை:—ஆனந்தத்தின்மத்தியி லறிவு எழுகிறதே யதிற்ருனுயிருப்பது ஒருமொழி, அறிவிற்ருன் விளங்கினுல் ஆனந்தம் நிறையும், தான் விளங்காவிடிற் பிரபஞ்சமாகுமென வறிக. (சுருக)

வினு:—இன்னு மத்தியமான ஒருமொழி யெப்படியென்னில்?

விடை:—பார்க்கிறபோதே பார்க்கிறது தானுயிருக்கிறது, கேட்கும்போதே கேட்கிறது தானுயிருக்கிறது, அறியும்போதே அறிகிறது தானுயிருக்கிறது, அதுவது தானுயிருக்கிறதற்கு லட்சணம் போதமில்லை, யறியாமையில்லை, ஒருமொழியில்லாமல் ஒன்றுமசையாது. அப்போ அகமிதமில்லை, மத்தியம் எல்லாமாயிருக்கிறது தானே, அவைக ளில்லையென வறிக. (சுருஉ)

யென்னுந் தேகாதி ப்ரபஞ்சமுதலியவைகளை யறிவு அறிந்துகொண் டிருப்பதினுலும், இவ்வறிவறியாமை யடுக்குக ளனேகமா யிருக்கின்றனவுமன்றி, அறியாமை சமூகங்களனைத்தும் ஒருவடிவாகமாகத் திரண்டிருப்பதினுலும், அறியாமைகட்டி யாகாரமெனப் பொருளாயிற்று.

(விசுவநிலை)

வினு:—விஸ்வக்ராசமுபசாந்தங் குருதுரிய மெப்படியென்னில் ?

விடை:—விஸ்வநிலைமையாவது - ஆகாரமெல்லாமஞ்ஞானமாதல், விஸ்வக்ராசமாவது - ஆகாரமிறந்த ஞானமாதல், உபசாந்தமாவது-அதீதம் அறிவு லயத்திலானந்தமாதல், குருதுரியமாவது, சுகவறிவு தானய் விளங்குதலென வறிக. (சுருரு)

வினு:—இன்னு மைந்தவஸ்தைகளிலும் உபாதி நீங்கித் தான் விளங்குவ தெப்படி யென்னில் ?

விடை:—நனவிற் ஜாக்ரம் ஆகாரநீங்கல் சத்து விளங்கல், நனவிற் சொற்பன மறிதல் நீங்கல் சித்து விளங்கல், நனவிற்சுழுப்தி யஞ்ஞானம் நீங்கல் ஆகலாதம் விளங்கல், துரியம் விளங்க லதீதந் தானதெல்ன வறிக. (சுருச)

(வேதாகமங்களுக் கெட்டியு மெட்டாதது.)

வினு:—வேதாகமங்களினல் எட்டப்பட்டது மெட்டப்படாதது மெதுவென்னில் ?

விடை:—ஸ்தூலந்தானனவன் ஸ்தூலந் தானல்ல, சூட்சுமந்தானனவன் சூட்சுமமல்ல, இப்படி மோனம் வரைக்கும் தானனவன் தானல்ல, இஃது வேதாகமங்களினல் எட்டப்பட்டபொருள், தானன *இருபத்

* இருபத்தைந்தாவது, ஸ்தூலம், சூட்சுமம், காரணம், ஜீவன், சாக்ஷி, விராட்டு, ஹிரண்யகெர்ப்பம், மாயை, ஈஸ்வரன், பிர்ம்மம், சத்து, சித்து, ஆநந்தம், பரப்ரம்மம், சர்வசாக்ஷி, சுத்தம், சூன்யம், ஸ்வபாவம்,

தைந்திலுந் தானயிருக்கிறதென்றதில் தான் விளங்கு வதே தான், ஸ்தூலந்தானு யிருந்தது நீங்கிச் சூட்சுமந் தானனபோது ஸ்தூலந் தானயிருந்தது தெரியும்; இப்படியே மோனம்வரைக்கு மொன்றுக்கொன்றதிக மாயிருந்த வியாபகங்களையெல்லாங் கடந்த துரியக் ஞானத்தில் தானு யிருந்ததே * வேதாகமங்களினு லெட்டப்படாத பொருளென வறிக. (சூரு)

வினு:—உள்ளவனுபூதி நிஜானுபூதி.) உள்ளவனு பூதியும் நிஜானுபூதியு மெதுவென்னில்?

ஒழிவு, அதீதம், யதார்த்தம், ரகஸ்யம், அறுதி, ஒடுக் கம், மோனம், இவைகளாம்.

(க்ராசம், விழுங்குவது.)

*வேதாகமங்களினு லெட்டப்படாதபொருளென் றது, ருக்வேதமுதலிய சகலவேதாகம சாஸ்த்ரங்க ளெல்லாம் பஞ்சேந்திரியங்களி லொன்றாகிய சப்தரூப மா யிருக்கிறதேயன்றிச் சப்தத்தைத்தவிரச் சகல வே தாகமமுதலியவைக ளனைத்துமின்று, சப்தமுதலிய பஞ்சேந்திரியங்கள் மனதைத்தவிரவின்று, இப்படியே ஜீவன்வரையிலுள்ள காரணகாரிய சமூகங்களியாவுந் தத்துவக் கூட்டங்களே. இத்தத்துவங்களுக்கெல்லா மெட்டாதிருக்கின்ற சர்வாதீதப்பரம்பொருளைத் தன து ஸ்வானுபவமல்லது சிவானுபவத்தினு லறியலாமே யன்றி மனமுதலியவைகளா லறியக்கூடாதாதலானும், "நிஸ்சப்தோ ப்ரம்ஹவுச்யதே" சப்தரஹிதமாயிருப் பதெதுவோ? அதுவே பரம்பொருளென வேதவசன மிருப்பதனுலும், வேதாகமங்களினு லெட்டப்படாத பொருளெனக் கூறினரென்றாயிற்று.

விடை:—பாவனை யறிவு மயம், துரியம் அதீத விளக்கம், இப்படிப் பாவனைமுதல் அதீதம்வரைக்கு மிருபத்தைந்தாக விளங்குகிறதுந் தானாய்ப்போகிறதும் விளங்குகிறதிற் றானாகிறது மிவ்விரண்டுமே யுள்ளது, வியாபகத்தி லெழும்புகிறது துரியம், அது தானாகிறது நிஜமென வறிக. (௬௩௬)

(சகலத்திலும் நிறைவானது)

வினா:—சகலத்திலும் நிறைவாய்ப்பார்ப்ப தெப்படியென்னில்?

விடை:—* கடத்துக்குமுன்னே ஆகாசமிருந்து கட்டுப்பட்டதுபோலக் கேட்கும்போதே பார்க்கிறபோதே நிறைவாயிருக்குமென வறிக. (௬௩௭)

வினா:—தேவருக்கும் மானுடருக்கும் போகமெப்படி யென்னில்?

---

* கடத்துக்குமுன்னே ஆகாசமிருந்ததென்றது, கடோபாதி யுண்டாவதற்கு முன்னும், மத்தியிலும் கடமழிந்தகாலத்து மவ்வுபாதியிற் கட்டுப்படாமலுங் கடமழிந்தபின் பழியாமலு மாகாசமிருந்தபடியே நிறைவா யிருப்பதுபோல, ஆகாசத்துக் கதீதமாகிய சிதாகாசந் தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய வுபாதிகளுண்டாகிறபோ தவ்வுபாதிகளிற் கட்டுப்படாமலு மவைகள் நாசமாகும்போது கெடாமலு மெக்காலத்திலு மெல்லாவஸ்துக்களிலு மிருந்தபடியே பரிபூர்ணமாக நிறைந்திருக்கிறதென் றாயிற்று.

விடை:—*தேவருக்கு நிராலம்பத்தில்விடாதபோகம், ஆகையா லிமையாநாட்டம், * மானுடருக்குச் சாலம்பத்தில் கிஞ்சித்போகமாகையால், * விடுதியி லிமைக்கிற நாட்டம். * இவனும் நிராலம்பத்தினின்றாற், சாலம்பபோகம் வாதிக்காதெனவறிக. (௯௩௮)

---

*தேவருக்கு நிராலம்பத்தில் விடாதபோகமென்றது, அளவின்றிய வுலகங்களிலுள்ள மானுடர்களுக்கு மழைகளை வருஷித்துச் சகலவுயிர்களையுங் காப்பாற்றுபவர்களாகிய தேவர்களுக்குச் சர்வாதாரமாகிய வடிவத்தில் நீங்கா வின்பமாம். அஃதாவது, சத்தியலோகமுதற் பாதாளலோக மீறாகச்சொல்லப்பட்ட (௰௪) உலகங்களில் ஒன்றாகிய ஸ்வர்க்கலோகமென்னுந், தேவலோகத்தில் வாசஞ்செய்யா நின்ற (௩௩) கோடி தேவர்கள் சத்துருவான நித்திரையை ஜயித்து நினைப்புமறப்பின்றிய நடுநிலையென்னுமிமையாநாட்டம் பெற்று, அகண்டமாயுஞ் சர்வாதாரமாயுமுள்ள திவ்ய போகத்தைநெடுங்காலமனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். இத்தன்மையுடைத்தான தேவர்களினிலைமையை இந்நூலாசிரியரறிந்துகூறினார். ஆயின், ப்ரம்மாமுதலெறும்பீறாகச்சொல்லப்பட்ட சகலசராசரவஸ்துக்களனைத்தும் வேதாந்த சாஸ்திரத்திற் பொய்யெனக் கூறியிருக்கத் தேவர்கள் மாத்திர முளரென்றங்கீகரிக்கும் பக்ஷத்தில், ஏனைய வனைத்துமுளவென் றங்கீகரிக்கவேண்டும். அதுவுமன்றிச் "சர்வம் மித்தை"யென்னும் வேதவாக்கியத்திற்கு விரோதமாயிருப்பதா லதனையங்கீகரிக்கப்படாதெனச் சங்கைவரு மதற்குச் சமாதானம், மனிதர்கள் நல்லவழியிலமர்ந்துய்யும்வண்ணம் மநுப்ரஜாபதிமுதலிய பெரியோர்களால் ராஜநீதி-தெய்வநீதி

யெனவிரண்டுமார்க்கங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் துர்க்கிருத்தியஞ் செய்தவர்களைப் பிறனல்கோட்ஆக்டிற்கூறியவண்ணம் சாக்ஷிகள் முன்னிலையில் ஸ்தூலதேகத்திற்குத் தண்டனை விதிப்பதெதுவோ, அது ராஜநீதியாம். இத்தகைய நீதியை ராஜாக்ஞைக் குட்பட்டவர்களங்கீகரிக்க வேண்டுமேயன்றி தள்ளக்கூடாது; யாதொருவன் ராஜாதிகளைப் பார்த்து நீங்கள் செய்த தண்டனையை, நானங்கீகரிக்கமாட்டேனெனச் சொல்லுகிறானோ, அவனை முன்விதித்த தண்டனையிலு மதிக தண்டனை யெப்படி விதிப்பார்களோ, அப்படிப்போல "யமஸ்சம்யமதாமஹம்" தண்டனை விதிப்பவருள் யமன் நான் என்னும் பகவத்கீதாவசனப்ரகாரம் உடலையபிமானித்த ஜீவர்களில் துர்ச்செய்கை செய்தவர்களை யமதர்மராஜாவாகப் பகவானிருந்து தெய்வநீதியிற்கூறியபடி சூரியன், சந்திரன், மூன்று காலங்கள், மனமுதலிய கரணங்கள், ப்ரம்ஹாமுதலிய பஞ்சமூர்த்திகளென்னும், பதினறு சாட்சிகள் முன்னிலையில் சூக்ஷ்மதேகத்திற்கு அல்லது யாதனசரீரத்திற்குத் தண்டனை செய்கின்றனர்.

இவ்வித தண்டனையை ஜீவர்கள் அங்கீகரிக்கவேண்டுமேயன்றி தள்ளக்கூடாது. யாதொருஜீவன் ஒப்புக்கொள்ளக்கூடாதெனக் கூறுகின்றானோ, அவனைச்சகிக்கக்கூடாத நரகங்களிற்றள்ளியந்த நரகங்களை யெவ்வளவுகாலம்வரைக்குமனுபவிக்கவேண்டுமோ அக்காலம் வரையி லனுபவிக்கும்படி யமதர்மராஜன் நியமிப்பர். அன்றியும், சகல தேகங்களுங் காலத்திற்றோன்றியதற்குரிய காலம்வரையிலிருந்து காலங்கடந்தபின்பு மரணமடைகின்றார்கள். இங்ஙனம் ஜனனமரணமடைகின்

றவர்களுடைய கணக்கை இங்கிலீஷ்காரர் ஜாக்ராவஸ்தையில் பார்ப்பதுபோல, ஜாக்ரம் ஸ்வப்னம் சுழுப்தியென்னு மூன்றவஸ்தைகளிலும் சூக்குமவடிவமான சித்ரகுப்தன்முதலிய கணக்கப்பிள்ளைகளால் காலனென்னும் எமதர்மராஜன் கணக்கெடுக்க ஆக்ஞாபித்து அதிற் பிசகிருக்குமாயிற் றான்செவ்வையாகப்பார்த்துத்தன்னுலகத்தின்கணுள்ள கொடியதண்டனைகளை நிவர்த்திசெய்து அவர்களுடைய புண்ணியத்திற்குத் தகுந்ததாயும் தேவர், மானுடர், மிருகம், பட்சி, நிலத்திலூர்வன, ஜலத்திலூர்வன, ஸ்த்தாவரமென்னும் எழுவகைத்தோற்றங்களாயுமுள்ள பிறவிகளிற் பிறக்கும்படி விதிக்கின்ற தர்மப்பிரபுவாதலின் யமதர்மராஜனெனப்பெயர்வந்தது. ஆதலால் சகலவுயிர்களுடைய பிராணனுக்கு ஆதாரமாயிருக்கிற மழையைத் தேவேந்திரன் தனது வில்லினால் மேகங்களை யொதுக்கி எவ்வெவ்விடங்களில் மழைபெய்ய வேண்டுமோ, அவ்வவ்விடங்களில் மழைகளை வருஷிக்கும்படி ஆக்ஞைசெய்கின்றமையின் உயிர்களெல்லாந் திருப்தியடைகின்றார்கள். இவ்வுயிர்கள் வியவகாரம் பண்ணுவதற்குப் பகலைக்காட்டுபவராகிய சூரியன் தனது உஷ்ணகிரணத்தை முழுவதுங்காட்டினால் உயிர்கள் மாண்டுபோவார்களென்னக்கருதிச் சிலகால மதிகமாகவும் சிலகாலங் குறைவாகவும் பிரகாசிப்பதனால் ஜீவர்கள் பிழைத்திருக்கின்றார்கள். இச்சூரியனது உஷ்ணத்தை யடக்குபவராகிய சந்திரபகவான் அமாவாசை சென்ற பிரதமைமுதல் ஒவ்வொருகலையாக வளர்ந்தும், பருவங்கழிந்த பிரதமைமுதல் ஒவ்வொருகலையாகக் குறைந்தும் வருவதனா லுயிர்கள் பிழைத்திருக்கின்றார்களே.

யன்றிச் சூரியனைப்போல, ஒருபடித்தாகத் தனது குளி
ர்ந்தப்ரகாசத்தைக் காட்டுவராயின் சீதளமதிகமான
வுயிர்கள் மரணமடையுமாறுபோலச், சகலவுயிர்களும்
பிராணனை விடுவார்கள். ஆகையால் தந்தை தாயார்
தமது மைந்தர்களைச் சிலவேளை சாந்தகுணத்தையுஞ்,
சிலவேளை யுக்ரகுணத்தையுங்காட்டி யெப்படி வளர்ப்
பார்களோ, அப்படிப்போல சூரியசந்திரர்கள் மாதா
பிதாக்களாக இருந்துகொண்டு சகலவண்டங்களிலிரு
க்கின்ற ஜீவர்களை யெல்லாங் காப்பாற்றுகின்றார்கள்.
அன்றியு மளவின்றிய உலகங்களில் வாசம் பண்ணு
கிற ஜீவர்களுக்குச் சூரியன் தினத்தைக்காட்டுவது
போலப், பிண்டமென்னுந் தேகத்தில் மணிக்கணக்
கைக் காட்டிக்கொண்டு சூரியன், சிவமாகவும், சந்
திரன் சக்தியாகவும், சகலவுயிர்களிலும் ஸ்த்ரீபுருஷ
ர்களுடைய ரூபவேற்றுமைகளுக்கு இவர்களே கார
ணமாகவும், இடைகலை பிங்கலை யென்னுங் கலாரூப
மாகவும், ஞானஞ்ஞானமாகவும், பிரத்யக்ஷ தெய்வ
மாகவும், விளங்கிக்கொண் டிருக்கின்றார்களெனப் பெ
ரியோர் கூறுவர். இத்தகைய பெருமை யமையப்
பெற்ற சூரிய சந்திரர்களுடைய நிஜவடிவத்தை யிங்
கிலீஷ்காரர் தமது சூக்குமபுத்திக்குக் கோசரமான
சோதனைக் கருவியினாற் பரிசோதித்து ஒரு அண்
டம் போலிருக்கிறதெனச் சொல்லுகிறார்களேயன்றி
இந்துக்களுடைய முன்னோர்கள் சொல்வதை யங்கீ
கரிக்கவில்லை. அண்டத்திற்கு உஷ்ணப்ரகாசமுங்குளி
ர்ந்த பிரகாசமுமிராது, அண்டம்போலென் றுத்தே
சித்துக் கூறுவதனால் உத்தேசம் அநுமானப்ரமாண
மேயல்லது பரிட்சையினாற்றெளிந்த ப்ரத்தியட்சப்ர

மாண மன்று. அண்ட, மென்றால் சூரியசந்திரர்கள் அகண்டஸ்வரூபிகளெனவும், சின்னாட்பல்பிணிச்சிற் றறிவினரது ஸ்வல்பபுத்திக்கெட்டிய ஜடக்கருவியினு லவர்களைச் சோதிக்கமுடியாதெனவும், ஜடக்கருவியை யுண்டாக்கிய சித்தென்னுந் தனதறிவு சகல சராசரப் பொருள்களுக் கப்பாலுக்கப்பாலாயும், சிறிதுக்குச் சிறிதாயும், பெரிதுக்குப் பெரிதாயும் அவைகளுக்கு ட்புறமாயும், அளவிடப்படாததாயும், எல்லாவற்றையு மறிவு வடிவாகவிருந் தறிவதாயு மிருப்பதனு லதனைச் சோதிப்பதெதுவோ, அது அறிவின் சோதனை யென வும், இவ்விதமாகிய வஸ்துபரிசோதனையும, அவஸ்து வென்னு முலகபரிசோதனையுஞ் செய்த ஸ்ரீமான் அக ஸ்தியர் முதலிய பதினெண்சித்தர்களி லொருவராகிய போகமகாமுனிவர் ககனமார்க்கமாகச் சீமைக்குப் போனதுபோலப், பெரியோர்கள் பலவகைப்பட்டுள்ள அண்டங்களுக்குக் ககனம் அல்லது சூக்குமவடிவ மாகத்தமது யோகசித்தியினுற்சென்று அவ்விடங்க ளில் வசிப்பவர்களுடைய நிலைமையையறிந்து இவ்வுல கின்க ணிருப்பவர்களுக்குத் தெரிவித்தன ரெனவும் புரிஷ்காரமாகத் தோன்றுகிறது. பின்னும், புண்யோ த்க்ருஷ்டம், புண்ணியமத்தியமம், புண்ணியசாமான்ய மென்னு மூன்று கர்மங்களில் ஒருகர்ம மூன்றுபிரிவா கப் பிறிந்திருப்பதால் புண்ணியகர்ம மியற்றியவர்களு க்குக் கைலாயமுதலிய வண்டங்களிற் சாலோக்யமுத லிய பதவிகளிலிருக்கச்செய்வது மிப்படியே பாபோ த்க்ருஷ்டம், பாபமத்தியமம், பாபசாமான்யம், மிஸ் ரோத்க்ருஷ்டம், மிஸ்ரமத்திமம் மிஸ்ரசாமான்ய மெ ன்னுங் கர்மங்களுக்குத்தக்க ஜன்மங்களைக் கொடுப்

பதும், அவ்வித கர்மங்களிற் பற்றின்றி யவைகளைப் பரிஷ்காரமாக விட்டவர்களுக்கு ஈஸ்வராதிகளே ஞா ஞாசாரியமூர்த்தியாக வெழுந்தருளிச் சர்வவேதாகம முடிபை யுபதேசித்து அவ்வுபதேச க்ரமப்பிரகார மனுஷ்டித்தவர்களுக்கு மூன்று குணங்களையும் கர் மங்களையுங்கெடுத்து அன்னியமின்றித் தானேதானு கவிளங்குந் துரியாதீதத்தி லிருக்கச்செய்வது மெது வோ, அது தெய்வநீதியாம். இத்தன்மையுடைத்தா கிய தெய்வநீதியில் விதித்துள்ள க்ரமப்ரகார மதிகா ரஞ் செலுத்துபவர்களாகிய தேவர்களில் சூரியசந்தி ரர்களையு மிவர்களை யோர்காலத்திற் றொடுகிற ராகு கேதுக்களையுங் கண்ணாற் பார்க்கின்றனம். ஏனையதே வர்களைக் கண்ணாற் பாராவிடினும், சித்துஜட மிரண்டி னையும் விசாரித்து ப்ரம்மமே சத்தியம், ப்ரபஞ்சம் பொய்யெனத்தெளிந்த வேதாந்திகள்முதலிய சகல மானவர்களும் தமது தேகத்திற்குக் கெணிதம் பண் ணிய ஜாதகத்தைக் கையில் வைத்துக்கொண்டு இப் போது எனக்குச் சனிதிசையினால் மிகுந்த துக்கமுண் டாகியிருக்கிறது, ராகுதிசை நன்றாயிருக்கிறது, இப்ப டியே ஏனைய க்ரஹங்களின் தன்மைகளையும் (யஉ) லக்கினங்களையும், அவற்றின் பலாபலன்களையும் ஜோ திஷசாஸ்திரப்ரகாரம் கூறுகின்றார்கள். இங்ஙனஞ்சொ ல்லுகிற மானுடர்கள் காரியம், இவர்களைக் காப்பாற் றுகின்ற தேவர்கள் காரணம். காரணத்தையன்றிக் காரியமில்லையென வேதாந்தசாஸ்திரத்தி லெப்படிச் சொல்லியிருக்கிறதோ, அப்படிப்போலக் காரணமா கிய தேவர்களையல்லது காரியமாகிய மானுடர்களில்லை யென்பது நிச்சயம். இக்காரணகாரிய சமூகங்களெது

பரியந்த முளவோ, அதுவவாயில் தேகேந்திரியப்ரப ஞ்சமுதலியவைகளுளவாம். அவைகளைத் தனது சூக் குமபுத்தியினாற் பரியாலோசித்து அறிவைத்தவிர அன் னிய மில்லையெனத் தெளிந்த விவேகஜாக்ரமென்னும் அதீததிசையில் யாதொருவிருத்தியு மில்லாமையின் ப்ரபஞ்சமுண்டெனவும், இல்லையெனவும் வ்யவகாரமே இன்று. அத்திசையைவிட்டு வெளிமுகப்படினு மவர் களுக்கு அகம்புறமில்லாமையால் அகமுகத்திலெப்ப டியோ, அப்படியே பகிர்முகத்திலும் தனது எதார்த் தவடிவம் விளங்கும். இவ்வித ஞானத்ருஷ்டி யில்லா தவர்களுக்கு மனமுதலிய வகக்கரணங்களும் சப்தமு தலாகியபுறக்கரணங்களுமிருக்கின்றனவாதலின், உல கவியவஹாரம் பண்ணுறகிதிசையி லெல்லா முளவாம். எல்லாவற்றையுமறிகிற தான் எத்தன்மையாய பொரு ளெனப் பாரமார்த்திகமாகத் தன்னை மனனம் பண்ணு ங்கால், தேகேந்திரிய முதலியவைகளிருந்து மவை க ளிடத்திற் சத்தியபுத்தி தோன்றாது. இவ்வாறு தன்னை மனனம் பண்ணாமற் சிலர் வேதாந்த சாஸ்த்ரத்தைப் படித்து காலன்முதலிய தேவர்க ளில்லையென்று கூறு கின்றனர். அப்படிச் சொல்லுகிறவர்களுடைய தேகத் திற்கு வியாதிவருமானால் அந்த வியாதியை யகற்றத் தக்க அவுஷதம்புசித்தாற் பிணி நீங்குமல்லது வாயி னால் மருந்தென்றுசொன்னால் வியாதி நீங்காததுபோ லப், பிறப்பிறப்பென்னும் பெரிதாகிய வியாதியுள்ளவ ர்கள் பிறவியைக் கெடுப்பதற்குரிய ஞானவுஷதத்தை யருந்தினல் பிறவித்துன்பங் கெடுமேயன்றி வாயினா லெவ்வளவுகாலஞ் சொன்னாலும் ஞானம் வராது, பிற விப்பிணிகெடாது. இங்ஙனங் கெடாமல் வெகுகால

மாக வுயிர்களைத் துன்பப்படுத்துகிற பிறவிப்பிணியை யகற்றுதற்கு ப்ரம்ஹாமுதலிய த்ரிமூர்த்திகள் கருணை வைத்து வேதாகமங்களையும் பிரம்மகீதை, பகவத்கீதை, சிவகீதைகளையு மருளிச்செய்தார்கள். அவர்கள்கூறிய சாஸ்த்ரங்களைமாத்திர முண்மையென்றங்கீகரிப்பவர்கள் தேவர்களுமுளரென்று ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவர்களில்லையெனின், தேவர்களுக்கெல்லாந் தலைவனாகிய கடவுளில்லையெனவரும், கடவுளில்லாவிடின் அவரா லுண்டுபண்ணப்பட்ட மானுடருமிவர்களுக்கு நல்வழியைத் தெரிவிக்கின்ற வேதாகமங்களு முலகத்தி லில்லாதிருக்கவேண்டும், வேதாகமங்களு மிவற்றைப் பாராயணஞ்செய்கின்ற மானுடர்களும் பிரத்யக்ஷமாக விருக்கின்றார்களாகையா லிவர்களுக்குக் காரணமா யிருக்கின்ற தேவர்களுமுளரெனப் பண்டிதபாமராள்முதலிய சகலமானவர்களுமங்கீகரிப்பார்களென்க.

* மானுடருக்குச் சாலம்பத்திற் கிஞ்சித்போக மென்றது, மனிதருக்குக் கண்டமான தேகத்திற் சப்தமுதலாகிய பஞ்சேந்திரியங்களா லனுபவிக்கப்படுகிற சுகமும், அப்பஞ்சேந்திரியங்க ளனைத்தும் ஏககாலத்திலடங்கி ஒருஸ்த்ரீயினிடத்திற் கொஞ்சநேர மனுபவிக்கிற காமசுகமுமாகிய விவற்றிற்குக் கிஞ்சித்போக மென்றாயிற்று.

* விடுதியி லிமைக்கிற நாட்டமென்றது, ஒருஸ்த்ரீயினிடத்திற் காமசுகத்தை யநுபவிக்கிற காலத்தில் க்ஷணநேரம் பஞ்சேந்திரியங்க ளடங்கி மனம் விஸ்ராந்தி யடைந்ததுபோ லிருந்து கண்விழித்தலி யாதோ? அது இமைக்கிற நாட்டமென் றாயிற்று.

* இவனும் நிராலம்பத்தினின்றுற் சாலம்பபோ கம் வாதிக்காதென்பது, மேற்கூறிய விஷயபோகத் தோடு கூடியிருப்பவனுகிய ஜீவனும், தனக்கன்னிய மாகிய காமாபேட்சையை யகற்றி யெக்காலத்து மொருபடித்தாயுந் தனக்குச் சொந்தமாயுமுள்ள நிரதிசயாநந்த நிலையினின்றுல் பஞ்சேந்திரியங்களா லுண்டாகிற வின்பந் துன்பஞ் செய்யாதென் றுயிற்று. ஆகவே, தனக்குரித்தாகிய ஞானனுபவநிலையில் எவர்கட நிற்கவில்லையோ? அவர்களையெல்லாம் போகம் வாதிக்குமெனப் பெற்றும், வாதிக்குதலாவது, வருத்தப் படுத்துதல். அஃதாவது, காமமுதலிய துர்க்குணங் களின் வசமாகச்சென்று சுகதுக்காதிகளில் வாதனைப் பட்டுப் பிறப்பிறப்பென்னும் பெரியசமுத்திரத்தி லகப்பட்டுக் கப்பற்காரன் சமுத்திரத்தில் கப்பல்யாத்திரை செய்யுங்கால் திசைதெரியாமல் கப்பலைவிடுவானுயின் அக்கப்பல் சமுத்திரத்தில் முழுகுவதுமன்றிக் கப்பலோட்டுபவனு மதிலிருப்பவர்களு மெப்படி மரணமடைவார்களோ? அப்படிப்போலக் கரையில்லாத பிறவிக்கடலி லகப்பட்ட கப்பற்காரனென்னும் ஜீவன் தனது தேகமென்னுங் கப்பலின்கண் ஏறி மாயாசமுத்திரமென்னும் பிறவிக்கடலில் லௌகிகவியாபாரமென்னும் யாத்திரை செய்யுங்காலத்தில் தனது நிலைமை அல்லது தனது எதார்த்தமென்னும் ஞானதிசை தெரியாமல் அஞ்ஞானதிசையில் வியவகரிப்பானுகில், அந்த ஜீவன் மரணமடைவதுமன்றி ஜீவனுக்குச் சகாயபுருஷாள்போலிருந்து துர்க்குணங்களை விளைவித்தவர்களும் மேற்கூறிய கப்பலில் வசித்தவர்களுமாகிய காமமுதலிய விரோதிகளனைவரு மரணமடைவார்கள்.

அங்ஙனம், மரணமடைவதுபோலக் காட்டி மீண்டும் மனமே காரணமாக விருந்து ஜீவனுக்குப் பிறவியை விளைவித்து அகமுகத்திலும் பகிர்முகத்திலுஞ் சதா காலமும் வாதனைப் படுத்திக்கொண் டிருப்பதெது வோ? அது ஜீவர்களை வாதிக்குதலென்றாயிற்று. ஆத லின், காற்றிலகப்பட்ட காற்றாடி காற்றினால் எப்படி வெளியிற் சுழலுகிறதோ? அப்படிப்போல, மனதின் வசப்பட்ட ஜீவர்கள் அம்மனமென்னுங் காற்றினால் சிதாசவெளியிற் சதாகாலமுஞ் சுழன்றுகொண் டிருக் கின்றார்கள். இவ்வாறு சுழன்றுகொண் டிருப்பவர்க ளாகிய ஜீவர்களியற்றிய துர்ச்செய்கையினால் யமலோ கத்திற் சென்று அவ்விடத்தி லிவர்களுக்காகக் கும்பி பாகம், மாபூதி முதலிய அளவின்றிய நரகங்கள் ஏற் பட்டுள்ளனவாதலின், அவைகளில் விழுந்து ஜீவர்கள் படும்படியான துன்பங்களை ஆயிரநாவையுடைத்தான ஆதிசேடனாலுஞ் சொல்லிமுடியாவாம். அவ்வாறு ஜீவர்கள்படுகிற துன்பங்களை யமதர்மராஜா பார்வை யிட்டு ஜீவர்களிடத்தில் மிகுந்த கருணைவைத்து உங்க ளுக்கு மானுடதேகத்தைக் கொடுக்கின்றேன், அதி னால் மோக்ஷத்தைத் தேடிக் கொள்ளுவீர்களானா லனேக ஜன்மங்களிற்பட்ட துன்பங்களனைத்து மக லும், யான் சொல்வது சத்தியவாக்கியம். அசத்தியத் தைச் சத்தியமாகக்கருதி அவித்யாகாரியமாகிய தேக முதலிய ஆசைகளிற் கட்டுண்ட நீங்கள் மறக்கவேண் டாம், ஜாக்ரதையா யிருங்கள். மீண்டு மென்னுல கத்திற்கு வருவீர்களானால், இப்போதிருக்கிற துன்ப த்திலு மதிகதுன்பம் விதிப்பதுமன்றி யுங்களுக்கு மானுடசரீரத்தைக் கொடுப்பதில்லையெனப் பெரிய

பயங்காட்டி மர்த்திய லோகமென்னும் பரதகண்டத்தில் மானுடப்பிறவியைக் கொடுத்தனர். அவ்வுத்திரவை ஜீவர்கள் சிரசால்வகித்துக் கெர்ப்பத்திற் பிரவேசித்தபோது (எ) வது—மாசமுதல் கெர்ப்பத்திற் சகிக்கமுடியாததுன்பம் வந்தகாலத்திலு மறவாமல் நல்லறிவுடனிருந்து (௧0) வது—மாசத்தில் பிரசூதிவாயு தலையைக் கீழாகத் தள்ளுவதனல் அதோமுகமாகிய யோனித்வாரத்தில் பிரவேசித்து பூமியிற்பிறந்தவுடனே சூரியனுடைய ப்ரகாசத்தை யிருள்வந்து மூடிக்கொண்டதுபோல, அறிவினது பிரகாசத்தை மாயை வந்து மூடிக்கொண்டதனல் அம்மாயா வசத்தராகித் தன்னைமறந்தனர். அன்றியும்,சர்ப் த்தினுடைய விஷம் ஜீவர்களுக்குப் பட்டவுடன் நல்லறிவு மாறி விஷத்தின் வசத்தராகித் தனது தேகத்தை யெப்படிமறந்தார்களோ? அப்படிபோல, மாயையென்னும் பெரிய பாம்பானது ப்ரபஞ்சரூபமாக விருந்துகொண்டு தன்னிடத்திலுள்ள சப்தமுதலிய பஞ்சவிஷயமென்னும் விஷம்பொருந்திய பாலை யுயிர்களுக்குக் கொடுத்து வளர்த்துக்கொண் டிருப்பதனலும், அவ்விஷப்பாலை விஷமென்றுணராமல் அமுர்தமென்றெண்ணி ஜீவர்கள் புசிக்கின்றார்களாதலானும், கெர்ப்பத்திலிருந்து பூமியில் விழுந்தவுடன் பூர்வமிருந்த நல்லறிவுமாறி மாயாவிஷத்தினுடைய வசத்தராகித் தன்னைமறந்தார்கள். அவ்வாறு மறந்தவர்களிற் பூர்வபுண்ணிய விசேஷமமைந்த சிலருக்கு நித்தியா நித்ய வஸ்து விவேகந் தோன்றித் தன்னை யாரென்று ஆலோசிக்குமளவில் அன்னமயகோசமுதலிய பஞ்சகோச விலக்ஷணமாகிய வறிவினிலைமை பஞ்சகோசங்களோடுகூடியிருப்பவர்க

ளாகிய ஜீவர்களுக்குத் தோன்றவில்லை. தோன்று விடத்துத் தனக்குச் சுகம் வேண்டியது பற்றி ப்ரபஞ் சத்தைச் சுகமாகநினைத்துத் தனது ப்ரியத்தை அன் னியமாகிய வுலகப்பொருள்களுக்குக் கொடுத்து தார புத்திராதிகள் முன்னிலையிற் சுகத்தை யடைலாமென நிச்சயித்து விஷயாநந்தத்தை யநுபவிக்குங் காலத்து துன்பந்தோன்ற, நாம் சுகமாகக் கருதியன்றோ அவை களை யநுபவித்தனம், துக்கத்தைக் கொடுக்கின்றதே என்னசெய்வோமென வாந்தியெடுத்த அன்னத்தி லெப்படி யறுவறுப்புத் தோற்றியதோ? அப்படிப் போல உலகப்பொருள்களி லறுவறுப்புத் தோற்ற, அவ்வித புண்ணிய பரிபாகமமைந்த விவேகசீலர்க ளுக்கு இவ்விசாரந் தோன்றியவுடனே காரணாசாரிய ராகிய சத்குரு தரிசனங்கொடுப்பர். அம்மஹாத்மா வைத்தெரிசித்தவுடன் தனது மனக்குரையைத் தெரி விக்கவேண்டும். அங்ஙனந்தெரிவித்தமாணாக்கன்மீது பரமாசாரியருக்கு மிகுந்த கருணைவந்து நல்ல மார்க் கத்தைப் போதிப்பர். அதன்பின்னர், பெண்டுபிள்ளை களிடத்தில் வைத்திருக்கிற ப்ரியத்தைக் குறைத்து குணங்குறியிறந்த தனது யதார்த்தசுகத்திற் சுகித் திருக்க விடாமுயற்சி செய்யவேண்டும். அவ்வாறு செய்பவர்களிற் சிலருக்கு ப்ரயாசையின்றியே தனது நிரதிசயானந்த நிலைமைவிளங்கும். சிலருக்கு அவ் விளக்கம் தோன்றிச் சிலகாலமிருந்து இதுவேயுண் மையெனத் தைரியத்தைக் கொடுத்து மாறும். சில ருக்குத் தன்னிலைமை தோன்றுவதேயில்லை. சிலர் ஆத்மசுகத்தை யடையவேண்டு மென்று தேடியுங் கிடைக்கவில்லையேயென அழுதகண்ணுந் தொழுத

கையுமாகச் சதாவருந்துவர். சிலர், மனோவாக்குக ளுக்கெட்டாத நிரதிசயாநந்த சுகம் நமக்குப் புலப் படாது, ப்ரத்யக்ஷமான வுலகசுகத்தைவிட வேறி ல்லையெனப் பகிர்முகத்திற் றிருப்புவர். சிலர், ஆத் மசுகங் கிடைக்காவிடினும் பகிர்முகவிஷயத்திற் கிஞ் சிற்றும் பயனில்லையெனவுந் தன்னையறிவதே பயனெ னவுந் தேகபரியந்தம் விடாமுயற்சி செய்பவர். சிலர் ஶ்ரவணமனனாதிகளை நன்றாகச்செய்து தன்னிலைமை யை யறிவதற்குச் சவகாசமில்லாமல் அல்லது மனோ தைரியமில்லாமல் வேதாந்த சாஸ்திரத்திற் கூறிய பொருளைத் தேடியும் பயனில்லையெனப் பூர்வவாசனை யே சுகமென்றெண்ணுவர். சிலர், ஆத்மசுகம் சாஸ்திர ங்களி லிருக்கிறதென் றெண்ணித்தேடுவர். சிலர், துன் பம்வந்தபோது சாஸ்திரத்தைப் பார்த்தா லத்துன்ப நீங்குமெனப் பார்ப்பர். அங்ஙனம் சாஸ்திரத்தைப் பார்க்கும்போது துன்ப நீங்கினதுபோ லிருக்குமன்றி யதனைவிட்டபின்பு துன்பந் தன்னைவந்து மூடிக்கொள் ளும், மூடவே சாஸ்திரஞானம் கிஞ்சிற்றும் பயன் படாது. ஆதலால், மேற் சொன்னவர்களன்றி இன் னு மனேகவிதமாக விவேகிக ளிருப்பார்கள். இவர் கள் மந்தன், மந்ததரன், தீவரன், தீவரதரன், அதிதீ வரனென்னு மதிகாரிபேதத்தாற் பலவகைப்பட் டிரு க்கின்றார்கள். இங்ஙனம் பலவிதமாகச் செய்வதற் குச் சுத்தமாயை அசுத்தமாயையென்னு மிரண்டுமா யை காரணமா யிருக்கின்றது. சுத்தமாயையாவது, லாந்தர் குளோபு இவைகளில் வைத்ததீபத்திற்கு எப்படி மறைப்பில்லையோ? அப்படிப்போலத், தேவ ர்களுக்கு மறைப்பின்றி இயல்பாகவே தெளி வைக்

கொடுத்தல். அசுத்தமாயையாவது, மண்பாத்திரத்துள்வைத்த தீபத்தினது ப்ரகாசம் வெளியிலெப்படித் தெரியவில்லையோ? அப்படிப்போல, ஜீவர்களுடைய கடமென்னுந் தேகத்தினுள் வைத்திருக்கின்ற தீபமென்னுந் தனது ஞானப்ரகாசம் இயல்பாகவே ஜீவர்களுக்குத் தெரியாது மறைத்தல். சுத்தமாயை மோக்ஷமடைதற்கு அல்லது பந்தநிவர்த்திக்குக்காரணமெனவும், அசுத்தமாயை பந்தமுண்டாதற்குக் காரணமெனவும் பெரியோர்களானிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இவ்வசுத்தமாயை தனது பரிசுத்த ஞானதெரிசனமடைகிறபரியந்தம் ஜீவர்களை மயக்கும். மயக்கமாவது, ஒருவன் பழுதையிற் பொய்யாகக்காணப்படுகிற பாம்பை மெய்யென்றெண்ணி எப்படி மயக்கமடைந்தானே அப்படிப்போல, ஜீவன் தன்னறிவிற் பொய்யாகக் காணப்படுகிற தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகளை மெய்யெனக்கருதி மயக்கமடைதல். இம்மயக்கத்தினல் நான்பிறந்தே னிறந்தேனென உலகத்திற் சகலமானவர்களுங் கூறப்பட்ட பலவியவகார நாமங்க ளனைத்தும் பெரியமயக்கமேயாம். இங்ஙனங்கூறிய மயக்கம் காரியம், இதனை மெய்யென்றெண்ணுகிற மனங் காரணம், இதற்குக் காரியம் சப்தமுதலிய ஞானேந்திரியம், இவ்விந்திரியம், காரணம் உலகங் காரியம், இதனைச் சத்தியமாக விரும்புகின்ற ஜீவன் காரணம், ஜீவன் காரியம், இவனுக்குக் காரணம் எதார்த்தவறிவு, அல்லது துரியம், என்று தீர்மானித்து இவ்வறிவினின்றும் விரிந்தவைகளை அவ்வறிவிலடங்கும்படி மனனம் பண்ணவேண்டும்; எப்படியெனின்? ஆகாசத்தினுண்டாகிய வாயுமுதலிய

நான்கு பூதங்களு மவற்றாலாய பௌதிகங்களும் ஆ
காசத்தில் மெய்போலக் காணப்பட்டு எப்படி மறைந்
தனவோ ? அப்படிப்போலத், தன்னறிவின் வியாபகத்
திலுண்டான அசுத்தமாயை சராசர வஸ்துக்களைத்
தன்னிடத்தில் மெய்போல விளங்கும்படி காட்டி அவ்
வியாபகத்தி லடங்குமேயன்றி வேறொன்றிலு மடங்
காதென நிச்சயிக்கவேண்டும். இவ்வித நிச்சயமுண்
டானபின்பு பல்விதமாகப் பரவிய மனங் காரணகாரிய
மிரண்டாகக் குவிந்து நிற்கும். இப்படிக்குவிந்து
வருவதெதுவோ அதுவிவேகம், இத்தகைய விவே
கத்தி னிலைமையைத் தினேதினே பரியாலோசித்துப்
பரிசுத்தமனதினால் வளர்க்கவேண்டும், வளர்க்கவே
பலபிறவிகளாகத் தொடர்ந்துவந்த பெரியமயக்கமக
லும். இஃது மிகவுங் கஷ்டமாதலி னிதனை வெகு
காலமாகப் பழக்கஞ்செய்கிற தீரபுருஷாளாகிய அப்பி
யாசிகளே செய்வர். இவ்வாறு செய்யமுடியாதவர்
கள் ஆகாச மெங்குநிறைந்திருப்பதுபோலச், சராசர
மெல்லாம் பரிபூரணமாக நிறைந்து எல்லாவற்றி
லும் பற்றியும் 'ற்றின்றி விளங்காநின்ற பரமசிவத்
தை யகத்திலேலனும் புறத்திலேலனும் பாஹ்ய பக்தி
அனன்யபக்தி யாகவாகிலுந் துதித்து மனங்கசிந்து
நெக்குநெக்குருகி அனலைக்கண்ட மெழுகு உருகியது
போலத் துதிக்கவேண்டும். அங்ஙனந் துதித்தால்
மனேலயப்படும். இஃது சுலபமான மார்க்கமாகையா
லிதனைச் செய்யாதவர்கள் கஷ்டமான யோகாப்பி
யாசமெப்படிச்செய்வர். பக்தி, யோக, மிரண்டும் பரம
சிவத்திநிலையினை யறிவதற்குப் பெரியோர்கள் விதித்
தார்கள். இவையுஞ்செய்ய முடியாதவர்கள் சாஸ்தி

ரங்களைப் பார்த்தாகிலுங் காலங் கழிக்கலாமேயன்றி யதனால் மனோலயம்வராது. மனம் சப்தமுதலிய பஞ்சேந்திரியங்களாக விரிந்திருப்பதனால் அம்மனோலயம் வரத்தக்க சாதனமே புண்ணிய பரிபாகிகளாகிய முமுட்சுக்க ளியற்றவேண்டும். அஃதெப்படியெனின்? ஒரு புருஷன் நடந்தாலும், நின்றாலும், உட்கார்ந்தாலும், தேகத்தினது நிழல் தோற்றுவது போல, ஜீவன் நடந்தால் சப்தமுதலிய பஞ்சேந்திரிய விஷயங்களின் வசமாக மனஞ்சென்றால் அசுத்தமாயை ஜீவனது நிழலாதலானும், இந்தமாயைக்குப் பகிர்முகஞ் சொந்தவரசாங்க மாதலானும் பகிர்முகத்தில் மயக்கமே செய்விக்கும். நின்றால் - அறிவினது நிலைமையைச் சாஸ்த்ரமூலமாக விசாரணைசெய்து நின்றால் சாஸ்த்ரவிசாரணை மனோவாக்குக்காயங்களின் றொழிலாதலானும் மனமுதலியவைகள் மாயையினது சத்வகுணமுதலிய மூன்றுகுணங்களினா லுண்டான விருத்திக ளாதலானும், மயக்கத்தையே விளைவிக்கும்; உட்கார்ந்தால் - தனது எதார்த்தசுகத்தை யடையவிரும்பிப் பெண்டுபிள்ளைகளா லுண்டாகின்ற வற்பசுகத்தில் வைத்திருக்கிற ஆசையை யணுவணுவாகக்குறைத்து ஏகாந்தஸ்தானத்திலிருந்து மத்தியகெதமான நடுநிலையில் மனதை நிறுத்திச் சுகித்திருக்கவேண்டுமென்றெண்ணித் தன்னை யுற்றுப்பார்த்தால், அதனை மாயையுணர்ந்து பிறப்பிறப்பென்னும் பெரிய செல்வத்தைப் பலஜன்மங்கடோறுங் கொடுத்துக்கொண்டிருந்த வென்னை நாசம்பண்ணச் சமீபமாகவந்தாயல்லவா, உன்னை நான் விடுவதில்லையென மிகுந்த கோபங்கொண்டு சிற்சக்தி அரசாங்கமாகிய அந்தர்முகத்திலும் புலவிதங்க

ளான மாயாசக்திகள் அல்லது மனோவிருத்திகளாக நின்று ஜீவனை மயக்குமாதலின் "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி, முனிவிலாததோர் பொருளது கருதலும், ஆறுகோடி மாயாசக்திகள் வேறுவேறுதம் மாயைகதொடங்கின" என ஸ்ரீமான் மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளினர். இங்ஙன மில்லாதவற்றை யுள்ளனவாகச் செய்யும் சக்தி யல்லது சாமர்த்தியமுடைத்தான (௬) கோடி மாயாசக்திகளின் வசமாகச்சென்றவர்க ளச்சக்திகளை வாதித்து ஜயம் பெறார்கள், அவற்றின் வசப்படாதவர்கள் மாயாசக்திகளை ஜயிப்பர். எப்படியெனின், ஒருபுருடன், ஜாக்ராவஸ்தையில் மனதோடுகூடி யுலகவியாபாரம் பண்ணுங்கால் நடத்தல்முதலிய தொழில்க ளுளவாதலின் தேகச்சாயை தோற்றும், படுத்தா னிழல்தோற்றாதிருப்பதுமன்றி, ஜாக்ரத்ஸ்வப்னா வஸ்தைகளினா னேரிட்ட துன்பமனைத்துஞ் சுழுப்தியவஸ்தையி லடங்கி மிருந்த ஆநந்தத்தை எப்படி யடைந்தானோ, அப்படிப்போல, ஜீவன் மனமுதலாகிய வகக்கரண புறக்கரணங்களோடுகூடி நான்கர்த்தா நான் போக்தாமுதலிய வுலகவியவஹாரம்பண்ணுமிடத்து ஜீவகற்பனைக ளனைத்து மிருக்கின்றனவாதலின், தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகளுண்மையாகத் தோற்றும், இங்ஙனந் தோற்றுபவைகளுக்குக் காரணமாகிய ஜீவனையும்,ஜீவனாற் கற்பனைசெய்யப்பட்ட அவஸ்தாத்ரயமுதலியவைகளையும், பரத்யகான்மாவினிடத்திலடக்கி யுறங்காதுறங்கினால் ஜீவகற்பனையாவுந் தோற்றாமலிருப்பனவுமன்றி நெடுங்காலமாகப் பலபிறவிகளிலும் ஜாக்ரமுதலிய மூன்றவஸ்தைகளினா லனுபவித்த பெரியதுன்ப

மனைத்தும் விவேகஜாக்ரமென்னும் நனவிற்சுழுப்தியி லடங்கி யிருந்த ப்ரம்ஹாநந்தத்தையடைந்தனன். இவ் விதமாகிய ப்ரம்ஹாநந்தத்தைவிட்டுப் பகிர்முகத்தில் வந்தகாலத்துந் தீபவெளிச்சத்தி லிருள்தோற்றாதது போலப், பிரத்யகான்மாவென்னும் ஞானப்ரகாசத்தில் தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலிய மாயாவிருள் சகசசமா தி பராயணனாகிய ப்ரம்ஹக்ஞானிகளுக்குத் தோற் றாது. ஸ்வரூபசமாதியுடையவர்களுக்கு அந்தர்முகத் திற் றனதனுபவ மனுவாகக் காணப்படுமாதலி னத னைச் சகசசமாதியினால் மகத்தாகச் செய்யவேண்டும். அவ்வாறு செய்கிறபரியந்த மகம்புறத்தி லசுத்தமாயா விருத்திகள் தோற்றும். தோற்றினும் தீபத்தைக் கையிலெடுத்துக்கொண்டு இருளைத்தேடினா லவ்விருள் கண்ணிற்குக் காணப்படாததுபோலத், தனது ஞானப் ரகாசத்தை அல்லது ஞானநேத்திரத்தை விளக்கிக் கொண்டு அஞ்ஞானமாகிய தேகேந்திரிய ப்ரபஞ்சமெ ன்னு மிருளை யகத்திலும் புறத்திலுந் தேடினா லவ்வி ருள் புலப்படாது. அப்பியாசி முதலியவர்களுக்கு அக ம்புறத்தில் மனோவ்ருத்திகள் தோற்றும், அவ்வாறு தோற்றுபவைகளை மேற்கூறிய காரணகாரிய க்ரமப்ர காரம் பரிலோசித்துக் காரியத்தை யதற்குரிய காரண த்திலடக்கிச் சகல காரண காரிய சமூகங்களுக்கெல்லா முதற்காரணமாயிருக்கிற ப்ரத்யகான்ம வடிவத்தில் ஜீவனை எவர்க ளடக்குகின்றார்களோ, அவர்களே ஜீவாரோபயான மாயையை வெல்லுவர். அன்றியும், நெருப்பினிடத்திற் சேருகிற வஸ்துக்களையெல்லா மவ் வக்னி தன்மயமாக எப்படிச் செய்துகொள்ளுகிறதோ அப்படிப்போல, ஆரியதவ மியற்றுபவர்களிடத்திற்

சேருகின்ற பெரிய மாயாசக்திகளையெல்லாம் அத்தவ சீலர்கள் தன்வசமாக அல்லது தன்மயமாகச் செய்துகொள்ளுவர். அவ்வாறு செய்வதற்குச்சக்தியில்லாதவர்களெப்படித்தன்னை மனனம்பண்ண வேண்டுமெனின், சமுத்ரவியாபகத்திற் றோற்றுவனவாகிய அலைதிவலைநுரைகுமிளிகளை யெண்ணியளவிடுவதற்கு எப்படிமுடியாதோ அப்படிப்போல, மாயையென்னுஞ் சமுத்திரத்திற் றோற்றுபவைகளாகிய அண்டபிண்ட சராசரபேதங்களை யளவிடக்கூடாவாயினுங் காட்சிப் பொருளாகிய திருஸ்யப்ரபஞ்சப் பொருள்களை நால்வகையோனி, எழுவகைத்தோற்றம் (௮௪) லட்சமுயிர்களென்றெப்படிப் பெரியோர்கள், கணக்கிட்டார்களோ, அப்படிப்போலக் கருத்துப்பொருளாகிய அதிருஸ்யத் தோற்றங்களை (௬) கோடி மாயாசக்திகளென்று ஸ்ரீமான் மாணிக்கவாசகஸ்வாமிகள் கணக்கிட்டனர். ஆதலின், தனது ஸ்வரூபத்தை மனனம் பண்ணுகிறகாலத்தி லதனைக் கெடுப்பதற்கு விரோதிகளாகத் தனதறிவிற் றோன்றுபவர்களாகிய மாயாசக்திகள் ஆறுகோடி, நூறுகோடி, அனந்தங்கோடியெனக்கூறினுஞ்சரி, இங்ஙனந்தோன்றுகிறசக்திகளென்னும்மனோவ்ருத்திகளெல்லாம் தனதறிவின் வியாபகத்தி லுண்டாகின்றனவெனவும், சமுத்திரத்தின்கணெழுந்த ஓரலையைப்போலத், தனதகண்ட ப்ரம்ஹாநந்த சமுத்திரத்திலுண்டாகிய எதார்த்த அறிவின் வியாபகத்தைப் பார்க்குமிடத்து அந்த வியாபகத்தி லிச்சக்திகளின் தோற்றங்களே இல்லையெனவும்,தானேதானாகத் தனித்து விளங்காநின்ற தன்னையன்றி அறிவு இல்லையெனவும், இவ்வித அறிவைத்தவிர ஜீவன் முதலிய சகலகா

ரணசாரியசமூகங்களில்லையெனவும், ஜீவனது கற்பனை யினாற் கற்பிக்கப்பட்டவை மனமுதலிய வந்தக்கரண ங்களெனவும், இவ்வித அந்தக்கரணங்களிலொன்றாகிய மனதினாற் கற்பனைசெய்யப்பட்டவை சப்தமுதலியவிந் திரியங்களெனவும், இவ்விந்திரியங்களைத்தவிரப் பஞ்ச பூதபௌதிகங்க ளில்லையெனவு நிச்சயித்துச் சுத்தவீ ரன் யுத்தகளத்தில் எதிரியோடு நின்று சண்டைசெய் யுங்காலத்துப் பின்னிட்டோடாமல் எதிரியைச் சங்கா ரம்பண்ணவேண்டுமென் றெப்படி மனோதைரிய முள் ளவனாகத் தனது வல்லமையினால் யுத்தஞ்செய்வானோ, அப்படிப்போலத், தன்னறிவைத் தான் மறந்தமைபற் றித் தன்னை மனனம் பண்ணுங்காலத்துத் தனக்கு எதிரிகளாயும் மனனம் பண்ணுவதற் கிடங்கொடா மற் சண்டை செய்பவர்களாயுமுள்ள அனந்தங்கோடி மாயாசக்திகளைக்கண்டு பின்னிட்டோடாமற் றனக்கெ திரிகளைச் சங்காரம் பண்ணவேண்டுமென மனோதைரி யமுள்ளவனாகத் தனது நிதித்தியாசனமென்னும் வல்ல மையினாற் சங்காரம் பண்ணவேண்டும். சங்காரம் பண் ணுதலாவது, தனதறிவின் வியாபகத்தி லடங்கச்செய் தல். இவ்வாறு செய்வ தெதுவோ, அதுவே சமாதி. இங்ஙன மரியசமாதி யியற்றுபவர்களுக்குச் சாக்ஷாத் காரமென்னுந் தனது ஞானனுபவமுள்ளங்கை நெல் லிக்கனிபோல விளங்கும். விளங்கவே, தீபப்ரகாசத்தி ன்முன்பு இருளில்லாததுமன்றி யவ்வெளிச்சத்தி னடு விலேகதேசமாய்க் காணப்படுகிற விருட்பிழம்பும்வெ ளிச்சமாகத் தோற்றுவதுபோல, ஞானப்ரகாசத்தின் முன்னர் அஞ்ஞானமாகியவிருளில்லாததுமன்றி ஞான வெளிச்சத்தின் மத்தியி லேகதேசமாய்க் காணுகின்ற

மாயாசக்தியுங் கடவுளது நிர்மலப்ரகாசமாகவே ஞானிகளுக்குக்கு விளங்குகின்றது. அவ்வித ஞானப்ரகாசத்தைத் தரிசியாதவர்களுக்கு மாயை தன்னிருளைத் தேகேந்திரியப்ரபஞ்ச முதலியவைகளாகவு மிவைகளை மெய்யாகவும், ஞானம்போலப்ரகாசமாகவுஞ் செய்விக்கின்ற தென்றாயிற்று.

இங்ஙனமிருக்க, த்ருஷ்டாந்தத்திற் காந்தமானது இரும்பைத் தன்வசமாக எப்படிக்ரகிக்கின்றதோ, அப்படிப்போலத், தாஷ்டாந்தத்தில் காந்தமென்னு மறிவு இரும்பென்னு மனதைத் தன்மயமாகக்கிரகிக்கின்றது, இம்மனதின் வசப்பட்டு ஜாக்ரத்ஸ்வபனவஸ்தைகளிற் றுன்பமடைகின்ற ஜீவன் தனக்குச் சுகம்வேண்டியது பற்றிச் சுழுப்தியவஸ்தையில் மனதைத் தன்வசப்படுத்திக்கொண்டு சுகத்தையடைகின்றான். இங்ஙனந் தினந்தோறும் ஜீவனுக்குக் காந்தபவுரிருந்தும் சுழுப்தியைவிட்டு வெளிப்பட்டபின்னர் பகுத்தறி வில்லாமையினாலும், சுழுப்தியி லனுபவித்த தனதுசுகத்தை மறந்து அவித்யாகாரியமாகிய வுலகசுகத்தையே மெய்யெனத் துணிந்தபடியினாலும், பிரபஞ்சமென்னுங் காந்தம் ஜீவனைப்பிடித்துக்கொண்டு காமமுதலிய பலவித துர்க்குணங்களைச் சதாகாலமும் விளைவித்துத் துன்பஞ்செய்விக்கின்றது. இவ்வாறாகிய துன்ப மணுவளவுமின்றி யாவு மறிவுவடிவாகத் தெளிந்தவிவேகிகள், ப்ரபஞ்சவியவகாரம் பண்ணுங்கா லகமுகத்திலடங்கிய மனதைப் பகிர்முகப்படுத்தித் தினந்தோறும் பழக்கஞ்செய்து புளிபங்காய் ஓடுஞ் சதையுங் கொட்டையுமொன்றாமிருந்தும் பழுக்குங்காலத்தி லொன்றினுக்கொன்று சம்பந்தமில்லாம லெப்படி வேறாக

ப்பிரிந்திருக்கின்றதோ, அப்படிப்போல விவேகிகள் பெண்டுபிள்ளைகளோடு கூடியிருந்து மவர்களிடத்தி லருவருப்புத்தோன்றி விசாரணை செய்தகாலத்தி லவர் களுக்குந் தனக்கும் பற்றுதலில்லாமல் சதாமனதை யகமுகப்படுத்திக்கொண்டு அவைகளுக்கு வேறாயிருப் பர். அன்றியும், பாலை நெருப்பிற்காய்ச்சி புளைக்குத்தி மத்தினாற்கடைந்து வெண்ணெயெடுத்த பின்பு கடைந் தமோரில் வெண்ணையைக்கரைத்தா லம்மோரில் வெ ண்ணை யெப்படிக்கரையாதோ அப்படிப்போலத், தன துமனதை அறிவென்னும் ஞானாக்கியிற் காயவைத்து விவேகமென்னும் புளைக்குத்தி நிதித்தியாசனமென்னு மத்தினாற்கடைந்து அறிவென்னு மல்லது ஞானானுபவ மென்னும் வெண்ணையெடுத்தபின்னர் அவ்வனுபவத் தை ப்ரபஞ்சத்திற் கலத்தலாவது, மனமுதலிய வகக்க ரணங்களிலும் சப்தமுதலாகிய புறக்கரணங்களிலுஞ் செலுத்தல். அவ்வாறு செலுத்துங்காலவற்றின் விஷ யங்களிற் பற்றுமலகம்புறமில்லாதவர்களாகவு மவை களைத் தானாகவுந் தனது நிரதிசயாநந்த சுகமாகவும் பார்த்து யாதொரு சலனமில்லாது தானே தானாயமர்ந் திருப்பராதலின் "இவனும் நிராலம்பத்தி னின்றாற் சாலம்பபோகம் வாதிக்காதெனக் கூறினாரென் றபிப் ராயம்.

ஸ்ரீமத் கரபாத்ரயோகீஸ்வரருடைய
சாம்பிரதாய சிந்தனைகள்
முற்றுப்பெற்றன.

ஸ்ரீமத் சத்குரு திவ்யசரணாரவிந்தார்ப்பணமஸ்து.

திருச்சிற்றம்பலம்.

கைலாசசூத்தவேதாந்தபரம்பரை

ஸ்ரீ. தேத்தாத்திரயஸ்வாமிகளுபதேசித்தபிரகாரம்.

பரிபூரணமாய், நிச்சலமாய், அலையில்லாத சமுத்திரம்போல ஞானஸ்வரூபமாயிருக்கிற வறிவுதானே *சிவன்=(க)நித்தியமாய்த் தானே தானாய்விளங்கி நித்தியானந்தமா யிருக்கிற †வறிவு-தானே பிரபஞ்சமாகவேண்டுமென்று நினைத்தது, அந்த வறிவுதானே ‡சுத்தமாயையென்றும்பெயர். அந்த வறிவு ஸ்வரூபமாகிற மாயையானது தன்னுடைய நிஜானந்தத்தை மாத்திரம்

---

* சிவனென்பது, அறிவறியாமை பேதங்களெல்லாங்கடந்ததாயும், அணுவிற்கணுவாயும், மகத்துக்கு மகத்தாயும், மனோவாக்குகளுக்கு எட்டாததாயும் சத்துவமுதலிய திரிகுணமில்லாததாயும், ஸ்வயம்பிரகாசமாயும் விளங்காநின்ற சுத்த சைதன்யத்திற்குச் சிவனென்றும், பிரம்மமென்றும் அபிப்ராயம்.

† அறிவு தானே ப்ரபஞ்சமாகவேண்டுமென நினைத்தலாவது, யாதொருவிகற்பமில்லாதவராயும், நித்த சுத்த முதலிய லக்ஷணங்களோடு கூடியவராயும் விளங்காநின்ற கடவுள் தனது சுத்தசங்கற்பத்தா னினைத்தவுடனே ஸ்ருஷ்டித்தல், இதற்கு யுகபத்ஸ்ருஷ்டியெனவும், தனக்குமேலொரு கடவுளில்லாமையால் தானே சத்வகுணமுதலிய முக்குணங்காரணமாக ப்ரம்ஹாமுதலிய மூர்த்திகளையுண்டுபண்ணி யவர்களாலாகிலும், மகதத்துவமுதலிய தத்துவங்கள் காரணமாக

‡ சுத்தமாயை, சிற்சக்தி.

மறந்ததே யவ்வியக்தமாகிற ஈஸ்வரனுடைய காரண
தேகம், அந்த யீஸ்வரன்றானே யனந்தகோடி பிர்ம்
மாண்டமான நாமரூபாத்மக ஸ்தூலசூட்சுமப் பிரபஞ்
சத்தைக் கற்பித்தனன். அந்த கற்பித ப்ரபஞ்சவாச
னையைப் பண்ணிக்கொண் டிருக்கிறபடியினாலே சஞ்ச
லத்துவம், அந்தசஞ்சலமான ப்ரபஞ்ச கற்பிதவாசனா
பலத்தினாலே தன்னுடைய சிற்சொரூபமான சிவஸ்
வரூபத்தைமறந்து வுயிருமுடலுந் தானாய் அகங்காரத்
தினாலே ஜடவடிவாயிற்று. சிவமாயும் நிச்சலமாயுமிருக்
கிற வறிவு தானே ப்ரபஞ்சவிச்சையினாலே தனது
சொரூபானந்தத்தை மறந்ததே சஞ்சலத்துவம், பிரபஞ்
சவாசனா பாவனையினாலே வுயிருமுடலு நானேயென்று

வாகிலும் ஸ்ருஷ்டிப்ப தெதுவோ அதற்குக் கிரமஸ்
ருஷ்டி யெனவும், பெரியோர்கூறுவர். இன்னும் பல
சமயத்தோரனைவரும் பலவிதமாக ஸ்ருஷ்டிபேதகங்கூ
றுவர். அவ்வாறு கூறுபவரனைவரு முயிரேயன்றி யுட
லன்று. அவ்வுயிருக்குக் கர்மபேதம் பலவாறாயிருப்ப
ன்பற்றி யவர்களுடைய கொள்கைகள் வெவ்வேறாயி
ருக்கின்றன. உயிருக்கு ப்ரபஞ்சாபேக்ஷை யெதுவ
ரையிலிருக்கிறதோ? அதுவரையிற் பேதபாவந் தோ
ற்றுமேயல்லது அபேதந்தோன்றாது, அபேதந்தோன்
றுமாயின் பலபேதங்களாகக்கூறார். அபேதமாவது,
தேகேந்திரிய ப்ரபஞ்சமுதலியவைகளுக்கு விலக்ஷண
மாக விளங்காநின்ற தனது எதார்த்தவறிவில் நவநவ
மாய்த் தோற்றுகிற சித்விலாசாநுபவ மகிழ்ச்சியினாற்
றேகாதி பேசபாவமிறந்திருத்தல், பேதமாவது, உ
ருவப்பொருளாகிய ஸ்ரக்சந்தன வநிதாதி பேதங்க
ளென்னும் ஜகத்விலாச மல்லது அவித்யாவிலாசமெ

விஷயானந்தத்தைச் சிந்தித்துப் பொசிக்கிறதே ஜடத்துவம் -(உ)- ஸ்தூலசூட்சும நாமரூபமான ப்ரபஞ்சஸ்வரூபமெப்படி யென்றால், சொற்பனம்போலே கானற்செலம்போலே தோற்றிக்கொண்டிருந்தாலு மநித்தியம், உற்பத்தியானஉடனே நசித்துப்போகிறது, ஸ்வயந் தானாக விளங்குகிற தில்லாதபடியினாலே ஜடம்; அநித்தியமாயும் ஜடமாயுமிருக்கிற வஸ்து சுகமாகாதபடியினால் துக்கரூபம், சத்தாய்ச்சித்தாய் கேவலானந்த ஸ்வரூபமா யிருக்கிறது சிவஸ்வரூபம். சத்துரூபமாவதியாதெனின்? பரிபூரணமா யெங்குநிறைந் தொன்றோடுங்கூடாமல் மனவாக்குக் கதீதமாய்ச் சகலபிரபஞ்சத்துக்கு மாதாரமாய், நிர்விகாரமாய், நித்திய

ன்னு முலகத்தினவநவமாகக் காணப்படுகின்றவிஷயாநுபவக் களிப்பினாற் றனதபேதபாவனை மறந்திருத்தல். இவ்வாறு தன்னை மறந்திருப்பவர்களுக்குத் தன்னையுணர்ந்தபெரியோர்களல்லது விவேகிகளிற் சிலர் ஜீவகாருண்யத்தாற்போதிப்பர். அதனைக் கேட்பவர்களிற் சிலருக்கு அது விரோதமாயிருப்பதனாற் கன்னிப்பெண் கொக்கோகஞ்சொல்லுபவனோடு வாதிப்பதுபோல விவேகிகளோடு வாதிப்பர், இவ்விவேகி யவிவேகிகளிருவரு முலகின்கணிருந்து வாதிக்கின்றாராகையா லுலகஸ்ருஷ்டி யாதுக்கு உண்டாகவேண்டுமெனின் பந்தசஞ்சிதம், பந்தவாகாமியம், பந்தப்ராரப்தம், விடுதிசஞ்சிதம். விடுதியாகாம்யம், விடுதிப்ராரப்தமென்னு மிவைகள் பந்தத்தில் மூன்றும் விடுதியில் மூன்றுமென் றாறுவகைப்பட்டிருக்கின்றனவாகையா லிவற்றிற் கட்டுப்பட்டிருப்பவர்கணிமித்த முலகஸ்ருஷ்டியுண்டாயிற்றென்க.

மாய்த்தனக்குத்தானே பிரகாசமாய் விளங்குகின்றதே சத்ரூபம். சித்ரூபமாவ தியாதெனின், எப்போது மேக ரூபமாய்த் தனக்குத்தானே பிரகாசமாகிற வறிவாய் ஸ்தூலசூட்சும நாமரூபமாய்ச் சொற்பனம்போலே கானற்செலம்போலே காணப்படுகிற சமஸ்த பிரபஞ் சத்துக்குஞ் சாட்சியா யறிந்துகொண்டு விளங்குகிற தே சித்ரூபம். ஆனந்தரூபமாவ தியாதெனின்? சத்து சித்து என்கிற வறிவுமற்றுக் கேவலந் தன்மயமாக நிற் கிறதே சிவானந்தஸ்வரூபம். பாலினுடையவெள்ளை சத்து, திரவமானது சித்து, மதுரமான தானந்தமென் றறிக. (௩) தன் ஸ்வரூபத்தை மறந்து தேகநானென்று விஷயானந்தத்தைச் சிந்தித்துப் பொசிக்கின்றதே ஜீவ பாவம். தேகேந்திரிய விஷயங்களெல்லாந் தானல்ல பொய்யென்று விட்டுநீங்கித் தானறிவானந்தமென்று தானேதானு யறிகிறவிட மீஸ்வரபாவம், அந்தவறிவு ஆனந்த ஸ்வரூபமாயிருப்பதே கேவலானந்தமென்ற றிக. (௪) வைராக்யம் பக்தி ஞானமாவ தெங்ஙன மெனின்? வாசனாரூபமான நினைவுக்கு வாசனாட்சயம் பிறந்த விடமே வைராக்யம். அந்தநினைவேதான், சர்வதா சிவஸ்வரூபவறிவாய் விளங்குகிறவிடமே பரம பக்தி, அந்த வறிவு தானே நிரதிசயானந்தமா யிருக் கிற விடம் ஞானமென்றறிக–(௫)– பஞ்சேந்திரிய விஷ யநினைவெல்லாந் தானல்லவென்று விட்டுநீங்கின நினை வே வைராக்கியம். அந்தநினைவு தானாகிறவறிவிலா சைவைத்ததே பரமபக்தி, அந்தவறிவு தானே சச்சி தானந்த ஸ்வரூபமென்று நினைத்துச் சிந்தனைபண்ணு கிறதே ஞானமென்றறிக. (௬)-சூரியனுடைய சன்னிதா னத்திலே ஜகத்தெப்படித் தொழிற்படுகிறதோ? அப்ப

டியே, அறிவு ஸ்வரூபத்தினுடைய சன்னிதானத்திற் ஜகத்தெப்படித் தொழிற்படுகிறதென்றால், அநித்திய மான ஜடம் நித்தியமாயிருக்கிறதுபோலே தோற்றுகி றது, அறிவில்லாதஜட மறிகிறதுபோலே விளங்குகின் றது, துக்கரூபமாகிய ஜடஞ் சுகமயம்போலே யிருக் கின்றது. ஆகையால், அறிவு ஸ்வரூப சன்னிதானத்திற் ஜடந்தொழிற்பட்டாலும் ஜடம்பொய், ஜடத்திலெல் லாஞ் சச்சிதானந்த ஸ்வரூபமே விளங்குகின்றது. -(எ)- சூரியனுடைய கிரணம் கானற்செலம்போலே தோற் றுகிறது, ஜலதிருஷ்டியாகப் பார்த்தால் ஜலந்தோற்று கிறது, சூரியனதுகிரண த்ருஷ்டியாகப்பார்த்தாற் சூரி யகிரணமே விளங்குகிறது, ஆதலால், கானற்செலம் பொய். அப்படிப்போலத், தானாகிற சச்சிதாநந்த ஸ்வ ரூபத்தைமறந்த வாசனாநினைவே நாமரூபாகாரம்போ லத்தோற்றுகிறது. அதுவே யஞ்ஞானத்ருஷ்டி. தானா கிற சச்சிதானந்த ஸ்வரூபவறிவை நினைத்துச்சிந்தனைப ண்ணுமிடத்து, அறிவுமாத்திரமா யிருக்கிறது, இதுவே ஞானதிருஷ்டி. ஆதலி னாமரூபாகாரம் பொய்.(அ) சகள ரூபமாவது, தானாகிறவறிவே சச்சிதானந்தாகாரமான வநுக்ரகார்த்தமாய் விளங்குகின்ற குருஸ்வரூபம். நிட் களமாவது, தானே சச்சிதானந்த மயமாயிருக்கின்றது. (௯)- சத்துசித்தானந்தமாவ தறிவு அநித்திய ஜ துக்கரூபமாவது, ஜகத்து. எங்ஙனமெனின், அநித் யத்துக்குத் தானித்தியமாயிருக்கிற வறிவானபடியி லே சித்து. துக்கரூபத்துக்குத் தானறிவானந்த மயம னபடியினாலே யானந்தமென்றறிக -(௰)- தானாகி சச்சிதானந்த ஸ்வரூபநினைவைமறந்து தானே ஜகதா காரமாய்ப் பஞ்சேந்திரிய விஷயங்களைப் புசிக்கின்

வாசனைநினைவேவுயிர். தானே சச்சிதானந்த ஸ்வரூப மென்றுகருதிச் சிந்தனைபண்ணுகிறதே ஸ்வரூபநினைவு. க்௰க) - ஆனந்தபிரக்ஞை, ஸ்வரூபப்ரக்ஞை, நிஷ்டாப்ர க்ஞையாவ தெங்ஙனமெனின்? தான்தானே கேவல சிற்சிவானந்தஸ்வரூபநினைவு தானே யானந்தபிரக்ஞை. நான் தானே கேவல சிற்சிவஸ்வரூபநினைவுதானே ஸ்வ ரூபப்ரக்ஞை. நாமரூபமாகத்தோற்றுகிற சகல பிர பஞ்சமுந்தானே பரிபூரணமான சச்சிதானந்த சொ ப்ரகாசமாகவிளங்கிய நினைவுதானே நிஷ்டாப்ரக்ஞை. ௪உ)- சிவம், ஞானசக்தி கிரியாசக்தி ஆ ௩. சிவனு டையவிச்சை மாயையிலே கலந்தவிடம் ஞானசக்தி. அந்த ஞானசக்தி தனுகரண புவனபோகத்தினுடனே கலந்து, மனம் புத்தி அகங்காரம் சித்தமாய்க்கலந்து, பிரபஞ்ச வ்யவஹாரங்களையறிய, வ்யவகாரங்களைப் பிரித்துச்சொல்ல, சுகதுக்கபோகங்களைப் புசிக்க, இப் படிக் கரணமே தானாகநின்றசக்தி, கிரியாசக்தியென் பெயர். தேகம் ஜடம், நானல்லவென்று நீங்கினவறி வுக்குக் கிரியாசக்தி நீக்க மென்றறிக. அங்ஙனங் கிரி யாசக்தி நீங்கவே, சாட்சிரூபமாகிய ஞானசக்தியாயிற் று. அந்த ஞானசக்தியாகிற வறிவு, தான் ...றிந்து தன்னைத்தான்சிந்தித்துச் சிவோஹ ...ன்றவிடம் ஞானசக்தி; இந்தஞானசக் ... ...டத்தில் ஆநந்தந்தோன்ற அந் ... ...னென்றறிந்து தானே சிவ ... ...மென்றறிதி. தெத்தாத் ... ...க்யஞ் சம்பூர்ணம்.

ஸ்ரீ சத்குரு சரண ...

—